பொருளியல் நோக்கு

சித்திரை/ வைகாசி 2011

1961 - 2011

50 ஆண்டுவிழா

# வங்கித் தொழில்

## சமகால முக்கியத்துவமிக்க அம்சங்கள்




இது ஒரு மக்கள் வங்கி வெளியீடு

# மக்கள் வங்கியின் பொன்விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு.....

**பொருளியல் நோக்கின் வங்கித் தொழில்** பற்றிய இவ்விதழானது, 2011 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் திகதியன்று நடைபெறவுள்ள, மக்கள் வங்கியின் பொன்விழாவைக் குறிக்கும் முகமாக வெளியிடப்படுகின்றது.

20 ஆம் நூற்றாண்டில், வங்கிச்சேவைகள் சமூகத்தின் மிகச் சிறிதளவாக இருந்த உயர் குழாத்தினருக்கு மாத்திரம் உரியதாக வரையறுக்கப்பட்டிருந்தது. இந்த நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையான மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் கிராமப்புறங்களில் வசிக்கின்ற மிக வறிய மக்களுக்கு இச்சேவை மறுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக கிராமிய மக்களின் வங்கித் தேவைகளை நிறைவு செய்வதற்கும், நாட்டினுடைய அபிவிருத்திக்காக அவர்களுடைய பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காகவும் பொருத்தமான ஓர் வங்கி முறைமையை உருவாக்குவதற்காக, சில தசாப்தங்களாக பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான ஆழ்ந்தாராய்வின் பின்னர், 1961 இல் மக்கள் வங்கி நிறுவப்பட்டது. 1. கூட்டுறவு இயக்கத்தை விருத்திசெய்தல், 2. கிராமிய வங்கித்துறையை விருத்திசெய்தல், 3. விவசாயக் கடன்களை வழங்குதல் என்பன அதன் பிரதான குறிக்கோள்களாகக் காணப்பட்டன.

அதன் ஆரம்பகால குறிக்கோள்களை அடைந்துள்ள நிலையில், இவ்வங்கியானது சமூகத்தின் பல்வேறுபட்ட பிரிவினரின் வங்கித் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வதற்காக, தனது சேவைகளை துரிதமாக விரிவுபடுத்தியுள்ளது. சாதாரண மனிதனுடைய மிகவும் பிரசித்தி பெற்ற வங்கியான இவ்வங்கி, தனது 687 கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் (இந்த நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளையும் உள்ளடக்கியுள்ள கிளைகளின் மிகப்பெரும் வலையமைப்பு) ஊடாக 12.8 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு (நாட்டின் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர்) நேரடியாக சேவையாற்றும் அதேவேளை, அதனுடைய நிதிக்கருவிகளும், ஏனைய திட்டங்களும் அநேகமாக இந்த நாட்டின் முழுச் சனத்தொகைக்கும் மறைமுகமாக பயன்படுவதாக உள்ளன.

ஆரம்ப காலகட்டத்தில், இவ்வங்கியானது இந்த நாட்டின் கூட்டுறவுக் கிராமிய வங்கி முறைமையையும் கூட்டுறவு இயக்கத்தையும் பலப்படுத்தியது. இத்தேசத்தின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, இந்த நாட்டினுடைய வங்கித்துறையில் மிக உயர்வான வைப்புத் தளத்தை அண்மைக் காலத்தில் பதிவு செய்துள்ளது. பொருளாதாரத்தின் பரந்த துறைகளை உள்ளடக்கியுள்ள, பல்வேறுபட்ட கடன் திட்டங்களின் கீழ், பெருந்தொகையான கடன்களையும் முற்பணங்களையும் வழங்கியதன் மூலம், கடந்த காலங்களில், அதிகரித்தளவிலான முதலீட்டிற்கும் உற்பத்திக்கும் அது பங்களிப்புச் செய்துள்ளது. பல இலட்சக்கணக்கான வறியவர்களுடன் சேர்த்து, வறுமை ஒழிப்பு, அனர்த்த மீட்சி (உதாரணமாக கடல்கோள்), சுய தொழில்வாய்ப்பு முதலானவை போன்ற துறைகளுக்கு மிகவும் எளிமையான நிபந்தனைகளுடன் விசேட நிதியுதவிகளை வழங்கியதன் மூலம், தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் முயற்சிகளுக்குக்கூட இவ்வங்கி ஆதரவளித்திருந்தது.

தற்போது. வங்கித் தொழிலின் ஒவ்வொரு அம்சத்திலும் உன்னதமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை, மக்கள் வங்கியானது, சமூகத்தின் மிகவும் வறிய உறுப்பினர்களுக்கான அடிப்படை வங்கிச் சேவைகளை வழங்குவது தொடக்கம், வசதி படைத்த வாடிக்கையாளர்களுக்கான தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட நவீன கருவிகளை வழங்குவது வரை, இத்தேசத்திற்குப் பல்வேறு வகையான சேவைகளை வழங்கி வருகின்றது. மேலும், அதற்கு இணையான வங்கிகள் பெரும்பாலனவற்றின் தொழிற்பாட்டு இயல்புகளிலிருந்து விலகி, குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் சம்பாதிக்கும் ஆற்றலை ஊக்குவிப்பதில் மக்கள் வங்கியானது மிக முக்கியமான ஒரு வகிபாகத்தை ஆற்றிவருகின்றது. இதனால், இவ்வறிய குழுக்களிற்கு மிகக் குறைந்த அல்லது பூச்சிய இலாபத்தில் வர்த்தக வங்கிச் சேவைகளை வழங்குவதற்காக அதனுடைய நிதியங்கள், பணியாளர்கள் மற்றும் முயற்சிகள் என்பவற்றை பயன்படுத்துவதன் மூலம், அவ்வறிய குழுக்களுக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் துணைபுரிகின்றது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில், இவ்வங்கியின் பிரதானமான கம்பனித்துறை சார்ந்த சமூகப் பொறுப்புக் கருவிகளில் ஒன்றாக அமைந்துள்ள **பொருளியல் நோக்கின்** வெளியீடானது 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. துறைசார்ந்த முன்னணி நிபுணர்களால் எழுதப்பட்ட, அபிவிருத்தி தொடர்பான முக்கிய விடயங்கள் பற்றி அனைத்தையும் உள்ளடக்கிய தனியான விசேட அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களுடன் தொடர்புடைய ஏராளமான எண்ணிக்கையிலான சிறப்புக் கட்டுரைகள் என்பவற்றுடன் கூடிய, 275 ஏடுகளை வெளியிட்டதன் மூலம், இச்சஞ்சிகையானது இந்த நாட்டினதும், ஒட்டுமொத்தமாக உலகத்தினதும் சமூக–பொருளாதார அபிவிருத்திக்கு தனிச்சிறப்பு வாய்ந்த பங்களிப்பை வழங்கி வருகின்றது.

மக்கள் வங்கி தனது பொன்விழா நிறைவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில், இத்தேசத்தின் நலன்களுக்காக இத்தகையதொரு பயன்மிக்கதும், வெற்றியீட்டியதுமான வங்கியை தோற்றுவிப்பதற்காக தமது அறிவாற்றல், படைப்பாற்றல், திறன்கள் மற்றும் சக்தி என்பவற்றை வழங்கி இவ்வங்கியை உருவாக்கியோரில் **பொருளியல் நோக்கு** மிகுந்த மதிப்புவைத்துள்ளது என்பதைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றது. அத்துடன் இவ்வேடானது, தற்போதைய நிலைக்கு இவ்வங்கியை உயர்த்தியமைக்காக அதனுடைய வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பை மிகுந்த நன்றியுணர்வுடன் ஏற்றுக்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்புகின்றது. கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக இவ்வேட்டின் தடங்கலற்ற வெளியீட்டிற்கு தமது பங்களிப்புகளை வழங்கிய எழுத்தாளர்கள், வாசகர்கள் மற்றும் இச்சஞ்சிகைக்கு ஆதரவு வழங்கும் ஏனையோருடன் சேர்த்து, இதன் முன்னோடிகளுக்கும் ஆராய்ச்சித் திணைக்களத்தின் தற்போதைய பணியாளர்கள் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றனர்.

# பொருளியல் நோக்கு

மலர்: 37 இதழ்கள்: 1 & 2 சித்திரை/வைகாசி 2011

**வெளியீடு:**
ஆராய்ச்சித் திணைக்களம்,
மக்கள் வங்கி,
தலைமை அலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ.
கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02,
இலங்கை.

**ஆலோசனைச் சபை**

டபிள்யு. கருணாஜீவ
*தலைவர், மக்கள் வங்கி*

என். வசந்தகுமார்
*பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்*

கே. யு. புஸ்பகுமார
*ஆராய்ச்சிப் பணிப்பாளர் மக்கள் வங்கி*

**ஆலோசக ஆசிரியர்**

கலாநிதி. ஏ. பி. கீர்த்திபால

**ஒருங்கிணைப்பாளர்**

எச். எல். ஹேமச்சந்திர
*ஆராய்ச்சி உத்தியோகத்தர்*

பல்வேறு கோணங்களிலான அறிக்கைகள், கருத்துகள், விடயங்கள் மற்றும் விவாதங்கள் என்பவற்றை முன்வைப்பதன் மூலம், பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் அறிவையும், ஆர்வத்தையும் தூண்டுவதே பொருளியல் நோக்கு சஞ்சிகையின் குறிக்கோளாகும். மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாக இவ்வெளியீடு மேற்கொள்ளப்படுகிறது. எனினும், இச் சஞ்சிகையில் வெளியிடப்படும் கட்டுரைகள் மற்றும் அறிக்கைகள் என்பன, மக்கள் வங்கியின் கருத்துக்களையோ அல்லது உத்தியோகபூர்வக் கண்ணோட்டத்தையோ பிரதிபலிப்பவையல்ல. ஆசிரியர்களின் பெயர்களுடன் வெளியிடப்படும் கட்டுரைகள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களாகவே உள்ளன. அவை, எவ்விதத்திலும் அவர்கள் சார்ந்திருக்கும் நிறுவனங்களின் கருத்துக்களைக்கூடப் பிரபலிப்பவை எனக் கருதப்படலாகாது. அத்தகைய கட்டுரைகள், கருத்துகள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பன வரவேற்கப்படுகின்றன. பொருளியல் நோக்கு, இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது. சந்தா செலுத்துவதன் மூலமோ அல்லது நேரடிக் கொள்வனவின் மூலமோ அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

*Email:ecorev@peoplesbank.lk*

## பொருளடக்கம்

### சிறப்புக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| கலாநிதி. முத்துகிருஷ்னா சர்வானந்தன் | 47 | இறை தொடர்பான அதிகாரப்பரவலாக்கம்: இலங்கையில் முரண்பாட்டுத் தீர்வை நோக்கிய ஒரு முன்னேற்றப் படிக்கல் |
| பேராசிரியர்.சிறிமேவன் கொலம்பகே | 52 | நூல் மதிப்பாய்வு - இலங்கையில் விவசாயமும் கிராமிய அபிவிருத்தியும் |

### விசேட அறிக்கை

## வங்கித் தொழில்

### சமகால முக்கியத்துவமிக்க அம்சங்கள்

| | | |
|---|---|---|
| எச்.எம்.எஸ்.பி. ஹேரத் | 03 | நுண்நிதியும் வர்த்தக வங்கிகளும் |
| பேராசிரியர்.சிறிமேவன் கொலம்பகே | 08 | இலங்கையில் இலத்திரனியல் வங்கிச் சேவை: வருங்கால வாய்ப்புகளும் வரையறைகளும் |
| கலாநிதி.டபிள்யு.எம்.ஹேமச்சந்திர | 14 | நிதி நெருக்கடிகளும் அவற்றின் படிப்பினைகளும் |
| விபுல் ஜயவிக்கிரம | 23 | உலகளாவிய பணத் தூய்மையாக்கலையும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பையும் தடுத்து நிறுத்துவதில் தகவல் இடர்வாய்ப்பு முகாமைத் துவத்தின் வகிபாகம் |
| கலாநிதி. விக்கிரம வீரசூரிய | 27 | இலங்கையில் வங்கிச் சட்டத்தின் வளர்ச்சி: விமர்சன ரீதியான ஒரு மதிப்பீடு |
| கணேஷ் சுரேஷ் & ஜெயப்பிரபா சுரேஷ் | 32 | இலங்கையின் வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியில் வங்கிச் சேவைகள் |
| கலாநிதி.உபாலினி அஜிதா தென்னக்கோன் | 39 | இலங்கைப் பொருளாதாரத்தில் அரச வங்கிகளின், விசேடமாக மக்கள் வங்கியின், வகிபாகம் |

### அடுத்த இதழ்

### புதிய உலக ஒழுங்கு

*அச்சுப் பதிவு - மக்கள் வங்கி அச்சிடல் சேவைகள் திணைக்களம்*

# இலங்கையின் வங்கித் தொழில் பற்றிய சில சிறப்புக் கூறுகள்

## Distribution of Banks and Bank Branches

| Category (a) | End 2010 |
|---|---|
| Licensed Commercial Banks (LCBs) | |
| i. Total No. of LCBs | 22 |
| Domestic Banks | 11 |
| Foreign Banks | 11 |
| ii. Total No. of LCB Branches and other Outlets | 5,119 |
| Branches | 1,432 |
| Domestic Bank Branches | 1,386 |
| Foreign Bank Branches | 46 |
| Extension Offices | 898 |
| Domestic Banks | 728 |
| Foreign Banks | 170 |
| Student Saving Units and other Outlets | 2,789 |
| Automated Teller Machines | 1,848 |
| Licensed Specialized Banks (LSBs) | |
| i. Total No. of LSBs | 9 |
| Regional Development Banks | 1 |
| National Savings Bank | 2 |
| Long-term Lending Institutions | 2 |
| Housing Finance Institutions | 2 |
| Private Savings and Development Banks | 2 |
| ii. Total No. of LSB Branches and other Outlets | 755 |
| Branches | 500 |
| Regional Development Banks | 230 |
| National Savings Bank | 173 |
| Long-term Lending Institutions | 23 |
| Housing Finance Institutions | 28 |
| Private Savings and Development Banks | 46 |
| Extension Offices | 67 |
| Student Saving Units and other Outlets | 188 |
| Automated Teller Machines | 158 |
| **Total No. of Bank Branches and other Outlets** | **5,874** |


































(a) Provisional (b) Data available only in 2009 & 2010

Source: Central Bank of Sri Lanka

# நுண்நிதியும் வர்த்தக வங்கிகளும்

**எச்.எம்.எஸ்.பீ. ஹேரத்**

*தலைவர்,*
*வங்கி மற்றும் நிதித் துறை*
*வணிகக் கல்வீ மற்றும் நிதிப் பீடம்,*
*வயம்ப பல்கலைக்கழகம்,*
*குளியாப்பிட்டி.*

**சாராம்சம்**

நுண்நிதிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான தொடர்பை இக்கட்டுரை ஆராய்கின்றது. நுண்நிதி பரிணாம வளர்ச்சியடைந்த ஆரம்ப கட்டத்தில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள ஏழைகளுக்கு நிதியளிப்புச் செய்வதில் வர்த்தக வங்கிகள் அதிகளவு ஆர்வம் காட்டவில்லை. இருப்பினும், இத்துறையிலான தமது பணிகளைப் பற்றி ஆராய்வதற்கு ஏனைய நுண்நிதிய நிறுவனங்களை அனுமதித்தன. உயரளவிலான நட்ட அச்சம், அதிகளவிலான பரிமாற்றச் செலவு, சமூக - பொருளாதார பிரச்சினைகள் என்பனவே நுண்நிதிச் செயற்பாடுகள் மீது குறைந்தளவான கவனஞ் செலுத்துவதற்கான காரணிகளாக இருந்தன. ஆயினும், மரபு ரீதியான சந்தையில் காணப்பட்ட அதிகரித்தளவிலான போட்டித்தன்மை காரணமாக, வர்த்த வங்கிகள் தமது வங்கிச் செயற்பாடுகளைப் படிப்படியாக நுண்நிதிச் சந்தைகளுக்கு விரிவுபடுத்தி வருகின்றன. இது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முறைசார்ந்த, முறைசாரா நிதிச் சந்தைகளைத் தொடர்புபடுத்துவதற்கு துணைபுரிந்துள்ளது.

**அறிமுகம்**

நுண்நிதி என்பது வறியவர்களுக்கும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் நிதிச் சேவைகளை வழங்குவதைக் குறிக்கின்றது. வர்த்தக் வங்கிகளைப் பயன்படுத்துவதற்கான வாய்பற்றவர்களாகவும், வங்கி நடைமுறைகளை நன்கு தெரிந்திராதவர்களாகவும் உள்ள மக்களுக்கான கடன்கள், வைப்புக்கள், கொடுப்பனவுச் சேவைகள், பண மாற்றல்கள், காப்புறுதி என்பவற்றை இந்த நிதிச் சேவைகள் உள்ளடக்கியுள்ளன.

சந்திரதாச என்பவரால் (டிசம்பர் 2004/ ஜனவரி 2005) மேற்கோள் காட்டப்பட்டவாறு, Mosley (2000) யின் கூற்றுப்படி, நுண்நிதியின் வரைவிலக்கணம், நிதி மற்றும் சமூக இடைத்தொடர்பு ஆகிய இரண்டையும் வழமையாக உள்ளடக்குகின்றது. ஆகவே, சில அறிஞர்கள் இத்திட்டங்களை "கடனிலும் சற்று கூடுதலான" அணுகுமுறைகளென பெயர் சூட்டுகின்றனர். சந்திரதாச (திகதியிடப்படாத) என்பவரின் கூற்றப்படி, நுண்நிதியமானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளதால், அது வெறும் வங்கித் தொழிலாக அன்றி, ஓர் "அபிவிருத்திக் கருவியாக" உள்ளது:

1. சிறுதொகைக் கடன்கள் (சிற்றளவுக் கடன்கள்), வழக்கமுறையான தொழிற்படு மூலதனம்
2. கடன்பெறுவோர் மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்பான முறைசாரா மதிப்பீடு
3. குழு உத்தரவாதம் அல்லது கட்டாயச் சேமிப்புக்கள் போன்ற அடைமானப் பொருள் பிரதியீடுகள் காணப்படுதல்
4. கடன்களை மீளச்செலுத்தும் செயற்பாடுகள், சீரமைக்கப்பட்ட கடன்களை பகிர்ந்தளித்தல், கண்காணிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட மீள்கடன் பெறல் மற்றும் பெருந்தொகைக் கடன்கள் என்பவற்றை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள்.
5. சேமிப்புக் கருவிகளைப் பாதுகாத்தல்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வறியவர்களுக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் நுண்நிதிச் சேவைகளை வழங்குவதற்கு மூன்று வகையான மூலங்கள், அதாவது முறைசார், அரைகுறை முறைசார் மற்றும் முறைசாரா நிறுவனங்கள் உள்ளன. முறை சார் துறையில் உள்ள, நுண்நிதியத்துடன் தொடர்புடைய பிரதான செயற்பாட்டாளர்களாக கிராமிய வங்கிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் காணப்படுகின்றன. ஆயினும், நுண்நியச் செயற்பாடுகளின் வர்த்தகமயமாக்கம் காரணமாக, அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் நுண்நிதியச் செயற்பாடுகளில் முறைசார் துறையில் காணப்படும் அபிவிருத்தி வங்கிகளும், வர்த்தக வங்கிகளும் மேலும் மேலும் ஈடுபட்டு வருகின்றன. அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் உள்ள வறியவர்களுக்கான நிதிச் சேவைகளை வழங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற அரைகுறை முறைசார் நிறுவனங்களையே இரண்டாவது மூலம் உள்ளடக்கியுள்ளது. மேலும், கடன் வழங்குவோர், கடை உரிமையாளர்கள், வியாபாரிகள் முதலானோரை முறைசாரா மூலங்கள் உள்ளடக்கியுள்ளன.

**நுண்நியத்தின் முக்கியத்துவம்**

எந்தக் கிராமிய அபிவிருத்தி உபாயத்திலுமே கடன் வழங்கலும், சேமிப்புக்களை உருவாக்குதலும் இன்றியமையாத கூறுகளாக நெடுங்காலமாக அங்கிகரிக்கப்பட்டு வந்துள்ளன. விவசாயத்தின் நவீனமயமாக்கத்தில் கடன் முக்கியமான பங்கை வகிக்கக்கூடும். ஆனால், கிரயாமிய வறுமைக்கு எதிரான போராட்டத்தில் அதனுடைய வகிபாகம் மிக அரிதாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, விவசாயத் தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும், கிராமியப் பொருளாதாரத்தின் சமூக மூலதனத்தை மேம்படச் செய்வதற்குமான, மூலதனத்தின் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினையை கையாளுகின்றபோது, முறைசார் நிதி நிறுவனங்களின், அதாவது அரசுக்கு அல்லது தனியாருக்குச் சொந்தமான வர்த்தக வங்கி முறைமை மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. கிராமிய ஏழைகளின் அறுவடை அல்லது அவர்களுடன் சம்பந்தப்பட்ட வணிகச் செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துவதற்கு கடன் வசதிகளை வழங்கும் ஓர் வழிமுறை ஊடாகவும், அவர்களுடைய நிதித் தேவைகளை நிறைவு செய்ய முடியும். அதேவேளை, அந்த நிறுவனங்கள் மேலும் மேலும் கிராமியச் சேமிப்புக்களை நகர்த்திக்கொண்டு இருக்கின்றபோதும், கிராமியத் துறைக்கான கடன் உதவி வழங்கலானது மிகக் குறைந்த மட்டத்திலே காணப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. கிராமத்தைச் சேர்ந்த வறிய ஆண்களும் பெண்களும், காணியற்றோர் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் மீனவர்கள் ஆகியோருக்கு ஒன்றில் அடைமானப்பொருள் மற்றும் பூர்த்திசெய்ய வேண்டிய வங்கி நடைமுறைகளுடன் தொடர்புடைய விடயங்கள் என்பன பெரிதும் கடினமானவையாக இருந்தமையால் அல்லது அவர்கள் முற்றிலுமாக கடனுக்கு தகுதியானவர்கள் எனக் கருதப்படவில்லை என்பதனால், அவர்கள் இந்த நிதிச் சேவைகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. Karmakar (1999) என்பவரின் கூற்றுப்படி, ஏழைகளுக்கு எந்த வளங்களும் சொந்த

மாக இல்லை, அவர்கள் சேமிப்பதில்லை, உடனடி நுகர்வுத் தேவைகளின் நோக்கில் அவர்களால் முதலீடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது, மற்றும் விவேகமான பண முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகளை அவர்கள் அறியாதவர் களாக உள்ளனர் என்பதெல்லாம் தவறான கருத்தாகும். நிதி வளங்களின் சிறியதோர் பங்கிற்கான போட்டியில், வறியவர்கள் இயல்பாகவே நிறுவன ரீதியான சந்தை களில் தமது வாய்ப்புக்களை இழந்துள் ளதுடன், வேறு வழியின்றி வட்டிக்கு பணம் வழங்குவோர் மற்றும் வியாபாரி கள் போன்ற சுரண்டல்தன்மை வாய்ந்த முறைசாரா நிதியளிப்பு மூலங்களை நாடுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர். மேலும், கிராமிய நிதிச் சேவைகள் பெரும் பாலும் செல்வந்த விவசாயிகளால் கட்டுப் படுத்தப்பட்டு வந்துள்ளன. இவர்கள் பெரி தும் அனுகூலமான நிபந்தனைகளின் கீழ் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக தமது பெரும் செல்வ (இயற்கையின் கொடையை) அடித்தளத்தையும் உள்ளூர் அதிகாரக் கட்டமைப்பினுள் அவர்களுக் குள்ள செல்வாக்கையும் பயன்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர். இதன் விளை வாக, கிராமிய வறியவர்களின் கடன் தேவைகளை நிறைவுசெய்வதில் முறை சார்ந்த நிறுவனங்களை விட, முறைசாரா நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக் கின்றன. இந்த முறைசாரா நிதித் துறை யால் விரைவாக எதிர்வினையாற்றக் கூடியதாக இருப்பதுடன், வாடிக்கையா ளர்களது கோரிக்கைகளுக்கு இசையச் செய்வதில் அதிகளவு நெகிழ்வுத் தன் மையை கொண்டனவாகவும் உள்ளது. அத்துடன், இக்கடனானது மட்டுமீறியளவு உயர்வான வட்டிவீதத்தில் வழங்கப்படுவ தனால், வறியவர்களைச் சுரண்டுவதுடன், அவர்களுடைய வறுமையை மேலும் மேலும் மோசமானதாக்குகின்றது. கருணா நாயக்க (2003) என்பவரால் மேற்கோள் காட்டப்பட்டவாறு, Qureshi மற்றும் ஏனை யோரின் (1996) கூற்றுப்படி, தென்னாசிய நாடுகளில் சுதந்திரத்திற்கு பின்னரான அபிவிருத்திச் செயற்பாடுகளை அடுத்து, இத்தகைய வட்டிக்கு பணம் வழங்கும் செயற்பாட்டின் முக்கியத்துவம் குறைவ டைந்து செல்லும் ஓர் போக்கு காணப் படுகின்றது.

முறைசார்ந்த மற்றும் முறைசாரா அமைப் புக்களின் நியாயமற்ற நடத்துமுறைகள் காரணமாக, இக்கிராமிய வறியவர்கள் பாதிக்கப்பட்டதன் விளைவாக, கிராமிய வாடிக்கையாளர்கள் நிதிச் சேவைகளின் கிடைப்பனவை அதிகரித்தல், அடைமான பொருட்களை அல்லது ஏனைய தேவை களை குறைத்தல், நடைமுறைகளைக் கண்டிப்பில்லாதவையாக மாற்றியமைத் தல் போன்றவற்றிற்காக, பல்வேறு தேசிய கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள், ஒன்றிணைக்கப்பட்ட முயற்சிகள் அல்லது கூட்டுறவு செயற்பாடுகள் என்பவற்றின் வடிவில் கடுமையான முயற்சிகள் மேற் கொண்டுள்ளப்பட்டன. அத்தகைய கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தென்னாசிய நாடு களில் பரவலாகக் காணப்படுகின்ற போதும கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலா னவை வசதியும் செல்வாக்கும் மிக்க விவ சாயிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதற்கு திறந்த அங்கத்துவம் பற்றிய கோட்பாடு காரணமாக அமைந்துள்ளது. அத்துடன், கிராமியத் துறையில் காணப்படும் வறுமை ஒழிப்பிற்குப் பங்களிப்புச் செய்வதில் அவை தவறியுள்ளன. ஆகவே, இக்கூட்டுறவு நிறு வனங்களில் இருந்து கிடைக்கும் அனு கூலமானது வழமையாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு சிலரது நலன்களைப் பேணுவ தற்காகத் திசைதிருப்பப்பட்டுள்ளது. 1950 களின் ஆரம்பத்தில் கிராமிய பொருளா தாரத்தின் நோக்கம் ஈடேறுவதற்கு முறை சார் நிதி நிறுவனங்கள் துணைபுரியவில்லை எனும் உலக அனுபவத்தின் விளைவாக, கிராமிய வறிய மக்களின் நிறைவுறாத நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற் காக, பல்வேறு அபிவிருத்தி செயற்திட் டங்களிலும் குறிப்பிட்ட சமூகங்களை இலக்காகக் கொண்ட மானிய அடிப்படை யிலான கடன் திட்டங்கள் அறிமுகப்படுத் தப்பட்டன. இந்த மானிய அடிப்படையி லான திட்டங்கள் மிக அரிதாகவே வெற் றியளித்தன. மானியத்திற்குட்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் மற்றும் கிராமிய மக் களின் மிக மோசமான கடன் மீளச்செலுத் தத் தவறல் செயல்முறை என்பன காரண மாக, கிராமிய அபிவிருத்தி வங்கிகள் போன்ற இத்திட்டங்களின் கீழ் விசேடமாக உருவாக்கப்பட்ட சில நிறுவனங்களின் மூலதன அடித்தளம் பெரும் அழிவுக்குள் ளானது. அதேவேளை, குறிப்பிட்ட இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியங் கள் எப்பொழுதுமே உரிய பயனாளி களைச் சென்றடையவில்லை என்பதுடன், இதற்குப் பதிலாக எதிர்பாராத வகையில் செல்வந்த விவசாயிகளின் வசம் போய்ச் சேர்ந்தன (CGAP, 2003).

இதன் விளைவாக, 1970களில், பங்களா தேஷ், பிரேசில் மற்றும் ஏனைய சில நாடு களில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்தத் திட்டங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றின் ஊடாக, சிற்றளவு (நுண்) வணிக முயற்சிகளில் முதலீடுகளை மேற் கொள்ளுவதற்காக வறிய பெண்களின் குழுக்களுக்கு வழங்கப்பட்ட சிறு தொகைக் கடன்களை விரிவுபடுத்தின. ஏனெனில் அக்காலகட்டத்தில் வறியவர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்குவதில் சந்தைகளும் அரசாங்கங்களும் தோல்வியைக்கண்டிருந் தன. அதன் பின்னர், இப்பணியைச் செய்து முடிப்பதற்காக அரச சார்பற்ற நிறுவனங் களைத் தேர்ந்தெடுப்பதென பரவலாக ஒத்துக்கொள்ளப்பட்டது. இவ்வகையான சிற்றளவு (நுண்) தொழில்முயற்சியை அடிப்படையாகக் கொண்ட கடனானது, ஒப்புரவுக் (ஆதரவு) குழு கடன் வழங்கல் முறைமையொன்றின் ஊடாக, வழங்கப் பட்டது. இம்முறைமையில் அனைத்து அங் கத்தவர்களதும் கடன் மீளச்செலுத்தலுக்கு ஓர் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப் பினரும் உத்தரவாதம் அளிக்கின்றனர். இங்கே, அதிளவான நியாயத் தன்மையு டன்கூடிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில், சிறு தொகைக் (நுண்) கடனிலான அதிகரித்தளவிலான கரிச னைக்கு வழிவகுத்துள்ள, பல்வேறு கார ணிகள் காணப்படுகின்றன. கடன் உட்பட அனைத்து உற்பத்திக் காரணிகளையும் பயன்படுத்துவதற்கான அவர்களுடைய வாய்ப்பை அதிகரிப்பதன் மூலம், அனைத்து மக்களையும் வலுப்படுத்துவதன் முக்கி யத்துவத்தை அங்கீகரிப்பதில் ஓர் வளர்ச் சிப்போக்கு காணப்படுகின்றது. அவர்கள் சொத்துக்களைத் திரட்டுவதையும், குடும்ப வருமானத்தையும் சேமநலத்தையும் உயர்த்துவதையும் இது சாத்தியப்படச் செய்கின்றது. இதன் விளைவாக, அபி விருத்தியில் அரச சார்பற்ற நிறுவனங் களின் வகிபாகத்தின் முக்கியத்துவம் அதிக கவனத்தைப் பெற்றுள்ளது. 1990 களில், கடன் பெறும் வாடிக்கையாளர் களின் சேமிப்புக்களைக் கட்டுப்படுத்து வதற்காக, இந்த நிறுவனங்களில் அனேக மானவை தம்மை முறைசார்ந்த நிதி நிறு வனங்களாக முழுமையாக மாற்றிக்கொண் டன. இதனால், தமது சேவை விரிவாக்க எல்லையை அவை அதிகரித்தன. அதன் பின்னர் இந்த நிறுவனங்களுக்கு நுண்நிதி நிறுவனங்கள் (MFI) எனும் பெயர் வழங்கப்பட்டது.

**நுண்நிதி நிறுவனங்கள்**

நுண்நிதி நிறுவனம் என்பது வறியவர் களுக்கு நிதிச் சேவைகளை வழங்கும் ஓர் அமைப்பாகும். மிகப் பரந்த வரை விலக்கணமாக அமைந்துள்ள இது, தமது சட்ட ரீதியான கட்டமைப்பு, பணி, முறை யியல் மற்றும் நீடித்திருக்கத்தக்க தன்மை என்பவற்றில், ஒன்றிலிருந்து ஒன்று வேறு பட்டுக் காணப்படும் சேவை வழங்குநர் களின் ஓர் பரந்த தொகுதியை உள்ளடக் கியுள்ளது. ஆயினும், மரபு ரீதியான வங்

கிகளின் வாடிக்கையாளர்களை விட வறியவர்களாகவும் அதிகளவு நலிவுறுவர்களாகவும் காணப்படும் வாடிக்கையாளர் தொகுதிக்கு நிதிச் சேவைகளை வழங்குகின்ற பொதுவான சிறப்பியல்பை இவை அனைத்தும் கொண்டுள்ளன. கடந்த சில தசாப்தங்களாக தேர்ச்சி பெற்ற நுண்நிதி நிறுவனங்கள் எவ்வாறு விருத்தியடைந்தன என்பதை வரலாற்று சூழமைவால் விளக்கமுடியும். CGAP (2003) யின் பிரகாரம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அண்ணளவாக 3000 நுண்நிதி நிறுவனங்கள் காணப்படுகின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள், அந்த நாடுகளில் ஆழமானதும், பரவலானதுமான நிதிச் சந்தைகளை உருவாக்குவதற்குக் கூட துணைபுரிந்துள்ளன. இந்த நுண்நிதி நிறுவனங்கள் முறைசார்ந்த அல்லது அரைகுறை முறைசார்ந்த அல்லது முறைசாரா சேவை வழங்கும் அமைப்புக்களாக இருக்க முடியும்.

பொதுவான சட்டங்களுக்கு மாத்திரமன்றி, குறிப்பான வங்கித் தொழில் ஒழுங்கு விதிகளுக்கும் கண்காணிப்புக்கும் உட்பட்டவையே (உதாரணமாக அபிவிருத்தி வங்கிகள், சேமிப்பு வங்கிகளும் அஞ்சல் வங்கிகளும், வர்த்தக வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதிசார் நடுவர்கள்) இந்த முறைசார் சேவை வழங்கும் அமைப்புக்களாகும். இந்த முறைசார் சேவை வழங்குநர்கள், ஏதாவது வகை நிதிச் சேவைகளை வழங்கும் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாகக் கூட இருக்கலாம். அரைகுறை சேவை வழங்குநர்கள் பொதுவான மற்றும் வர்த்தகச் சட்டங்களுக்கு உட்பட்ட நிலையில் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களாகும். ஆனால், அவை வழமையான வங்கி ஒழுங்கு விதிகள் மற்றும் கண்காணிப்புகளுக்கு உட்பட்டவையல்ல (உதாரணமாக நிதிசார் அரச சார்பற்ற நிறுவனங்கள், கொடுகடன் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள்). முறைசாரா சேவை வழங்குநர்கள், சுழற்சி முறைச சேமிப்பு மற்றும் கொடுகடன் சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் போன்ற பதிவு செய்யப்படாத குழுக்களாகும்.

இந்த நுண்நிதி நிறுவனங்கள், அவற்றின் உடைமைக் கட்டமைப்பைப் பொறுத்து, சீனாவில் உள்ள கிராமிய கொடுகடன், கூட்டுறவுச் சங்கங்களைப் போன்று, அரசாங்கத்திற்கு சொந்தமானவையாகவோ; மேற்கு ஆபிரிக்காவில் உள்ள கொடுகடன் சங்கங்களைப் போன்று, உறுப்பினர்களுக்குச் சொந்தமானதாகவோ; இலத்தீன் அமெரிக்காவில் உள்ள முற்றிலும் மாற்றத்திற்குள்ளான அரச சார்பற்ற நிறுவனங்களைப் போன்ற, சமூக அக்கறையுடன் கூடிய கரிசனையுடையோராகவோ; கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நுண்நிதி வங்கிகளைப் போன்ற இலாபத்தை உச்சப்படுத்தும் பங்குடமையாளர்களாகவோ இருக்க முடியும்.

சில சேவை வழங்கும் அமைப்புக்கள் பிரத்தியேகமாக ஏழைகளுக்கான நிதிச் சேவைகளை வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றன. ஏனைய நிறுவனங்கள், பல்வேறுபட்ட சந்தைகளுக்கான நிதிச் சேவைகளின் ஓர் பரந்த தொகுதியை வழங்குகின்ற பொதுவான நிதிச் சேவைகளில் கவனஞ்செலுத்துகின்றன. வறியவர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்குகின்ற அமைப்புக்கள், நிதிசாராச் சேவைகளையும் கூட வழங்குகின்றன. இச்சேவைகள் பயிற்சியும் தொழிநுட்ப உதவியும் அல்லது சமூக சேவைகள் மற்றும் ஆரோக்கியமும் வலுவூட்டல் பயிற்சியும் போன்ற வணிக அபிவிருத்திச் சேவைகளை உள்ளடக்கியுள்ளன.

அனைவரையும் போன்று, ஒரே வகையான நிதிச் சேவைகள் வறியவர்களுக்கும் தேவைப்படுகின்றது. இவற்றுள் அதிகளவு அறியப்பட்ட சேவையாக, குழுக்களின் ஒரு தொகுதியை அடிப்படையாகக் கொண்ட மற்றும் தனிப்பட்ட முறைமைகள் ஊடாக அடைமானப்பொருள் இன்றி வழங்கப்படுகின்ற "நுண் கடன்கள்" உள்ளன. வழங்கப்படுகின்ற சேவைகளின் பட்டியலானது சேமிப்பு, காப்புறுதி, வெளிநாட்டு பணஅனுப்பீடு போன்ற வறியவர்களின் குறிப்பிட்ட தேவைகளுடன் இசைவாக உள்ளவற்றை உள்ளடக்கியுள்ளது. வழங்கப்படுகின்ற சேவைகளின் வகைகள், சேவை வழங்குனரின் சட்டரீதியான கட்டமைப்பால் அனுமதிக்கப்படுவனவற்றால் வரையறுக்கப்பட்டுள்ளன. அதாவது, சேமிப்புக்களை அல்லது காப்புறுதிகளை வழங்குவதற்கு ஒழுங்குபடுத்தப்படாத நிறுவனங்கள் பொதுவாக அனுமதிக்கப்படுவதில்லை.

குடும்பங்களின் மிகவும் வறிய பிரிவினருக்கும், அவர்களுடைய தொழில்முயற்சிகளுக்குமான நிதிச் சேவைகளை உறுதிப்படுத்துதல் (அதாவது கடன்தொகை ஆள்வீத வருமானத்தை விடக் குறைவாக இருத்தல்) மற்றும் நுண்நிதி நிறுவனங்களின் நிலைத்திருக்கத்தக்க தன்மைக்கும் நீடித்த வளர்ச்சிக்குமான, அவற்றினுடைய நிதிசார் செயல்நிறைவுக்கு இட்டுச் செல்லக்கூடிய தன்மை என்பனவே நுண்நிதி நிறுவனங்களுக்கு உள்ள மிகப்பெரிய சவாலாகும். ஹாபரின் (2003) கூற்றுப்படி, நுண்நியின் பயனாளிகள் மீதான தாக்கத்தை அளவிடுவதன் பொருட்டு, நுண்நிதி நிறுவனங்களை மதிப்பீடு செய்வதற்காகப் பின்வரும் அளவீடுகள் பயன்படுத்தப்படுகின்றன:

1. நுண்நிதி நிறுவனங்களின் இலாபம் உழைக்கும் ஆற்றல்.
2. வழங்கப்பட்ட கடன்கள்.
3. ஒன்று திரட்டப்பட்ட சேமிப்புக்கள்.
4. கடன் மீளச்செலுத்தல் வீதம்.
5. சராசரிக் கடன் தொகை.
6. கடன்பெற்றோரின் எண்ணிக்கை.
7. சேமிப்போரின் எண்ணிக்கை.
8. பணியாளர்களின் உற்பத்தித்திறன் (ஒவ்வொரு ஊழியருக்குமான கடன்களின் / சேமிப்புக்களின் எண்ணிக்கை).
9. மீளக் கடன்பெற்றோரின் எண்ணிக்கை.
10. பெண் வாடிக்கையாளர்களின் வீத அளவு.
11. குறிப்பிட்ட பிரதேசங்களில் வசிக்கின்ற அல்லது குறிப்பிட்ட இன மரபுக்குழுக்களுக்குச் சொந்தமான மக்கள் போன்ற வறியவர்களாகவுள்ள குழுக்களுக்குச் சொந்தமானவர்களென அறியப்படும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை.
12. குழுக் கூட்டங்களுக்கான வருகை ஒழுங்கு.
13. வாடிக்கையாளர்களின் சொத்துக்களில் ஏற்படும் மாற்றங்கள்.
14. வாடிக்கையாளர்களின் வருமானத்தில் ஏற்படும் மாற்றங்கள்.
15. வாடிக்கையாளர்களினுடைய குடும்பங்களின் போசாக்கு நிலையில் ஏற்படும் முன்னேற்றங்கள்.
16. கல்வி மற்றும் பாடசாலைக்குச் செல்லுதல் என்பவற்றில் காணப்படும் முன்னேற்றங்கள்.
17. வாடிக்கையாளர் அதிகாரத்தில் ஏற்படும் மாற்றங்கள்.

**நுண்நியில் ஈடுபட்டுள்ள வர்த்தக வங்கிகள்**

சரிபார்க்கத்தக்க வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், குறிப்பிட்ட கால அடிப்படையிலான வைப்புக்கள் என்பவை உட்பட, வைப்புக் கணக்குக்களின் ஓர் பெருந்தொகுதியை வர்த்தக வங்கிகள் வழங்குகின்றன. அத்துடன் தனிப்பட்ட கடன்கள், வீடமைப்புக் கடன்கள், வணிகக் கடன்கள் முதலியன போன்ற கடன் கருவிகளின் ஓர் தொகுதியைக்கூட இவ்வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன.

நுண்நிதி பரிணாமவளர்ச்சியடைந்த ஆரம்ப கட்டத்தில், நுண்நிதியை ஓர் இலாபமற்ற

தெரிவாக வர்த்தக வங்கிகள் கருதியமை யால், நுண்நிதிச் செயற்பாடுகளில் அவை தமது கரிசனையைக் காட்டவில்லை. கடந்த காலத்தில் வர்த்தக வங்கிகளில் நுண் நிதிச் செயற்பாடுகள் காணப்படாமைக்கு மூன்று அடிப்படைக் காரணங்களை நுண் நிதி தொடர்பான வல்லுநர்கள் இனங் கண்டுள்ளனர். நுண்நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் வர்த்தக வங்கிகள் ஈடு படாமைக்கான பிரதான காரணங்களாக, நுண்நிதிக் கொடுக்கல் - வாங்கல்களுடன் சம்பந்தப்பட்டுள்ள உயரளவான நட்ட அச் சம் மற்றும் அதிகரித்தளவிலான செலவு என்பன பற்றிய நோக்கு, சமூக - பொரு ளாதார மற்றும் கலாச்சாரத் தடைகள் என்பவை காணப்படுகின்றன. மரபுரீதி யான வங்கியாளர்கள் நுண் தொழில் முயற்சிகளை மோசமான ஓர் கடன் நட்ட அச்சமாகக் கருதினர். நுண்நிதிச் செயற் பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து வர்த்தக வங்கிகளை அதைரியப்படுத்திய பிரதான மான ஓர் காரணியாக, நுண் முயற்சியா ளர்களின் கடன்பெறலுக்கான கேள்விக்கு உத்தரவாதம் அளிப்பதற்கான அடைமா னப்பொருள் கிடையாமையும், அதன் பற் றாக்குறையும் அமைந்துள்ளது. இந்த வர்த் தக வங்கிகள் நுண் தொழில்முயற்சி களை, குறைந்த வருமானம் பெறும் குழுக் களினுடைய கடன் பெறல்களை, மீளச் செலுத்த முடியாததாக இருக்கக்கூடிய உறுதியற்றதும், நிறைவேற்ற முடியாதது மான வணிக முயற்சிகளாகக் கருதின.

வர்த்தக வங்கிகள் நுண்நிதியில் ஈடுபடு வதை அதையரியப்படுத்திய மற்றுமொரு காரணியாக, சிறு கடன்களுடன் சம்பந்தப் பட்டுள்ள உயரளவிலான செலவுகள் அமைந்திருந்தன. கடன் பெறுவோரின் கடன் தொகையின் அதிகரிப்புடன் ஒப்பிடு மிடத்து, நிதிச் செயற்பாடுகளுடன் சம்பந் தப்பட்டுள்ள பரிமாற்றற் செலவானது குறைவடைகின்றது என நம்பப்படுகின் றது. ஆயினும், நுண் கடன்கள் சிறு தொகையாக இருப்பதனாலும், அவற்றின் முதிர்ச்சிக் காலங்கள் குறுகியதாக இருப் பதனாலும் வர்த்தக வங்கிகளின் மரபுரீதி யான கடன்களுடன் ஒப்பிடுமிடத்து, நுண் கடன்களிலான பரிமாற்றச் செலவுகள் உயர்ந்தவையாக காணப்படுகின்றன. நுண் நிதிச் செயற்பாடுகளிலிருந்து இவ்வங்கி கள் விலகிச் செல்வதற்கான மற்றுமொரு பிரதான காரணியாக இது காணப்பட்டது.

இது தவிர, நுண்நிதிச் செயற்பாடுகளை வங்கிககள் கைவிடுவதற்கான இன்னு மொரு காரணியாக சமூக - பொருளாதார மற்றும் கலாச்சார தடைகள் காணப்பட் டன. குறைந்த வருமானம் பெறும் நாடுக ளில் வாழ்கின்ற மக்களுக்கு கல்வி அறிவு குறைவாகக் காணப்படுவது பொதுவான தொரு பிரச்சனையாக உள்ளது. இதன் விளைவாக, வணிக ரீதியான நிறைவேற் றக்கூடிய தன்மையைக் காட்டக்கூடிய வணி கப் பதிவுகளை அவர்கள் கொண்டிருப்ப தில்லை. அத்துடன், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள இவ்வறிய மக்கள், நவீன வங்கித் துறைக்கு இசைவாக்கம் அடைவதில் கலாச்சார மற்றும் மொழி ரீதியான தடைகள் காணப்படுகின்றன.

ஆயினும், இன்று இச்சூழ்நிலையானது கணிசமான அளவு மாற்றமடைந்துள்ளது. குறைந்த வருமானம் பெறும் மக்களுடன் நிதிப் பரிமாற்றல்களை மேற்கொள்வதில், வர்த்தக வங்கிகள் மேலும் மேலும் ஈடு பட்டு வந்துள்ளன. வங்கித் துறையில் காணப் படும் அதிகரித்தளவிலான போட்டித்தன்மை காரணமாக, நிதிப் பரிமாற்றல்களிலான தமது சந்தைப் பங்கு குறைவடைந்து செல்லும் பிரதான பிரச்சனையை வர்த்தக வங்கிகள் எதிர்கொள்கின்றன. ஆதலால், அவற்றின் இலாப அளவு குறைவடைவ தற்கு இது காரணமாக அமைகின்றது. ஆகவே, வர்த்தக வங்கிகள் தற்போது நுண்நிதிச் செயற்பாடுகளில் கரிசனை செலுத்தி வருகின்றன. உதாரணமாக, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள நுண்நிதிச் சந்தையில் 3 பில்லி யன் சாத்தியப்படத்தக்களவு வாடிக்கையா ளர்களையும், நுண்நதிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 225 இற்கும் மேற்பட்ட வங் கிகள் மற்றும் ஏனைய முறைசார் நிதி நிறுவனங்களையும் CGAP (வறியவர்க ளுக்கு உதவுவதற்கான ஆலோசனைக் குழு) இனங்கண்டுள்ளது. இதனால், கடந் தசாப்தத்தில் நுண்நிதிச் செயற்பாடுகளி லான வர்த்தக வங்கிகளின் பங்குபற்றல் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

நுண்நிதிச் செயற்பாடுகளில் காணப்படும் உயரளவிலான போட்டி அனுகூலம் காரண மாக, வர்த்தக வங்கிகள், ஒன்றில் நுண் நிதிச் சேவை கம்பனி ஒன்றினூடாக (நேரடி அணுகுமுறை) அல்லது தற்போ துள்ள நுணிநிதி வழங்குநர் (மறைமுக அணுகுமுறை) ஊடாக, நுண்நிதிச் சந்தை யினுள் (Isern மற்றும் Porteous, திகதி யிடப்படாத) நுழைவதற்கு ஆறு அணுகு முறைகளைப் பயன்படுத்துகின்றன.

மறைமுகமான அணுகுமுறையில், நுண் நிதிச் சந்தையினுள் நுழைவதற்கு வர்த் தக வங்கிகள் 3 வேறுபட்ட வழிகளை உபயோகிக்கின்றன. அவை ஒன்றில் ஓர் உள்வாரியான நுண்நிதிப் பிரிவை, அல்லது ஒரு நிபுணத்துவமுடைய நிதி நிறுவ னத்தை, அல்லது ஓர் நுண்நிதிச் சேவைக் கம்பனியை ஆரம்பிப்பதை உள்ளடக்கி யுள்ளன.

நுண்நிதிச் சந்தையினுள் நுழைவதற்கான மறைமுக அணுகுமுறையில், வர்த்தக வங்கிகள் 3 வேறுபட்ட வழிகளை உப யோகிக்கின்றன. அவையாவன சேவை களைத் தனித்தனியாக வெளியில் இருந்து பெறுதல், அல்லது நுண்நிதி நிறுவனங் களுக்கு ஒன்றில் வர்த்தகக் கடன்களை வழங்குதல், அல்லது அவற்றிற்கு கட்ட மைப்புக்களையும் முறைமைகளையும் வழங்குதல்.

நுண்நிதிச் செயற்பாடுகளிலான வர்த்தக வங்கிகளின் ஈடுபாட்டின் வெற்றிக்கான பின்வரும் காரணிகளை Goodwin (1998) இனங்கண்டுள்ளார்:

1. சிறியதோர் விசேட வங்கியை அல்லது பாரிய வர்த்தக வங்கி ஒன்றினுள் ஓர் தனியான நுண்நிதிப் பிரிவை உரு வாக்குதல்
2. கடன்வழங்கலுக்குச் சமமான முக்கியத் துவத்தை சேமிப்புக்கும் கொடுத்தல்.
3. கடன்வழங்கற் கருவிகளின் அனைத் துச் செலவுகளையும் உள்ளடக்கும் வகையில் வட்டி வீதங்களை அற விடல்.
4. உன்னதமான முகாமைத்துவத் தகவல் முறைமையையும் பட்டியலிடப்பட்ட முகாமைத்துவத்தையும் உறுதிப்படுத் துதல்.
5. பணியாளர்களை வங்கிக்கு வெளியி லிருந்து வேலைக்கமர்த்துதல் அல்லது பணியாளர்களுக்கு விசேட பயிற்சி வழங்குதல்
6. திட்டம் வெற்றிக்கு இட்டுச் செல்லப் படுவதை உறுதிப்படுத்தக்கூடிய தீவிர மான ஓர் செயல்வீரனை அல்லது தொலைநோக்குடையவரை தேடிக் கண்டுபிடித்தல்

## இலங்கையில் நுண்நிதியும் வர்த்தக வங்கித்துறையும்

இலங்கையில், கடந்த சில தசாப்பதங் களாக பல்வேறுபட்ட நுண்நிதிச் செய்ற் பாட்டாளர்கள் இத்துறையில் ஈடுபட்டு வந் துள்ளனர். இலங்கையின் நுண்நிதிச் சந் தையில் காணப்படும் மிக முக்கியமான செயற்பாட்டாளர்களாக வர்த்தக வங்கி கள், அபிவிருத்தி வங்கிகள், நிதிக் கம் பனிகள், பொதுச் சேமநல அமைப்புக் கள், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு கிரா மிய வங்கிகள், அரச சார்பற்ற நிறுவனங் களின் நுண்நிதி நிறுவனங்கள் என்பன

இருந்துவந்துள்ளன. வறிய மக்களுக்கு பல்வேறுபட்ட நுண்நிதிக் கடன்களை வழங்குகின்ற மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நசனல் வங்கி ஆகியன இந்த நாட்டின் நுண்நிதி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நன்கு அறியப்பட்ட வர்த்தக வங்கிகளாகும். அபிவிருத்தி வங்கிகளில், வறிய மக்களின் நிதிப் பரிமாற்றல்களுக்கான கேள்வியை நிறைவு செய்வதில் பிராந்திய அபிவிருத்தி வங்கியும், சனச அபிவிருத்தி வங்கியும் நுண்நிதிச் சந்தையில் மிகவும் முக்கியமான பங்கினை வகித்து வருகின்றன.

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகள் மத்தியில், அரசுக்கு சொந்தமானதும் இலங்கையின் இரண்டாவது பெரிய வங்கியுமான மக்கள் வங்கியானது கிராமிய மற்றும வறிய குடும்பங்கள் நிதிச் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. இது தற்போது சிறு மற்றும் நடுத்தர விவசாய முயற்சியாளர்கள், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், சுயதொழில் வாய்ப்பு, குடிசைக் கைத்தொழில், வியாபாரம் என்பவற்றிற்கு வெவ்வேறான நுண்நிதிக் கடன்களை வழங்குவதுடன், இந்த நாட்டின் 25 வீதத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான சேவைகளையும் வழங்குகின்றது. மக்கள் வங்கியானது வறியவர்களின், வணிக முயற்சிகளை ஆரம்பித்தல், முன்னேற்றுதல் அல்லது விரிவு படுத்துதல் என்பவற்றிற்காக நுண்நிதிக் கடன்களை வழங்கிவருகின்றது. உச்ச அளவிலான கடன் தொகைகளைக் கவனத்திற் கொள்ளும்போது, இந்த நாட்டில் காணப்படும் நுண்நிதிச் செயற்பாடுகள் வர்த்தகமயப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதற்கான ஓர் தெளிவான அறிகுறியைக் காணமுடிகின்றது. உதாரணமாக, மக்கள் வங்கி நுண் தொழில்முயற்சிகளுக்கு அதிகபட்சம் 250,000 ரூபாவை இரு தனிப்பட்டவர்களின் உத்திரவாதத்துடன் வழங்குகின்றது. இது தவிர, சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான அதிகபட்ச கடன் தொகையாக முறையே 2 மற்றும் 20 மில்லியன் ரூபா வழங்கப்டுகின்றது. அத்துடன், இந்த நாட்டிலுள்ள ஏனைய மிக முக்கியமான வர்த்தக வங்கிகளாக இலங்கை வங்கியும், ஹட்டன் நசனல் வங்கியும் உள்ளன. இவை நுண்நிதிச் செயற்பாடுகளில் மிக நீண்ட காலமாக ஈடுபட்டு வருகின்றன. இவை விவசாயம், மீன்பிடித் தொழில், சுயதொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றிற்கான நுண்நிதிக் கடன்களை வழங்குகின்றன. இவ்விரு வங்கிகளுமே அவர்களுடைய நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக நுண் தொழில்முயற்சிகளுக்கு அதிகபட்ச கடன் தொகையாக ஒரு மில்லியன் ரூபாவை வழங்குகின்றன.

**முடிவுரை**

வறிய மக்கள் மத்தியில் நுண் தொழில் முயற்சிகளுக்கு நிதியளிப்புச் செய்வதற்கும், அவற்றை ஊக்குவிப்பதற்கு துணை புரிவதற்கும் பல்வேறு வகையான மற்றும் பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்களும் திட்டங்களும் காணப்படுகின்றன. இதனால், இந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் வறுமையை ஒழிப்பதில் நுண்நிதியானது ஓர் முக்கியமான கருவியாக ஆகியுள்ளது. பரிணாம வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில், நுண்நிதியை வர்த்தக வங்கிகள் இலாபமற்ற ஓர் தெரிவாகக் கருதின. இச்சந்தையில் வர்த்தக வங்கிகள் நுழைவதை அதைரியப்படுத்திய பிரதான காரணிகளாக கடன் நட்ட அச்சம் மற்றும் பரிமாற்றல்கள் தொடர்பான உயரளவான செலவு என்பவை காணப்பட்டன. ஆயினும், முறைசார் நிதி நிறுவனங்கள் மத்தியில் மரபுரீதியான சந்தைகளுக்கு காணப்பட்ட அதிகரித்த போட்டித்தன்மை காரணமாக, நுண்நிதிச் சந்தையினுள் நுழைவதற்கான அதிகரித்தளவிலான கரிசனையை வர்த்தக வங்கிகள் வெளிப்படுத்தின. அதற்காக அவை நேரடி மற்றும் மறைமுக அனுகுமுறைகளை உபயோகித்தன. இந்த நேரடி அனுகுமுறையில், ஓர் விசேட பிரிவை அல்லது நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனத்தினை ஆரம்பிப்பதன் மூலம், வர்த்தக வங்கிகள் இச்சந்தையினுள் நுழைகின்றன. இதற்கு மேலதிகமாக, இச்சந்தையில் தற்போதுள்ள நுண்நிதி வழங்குநர்கள் ஊடாக நிதியங்களை நெறிப்படுத்துவதன் மூலமும் இச்சந்தையினுள் நுழைவதற்கு மறைமுக அனுகுமுறையை வங்கிகள் பயன்படுத்துகின்றன. இது வறிய மக்களுக்கான நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்கு சேவையாற்றும் வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. வறியவர்களுக்கான கடன்கள் மற்றும் கடன் நிரம்பல் என்பவற்றின் பெருக்கம் நுண்நிதிச் செயற்பாடுகளின் வர்த்தகமயமாக்கத்தை வெளிப்படுத்துகின்ற சில குறிகாட்டிகளாக அமைந்துள்ளன. நுண்நிதிச் செயற்பாடுகளிலான வர்த்தக வங்கிகளின் ஈடுபாடானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் முறைசார் மற்றும் முறைசாரா நிதிச் சந்தைகளின் ஒன்றிணைப்பை விரைவுபடுத்தியுள்ளது.

**உசாத்துணைகள்:**


Chandradasa, A.J.M. (December 2004/ January 2005). *What is Microfinance?*, Economic Review, People's Bank, Colombo, Sri Lanka.

Consultative Group to Assist Poor (CGAP). (2003). *Frequently Asked Questions*, Retrieved on August 8th, 2005, Available from http:// www.cgap.org.

Goodwin R. (1998). *The Role of Commercial Banks in Microfinance: Asia Pacific*

Harper, M. (2003). *Practical Microfinance: A Training Guide for South Asia*, Vistaar Publications, New Delhi.

Isern, J. and Porteous, P. *Commercial Banks and Microfinance: Evolving Models of Success*,

Karmakar, K.G (1999). *Rural Credit and Self-help Groups: Micro-finance Needs and Concepts in India*, Sage Publications, New Delhi.

Karunanayake, M.M. (Ed.). (2003). *Rural-Urban Interface in Sri Lanka, Studies in Regional Development*, Department of Geography, University of Sri Jayewardenepura, Sida/SAREC Research Cooperation Project, p. 15.

Mosley, Paul. (2001). Micro-finance and Poverty in Bollivia, The *Journal of Development Studies*, *37(4)*, London.

Querishi, S., Ilaz Nabi, & Rashid, Faruquee. (1996). *Rural Finance for Growth and Poverty Alleviation in Pakistan*, Agriculture and Natural Resources Division, World Bank, South Asia Region.

Wattegama, W.G.E.J. (2007). The Role of Micro-Finance Institutions in the Rural Development Strategy, *Accountancy Journal*, Department of Accountancy and Business Finance, Wayamba University of Sri Lanka, Kuliyapitiya, Vol 5, ISSN 1800-2382.


**Footnote:**


[1] E-mail: shan@wyb.ac.lk

# இலங்கையில் இலத்திரனியல் வங்கிச் சேவை: வருங்கால வாய்ப்புகளும் வரையறைகளும்

**பேராசிரியர். சிறிமேவன் கொலம்பகே**

*முதுநிலைப் பேராசிரியர்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

**அறிமுகம்**

நிதித் துறையின் தாராளமயமாக்கம், உலகளாவிய நிதிசார் ஒருமைப்பாடு என்பவற்றுடன் இணைந்ததாகக் காணப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் முன்னொருபோதும் இல்லாத புத்தாக்கங்களின் பின்னணியில், இலத்திரனியல் பிரயோகங்கள் நிதிச் சந்தைகளில் காணப்படும் ஏராளமான செயற்களங்களில் வளர்ந்து வருகின்றன. இவை இலத்திரனியல் வங்கிச் சேவை, இலத்திரனியல் பணம், இலத்திரனியல் நிதி, இலத்திரனியல் தரகுச்சேவை, இலத்திரனியல் காப்புறுதி, இலத்திரனியல் வெளிநாட்டுப் பண அனுப்பீடுகள், இலத்திரனியல் நிதிய மாற்றல்கள், இலத்திரனியல் நாணய மாற்று வீதம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. இந்த இலத்திரனியல் வங்கிச் சேவையானது வங்கிச்சேவை வழங்கல்களின் மிகப் பிந்திய மாதிரியாக அமைந்துள்ளது. இந்த இலத்திரனியல் வங்கிச் சேவையை, நிதிப் பரிமாற்றம் ஒன்றை ஆயத்தப்படுத்தி, முகாமை செய்து, கட்டுப்படுத்துவதற்கு துணைபுரியும், ஒரு வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான இலத்திரனியல் இணைப்பு என பொதுப்படையாக வரைவிலக்கணம் செய்ய முடியும். இணைய வங்கிச் சேவை, தொலைபேசி வங்கிச் சேவை, செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை, நடமாடும் பணம், தொலைக்காட்சியை அடிப்படையாகக் கொண்ட வங்கிச் சேவை, கணினிமய (இணையத்துடன் இணைக்கப்படாத) வங்கிச் சேவை என்பன உட்பட இந்த இலத்திரனியல் வங்கிச் சேவை பல்வேறுபட்ட தளங்களில் வழங்கப்படுகின்றது. இவ்வழிமுறைகள் ஒவ்வொன்றிலும் இருந்து பயன்கொள்ளும் அளவானது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. உதாரணமாக, இலங்கை போன்ற ஓர் நாட்டுடன் ஒப்பிடுமிடத்து, கென்யாவில் செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை மிகவும் பிரபல்யமாகவுள்ளது.

இலங்கையில் இலத்திரனியல் வங்கிச் சேவையின் வளர்ச்சிக்கான வருங்கால வாய்ப்புகளையும் வரையறைகளையும் பகுப்பாய்வு செய்வதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும். அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்துடனான ஓர் இணைந்த ஆராய்ச்சி செயற்திட்டத்தின் கீழ், 2009/2010 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வொன்றின் மூல்ம இக்கட்டுரை ஆசிரியரால் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டதே இப்பகுப்பாய்வாகும். இலத்திரனியல் வங்கிச் சேவையிலிருந்து பரந்தளவில் பயன் கொள்ளப்பட்டுவருகின்ற போதும், இலங்கையில் இந்த இலத்திரனியல் வங்கிச் சேவை தொடர்பான தரவுகள் குறைவாகக் காணப்படுவதன் காரணமாகவே இந்த ஆய்வை மேற்கொள்வதற்கான தூண்டுதல் ஏற்பட்டது. இத்தரவுகள் இத்தொழில் துறையின் மேம்பாட்டைப் போன்று, கொள்கை வகுப்பு நோக்கங்களுக்கும் இன்றியமையாதனவாகும். இக்கட்டுரையின் மீதிப் பகுதி பின்வருமாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் விரிவாக்கம் பற்றிய ஓர் பொது மதிப்பீட்டை வழங்குகின்றது. பகுதி மூன்று இந்த நாட்டிலுள்ள இலத்திரனியல் வங்கிச் சேவைப் பயன்பாட்டை ஆராய்கின்றது. பண முறைமைகளுக்கான சாத்தியப்பாட்டை பகுதி நான்கு ஆராய்கின்றது. இறுதிப் பகுதியில் முடிவுக் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் விரிவாக்கம்**

ஏனைய பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் போன்று, இலங்கையும் கடந்த தசாப்த காலகட்டத்தில் தொலைத் தொடர்பாடல் சேவைகளில் உன்னதமான ஓர் வளர்ச்சியை அனுபவித்து வந்துள்ளது. இதில் குறிப்பாக செல்லிடத் தொலைபேசிப் பாவனையின் விரிவாக்கம் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்து வருகின்றது. அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2001இல் 430,000 ஆக இருந்த செல்லிடத் தொலைபேசிகளின் எண்ணிக்கையானது 2009 இல் அநேகமாக 14 மில்லியனாக அதிகரித்தது. ஒவ்வொரு 100 பேரிலும் 68 பேர் செல்லிடத் தொலைபேசிகளை வைத்துள்ளனர் என்பதை இது மறைமுகமாகத் தெரிவிக்கின்றது. இதனால், இலங்கையில் செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவையைப் பிரபல்யப்படுத்துவதற்கு மிக அதிகளவான சாத்தியக்கூறுகள் உண்டு.

வறியவர்கள் மத்தியில் கூட செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவையை அறிமுகப்படுத்துவதில் இந்த நாடு கொண்டுள்ள மிகப் பெரும் ஆற்றலை குடும்பங்களுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் கருவிகள் பற்றிய எமது ஆய்வுத் தரவுகள் வெளிக்காட்டுகின்றது. அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளவாறு, மின்சாரம், வானொலி, தொலைக்காட்சி போன்ற அடிப்படை வசதிகள், பல்வேறுபட்ட வருமானக் குழுக்

அட்டவணை 1: 2000 - 2009 வரை இலங்கையில் தொலைத்தொடர்பாடல் சேவைகள்

| | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிரந்தரமான சேவைகள் | | | | | | | | | | |
| சந்தாதாரர் அடிப்படை ('000) | 767 | 829 | 883 | 934 | 991 | 1,244 | 1,884 | 2,742 | 3,446 | 3,431 |
| நிரந்தரமான சேவைகள் ('000) | 653 | 708 | 769 | 818 | 860 | 919 | 910 | 932 | 934 | 871 |
| கம்பி இணைப்பற்ற சேவைகள் ('000) | 114 | 121 | 114 | 116 | 131 | 325 | 974 | 1,810 | 2,513 | 2,560 |
| 1,000 பேருக்கான தொலைபேசிகள் | 4.2 | 4.4 | 4.7 | 4.9 | 5.1 | 6.3 | 9.5 | 13.7 | 17.1 | 16.8 |
| ஏனைய சேவைகள் | | | | | | | | | | |
| செல்லிடத் தொலைபேசிகள் ('000) | 430 | 668 | 932 | 1,393 | 2,211 | 3,362 | 5,412 | 7,983 | 11,083 | 13,950 |
| 1,000 பேருக்கான செல்லிடத் தொலைபேசிகள் | 4 | 5 | 7 | 12 | 15 | 17 | 27 | 40 | 55 | 68 |
| பொதுத் தொலைபேசிகள் | 8,222 | 7,281 | 6,681 | 6,440 | 6,095 | 6,285 | 7,561 | 8,526 | 7,417 | 7,936 |
| மின்னஞ்சல், இணையச் சந்தாதாரர் | 40,497 | 61,532 | 70,082 | 85,500 | 93,300 | 115,000 | 130,000 | 202,348 | 234,000 | 240,000 |

*மூலம்:* Sri Lanka Telecom Ltd.
Central Bank of Sri Lanka

களை உள்ளடக்கிய குடும்பங்களில் பெரும் பான்மையானோருக்கு பொதுவாகக் கிடைக்கக்கூடியனவாக உள்ளன. மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கையில் அண்ணளவாக 93 சதவீதமானோருக்கு மின்விநியோகம் கிடைக்கின்றது. ஆய்வுக் குட்படுத்தப்பட்ட குடும்பங்களில் அண்ணளவாக 61 சதவீதத்தினருக்கு நிலையான தொலைபேசிகளும், 71 சதவீதத்தினருக்கு செல்லிடத் தொலைபேசிகளும் உள்ளன. இதன் அர்த்தம் எதுவெனில், ஒவ்வொரு ஐந்து குடும்பங்களிலும் மூன்று குடும்பங்களுக்கு செல்லிடத் தொலைபேசிகள் உண்டு என்பதாகும். மிக வறியவர்கள் உட்பட, வறிய குடும்பங்களில் அண்ணளவாக 50 சதவீதத்தினர் செல்லிடத் தொலைபேசிகளை வைத்துள்ளனர் என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். போட்டி நிறுவனங்களால் விருத்தி செய்யப்பட்ட தொலைத்தொடர்பு வலையமைப்புகளின் விரிவாக்கமானது, செல்லிடத் தொலைபேசிப் பாவனையில் உன்னதமான ஓர் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. அண்மைய வருடங்களில், குடும்பங்கள் கணினிகள், மின்னஞ்சல் மற்றும் இணைய வசதிகள் ஆகிய ஏனைய சாதனங்களை உடைமையாகக் கொண்டிருப்பதில் கூட ஓர் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்படுகின்றது. மொத்தத்தில் அண்ணளவாக 13 சதவீதமான குடும்பங்கள் மேசைக் கணினிகளை உடைமையாகக் கொண்டுள்ளன என்பதுடன், அவர்களில் 6 சதவீதத்தினர் மடிக் கணினிகளை உடைமையாகக் கொண்டுள்ளனர். ஆயினும், மிக வறிய குடும்பங்கள் கணினிகளையோ அல்லது அவற்றுடன் தொடர்புடைய சாதனங்களையோ உடைமையாகக் கொண்டிருக்கவில்லை. மின்னஞ்சல் மற்றும் இணைய வசதிகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் கூட பெரும்பாலும் வறியோர் அல்லாத மற்றும் ஓரளவுக்கு வறிய குழுக்களுக்கு மாத்திரம் உரியதாக உள்ளன.

அட்டவணை 2: இலங்கையில் (குடும்பங்களின் %)தகவல் மற்றும் தொடர்பாடல் கருவிகளின் உடைமை (n=859)

| விபரம் | வறியோரல்லாதோர் | ஓரளவு வறியோர் | மிக வறியோர் | அனைவரும் |
|---|---|---|---|---|
| மின்சாரம் | 95.9 | 86.3 | 83.3 | 92.9 |
| வானொலி | 89.0 | 76.0 | 77.1 | 85.2 |
| தொலைக்காட்சி | 94.1 | 82.4 | 72.9 | 90.1 |
| நிரந்தரமான தொலைபேசி | 66.2 | 48.0 | 56.3 | 61.4 |
| செல்லிடத் தொலைபேசி | 78.6 | 53.9 | 47.9 | 71.0 |
| நகல்படிவ இயந்திரம் | 7.7 | 5.4 | 0.0 | 6.8 |
| மேசைக் கணினி | 16.3 | 7.8 | 0.0 | 13.4 |
| மடிக் கணினி | 6.8 | 3.9 | 0.0 | 5.7 |
| கணினி அச்சுப்பொறி | 8.4 | 5.9 | 0.0 | 7.3 |
| CD drive | 19.4 | 11.8 | 0.0 | 16.5 |
| Scanner | 7.1 | 4.4 | 0.0 | 6.1 |
| மின்னஞ்சல் | 7.1 | 4.9 | 2.1 | 6.3 |
| இணையம் | 8.6 | 4.4 | 0.0 | 7.1 |

**மூலம்:** *Household Survey on E-Money* conducted by the author, 2008/2009

## இலத்திரனியல் வங்கிச் சேவையின் உபயோகம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினதும் அதனுடன் தொடர்புடைய இலத்திரனியல் வங்கிச்சேவை வசதிகளினதும் வளர்ச்சியின் உடன் நிகழ்வாக, கடன் மற்றும் பெறுகடன் அட்டைகள், இணைய வங்கிச் சேவை, தொலைபேசி வங்கிச் சேவை போன்ற இலத்திரனியல் வங்கிச் சேவை வசதிகளின் உபயோகம் அண்மைய வருடங்களில் இலங்கையில் வளர்ச்சியடைந்துள்ளது. அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2009 ஆம் ஆண்டில் மொத்தச் சில்லறைப் பணக் கொடுப்பனவுகளில் அண்ணளவாக 5 சதவீதமாக காணப்பட்ட இணைய வங்கிச் சேவையானது, மிக முக்கியமான ஓர் இலத்திரனியல் கொடுப்பனவு முறையாக வெளிப்பட்டுள்ளது. அதேவேளை தொலைபேசி வங்கிச் சேவையின் உபயோகம் 0.1 சதவீதமாக மாத்திரமே உள்ளது. கடன் அட்டைகள் மற்றும் பெறுகடன் அட்டைகளின் பங்குகள் முறையே 1.3 மற்றும் 0.2 சதவீதங்களாக உள்ளன. இவ்வாறாக, இலத்திரனியல் வங்கிச் சேவையின் உபயோகமானது இலங்கையில் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. காசு அல்லாத பிரதானமான வகைக் கொடுப்பனவாக வங்கிக் காசோலைகள் தொடர்ந்தும் இருப்பதுடன், இந்த நாட்டின் காசு அல்லாத கொடுப்பனவுகளின் மொத்த பெறுமதியில் அவை கிட்டத்தட்ட 90 சதவீதமாக காணப்படுகின்றன.

வர்த்தக வங்கிகள், விசேட வங்கிகள் மற்றும் ஏனைய பல வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் என்பன அண்மைக் காலத்தில் பல்வேறு வகையான இலத்திரனியல் சேவை வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இணைய (கணினி மென்பொருள் உருப்படுத்தும் மெய்மைச் சூழல்) வங்கிச் சேவையானது நிலுவை விபரம் கேட்டல், காசோலையின் நிலை, கொடுப்பனவு நிறுத்தம், கட்டணம் செலுத்தல், உள் நோக்கிய வெளிநாட்டு பணஅனுப்புகை, நிதிய மாற்றல் போன்ற வசதிகளை உள்ளடக்கியுள்ளது. செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி உலகின் எப்பாகத்திலிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை இந்த இணைய வங்கிச்சேவை வாடிக்கையாளர்கள் கொண்டுள்ளனர். செல்லிடத் தொலைபேசிப் பாவனை இலங்கையில் துரிதமாக வளர்ந்து வருவதுடன், இணைய வங்கிச் சேவைகளில் பெரும்பாலானவற்றை இந்த செல்லிடத் தொலைபேசி ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மத்தியில் இந்த நாடு வழமைக்கு மாறான வகையில் உயரளவான எழுத்தறிவு வீதத்தை

அட்டவணை 3: 2001 - 2009 வரை இலங்கையில் காசற்ற கொடுப்பனவு முறைகள்

| காசற்ற கொடுப்பனவு முறைகளினுடைய பெறுமதிகளின் ஒழுங்கமைவு (%) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொடுப்பனவு முறை | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | |
| பிரதான காசோலைத் தீர்வு முறை | 62.5 | 4.4 | 95.0 | 94.3 | 92.1 | 90.3 | 89.9 | 87.7 | |
| ரூபா வரைவுத் தீர்வு முறை | ... | ... | 0.2 | 0.2 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை | | 34.2 | 83.7 | 1.9 | 2.4 | 2.9 | 3.7 | 4.5 | 5.6 |
| கடன் அட்டைகள் | | 0.5 | 2.0 | 1.1 | 1.2 | 1.3 | 1.4 | 1.4 | 1.3 |
| பெறுகடன் அட்டைகள் | | 0.6 | 2.8 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 | 0.1 | 0.2 |
| இணைய வங்கிச்சேவை | 1.5 | 6.9 | 1.3 | 1.4 | 2.4 | 4.2 | 3.8 | 4.9 | |
| தொலைபேசி வங்கிச்சேவை | | 0.8 | 0.2 | 0.2 | 0.1 | 0.8 | 0.0 | 0.1 | 0.1 |
| தபால் கருவிகள் | ... | ... | 0.4 | 0.3 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | |
| மொத்தம் | | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

**மூலம்:** Central Bank of Sri Lanka

அனுபவித்து வரும் அதேவேளை, அத னுடைய கணினி அறிவு வீதம் கூட தற் போது அண்ணளவாக 40 சதவீதமாக அதி கரித்துள்ளது. அட்டவணை 4 இல் காட் டப்பட்டுள்ளவாறு, அண்ணளவாக 70 சத வீதமான குடும்பங்கள் தன்னியக்கப் பணப் பரிமாற்று இயந்திரங்களைப் (ATM) பற்றிய அறிவையும், அத்துடன் 37 சதவீதமான குடும்பங்கள் இணைய வங்கிச் சேவை பற்றிய அறிவையும் கொண்டுள்ளன. தொலைபேசி வங்கிச் சேவை பற்றிய அறிவு அண்ணளவாக 17 சதவீத குடும்பங்களுக்கும், குறுந்தக வல் வங்கிச் சேவை பற்றிய அறிவு அண் ணளவாக 12 சதவீத குடும்பங்களுக்கும் வரையறுக்கப்பட்டதாகவுள்ளது. புலம் பெயர் தொழிலாளர்களில் பெரும் பங் கினர் பிரதானமாக சனத்தொகையின் வறிய பிரிவினரை சார்ந்தோராக இருப் பதுடன், இலத்திரனியல் வெளிநாட்டுப் பணஅனுப்புகை பற்றிய அறிவைப் பெற் றவர்களாக உள்ளனர் என்பதை இதன் மூலம் நம்பமுடிகின்றது. ஆனால், அத்த கைய வசதிகளைப் பயன்படுத்துவதற் கான வாய்ப்பு வறியோர் அல்லாத குடும் பங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக உள் ளது. பல்வேறுபட்ட வருமானக் குழுக் களை உள்ளடக்கியுள்ள இலத்திரனியல் வங்கிச் சேவை பற்றிய இப்பரந்த அறிவா னது இந்த நாட்டின் செல்லிடத் தொலை பேசி வங்கிச் சேவையைப் பெருக்கமுறச் செய்வதற்கான சாத்தியக் கூறை வெளிப் படுத்துகின்றது.

எமது ஆய்வின்படி, அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 0.8 சதவீதமான குடும்பங்களே செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவைக்காக தமது செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றன. பெரும்பான்மையானோர் குறுந்தகவல் அனுப்புதல் உட்பட தொடர்பாடல் நோக் கங்களுக்காகவே செல்லிடத் தொலை பேசிகளைப் பயன்படுத்துகின்றனர். குறுந் தகவலானது இளைஞர்கள் மத்தியில் மிகப் பிரபல்யமானது. செல்லிடத் தொலை பேசிப் பாவனையாளர்களில் பெரும் பங்கினர் இலத்திரனியல் பரிமாற்றல் வடிவங்கள் சிலவற்றுடன் பரிச்சயமானவர் களாக உள்ளனர். உதாரணமாக, கடந்த வருடம் குறிப்பிட்ட ஓர் செல்லிடத் தொலை பேசி வலயமைப்புக்காக, பெரும்பாலும் கிராமப் புறங்களிலுள்ள சிறிய தொலைத் தொடர்பு நிலையங்கள் மற்றும் சிறு கடை கள் என்பவற்றின் மூலம், 10 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மீள் நிரப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இச்செயல்முறை யில், வாடிக்கையாளர்கள் செல்லிடத் தொலைபேசி உபயோகத்திற்கான தமது நிலுவையை அதிகரிப்பதற்கான ஓர் முற் கொடுப்பனவாக அத்தகைய சிறு கடை உரிமையாளர்களிடம் பணத்தை கையளிக் கின்றனர். அநேகமான சந்தர்ப்பங்களில் இப்பரிமாற்றல்கள் ஆவணங்கள் எதுவு மின்றியே இடம்பெறுவதுடன், செல்லிடத் தொலைபேசி வாடிக்கையாளர்கள் அத்த கைய சிறு கடை உரிமையாளர்களிலும், செல்லிடத் தொலைபேசிக் கம்பனிகளி லும் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை இது மறைமுகமாக சுட்டிக்காட்டுகின்றது.

அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளவாறு, அண்ணளவாக 85 சதவீதமான குடும்பங் கள் வர்த்தக வங்கிகளிலும் 43 சதவீத மான குடும்பங்கள் கடன் கூட்டுறவுச் சங் கங்கள் மற்றும் நுண்நிதி நிறுவனங்கள் என்பவற்றிலும் கணக்குகளை வைத்துள் ளன. இலங்கையில் உயரளவான சத வீதத்தினர் வங்கிகளில் கணக்கு வைத் திருப்பதற்கான பிரதான காரணமாக வங்கி வலையமைப்புகளின் துரித விரி வாக்கம் அமைந்துள்ளது. குறிப்பாக, அர சாங்கத்தின் அதிகாரபூர்வமான நடவடிக்கை காரணமாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரு அரசுக்குச் சொந்தமான வங்கிகளும் கடந்த 4 தசாப்த காலத்தில் கிராமப் புறங்களில் பெரும் எண்ணிக்கை யான கிளைகளை நிறுவியுள்ளன. தனி யார் வங்கிகள் கூட கிளை வலையமைப்பு விரிவாக்கத்தினூடாக வழமையான எல் லைகளுக்கு அப்பால் தமது சேவைகளை விரிவுபடுத்தியுள்ளன. முன்னர் குறிப்பிடப் பட்டவாறு, 71 சதவீதமான குடும்பங்கள் செல்லிடத் தொலைபேசிகளைக் கொண் டுள்ளன என்பதை எமது ஆய்வு வெளிப் படுத்துகின்றது. இவ்விகிதமானது வங்கிக் கணக்கை வைத்துள்ள குடும்பங்களின் விகிதமாகிய 85 சதவீதத்தையும் விட குறைவானதாகும். இது, அபிவிருத்திய டைந்து வரும் நாடுகளில் வழமையாக செல்லிடத் தொலைபேசிகளை உடமை யாகக் கொண்டிருப்போரின் வீத அளவை விட, வங்கிகளில் கணக்கு வைத்துள் ளோரின் வீத அளவு குறைவானதாகவே உள்ளது என்பதை உண்மையென ஏற்றுக் கொள்வதில் ஓரளவுக்கு வேறுபாடு காணப் படுகின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. வங்கிக் கணக்கு வைத் துள்ள குடும்பங்களின் விகிதாசாரத்திற் கும், வருமான மட்டத்திற்கும் இடையில் மறுதலையான ஓர் தொடர்பு காணப்படு கின்றது. எதிர்பார்க்கப்பட்டவாறே, வறி யோர் அல்லாத குடும்பங்களின் பெரும் பங்கினர் வங்கிக் கணக்குகளை வைத்துள் ளனர். வறிய குடும்பங்களால் வைப்பிலி டப்படும் பணத்தொகை மிகக் குறைவான தாக காணப்படுகின்றது என்பதை இவ் வாய்வு வெளிப்படுத்துகின்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, வங்கிக் கணக்கொன்றை வெறு மனே உடைமையாகக் கொண்டிருத்தலா னது ஒரு குடும்பத்தின் சேமிப்பு ஆற்றலை வெளிப்படுத்துகின்றது என்பதை உண்மை யென ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

மிக வறிய குடும்பங்களின் பெரும் பங்கி னர் விசேட வங்கிகளில் ஓர் கணக்கை கொண்டுள்ளனர். இவ்வங்கிகளில் பெரும் பாலானவை குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கு தேவையானவற்றை வழங்கு கின்ற சேமிப்பு மற்றும் கிராமிய அபி விருத்தி வங்கிகளாக காணப்படுகின்றன என்பதை இவ்வாய்வின் முடிவுகளிலி ருந்து எதிர்பார்க்க முடியும். கடன் கூட்டுற வுச் சங்கங்கள், நுண்நிதி நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ள அரை குறை நிதித் துறையானது குறிப்பாக சனத்தொகையின் வறிய பிரிவினருக்கு வைப்பு வசதிகளை வழங்குவதில் மிக முக்கியமானதொரு பங்கு வகிக்கின்றது. ஒட்டுமொத்தமாக, குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையில் 43 சதவீதத்தினர் அத் தகைய நிறுவனங்களில் வைப்புகளைக் கொண்டுள்ளனர். அரைகுறை முறைசார் நிதித் துறையில் கணக்குகளை வைத் திருப்போரின் வீத அளவுக்கும் வருமான குழுக்களுக்கும் இடையில் தெளிவான

அட்டவணை 4: இலங்கையில் இலத்திரனியல் வங்கிச்சேவை பற்றிய விழிப்புணர்வும் அதன் உபயோகமும் (16 வயதிற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களது சதவீதம்=2,133)

| விபரம் | இவை பற்றிய அறிவுடையோர் | | | | இவற்றைப் பயன்படுத்துவோர் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓரளவு | | | | ஓரளவு | | | |
| | வறியோரல்லாதோர் | வறியோர் | மிக வறியோர் | அனைவரும் | வறியோரல்லாதோர் | வறியோர் | மிக வறியோர் | அனைவரும் |
| இணைய வங்கிச்சேவை | 39.81 | 29.27 | 33.67 | 36.90 | 3.60 | 2.44 | - | 3.14 |
| ATM இயந்திரங்கள் | 73.90 | 60.60 | 47.96 | 69.39 | 28.23 | 11.44 | 7.14 | 23.07 |
| தொலைபேசி வங்கிச்சேவை | 18.84 | 10.88 | 15.31 | 16.69 | 1.40 | - | - | 0.98 |
| குறுந்தகவல் வங்கிச்சேவை | 14.45 | 5.63 | 4.08 | 11.77 | 0.27 | - | - | 0.19 |
| இணைய வங்கிச்சேவை | 4.53 | 1.13 | - | 3.47 | 0.27 | - | - | 0.19 |
| மின்னியல் பண அனுப்பீடு | 20.24 | 24.77 | 35.71 | 22.08 | 1.60 | - | - | 1.13 |
| செல்லிடத்தொலைபேசிக் காசு | 15.71 | 9.01 | 2.04 | 13.41 | 0.33 | - | - | 0.23 |

மூலம்: *Household Survey on E-Money* conducted by the author, 2008/2009

தோர் நேர் தொடர்பு காணப்படுகின்றது. வறியோர் அல்லாத குடும்பங்களில் காணப்படும் 37 சதவீதத்துடன் ஒப்பிடு மிடத்து, வறிய குடும்பங்களில் 50 சத வீதத்திற்கும் மேற்பட்டோர் இத்தகைய வைப்புகளைக் கொண்டுள்ளனர்.

மக்கள் மேலும் மேலும் இலத்திரனியல் அட்டைகளை பயன்படுத்தி வருகின்றனர் என்பதை எமது குழுநிலைக் கலந்துரையா டல் சுட்டிக்காட்டுகின்றது. ஆயினும், பெரும பாலான கிராமங்களில் தன்னியக்கப் பணப் பரிமாற்று இயந்திரங்கள் (ATM) காணப்படாமையானது கிராமியத் துறை யில் உள்ள பிரதானமான ஓர் மட்டுப்பா டாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அட்ட வணை 7 இல் காட்டப்பட்டுள்ளவாறு, வங்கிக் கணக்கு உடைமையாளர்களின் உயரளவான வீத அளவுடன் ஒப்பிடு மிடத்து, தன்னியக்கப் பணப் பரிமாற்று இயந்திர (ATM) அட்டைகளைப் பயன்படுத்து வோரின் வீத அளவு குறைவாகக் காணப் படுவதில் இது வெளிப்படுகின்றது.

வங்கிகளில் கணக்கு வைத்துள்ள சனத் தொகையின் அளவு திருப்திகரமானதாக உள்ள போதும், அவர்களின் அதிகமான பங்கினர் பல்வேறு காரணங்களுக்காக குறைந்த அளவே வங்கிச் சேவைகளைப் பயன்படுத்துபவர்களாக உள்ளனர் என் பதை எமது பண்புசார்ந்த ஆய்வு வெளிப் படுத்துகின்றது. இதற்கான பிரதான காரணி எதுவெனில், குறைந்த சேமிப்பு களுக்கு காரணமாக அமைந்துள்ள அவர்களது குறைந்த வருமானமாகும். பெரும் எண்ணிக் கையிலான குடும் பங்கள் வங்கி களில் போதுமான அளவு சேமிப்புக ளைக் கொண்டி ருக்கவில்லை என் பதையும், ஆதலால், அவர்களுக்கு செல் லிடத் தொலைபேசி வங்கிச்சேவை தேவைப்படவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். வறிய வர்கள் மத்தியில் சேமிப்புக் கலாசாரத்தின் முக்கியத்துவம் குறைவடைந்து செல்லும் ஓர் போக்கு காணப்படுகின்றது என்பதை எமது குழுநிலைக் கலந்துரையாடலில் நாம் அவதானித்துள்ளோம்.

அட்டவணை 5: இலங்கையில் செல்லிடத் தொலைபேசிகளை உபயோகிப்பதன் நோக்கங்கள்

| நோக்கம் | %* |
|---|---|
| தொடர்புகொள்ள | 52.7 |
| குறுந்தகவல் அனுப்ப | 32.1 |
| வணிகம் செய்ய | 1.5 |
| தகவல் பெற | 17.6 |
| தொழில்வாய்ப்புக்கு | 6.1 |
| வங்கிச்சேவைக்கு | 0.8 |
| பொருட் கொள்வனவிற்கு | 2.3 |

*மூலம்: Household Survey on E-Money* conducted by the author

***குடும்பங்களிலுள்ள, செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் வளர்ந்தோரின் சதவீதம்***

அதிகரித்துச் செல்லும் செலவுகளுக்கு ஈடுகொடுப்பதில் குடும்பங்களின் வருமா னம் பற்றாக்குறையாக உள்ளமையானது அதிகளவான குடும்பங்களின் சேமிப்பில் காணப்படும் அத்தகைய வீழ்ச்சிக்கான ஓர் பிரதான காரணமாகக் காணப்படுகின் றது. அத்துடன், உயர் பணவீக்கத்தால் தோற்றுவிக்கப்படுகின்ற எதிர்மறையான மெய் வட்டிவீதங்கள், பணத்தை சேமிப் பதைவிட, சொத்துகளையும் பழுதடையா மல் நெடுங்காலம் நீடித்திருக்கத்தக்க பொருட்களையும் கொள்வனவு செய்வ தில் குடும்பங்களை நாட்டம் கொள்ளச் செய்துள்ளன. எதிர்காலத்தில் வங்கியிட மிருந்து கடன் பெறும் நோக்கத்திலேயே மிகக் குறைந்தளவான நிலுவையை தமது வங்கிக் கணக்குகளில் வெறுமனே வைத் திருப்பதாக பல குடும்பங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இதனால், அவர்களுட னான எமது கலந்துரையாடலின் போது, ஏராளமான குடும்பங்களின் மத்தியில் சேமிப்புகளை மேலும் அதிகரிப்பதற்கான தூண்டுதலை அவதானிக்க முடியவில்லை குறைந்த வருமானம் பெறும் சிலர் சாத் தியப்படத்தக்க அனைத்து மூலங்களிலிருந் தும் கடன்களைப் பெற்றுள்ளதுடன், அவர் களுடைய மாதாந்த உழைப்பின் பெரும் பகுதி தமது படுகடன்களை மீளச் செலுத் துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அட்டவணை 8 இல் காட்டப்பட்டுள்ள வாறு, செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவையைப் பயன்படுத்துவதற்கான வரை யறுக்கப்பட்ட வாய்ப்புக்கான மற்றுமோர் பிரதான காரணம் எதுவெனில், அது எவ் வாறு செயற்படுகின்றது என்பது பற்றிய போதுமான அறிவை அவர்கள் கொண்டி ருக்கவில்லை என்பதாகும். ஒரு செல்லி டத் தொலைபேசியைப் பாவித்து நிதிசார் தகவல்களை அணுகுவதில் உள்ள பாது காப்பு நிலை தொடர்பான கவலையை சில குடும்பங்கள் வெளியிட்டன.

அட்டவணை 9 இல் காட்டப் பட்டுள்ளவாறு, இலத்திரனியல் வங்கிச் சேவைக்கும் வயது, கல்வி, தொழில், வருமானம் ஆகிய தீர்மானிக்கும் காரணி களுக்கும் இடையேயுள்ள தொடர்பின் உண்மை நிலை யைக் கண்டறிவதற்காக சேக ரிக்கப்பட்ட இத்தரவுகளை நாம் உபயோகித்துள்ளோம். இலத் திரனியல் வங்கிச் சேவை பற்றிய அறிவு மற்றும் பயன் பாடு ஆகிய இரண்டும் வயது தொடர்பில் ஓர் எதிர்மறை இணைவைக் காட்டுகின்றன. இலத்திர னியல் வங்கிச் சேவை யுடன் அதிகளவுக்கு பழக்கப்பட்டவர்களாக இளையோர் உள்ளனர் என்பதைச் சுட்டிக் காட் டுகின்ற, எமது குழு நிலைக் கலந்துரையாடல் கூட இம்முடிவிற்கு சான்றாதாரம் அளித் துள்ளது. ஆயினும், இணைய வங்கிச் சேவை பற்றிய அறிவைத் தவிர, இந்த இணைவுக் குணகங்கள்

அட்டவணை 6: இலங்கையில் நிதி நிறுவனமொன்றில் கணக்கு வைத்துள்ள குடும்பங்களின் சதவீதம்(n=834)

| துறை | வறியோரல்லாதோர் | ஓரளவு வறியோர் | மிக வறியோர் | அனைவரும் |
|---|---|---|---|---|
| முறைசார் துறை | | | | |
| வர்த்தக வங்கிகள் | 89.2 | 74.9 | 68.8 | 84.7 |
| விசேட வங்கிகள் | 17.1 | 13.3 | 25.0 | 16.7 |
| வங்கியற்ற நிதி நிறுவனங்கள் | 4.1 | 1.5 | 0.0 | 3.3 |
| அரைதுறை முறைசார் துறை | | | | |
| கடன் கூட்டுறவு & நுண்நிதி நிறுவனங்கள் | 37.3 | 57.1 | 54.2 | 42.9 |

*மூலம்: Household Survey on E-Money* conducted by the author, 2008/2009

அட்டவணை 7: இலங்கையில் வர்த்தக வங்கி வசதிகளின் உபயோகம் (குடும்பங்களின் சதவீதம்)(n=834)

| வசதிகள் | வறியோரல்லாதோர் | ஓரளவு வறியோர் | மிக வறியோர் | அனைவரும் |
|---|---|---|---|---|
| வர்த்தக வங்கிக் கணக்கு | 89.20 | 74.90 | 68.80 | 84.70 |
| ATM அட்டை | 41.79 | 22.05 | 16.67 | 35.73 |
| கடன் அட்டை | 8.80 | 2.56 | - | 6.83 |
| செல்லிடத்தொலைபேசி வங்கிச்சேவை | 2.88 | 1.03 | - | 2.28 |

*மூலம்: Household Survey on E-Money* conducted by the author, 2008/2009

முக்கியத்துவம் உடையவையாக காணப்படவில்லை. இலத் திரனியல் வங்கிச் சேவையானது கல்வி யுடன் உறுதியாக இணைக்கப்பட்டுள்ளது என்பதுடன், பெரும்பாலான குணகங்கள் 0.01 மட்டத்தில் முக்கியத்துவம் உடையனவாக உள்ளன. இலத்திரனியல் வங்கிச் சேவை தொடர்பில் தொழில் மட்டத்திற்கும் அறிவுக்கும் இடையில் அறுதியான ஓர் தொடர்பு காணப்படவில்லை. எதிர்பார்க்கப்பட்டவாறு, வருமானத்திற்கும் இலத்திரனியல் வங்கிச் சேவைக்கும் இடையிலான தொடர்பு நேரானதாக உள்ளது. அநேகமான எடுத்துக்காட்டுகளில், 0.01 மட்டத்தில் குணகங்கள் முக்கியத்துவமுடையனவாக, ஓர் உறுதியான பிணைப்பை வெளிப்படுத்துகின்றன. முன்னர் குறிப்பிடப்பட்டவாறு, வங்கிச் சேவை வசதிகளின் உபயோகம் மீதான குடும்ப வருமானத்தின் அழுத்தமான செல்வாக்கை எமது குழுநிலைக் கலந்துரையாடல் கூட சுட்டிக்காட்டியுள்ளது.

## செல்லிடத் தொலைபேசி பண முறைமைக்கான வாய்ப்புகள்

வறியவர்களின் நன்மைக்காக இலத்திரனியல் வங்கிச் சேவையை பிரயோகிப்பதற்கான பரந்த வாய்ப்பைக் கொண்டுள்ள குறிப்பிடத்தக்க இரு பிரிவுகள் காணப்படுகின்றன என்பதை இவ்வாய்வு வெளிக்காட்டியுள்ளது. அவை நுண்நிதி தொழிற்துறையும், உள்நோக்கிய வெளிநாட்டு பண அனுப்பீட்டுச் சந்தையுமாகும். ஏற்கெனவே குறிப்பிடப்பட்டவாறு, நுண்நிதி நிறுவனங்களின் பரந்த ஓர் வலையமைப்பை இந்த நாடு கொண்டுள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிதி வசதிகளை வழங்குவதில் 'குழுக் கடன் வழங்கல்' எண்ணக்கருவின் அடிப்படையில் வளர்த்து உருவாக்கப்பட்ட இந்த நிறுவனங்கள் அதிகளவு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்தவையாக உள்ளன. எமது ஆய்வின்படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களில் 44 சதவீதமானோர் இந்த நுண்நிதி அமைப்புகளின் அங்கத்தவர்களாக உள்ளனர். இது, இந்த நாட்டில் நுண்நிதித் தொழிலின் வழமையான எல்லைகளுக்கு அப்பாற் சென்று வழங்கப்படுகின்ற பரந்த சேவையை வெளிப்படுத்துகின்றது. ஆயினும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிதி வசதிகளை வழங்குவதில் மிகமுக் கியமானவை உட்பட, இந்த நிறுவனங் கள் எதுவுமே இலத்திரனி யல் வங்கிச் சேவையிலிருந்து பயன்கொள்ளவில்லை என்பதை நாம் அவதானித்துள்ளோம். அவற்றின் செயற்பாட்டில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரயோகம் காணப்படாமையே இதற்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது. நாளாந்தம் அவர் கள் கையாளும் பெரும் எண்ணிக்கையிலான பரிமாற்றல்களைக் கவனத்தில் கொள்கையில், ஒரு புறத்தில், குடும்பங்களிடம் செல்லிடத் தொலைபேசிகள் பரவலாகக் கிடைக்கக் கூடியதாக உள்ளமையால், செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை மூலம் நுண்நிதித் துறையிலிருந்து பயன்கொள்வதற்கு கணிசமானளவு வாய்ப்புகள் உள்ளன. இது செயற்திறனை மேம்படுத்துவதற்கு துணைபுரியும் என்பது மட்டுமன்றி, பரிமாற்றல் செலவுகளைக் குறைப்பதற்கும் துணைபுரியும்.

செல்லிட தொலைபேசி வங்கிச் சேவையை பயன்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ள மற்றுமொரு துறையாக உள்நோக்கிய வெளிநாட்டுப் பணஅனுப்பீட்டுச் சந்தை காணப்படுகின்றது. உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ள 1.6 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையைக் கொண்ட இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர் தொகுதியொன்று பிரதானமாக மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிவதுடன், வருடாந்தம் 2.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான அந்நியச் செலாவணியை அனுப்பி, எமது நாட்டின் சென்மதி நிலுவைச் சமநிலையயின்மையைக் குறைத்து வருகின்றன. இத்தொகையானது எமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 8 சதவீதமாகக் காணப்படுகின்றது. புலம்பெயர் இத்தொழிலாளர்கள் (அ) முறைசார் வங்கி வழிமுறைகள், (ஆ) அந்நாடுகளுக்கு பயணம் செய்யும் நபர்கள் மூலம், (இ) முறைசாரா வழிமுறைகள் என்பவை உட்பட பல்வேறுபட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தி, இலங்கையிலுள்ள உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தமது வருமானத்தை அனுப்பிவருகின்றனர். வெளிநாட்டுப் பண அனுப்பீடுகளின் பெரும்பங்கானது முறைசார் வழிமுறைகள் ஊடாக அனுப்பப்பட்டுகின்றபோதும், மொத்த வெளிநாட்டுப் பணஅனுப்பீட்டில் 45 சதவீதமளவில் முறைசாரா வழிமுறைகள் ஊடாக அனுப்பப்படுவதாக மதிப்பிப்பட்டுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்கள் தொழில் புரியும் நாடுகளிலும், இலங்கையிலும் காணப்படும்

**அட்டவணை 8: இலங்கையில் செல்லிடத் தொலைபேசி வங்கிச்சேவையைப் பயன்படுத்தாமைக்கான பிரதான காரணங்கள்**

| காரணங்கள் | %* |
|---|---|
| உயர் செலவுகள் | 8.0 |
| குறைந்த பாதுகாப்பு | 2.3 |
| உபயோகிப்பதிலுள்ள சிரமம் | 9.4 |
| புரிதல் இன்மை | 39.3 |
| அதைப்பற்றி ஒருபொழுதும் கேள்விப்படாமை | 15.5 |
| அவசியமின்மை | 25.6 |
| அனைத்தும் | 100.0 |

மூலம்: *Household Survey on E-Money* conducted by the author

* *As a percentage of households who do not use mobile banking*

**அட்டவணை 9: இலங்கையில் இலத்திரனியல் வங்கிச்சேவை மாறிகளுக்கும் அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளுக்கும் இடையிலான பியசன் இணைவுக் குணகங்கள்(n=1,672)**

| மாறிகள் | வயது | கல்வி | தொழில் | வருமானம் |
|---|---|---|---|---|
| இணைய வங்கிச்சேவையைப் பற்றித் தெரியும் | -0.050* | 0.196** | -0.007 | 0.136** |
| இணைய வங்கிச்சேவையை உபயோகித்தல் | -0.005 | 0.036 | 0.045 | 0.109** |
| ATM இயந்திரங்களைப் பற்றித் தெரியும் | -0.043 | 0.256** | -0.340 | 0.090** |
| ATM இயந்திரங்களை உபயோகித்தல் | -0.047 | 0.251** | 0.004 | 0.233** |
| தொலைபேசி வங்கிச்சேவையைப் பற்றித் தெரியும் | -0.040 | 0.212** | -0.067** | 0.130** |
| தொலைபேசி வங்கிச்சேவையை உபயோகித்தல் | -0.015 | 0.055** | 0.010 | 0.073** |
| குறுந்தகவல் வங்கிச்சேவையைப் பற்றித் தெரியும் | -0.039 | 0.187** | -0.044 | 0.103** |
| குறுந்தகவல் வங்கிச்சேவையை உபயோகித்தல் | -0.012 | 0.027 | -0.014 | 0.009 |
| இணையம் ஊடான வங்கிச்சேவையைப் பற்றித் தெரியும் | -0.015 | 0.127** | -0.035 | 0.068** |
| இணையம் ஊடான வங்கிச்சேவையை உபயோகித்தல் | -0.004 | 0.017 | -0.026 | 0.010 |
| இலத்திரனியல் வெ.நா. பணஅனுப்பீடு பற்றித் தெரியும் | -0.035 | 0.079** | -0.031 | 0.210 |
| இலத்திரனியல் வெ.நா. பணஅனுப்பீட்டை உபயோகித்தல் | -0.012 | 0.037 | -0.002 | 0.076** |
| செல்லிடத் தொலைபேசிக் காசைப் பற்றித் தெரியும் | -0.045 | 0.197** | -0.071** | 0.039 |
| செல்லிடத் தொலைபேசிக் காசை உபயோகித்தல் | -0.014 | 0.020 | -0.027 | 0.008 |

** *indicates Correlation is significant at the 0.01 level (2-tailed).*

* *indicates Correlation is significant at the 0.05 level (2-tailed).*

மூலம்: *Household Survey on E-Money* conducted by the author

சிலருரிமை இயல்புடைய வெளிநாட்டுப் பணஅனுப்பீட்டுச் சூழல் இந்த முறைசாரா வழிமுறைகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. அதேவேளை, இணைய வங்கிச் சேவை, e - Cash, X- Press Money, MoneyGram, Ez- Money, TeleMoney போன்ற இலத்திரனியல் வெளிநாட்டுப் பணஅனுப்பீட்டை வங்கிகள் மேலும் மேலும் பிரபல்யப்படுத்தி வருகின்றன. இதனால், எதிர்காலத்தில் இலத்திரனியல் வெளிநாட்டுப் பணஅனுப்பீட்டில் துரித மான விரிவாக்கத்தை எதிர்பார்க்க முடியும்.

இலங்கையில் தற்போது காணப்படும் இலத்திரனியல் வங்கிச் சேவை வசதிகளின் உபயோகம் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்திலேயே உள்ளது என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது. இருந்த போதிலும், பொருளாதார ரீதியாக அடிமட்டத்திலுள்ள மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் விரைவான முன்னேற்ற வேகத்தில் இலத்திரனியல் வங்கிச் சேவையின் வளர்ச்சிக்கு துணை செய்வதற்குரிய கணிசமான அளவு வாய்ப்பினை இந்த நாட்டின் பரவலான வங்கி வலையமைப்பும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டுமான வசதிகளும் வழங்குகின்றன. முதல் தரமான உயர் எழுத்தறிவு மட்டத்துடன் சேர்த்து, அண்மைக் காலத்தில் முன்னேற்றமடைந்த கணினி அறிவும் இதன் வளர்ச்சிக்கு துணைபுரியும். தூர இடத்தில் அமைந்துள்ள ஓர் வங்கிக் கிளையைச் சென்றடைவதற்காக அதிகளவு நேரத்தையும் பணத்தையும் வாடிக்கையாளர்கள் செலவிட வேண்டிய ஓர் சூழல் காணப்படும் ஒதுக்கமான கிராமப்புற மற்றும் பட்டிணப் பிரதேசங்களுக்கும் செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவையையும் அதை ஒத்த கருவிகளையும் விரிவுபடுத்த வேண்டிய தேவை வங்கிகளுக்கு உண்டு. அத்தகைய பிரதேசங்களுக்குக் கூட செல்லிடத் தொலைபேசிகள் ஊடுருவியுள்ளமையால் இதை நிறைவேற்றக் கூடியதாக உள்ளது. அத்தகைய கருவிகள் ஊடாக பொருளாதார ரீதியாக அடிமட்டத்திலுள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்வது தொடர்பில், வங்கிகள், நவீன மற்றும் சூழ்நிலைகளைத் தானே உருவாக்கி அவற்றை ஆட்சி செய்யும் வகிபாகத்தை ஆற்றல் வேண்டும். வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் தீர்மானம் மேற்கொள்ளல் செயல்முறையில், செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை போன்ற கருவிகள் ஊடாக வழமையான எல்லைகளுக்கு அப்பாற் சென்று குறைந்த வருமானம் பெறும் வாடிக்கையாளருக்கு சேவை செய்வதைப் பார்க்கிலும், இலாபம் உழைப்பதும் அளவுத்திட்ட சிக்கனங்களைப் பேணுவதுமே முக்கியமான காரணிகளாக உள்ளன என்பது எமது ஆய்வின் மூலம் வெளிப்படையாகத் தெரிகின்றது. வழமையாக நிதி தொடர்பாக குறைந்தளவான எழுத்தறிவுடையவர்களாக வர்ணிக்கப்படுகின்ற வறியவர்களில் பெரும்பான்மையானோர் இந்த செல்லிடத் தொலைபேசி அல்லது இலத்திரனியல் வங்கிச் சேவை வசதிகளைப் பற்றி எந்த விளக்கமும் இல்லாதவர்களாக உள்ளனர் என்பதை குடும்பங்கள் பற்றிய எமது ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. ஆலோசனை கூறல், விளம்பரம் மற்றும் பிரசாரப் படுத்தல் திட்டங்கள் ஊடாக, இவ்வகையான தகவல் சமச்சீரின்மையை கட்டுக்குள் கொண்டுவர முடியும். நுண்நிதி தொழில் துறையிலும், வெளிநாட்டுப் பண அனுப்பீட்டுச் சந்தையிலும் செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவையை அறிமுகப்படுத்துவதன் பொருட்டு, வள வாய்ப்புகளிலிருந்து பயன்கொள்வதற்காக கரிசனையுடையோரால் முன்கூட்டிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

கடந்த இரு தசாப்தங்களாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் இலங்கை உன்னதமான ஓர் வளர்ச்சியை அனுபவித்து வந்துள்ளது. செல்லிடத் தொலைபேசிகளின் துரிதமான ஊடுருவல் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இந்த நாட்டில், இவ்வளர்ச்சிகள் இலத்திரனியல் வங்கிச் சேவை மற்றும் செல்லிடத் தொலைபேசிப் பணம் என்பவற்றை முழு அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கான உறுதியான வாய்ப்பை வெளிப்படுத்துகின்றன. வழமையான எல்லைகளுக்கு அப்பாற் சென்று, ஒதுக்கமாயுள்ள கிராமங்களில் வசிக்கும் நிதி ரீதியாக சேர்த்துக் கொள்ளப்படாது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சேவையாற்றுவதற்கு இப்புதிய நிதிக் கருவிகளை பயன்படுத்த முடியும். மிக வறிய குழுக்கள் உட்பட, குடும்பங்களின் நடுத்தரமான வீத அளவினர் இலத்திரனியல் வங்கிச் சேவை மற்றும் இலத்திரனியல் பணம் என்பவற்றைப் பற்றிய அறிவைக் கொண்டுள்ளனர் என்பதை எமது ஆய்வு வெளிப்படுத்துகின்றது. ஆனால், அத்தகைய மாதிரிகளின் பிரயோகமானது செல்வந்தக் குடும்பங்கள் மத்தியில் கூட மிகக் குறைவாகவே உள்ளது. மிகப் பிரசித்தி பெற்ற வகை இலத்திரனியல் வங்கிச் சேவையாக தன்னியக்கப் பணப் பரிமாற்றல் இயந்திரங்கள் காணப்படுகின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் பொருளாதார ரீதியாக அடிமட்டத்திலுள்ள மக்களின் சமூக - பொருளாதார நிலைஉயர் மேம்படுத்துவதற்கான வாய்ப்பை செல்லிடத் தொலைபேசிப் பிரயோகம் கொண்டுள்ளது என்பது பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய பல அபிவிருத்தியடைந்த நாடுகளின் எடுத்துக்காட்டுகளில் உள்ளவாறு, மலிவான செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் குறைந்த செலவுடைய முற்கொடுப்பனவு தொலைபேசி அட்டைகள் என்பவற்றின் கிடைப்பனவானது இலங்கையில் செல்லிடத் தொலைபேசி முறைமையின் மிகத் துரிதமான வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. பொருளாதார ரீதியாக அடி நிலையிலுள்ள மக்கள் செல்லிடத் தொலைபேசிகளை மேலும் மேலும் பயன்படுத்தி வந்துள்ள அதேவேளை, இலங்கையில், அவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் வங்கிகளில் கணக்கை வைத்திருக்காதவர்களாக அல்லது அவற்றைக் குறைந்தளவே பயன்படுத்துபவர்களாக தொடர்ந்தும் இருந்து வருகின்றனர். அவர்கள் செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவையைப் பயன்படுத்துவார்களாயின், புவியியல் ரீதியாக வங்கிக் கிளையொன்றை சென்றடைதல் தொடர்பான சந்தர்ப்பச் செலவை அவர்களால் கட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

இலங்கையில் வறியவர்களது பொருளாதாரச் செயற்பாடுகளை எளிதாக்குவதன் பொருட்டு, அவர்களுக்கு நிதி வசதிகளை வழங்குவதற்காக செல்லிடத் தொலைபேசிப் பண முறைமையை உபயோகிப்பது தொடர்பான வாய்ப்புகளை பற்றி ஆராய்வதே இந்த ஆய்வின் குறிக்கோளாக இருந்தது. கடந்த தசாப்தத்தில், மிகக் கடுமையான வறுமை மற்றும் முறைசார் நிதி நிறுவனங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பின்மை என்பன காணப்படுகின்ற கிராமப் புறங்களை உள்ளடக்கிய வகையில், இலங்கையில் செல்லிடத் தொலைபேசிகள் ஊடுருவியுள்ள போதும், நிதிப் பரிமாற்றல்களுக்கும் கொடுப்பனவுகளுக்கும் அவை மிக அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன என்பதை இந்த ஆய்வின் முடிவு வெளிப்படுத்துகின்றது. இதன் விளைவாக, முறைசார் நிதியை பயன்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொண்டிராத, வறியவர்களுக்கான நிதி வசதிகளை வழங்குவதற்காக செல்லிடத் தொலைபேசிகளை உபயோகிப்பதற்கான சந்தர்ப்பங்களை இந்த நாடு இழந்து வருகின்றது. செல்லிடத் தொலைபேசிகளின் பரவலான பாவனை காணப்படும் இச்சூழ்நிலையில், இந்த நாட்டில் செல்லிடத் தொலைபேசிப் பண முறைமையை பிரபல்யப்படுத்துவதற்கான கணிசமான அளவு வாய்ப்புக் காணப்படுகின்றது என்பதைக் கூட இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை பற்றிய விழிப்புணர்வின்மையானது செல்லிடத் தொலைபேசிப் பண முறைமையின் விரிவாக்கத்திற்கான ஓர் பிரதான தடைக்கல்லாக அமைந்துள்ளது. இலங்கையில் செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவையின் பிரயோகம் பெருமளவுக்கு வர்த்தக வங்கி வாடிக்கையாளருக்கு வரையறுக்கப்பட்டதாக உள்ளமை, அதனை ஓர் துணைக் கருவி மாதிரியாக

**தொடர்ச்சி 26 ஆம் பக்கம் ........**

# நிதி நெருக்கடிகளும் அவற்றின் படிப்பினைகளும்

**கலாநிதி. டபிள்யு. எம். ஹேமச்சந்திர**

*உதவி ஆளுநர்,*

*இலங்கை மத்திய வங்கி*

## அறிமுகம்

நிதி நெருக்கடிகள் உலகிற்கு புதியவையல்ல. கிடைக்கக்கூடியதாகவுள்ள அச்சுருவிலான ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட மிக முக்கியமானதோர் நிதி நெருக்கடிக் காலமாகிய 1819 ஆம் ஆண்டிலேயே இவ்வாறான உலகளாவிய நிதி நெருக்கடிகள் நிலவின (விக்கிபீடியா, 2011).

நிதி நெருக்கடிகளுக்கான காரணங்கள் பல்வேறுபட்டவையாகும். 19 ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் காணப்பட்ட நிதி நெருக்கடிகளில் பெரும்பாலானவை வங்கி மொய்ப்பு (வைப்பாளர்கள் பணத்தை மீளப்பெறுவதற்காக வங்கிகளை மொய்த்தல்), சிறிதும் இடைவிடாத தொடர் வங்கி நெருக்கடிகள், வங்கி தொடர்பான பீதி என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தன. அதே வேளை இப்பீதிகளுடன் அதிகளவான பொருளாதாரப் பின்னடைவுகளும் ஒருங்கே நிகழ்ந்தன (விக்கிபீடியா, 2011). இந்த நிதி நெருக்கடிகள் வங்கி நெருக்கடிகளாகவோ, சர்வதேச நிதி நெருக்கடிகளாகவோ அல்லது பரந்த பொருளாதார நெருக்கடிகளாகவோ (அதாவது பொருளாதாரப் பின்னடைவு மற்றும் பொருளாதார மந்தம்) இருக்க முடியும். வைப்பாளர்கள் திடீரென அவசர அவசரமாகப் பணத்தை மீளப்பெறுவதனால் வர்த்தக வங்கிகள் பாதிப்புக்குள்ளாகும் ஓர் சூழ்நிலையே வங்கி மொய்ப்பு என அழைக்கப்படுகிறது. அத்தகைய சூழ்நிலைகளில், பொதுமக்களிடமிருந்து எழும் பணத்துக்கான முழுமையான கேள்வியை வங்கிகளால் உடனடியாக நிறைவுசெய்ய முடியாது. ஏனெனில், வங்கிகள் பணத்தை பல்வேறுபட்ட சொத்துகளில் முதலீடு செய்திருக்கக்கூடும் என்பதோடு, அவற்றிலிருந்து கிடைக்கும் ஆதாயம் பண வடிவம் பெறுவதற்கு நீண்ட காலம் எடுக்கக்கூடும். இது வங்கிப் பீதிக்கு அல்லது வங்கி நெருக்கடிக்கு வழிவகுக்கக்கூடும். வங்கி மொய்ப்புகளுக்கான எடுத்துக்காட்டுகளை 1931 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் காணக்கூடியதாக இருந்தது. ஊக விளைவுகள் காரணமாக தனது நாணயத்தைப் பெறுமதியிறக்கம் செய்வதற்கு ஒரு நாடு திடீரென நிர்ப்பந்திக்கப்படும்போது, ஓர் சர்வதேச நிதி நெருக்கடி ஏற்படக்கூடும். இதை ஓர் நாணய நெருக்கடி அல்லது சென்மதி நிலுவை நெருக்கடி எனக் குறிப்பிட முடியும். அவ்வாறே ஒரு நாடு தனது அரசாங்கப் படுகடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுகின்றபோது, அது அரசாங்கப் (இறைமையுள்ள ஓர் அரசு) படுகடன் செலுத்தத் தவறல் (sovereign default) எனக் குறிப்பிடப்படுகின்றது. படுகடன் செலுத்தத் தவறலுடன் இணைந்ததாகக் காணப்படும், சென்மதி நிலுவை நெருக்கடியானது மூலதன உட்பாய்ச்சலில் ஏற்படும் ஓர் திடீர் நிறுத்தத்திற்கு அல்லது மூலதன வெளியோட்டத்திலான ஓர் திடீர் அதிகரிப்பிற்கு வழிவகுக்கக்கூடும். 1992 - 1993 காலகட்டத்தில் ஐரோப்பாவிலுள்ள சில நாடுகள் இதே வகையான ஓர் நிதி நெருக்கடியை எதிர்கொண்டன. மேலும், 1980களின் ஆரம்பத்தில் இலத்தீன் அமெரிக்க நாடுகள் பல தமது படுகடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியபோது, அந்நாடுகளில் நிதி நெருக்கடிகள் காணப்பட்டன. பரந்த ஓர் பொருளாதார நெருக்கடியானது பொருளாதாரப் பின்னடைவு அல்லது பொருளாதார மந்தத்தை உள்ளடக்கியதாக இருக்கக்கூடும். பொருளாதார வளர்ச்சியில் தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்குக் காணப்படும் ஓர் வேகக் குறைவானது பொருளாதாரப் பின்னடைவென வழமையாக அழைக்கப்படுகின்றது. நெடுங்காலம் நீடித்த ஓர் பொருளாதாரப் பின்னடைவை பொருளாதார மந்தமெனக் குறிப்பிட முடியும். 1930களில் நிலவிய பெரு மந்தமானது பொருளாதார மந்தத்திற்கான ஓர் சிறந்த உதாரணமாகும். அவ்வாறே, அண்மைக் காலத்தில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் உலகம் முழுவதும் அனுபவிக்கப்பட்டு வந்த உப - முதன்மை அடைமான நெருக்கடி மற்றும் நிலையற்றதும் போலிக் கவர்ச்சி மிக்கதுமான மெய் ஆதன வணிகச் செழிப்புநிலை என்பன ஐக்கிய அமெரிக்காவிலும் ஏனைய பல நாடுகளிலும் காணப்பட்ட பொருளாதாரப் பின்னடைவிற்கு வழிவகுத்தன.

## நிதி நெருக்கடிகளுக்கான காரணங்கள்

நிதி நெருக்கடிகளுக்கான காரணங்களைப் பொறுத்து அவற்றின் இயல்புகளும் வேறுபடுகின்றன. நெருக்கடிக்கான காரணமாக ஒன்றை மாத்திரம் அங்கீகரித்தலானது சிலவேளைகளில் சிக்கலானதாக இருக்கக்கூடும் என்பதுடன், ஒரு நெருக்கடியானது பல்வேறு காரணங்களின் விளைவாக நிகழக்கூடும். பேரினப் பொருளாதாரச் சூழ்நிலைகள், நுண்பாகப் பொருளாதாரக் கொள்கைகள் அல்லது ஏனையவை இதற்கான காரணிகளாக இருக்கக்கூடும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நிதி நெருக்கடிகளுக்கான காரணிகளாக, பாதகமான பேரினப் பொருளாதார மாற்றங்கள் மீது குற்றஞ்சுமத்தப்படுகின்றது. நிதி நெருக்கடியின் எதிர்வினை விளைவுகளுக்கு சம்பந்தப்பட்ட அரசாங்க அமைப்புகளால் அமுல்படுத்தப்பட்ட பேரினப் பொருளாதாரக் கொள்கைகளிலான தவறுகள் காரணமாக இருக்கக்கூடும். உயர் வட்டி வீதங்கள், நாணய மாற்று வீத நடப்புமுறையின் மாற்றம், பணவீக்கத்தில் காணப்படும் அநாவசியமான வேகக் குறைவு அல்லது திடீர் அதிகரிப்புகள் என்பவை ஓர் நெருக்கடியை திடீரென நிகழச் செய்யும் பேரினப் பொருளாதார காரணிகளில் சிலவாகும். உயர் வட்டி வீதங்கள் அதிகளவான குறுங்கால மூலதனத்தைக் கவரக்கூடுமெனினும், அவை நிதி நிறுவனங்களுக்கும் அரசாங்கங்களுக்கும் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். நாடுகளால் நாணயமாற்று வீதங்களை உரியமுறையில் பேண முடியாதபோது, அவை பல்வேறுபட்ட வீத நடப்புமுறைகளுக்கு மாறுவதற்கு தன்னியல்பாகவே முயற்சிக்கின்றன. இவ்வாறாக, வெளிநாட்டுத் துறைகளிலான சமநிலை இன்மைக்கு அது காரணமாக அமைகின்றது. இதற்கான எடுத்துக்காட்டுகளை 1995 - 1997 வரையான காலப்பகுதியில் நிலவிய மெக்ஸிக்கோ நெருக்கடியிலும் 1997 - 1998 காலப்பகுதியில் நிலவிய தென் கிழக்காசிய நெருக்கடியிலும் காண முடியும்.

நடைமுறைக் கணக்கில் காணப்படும் நெடுங்காலம் நீடித்த பற்றாக்குறையானது, ஓர் நிதி நெருக்கடியைத் தோற்றுவிக்கும் உறுதிப்பாடற்ற பேரினப் பொருளாதார நிலைமைகளுக்கு வழிவகுக்கக்கூடும். பற்றாக்குறைகளைக் கொண்டுள்ள நாடுகள் தமது வரவு - செலவுத் திட்டத்திற்கு நிதியளிப்புச் செய்தல், சேமிப்புகளை நகர்த்துதல், படுகடனை முகாமைசெய்தல் என்பவற்றில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. அவ்வாறே, நடைமுறைக் கணக்கிலான பற்றாக்குறையே மெக்ஸிக்கோ நெருக்கடிக்கான மூலகாரணமாக இருந்தது. அதே வேளை, தென் கிழக்காசிய நெருக்கடியானது மூலதன வெளியோட்டத்தின் காரணமாகத் தோற்றுவிக்கப்பட்டது. நாணய மாற்று வீத நடப்புமுறைகளின் மாற்றம் மற்றும் உயரளவிலான குறுங்காலக் கடன்கள் என்பன இந்த நாடுகளில் உறுதிப்பாடின்மையைத் தோற்றுவித்து, இறுதியில் மூலதன வெளியோட்டத்திற்கு வழிவகுத்ததுடன், நிதி நெருக்கடிக்கும் காரணமாக அமைந்தன.

சாதகமற்ற நுண்பாகப் பொருளாதாரக்

கொள்கைகள்கூட நிதி நெருக்கடிக்குக் காரணமாக அமையக்கூடும். அயர்லாந்தின் நிதி நெருக்கடியானது சொத்துகளுக்கான கடன் வழங்கல் காரணமாக நிகழ்ந்தது. அவ்வாறே பெரும்பாலான நாடுகளில், ஒன்றில் போதுமானளவு சட்ட ரீதியான கட்டமைப்பு காணப்படாமை அல்லது நிதி நிறுவனங்களின் கண்காணிப்பு வகிபாகத்தில் காணப்படும் பலவீனங்கள் என்பன இந்த நிதி நிறுவனங்களின் தோல்விக்கு வழி வகுக்கக்கூடும். சிலவேளைகளில், கண்காணிப்புகான அரசாங்க அமைப்புகளுக்கு தகவல்களை வழங்குவதில் வெளிப்படையான தன்மை காணப்படாமை நிதி நிறுவனங்கள் முற்றிலும் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுக்கின்றது. வளர்ந்து வரும் சந்தைகளிலுள்ள நிதி நிறுவனங்களின் தோல்விக்கு அந்த நிதி நிறுவனங்களை மோசமான முறையில் முகாமைசெய்து வந்தமை முக்கியமான ஓர் காரணியாக இருந்தது. இவ்வகையான நிதி நெருக்கடிகளுக்கான எடுத்துக்காட்டுகளை இலங்கையில் காணமுடியும். இங்கே 1988 - 1989 கால கட்டத்தில் பல நிதிக் கம்பனிகள் நட்டமடைந்திருந்தன.

நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்களை மோசமான முறையில் முகாமை செய்தலானது, நிலையற்றதும் பகட்டுநயம் மிக்கதுமான கொடுகடன் செழிப்பு நிலையைத் தோற்றுவிக்கக்கூடும் என்பதுடன், அச்செழிப்பு நிலையில் ஏற்படும் திடீர் வீழ்ச்சி இந்த நிதி நிறுவனங்கள் நட்டமடைவதற்கு வழிவகுக்கும். 2007 - 2009 காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட கொடுகடன் நெருக்கடி (கடன் கிடைப்பனவில் காணப்படும் குறைப்பு) அண்மைக்கால நிதி நெருக்கடிக்கான காரணங்களில் ஒன்றாக அமைந்திருந்தது. இங்கே, கடன்களை மீளச் செலுத்துவதில் தமக்குள்ள ஆற்றலின்மையின் விளைவாக அமெரிக்க நிதி நிறுவனங்கள் நட்டமடைந்தன. வங்கிக் கடனை திடீரென மீளப்பெறுதல் கடன்பெற்றோருக்கு கொடுகடன்களை மீளச் செலுத்துவதில் நெருக்கடியான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றது.

சில வேளைகளில் அரசியல் நோக்கம் காரணமாக மேற்கொள்ளப்படும் அரசாங்க நெறிப்படுத்தல்கள் ஓர் நிதி நெருக்கடிக்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட உப - முதன்மை அடைமான நெருக்கடியானது பகுதியளவில் அரசாங்க நெறிப்படுத்தல்களால் ஊக்குவிக்கப்பட்ட நிர்மாணத் தொழிலின் மிகை நிரம்பலின் விளைவாக தோற்றுவிக்கப்பட்டதாகும். அதேவேளை, மெக்ஸிக்கோவில் அரசியல் தலைவர்கள் கொலை செய்யப்பட்டமையானது நிதித் துறைக் குழப்ப நிலையைத் தோற்றுவித்ததோடு, ஓர் நிதி நெருக்கடிக்கும் வழிவகுத்த குறுங்கால வெளிநாட்டு நிதியை மீளப் பெறலுக்குக் காரணமாகவும் அமைந்தது.

நிதிக் கருவிகள் சரியான முறையில் முகாமைசெய்யப்படால் மாத்திரமே அவற்றால் நிதிச் சந்தைகளை விருத்தி செய்வதற்கு துணைபுரிய முடியும். ஆயினும், பாதுகாப்பான மட்டத்திற்கு அப்பாற்பட்ட நிலையிலுள்ள, சிக்கலான நுட்ப நுணுக்கங்களுடைய சொத்துவழிப் பெறுமதியுடைய நிதிக் கருவிகளின் வளர்ச்சியானது இந்த நிதிச் சந்தைகளின் முற்றிலுமான வீழ்ச்சிக்கு வழிவகுக்கக்கூடும். இத்தகைய நெருக்கடிக்கான ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக, சிக்கலான நுட்ப நுணுக்கங்கள் உடையதும், முகாமைசெய்ய முடியாதது மான சொத்துவழிப் பெறுமதியுடைய நிதிக் கருவிகளுடன் தொடர்பைக் கொண்டிருந்ததுமான இந்த அண்மைக்கால அமெரிக்க நிதி நெருக்கடி அமைந்துள்ளது.

படுகடன் சந்தையின், குறிப்பாக அரசாங்க படுகடனில் காணப்பட்ட மட்டுமீறிய வளர்ச்சி நிதி நெருக்கடிகளுக்கான பொதுவான காரணிகளில் ஒன்றாக அமைந்துள்ளது. இந்த நிதி நெருக்கடிகள் பெரும்பாலான நாடுகளில் பொதுவான நேர்வுகளாகக் காணப்படுகின்றன. 2010 - 2011 காலகட்டத்தில் அரசாங்கப் படுகடன்களின் மிதமிஞ்சிய அதிகரிப்புக் காரணமாக கிரேக்கம், அயர்லாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் நிதித் துறையில் தோல்வி கண்டன.

ஒரு காரணி அல்லது காரணிகளின் ஓர் தொகுதி காரணமாக நிதி நெருக்கடிகள் நிகழக்கூடும் எனும் கருத்துக்குச் சான்றாதாரம் அளிப்பதாக சற்று முன்னர் குறிப்பிடப்பட்ட விளக்கம் அமைந்துள்ளது. ஆரம்பக் கட்டத்தில், பல காரணிகளில் ஒன்றான அது வர்த்தக வங்கி போன்ற ஓர் துறையைப் படுமோசமாகப் பாதிக்கும். பின்னர் அது ஏனைய துறைகளைப் பாதித்து, மிக மோசமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும். அவ்வாறே, ஒரு நாட்டில் நிகழும் ஓர் நெருக்கடியானது ஏனைய நாடுகள் பலவற்றில் ஏற்படும் நெருக்கடிகளுக்குக் காரணமாக அமையக்கூடும். உதாரணமாக, தென் கிழக்காசிய நாடுகளின் நிதி நெருக்கடியானது முதலில் தாய்லாந்தில் ஆரம்பித்து, அதைத் தொடர்ந்து ஏனைய நாடுகளுக்கும் பரவியது. ஆகவே, பல நாடுகளுக்குப் பரவுகின்ற இந்த விளைவுகூட ஓர் நிதி நெருக்கடிக்கான காரணமாக அமைந்துள்ளது எனலாம். 2008 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட நெருக்கடியானது உலகிலுள்ள நாடுகளில் பெரும்பாலானவற்றைப் பாதித்தது. ஆகவே, ஒரு நாட்டில் காணப்படும் நெருக்கடியின் முனைப்பைப் பொறுத்து உலகளாவிய பாதிப்புகள் காணப்படும்.

**2007 இல் தொடங்கிய அமெரிக்க உப - முதன்மை அடைமான நெருக்கடி**

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிதி நெருக்கடிகளில் ஒன்றாக அமெரிக்க உப - முதன்மை அடைமான நெருக்கடி காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் வீடமைப்புத் துறையில் ஏற்பட்ட நிலையற்றதும் பகட்டுநயம் மிக்கதுமான செழிப்பு நிலையின் திடீர் வீழ்ச்சி, உப - முதன்மை கடன்களை மீளச் செலுத்துவதில் காணப்பட்ட அதிகரித்த அளவிலான தோல்வி வீதங்கள் மற்றும் 2005 / 2006 காலகட்டத்தில் அண்ணளவாக ஆரம்பித்த சீர்செய்யக்கூடிய வீதங்களைக் கொண்ட அடைமானங்கள் என்பன காரணமாக இந்த நெருக்கடி ஆரம்பித்தது. வருமான மட்டம், முதலாவதாகச் செலுத்த வேண்டிய பணத்தின் அளவு, கடன் வரலாறு, தொழில் தகுதிநிலை போன்ற நட்ட அச்சம் தொடர்பான பல்வேறு காரணிகளை முன்னிட்டு, சந்தை வட்டி வீதங்களுக்கு தகுதியற்றவர்களாகக் கருதப்படுவோரான கடன்பெறுவோருக்கு கடன்களை வழங்கும் ஓர் நடைமுறையாக இந்த உப - முதன்மை கடன்வழங்கல் முறை அமைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள இக்கடன்பெறுவோர் ஒன்றில் "முதன்மையானவர்கள்" அல்லது "உப - முதன்மையானவர்களாக" மாத்திரமே தரவரிசைப் படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுடைய கடந்த காலச் சாதனைகளின் அடிப்படையில், இந்த முதன்மையான கடன்பெறுவோர் சிறந்ததோர் கடன் தரவரிசைப்படுத்தலைக் கொண்டுள்ளனர். அதேவேளை, கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் வழக்கமான நிலையிலும் குறைவான கடந்தகாலச் சாதனைகளை உப - முதன்மைக் கடன்பெறுவோர் கொண்டுள்ளனர். இந்த உப - முதன்மைக் கடன்பெறுவோருக்கு வழங்கப்படுகின்ற கடன்கள் உப - முதன்மைக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. வழக்க முறையானதாக, உப - முதன்மைக் கடன்பெறுவோரில் பெரும்பான்மையினர் ஓரளவுக்கு வறியவர்களாகவும் இளஞ்சந்ததியினராகவும் உள்ளனர்.

2007 ஆம் ஆண்டு வரை, அண்ணளவாக ஐந்து வருடங்களாக ஏராளமான வங்கிகள் இந்த உப - முதன்மைக் கடன்பெறுவோருக்கு கடன்களை வழங்கி வந்தன. அவை இவ்வாறு செய்தமைக்கான காரணம் எதுவெனில், மெய் ஆதன செழிப்பு நிலையானது வீடுகளை வாங்குவதற்கு அல்லது கட்டுவதற்காக அவர்கள் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்கு அவர்களை அனுமதிக்குமென அவ்வங்கிகள் நம்பியதனாலாகும். உப - முதன்மைக் கடன் பெறுவோருக்கு கடன் வழங்குவதற்கு அரசாங்கம் கூட கடன் வழங்கும் நிறுவனங்களை ஊக்குவித்தது. பங்குச் சந்தைச் செழிப்பு நிலை மற்றும் இந்த முறைமையில் காணப்பட்ட அதிகளவான திரவத் தன்மை என்பன காரணமாக, பல

பெரிய நிதிய முதலீட்டாளர்களும் கூட இந்த உப - முதன்மைக் கடன் பங்குப்பட்டியல்களை ஓர் மாற்று முதலீட்டு வாய்ப்பாகக் கருதினர். ஆதலால், அத்தகைய பங்குப்பட்டியல்களை ஆரம்பநிலைக் கடன்வழங்குவோரிடமிருந்து அவர்கள் கொள்வனவு செய்தனர். இவ்வாறாக உப - முதன்மை சந்தையானது கவர்ச்சிகரமானதாக மாறியது.

இந்த நெருக்கடிக்கான முக்கியமானதோர் பங்களிப்புக் காரணியாக வீடமைப்பின் நிரம்பலில் காணப்பட்ட செழிப்பு நிலை அமைந்திருந்தது. இது விலைகள் வீழ்ச்சியடைவதற்கும், உப - முதன்மைக் கடன் பெறுவோரின் கடன் மீளச் செலுத்தத்தவறலில் காணப்பட்ட ஓர் அதிகரிப்பிற்கும் காரணமாக அமைந்தது. இந்த உப - முதன்மைக் கடன்பெறுவோரில் அநேகர் தமது கடன்களை மீளச் செலுத்த முடியாதவர்களாக இருந்தனர். ஐக்கிய அமெரிக்காவில் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான அடைமானப்பொருள் தொடர்பான பிரச்சினைகள் இந்த நெருக்கடிக்கான மற்றுமோர் காரணியாக அமைந்திருந்தது. வீடுகளுக்குக் குறைந்தளவான கேள்வி காணப்பட்ட அதேவேளை, விற்பனைக்கான வீடுகளின் நிரம்பலில் காணப்பட்ட அதிகரிப்புக் காரணமாக இவ்வாறு நிகழ்ந்தது. வீடுகளின் விலை வீழ்ச்சிக்கு இது காரணமாக அமைந்ததுடன், நிலைமையை மேலும் மோசமாக்கிய அமெரிக்க பொருளாதாரத்திலான வேகக்குறைவுடன் இது ஒருங்கே நிகழ்ந்தது.

அத்தகைய கடன்களை மளச செலுத்தத் தவறுதலிலுள்ள நட்ட அச்சம் உயர்வானதாக இருந்தமையால், உப - முதன்மைக் கடன்கள் மீது அறவிடப்பட்ட வட்டி வீதங்கள், முதன்மைக் கடன்கள் மீதான வட்டி வீதங்களை விட அதிகமானவையாக இருந்தன. ஆயினும், உப - முதன்மைக் கடன்பெறுவோரின் கடன்களை மீளச் செலுத்தும் ஆற்றல் சந்தேகத்திற்குரியதாகவே இருந்தது. மேலும், அதிகளவான உப - முதன்மைக் கடன்பெறுவோரை எட்டுவதற்காக சொத்துவழிப் பெறுமதியுடைய நிதிக் கருவிகள் போன்ற சிக்கலான நுட்ப நுணுக்கங்களுடன் கூடிய புதிய கருவிகளை கடன்வழங்குநர் கண்டுபிடித்தனர். சில வேளைகளில் இக்கருவிகள், கடன் முதலின் பங்கை பின்னர் மீளச் செலுத்தத்தக்க சலுகைகளுடன்கூடிய பல்வேறு வகைப்பட்ட வழிமுறைகளை உள்ளடக்கியிருந்தன. கடன் பங்குப்பட்டியலுடனான சிக்கல் நிறைந்த சொத்துவழிப் பெறுமதியுடைய நிதிக் கருவிகளின் தொடர்புகள் மிகவும் குழப்பகரமானவையாக இருந்தன. இதனால், இறுதியாக பணத்தை மீளச் செலுத்துவோர் தொடர்பில் அதிகளவான சந்தேகம் காணப்பட்டது.

ஆபத்தான விளைவுகளை எண்ணிப் பார்க்காத கடன்வழங்குநர்கள் மாத்திரமன்றி, ஐக்கிய அமெரிக்காவின் வீட்டு அடைமானத்தில் அரைப்பங்கிற்கும் அதிகமான செலுத்தப்படாத கடன் தொகைக்கு உரித்துடைய அல்லது அதற்கான உத்தரவாதத்தைக் கொண்டிருந்தவையும், தமது கடன்வழங்கல் நடைமுறைகளில் ஏனைய பல நிறுவனங்களை விட இடர்நேர்வுகளைப் பெருமளவுக்கு தவிர்ப்பவையாகப் பரவலாகக் கருதப்பட்டவையுமான பிறடி மக் (Freddie Mac) மற்றும் பனி மே (Fannie Mae) போன்ற பெரிய நிறுவனங்கள்கூட இறுதியில் பில்லியன் கணக்கான இழப்புகளால் பாதிக்கப்பட்டன. இந்த நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்பானது, அமெரிக்காவிலுள்ள மேற்குறிப்பிட்ட இந்த நிறுவனங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக இருக்கவில்லை. பில்லியன் கணக்கான உப - முதன்மை இழப்புகளை மீட்க முடியாத இழப்புகளாக தள்ளுபடி செய்த, உலகளாவிய பெரும் வங்கிகளாகவும் தரகுக் கம்பனிகளாகவும் உள்ள சிற்றிகுறூப் (Citigroup) மற்றும் மெரில் லைன்ஸ் (Merrill Lynch) போன்ற நிறுவனங்களைக்கூட இந்த நெருக்கடி பாதித்தது. இது தவிர, பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு அமெரிக்க மத்திய வங்கி முயற்சி எடுத்தபோதும், உலகின் மிகப்பெரும் முதலீட்டு வங்கிகளில் ஒன்றாகவும் பங்குச் சான்றிதழ் (ஆவணம்) வியாபாரத்தில் ஈடுபடும் நிறுவனங்களில் ஒன்றாகவும் உள்ள பெயர் ஸ்ரேண்ஸ் (Bear Sterns) முற்றிலும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியவில்லை. இந்த நெருக்கடியானது லேமன் பிறதர்ஸ் (Lehman Brothers) மற்றும் அமெரிக்கன் இன்ஸ்சுரன்ஸ் குறூப் (American Insurance Group) ஆகிய நிறுவனங்களுக்கும் பரவியது.

இந்த நெருக்கடி மேலே குறிப்பிடப்பட்ட அமெரிக்க நிறுவனங்களை மாத்திரமன்றி, உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள வங்கிகளையும்கூட பாதித்தது. ஐக்கிய அமெரிக்கா உலகின் மிக அதிகளவு கடன் பெறும் நாடாக இருந்தமையால், தமது அந்நியச் செலாவணி ஒதுக்குகளை அமெரிக்க டொலரில் வைத்திருந்ததோடு, அமெரிக்க பங்குச் சான்றிதழ்களில் முதலீடு செய்திருந்த பெரும்பாலான நாடுகள் இதனால் படுமோசமாகப் பாதிக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவில் முதலீடுகளை மேற்கொண்டிருந்த யப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகள் இந்த நெருக்கடியின் மூலம் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருந்தன. உலகளாவிய உரிமைப் பங்குச் சந்தைகள் கூட இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. இவற்றை விட, ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட வணிகச் செயற்பாடுகளிலான சரிவு காரணமாக அமெரிக்காவுடன் வியாபாரத் தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகளும் பாதிக்கப்பட்டன. ஆகவே, அமெரிக்க நெருக்கடியின் விளைவுகள் ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகவன்றி, உலக பொருளாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தின.

## அமெரிக்க நெருக்கடியின் பின்விளைவுகள்

அடைமான நெருக்கடியின் விளைவாக, ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கடன் வழங்குவோரால் தமது கொடுகடன்களை மீளப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. பெரும் எண்ணிக்கையிலான நிதி நிறுவனங்கள் முற்றிலும் வீழ்ச்சியடைந்ததோடு, நிதிசாரா வணிகச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த மோட்டார் வண்டி உற்பத்தியாளர்கள், ஆடை வியாபாரிகள், உணவு வியாபாரிகள் போன்றோர் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் சிக்கல்களை எதிர்கொண்டனர். முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களாக சர்வதேச நாணய நிதியத்தால் இனங்காணப்பட்ட நாடுகளில் 2009 ஆம் ஆண்டில் நுகர்வோர் விலைகள் 0.1 சதவீத அளவில் மாத்திரமே அதிகரித்தன. பிறடி மக் (Freddie Mac) மற்றும் பனி மே (Fannie Mae) போன்ற மிகப்பெரும் அடைமான நிறுவனங்கள் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள நான்காவது பெரிய முதலீட்டு வங்கியான லேமன் பிறதர்ஸ் (Lehman Brothers), ஏனைய நிறுவனத்தால் பின்னர் விலைக்கு வாங்கப்பட்ட வோல்ட் ஸ்ரீட்டின் (Wall Street) ஐந்தாவது பெரிய வங்கியான பெயர் ஸ்ரேண்ஸ் (Bear Sterns) மற்றும் மெரில் லைன்ஸ் (Merrill Lynch) என்பன முற்றிலும் வீழ்ச்சியடைந்தன. பெரும் எண்ணிக்கையிலான நிதி நிறுவனங்கள் முறிவடைந்தவையாக பிரகடனப்படுத்தப்பட்டன அல்லது ஒன்றிணைக்கப்பட்டன அல்லது ஏனைய நிறுவனங்களால் விலைக்கு வாங்கப்பட்டன அல்லது அரசாங்கங்களால் மீட்டெடுக்கப்பட்டன அல்லது தேசியமயமாக்கப்பட்டன. காப்புறுதித் துறையில் ஆதிக்கமுடைய நிறுவனமாக விளங்கிய அமெரிக்கன் இன்ஸ்சுரன்ஸ் குறூப் (American Insurance Group) கடுமுனைப்பான அழுத்தத்திற்கு உட்பட்டதுடன், முற்றிலும் வீழ்ச்சியடைந்தது. இந்த அமெரிக்க நெருக்கடி காரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் மாத்திரமன்றி ஏனைய நாடுகளிலும் உள்ள யூரோ வங்கித் துறை (Euro Banking Sector) மற்றும் பெரும் எண்ணிக்கையிலான நிதி நிறுவனங்கள் என்பவற்றுடன் சேர்த்து, உற்பத்தித் துறையிலுள்ள நிறுவனங்களும் முற்றிலும் வீழ்ச்சியடைந்தன. உதாரணமாக, நொதர்ண் றொக் (Northern Rock) மற்றும் யூரோப்பியன் பேங்கிங் (European Banking) என்பவற்றுடன் காப்புறுதித் துறையில் மிகப் பெரும் நிறுவனமாக விளங்கிய போட்டிஸ் (Fortis) ஆகியவை நீடித்திருப்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, அவை

பகுதியளவில் தேசியமயமாக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவின் மோட்டார் வண்டி உற்பத்தி நிறுவனமான ஜெனரல் மோட்டோர்ஸ் (General Motors) மற்றும் மார்க் அண்ட் ஸ்பென்ஸ் (Mark & Spence) ஆகியன தமது விற்பனையில் வீழ்ச்சியை எதிர்கொள்ள வேண்டியிருந்தன.

தரவரிசைப்படுத்தல் நிறுவனங்கள், பெரும் எண்ணிக்கையிலான நிதி நிறுவனங்கள் பற்றிய தமது முதலீட்டு தரவரிசைப்படுத் தலைக் குறைத்து மதிப்பீடு செய்திருந் தன. பல்வேறு நாடுகளில் வேலையின்மை திடீரென அதிகரித்ததோடு, வேலை வாய்ப்பு வளர்ச்சி வீதம் எதிர்மறையாக இருந்தது. 2009 ஆம் ஆண்டில், வளர்ச் சியடைந்த பொருளாதாரங்களில் வேலை யின்மை 8 சதவீதம் அளவில் அதிகரித் தது. பல்வேறு வங்கிகளின் பிரதம நிறை வேற்று அதிகாரிகள் (Citigroup மற்றும் Merrill Lynch) தமது பதவிகளிலிருந்து விலகினர்.

செல்வந்த நாடுகளிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் ஓர் மெதுவான பொருளா தார வளர்ச்சியே காணப்படுமென உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் எதிர்வு கூறியிருந்தன. பெரும் எண்ணிக் கையிலான வளர்ச்சியடைந்த நாடுகளில் நடைமுறைக் கணக்குச் சமநிலைகள் எதிர் மறையாகக் காணப்பட்டன. தமது பொருட் கள் சேவைகளுக்கான கேள்வியில் காணப் பட்ட பற்றாக்குறை காரணமாக பாதிப்புக் குள்ளான நாடுகள் பொருளாதாரப் பின்ன டைவை எதிர்கொண்டன. வீடுகள் மற்றும் பொருட்கள் சேவைகள் என்பவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. வீழ்ச்சிய டைந்த ஏனைய சந்தைகள் காரணமாக, பங்குச் சந்தைகளும் பாதிப்புக்குள்ளாயின. மிக முக்கியமான கல்வி நிறுவனங்களி லுள்ள பொருளியலாளர்களையும் உள்ள டக்கிய ஓர் முன்னணிக் குழுவாகக் காணப்படும் பொருளாதார ஆய்வுக்கான தேசிய நிறுவனத்தால் (National Bureau of Economic Research) இந்த அமெரிக் கப் பொருளாதாரப் பின்னடைவு பற்றி உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. 2 ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில், 2008 ஆம் ஆண்டிலேயே மிக அதிகளவிலான அமெரிக்கத் தொழிலாளர்கள் தமது தொழில்களை இழந்தனர் என்பதை புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்க மற்றும் ஐரோப்பியப் பொரு ளாதாரங்கள் மாத்திரமன்றி, சீனா, யப்பான் இந்தியா போன்ற ஏனைய நாடுகளும் தமது ஏற்றுமதிகளில் முன்னொருபோதும் இல்லாத அளவு மிகப்பெரும் வீழ்ச்சியை எதிர்கொண்டன. இந்த நிலைமையானது ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள ஏனைய ஏற்றுமதி நாடுகளுக்குக்கூடப் பொதுவானதாக இருந்தது. 2009 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார வளர்ச்சி 0.5 வீதமாக வீழ்ச்சியடையுமென சர்வ தேச நாணய நிதியம் எச்சரித்திருந்தது. அத்துடன், 2009 ஆம் ஆண்டில் உலக வெளியீடுகள் 0.6 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சியடைந்திருந்தன என்பதை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. உலகளாவிய பொரு ளாதார நெருக்கடி காரணமாக, 2009 இல் உலகம் பூராவும் 51 மில்லியன் தொழில் இழப்புகள் ஏற்படுமென சர்வதேச தொழில் அமைப்பு தெரிவித்திருந்தது.

இந்த நெருக்கடிக்கு எதிர்வினையாற்றுவ தன் பொருட்டு, நிதி நெருக்கடியால் தோன் றிய பாதகமான விளைவை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக அமெரிக்க மத்திய வங்கி, அமெரிக்க அரசாங்கம் என்பவை உட்பட கொள்கை வகுப்பாளர்கள் அனைத் தையும் உள்ளடக்கிய ஓர் நடவடிக்கையை மேற்கொண்டனர். அமெரிக்க நிதி நெருக் கடியின் பல்வேறு நாடுகளுக்கும் பரவு கின்ற இந்த விளைவு காரணமாக, உல கெங்குமுள்ள ஏனைய மத்திய வங்கிகள் பலவும் தமது நாடுகளில் காணப்படும் சூழ் நிலைகளை மாற்றியமைப்பதற்கான நட வடிக்கைகளை மேற்கொண்டன. கொள்கை அடிப்படையிலான நடவடிக்கைகளுள் நாணயக் கொள்கை நடவடிக்கைகள், சட் டத் திருத்தங்கள், நட்டமடைந்த நிறுவனங் களை அரசாங்கம் மீட்டெடுத்தல் மற்றும் ஏனைய கூட்டு நடவடிக்கைகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் கீழ், வட்டி வீதங்களைக் குறைத்தல், பாதிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு திரவத்தன்மை உத விகளை வழங்குதல் என்பன பல்வேறு நாடுகளாலும் அமுலாக்கப்பட்ட கொள்கை ரீதியான நடவடிக்கைகளில் சிலவாகக் காணப்பட்டன. அவ்வாறே, ஒழுங்குவிதி சார்ந்த சட்டத் திருத்தங்களின் கீழ் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பாதிக் கப்பட்ட நாடுகளால் கடன்வழங்கல் நடை முறைகள், முறிவுப் பாதுகாப்பு, வரிக் கொள் கைகள், வீட்டுக்கடன் ஆலோசனைகள், கல்வி மற்றும் கடன்வழங்குவோருக்கான அனுமதிப் பத்திரம் வழங்கல் போன்றவற் றுடன் தொடர்புடைய சட்டங்கள் வரையப் பட்டன அல்லது திருத்தம் செய்யப்பட்டன. அரசாங்கங்கள் நிதியுதவிகளை வழங்கு வதற்கும் நிதி நிறுவனங்களை விலைக்கு வாங்குவதற்கும் முன்வந்தன. பிறடி மக் (Freddie Mac) மற்றும் பனி மே (Fannie Mae) போன்ற பாரிய நிதி நிறுவனங்கள் அமெரிக்க மத்திய வங்கியால் பொறுப் பேற்கப்பட்டதுடன், நட்டமடைந்த சில நிதி நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்களால் விலைக்கு வாங்கப்பட்டன. ஐக்கிய அமெ ரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஏனைய பல ஐரோப்பிய நாடுகள் என்பவற்றில் பெரும் எண்ணிக்கையிலான நிதி நிறுவனங் கள் ஏனைய நிறுவனங்களால் விலைக்கு வாங்கப்பட்டன அல்லது இணைத்துக் கொள்ளப்பட்டன. அமெரிக்க அரசாங்கமா னது திரவத்தன்மை குறைந்த அடை மானத்தைத் துணையாகக் கொண்ட பெருந் தொகையான பங்குச் சான்றிதழ்களை நிதி நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய் வதற்கு ஆரம்பித்தது. இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கான ஓர் நடவடிக்கையாக, பில்லியன் கணக்கான டொலர் பெறுமதி யுடைய மீட்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவ தற்காக, தமது தேசியச் சட்டவாக்க அமைப்புகளிலிருந்து அனுமதியைப் பெறு வதற்கான நடவடிக்கைகளைப் பல அர சாங்கங்களும் துவக்கி வைத்தன. வங்கி கள் சிறிய மற்றும் நடுத்த தொழில்முயற்சி களுக்கான கடன் தொகையை அதிகரித் தன. கணக்கீட்டு நியமங்களுக்காக பெரும் எண்ணிக்கையிலான ஒழுங்குபடுத்தல் நட வடிக்கைகள் கூட பல நாடுகளாலும் முன் மொழியப்பட்டன. அரசாங்கத்தின் இம் முயற்சிகளுக்கு மேலதிகமாக, அமெரிக்க மத்திய வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி, யப்பானிய வங்கி, கனேடிய வங்கி, சுவீஸ் தேசிய வங்கி மற்றும் சுவீடிஸ் றிக்ஸ் வங்கி ஆகியன நிதி நிறுவனங்களுக்கு திரவத்தன்மையை விடுவிப்பதற்கான தமது நடவடிக்கை களை அறிவித்தன. சில நாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் நிதியுதவிகளை வழங்கியது.

**இலங்கையில் நிதி நெருக்கடிகள்**

இதுவரையில் இலங்கை கடுமுனைபபான ஓர் நெருக்கடியை எதிர்கொள்ளவில்லை. ஆயினும், இந்த நாடு சில இடர் நிறைந்த பொருளாதாரச் சூழ்நிலைகளை, குறிப் பாக நிதித் துறையில், எதிர்கொண்டுள் ளது. தேசிய பொருளாதாரத்திற்கு பங் களிப்புச் செய்த மிக முக்கியமான துறை களில் ஒன்றாக இருந்த கோப்பிப் பெருந் தோட்டங்கள், கோப்பி வெளிறல் நோய் என அழைக்கப்படும் ஓர் நோயை எதிர் கொண்டபோது, 1880களில் இலங்கை யில் ஓர் வங்கி நெருக்கடி நிகழ்ந்தது. இதன் காரணமாக, பெருந்தோட்டத் துறைக்கு தமது சேவைகளை விரிவுபடுத்தியிருந்த வங்கிகள் முற்றிலும் வீழ்ச்சியடைந்தன. இதைத்தொடர்ந்து, அந்த நேரத்தில் பாதிக் கப்பட்ட சில வங்கிகளை மீட்டெடுப்பதன் பொருட்டு, இதில் தலையிடுவதற்கு அப் போதைய அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட் டது (கருணாதிலக, 1986). இந்த நெருக் கடியை விட இலங்கையின் வரலாற்றில் எளிதில் பார்த்தறியக்கூடிய நிதி நெருக் கடிகள் எதுவுமே நிகழவில்லை.

அண்மித்த கடந்த காலத்தில், 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர், 1988 - 1989 காலகட்டத்தில் இந்த நாட்டில் பல நிதிக் கம்பனிகள் முற்றிலும் வீழ்ச் சியடைந்தன. நிலைகுலைந்த நிதிக் கம் பனிகளுக்கு நிதியுதவி வழங்கியதன் மூலம், இலங்கை மத்திய வங்கியானது இந்த நெருக்கடிக்கு எதிர்வினையாற்றி

யது (இலங்கை மத்திய வங்கி, 1988 மற்றும் 1989). முற்றிலும் வீழ்ச்சியடைந்த நிதிக் கம்பனிகளில் சில மூடப்பட்டதுடன், ஏனைய சில கம்பனிகள் புனரமைக்கப்பட்டன. ஆயினும், இந்த நெருக்கடி ஏனைய துறைகளுக்குப் பரவவில்லை. இந்த நிறுவனங்களின் மூலதன அடித்தளத்தை பலப்படுத்துவதற்காக, 1993 - 1996 கால கட்டத்தில் அரசாங்கமானது அரசாங்க வங்கிகளில், அதாவது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில், மீள்முதலீட்டை மேற்கொண்டது. ஆயினும், ஓர் நெருக்கடிச் சூழலாக அன்றி, அரசாங்க வங்கிகளைப் பலப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஓர் நடவடிக்கையாகவே இதைக் கருத முடியும்.

இச்சூழ்நிலைகளுக்கு மேலதிகமாக, நாட்டின் சென்மதி நிலுவை மற்றும் இறை முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய சில பிரச்சினைகளை இந்த நாடு பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்கொண்டது. பொருளாதாரத்தை சரியான நிலையில் இருக்கச் செய்வதற்காக அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் சர்வதேச நாணய நிதியத்தின் இடர்கால கடனுதவி ஏற்பாட்டின் கீழ் பல தடவைகளில் நிதியுதவிகளை பெற்றுள்ளன. இலங்கையில் காணப்பட்ட இடர் மிகுந்த சூழ்நிலைகளைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியை முதன்முதலாக இந்த நாடு பெற்றுக்கொண்ட காலமாகிய 1965ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அரசாங்கமானது சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியுதவியை நாடிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

அமெரிக்க நிதி நெருக்கடி காரணமாக, இலங்கையின் நிதி முறைமை உறுதிப்பாடு பாதிக்கப்படவில்லை. ஆயினும், புதிய வெளிவாரி நிகழ்வுகள் காரணமாக பாதிப்புக்குள்ளான அதனுடைய ஒதுக்கு நிலைமையை இந்த நாடு மாற்றியமைக்க வேண்டியிருந்தது. 2008 இன் பிற்பகுதியிலும் 2009 இன் ஆரம்பத்திலும் அனுபவித்த பாதகமான சூழ்நிலையிலிருந்து, இந்த நாட்டால் படிப்படியாகப் பின்னர் மீளக்கூடியதாக இருந்தது. அமெரிக்க நிதி நெருக்கடி காரணமாக, மேற்கு உலகத்தால் எதிர்கொள்ளப்பட்ட கேடார்ந்த அனுபவத்தை இலங்கை அனுபவிக்கவில்லை. இலங்கையில் காணப்படும் கட்டுறுதி வாய்ந்த சட்ட ரீதியான பின்னணி, வெளிநாட்டு மூலதனக் கணக்கை முடிவுறுத்தல் மற்றும் நிதி நிறுவனங்களுடன் தொடர்புடைய, குறிப்பாக நிதி நிறுவனங்களின் கண்காணிப்பில் காணப்படும், சீர்ப்படுத்தும் முறையிலான நடவடிக்கைகளை அமுலாக்கியமை ஆகியனவே அமெரிக்க நிதி நெருக்கடியால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை தவிர்ப்பதற்கு துணைபுரிந்த காரணிகளில் சிலவாகும். ஆயினும், பொருளாதாரத்தின் மெய்த் துறையைப் பாதித்த நெருக்கடி மேலும் தீவிரமடைந்ததன் காரணமாக, இலங்கைப் பொருளாதாரத்தின் வெளிவாரித் துறையில் அமெரிக்க நெருக்கடியின் பாதிப்புகள் அதிகளவுக்கு உணரப்பட்டன.

இந்த நிதி நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட அதிகரித்துச் செல்லும் திரவத்தன்மைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, குறுங்கால முதலீடுகளை மேற்கொண்டிருந்த முதலீட்டாளர்கள் அவர்களுடைய மூலதனத்தை தமது தாய்நாடுகளுக்கு திருப்பியனுப்பி வைத்தனர். உலகளாவிய நிதி நெருக்கடியின் விளைவாக, இலங்கையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் நீண்டகாலப் பிணைகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த கடன் கருவிகளான வெளிநாட்டு நிதியங்கள் இந்த நாட்டிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நெருக்கடியின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த நாடுகளில் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் வேகக்குறைவு காரணமாக, இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான, குறிப்பாக ஆடை உற்பத்திப் பொருட்களுக்கான, கேள்வி கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. இது ஆடை ஏற்றுமதிக்கான உலகக் கேள்வியில் ஏற்பட்ட குறுக்கம் மற்றும் ஏற்றுமதிச் சந்தையின் மிக உயர்வான போட்டித்தன்மை என்பவற்றுடன் ஒன்றிணைந்த ஓர் தாக்கமாகக் காணப்பட்டது. அவ்வாறே தேயிலை, இறப்பர் போன்ற பொருட்களின் ஏற்றுமதியிலும் வீழ்ச்சி காணப்பட்டது. 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 2008 இல் கைத்தொழில் துறையின் வளர்ச்சியும் குறைவடைந்திருந்தது. அதற்கிடையில், தமது ஏற்றுமதிப் பொருட்களுக்கான கேள்வியில் காணப்பட்ட வீழ்ச்சி காரணமாக, சில உள்ளூர்த் தொழில்முயற்சிகள், வேறு வழியின்றி, தொழிலாளர்களை குறுங் காலத்திற்கு வேலையிலிருந்து நிறுத்தி வைத்தன. சேவைத் துறையின் வளர்ச்சியில்கூட ஓர் வீழ்ச்சி காணப்பட்டதுடன், சுற்றுலாத் துறை படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. உலகளாவிய நெருக்கடியின் விளைவாக சுற்றுலாப் பயணிகளின் வரவு வீழ்ச்சியடைந்திருந்தது.

ஏற்றுமதி உழைப்புக்களில் காணப்பட்ட வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த குறுங்கால முதலீடுகளை மீளப் பெற்றுக்கொள்ளல் என்பன இலங்கையில் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன. இறக்குமதியின் அதிகரித்தளவிலான வளர்ச்சி மற்றும் ஏற்றுமதியின் குறைந்தளவிலான வளர்ச்சி என்பன கூட, 2008ஆம் ஆண்டில் வர்த்தகப் பற்றாக் குறையின் கணிசமானளவு விரிவாக்கத்திற்கு பங்களிப்புச்செய்தன. அத்துடன், நாணய மாற்றுவீதத்தின் மீதான அழுத்தத்தையும் அவை அதிகரிக்கச்செய்தன. தனது வெளிநாட்டு ஒதுக்குகளை விற்பனை செய்வதன் மூலம், நாணய மாற்றுவீதம் பெறுமதியிறக்கத்திற்கு உள்ளாவதைத் தடுப்பதற்காக இலங்கை மத்திய வங்கி எதிர்வினையாற்றியது.

மேலே விளக்கிக் கூறப்பட்டவாறு, இந்த உலகளாவிய நெருக்கடியின் தாக்கமானது இறுதியில் இலங்கைப் பொருளாதாரத்தின் மெதுவான வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. பொருளாதார வளர்ச்சி மீதான இந்த நெருக்கடியின் தாக்கத்தை 2008 இன் இறுதிக் காலாண்டிலும், 2009 இன் முதல் அரையாண்டிலும் கடுமுனைப்பாக உணரக்கூடியதாக இருந்தது. 2009 இன் முதல் காலாண்டில் காணப்பட்ட 1.6 சதவீதமாகிய மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான உலகளாவிய நெருக்கடியின் பாதகமான விளைவுகளை சுட்டிக்காட்டுகின்றது.

இந்த நாட்டின் நிதி முறைமையானது கட்டுறுதி மிக்கதாக இருந்ததோடு, இந்த நெருக்கடியால் அது நேரடியாகப் பாதிக்கப்படவில்லை. இலங்கையில் எந்த வங்கியுமே முற்றாக வீழ்ச்சியடையவில்லை. 2008ஆம் ஆண்டு காலகட்டத்தில் சில நிதிக் கம்பனிகள் இடர்பாடுகளை எதிர்கொண்ட போதும், இந்த நாட்டின் நிதி ரீதியான உறுதிப்பாட்டிற்கு எந்த அச்சுறுத்தலும் காணப்படவில்லை. இந்த நாட்டால் விலை உறுதிப்பாட்டைக்கூட பேணக்கூடியதாக இருந்தது. 2009 இன் இறுதியில் பணவீக்கம் 4.8 சதவீதமாக திடீரென வீழ்ச்சியடைந்தது (இலங்கை மத்திய வங்கி, 2009).

### நிதி நெருக்கடிகளின் படிப்பினைகள்

மேலே விபரிக்கப்பட்டவாறு, நிதி நெருக்கடிகள் உலகிற்கு புதியவையல்ல. ஆயினும், வரலாற்றுக் காலகட்டம் முழுவதிலும் அவை நிகழவும் இல்லை. இந்த நிதி நெருக்கடிகள் ஒழுங்குபடுத்தும் அமைப்புகள், அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள் என்பவற்றிற்கும், முழு அளவில் பொதுமக்களுக்கும் பல படிப்பினைகளை கற்றுக்கொடுத்துள்ளன. வரலாற்று ரீதியான இந்த நிதி நெருக்கடிகளிலிருந்து பல படிப்பினைகள் கற்றுக்கொள்ளப்பட்ட போதும், நிதி நெருக்கடிகள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்துள்ளன. கற்றுக்கொள்ளப்பட்ட படிப்பினைகள் பெரியளவில் அல்லது சிறியளவில் முக்கியத்துவமுடையன வாகவும் இருக்கக்கூடும். நிதி நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக தீர்வுகளைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென சிலர் வாதிடுகின்றனர். இதற்கு நேர்மாறாக, அமெரிக்க மத்திய வங்கியின் முன்னாள் தலைவரான அலன் கிறீன்ஸ்பன், எவரும் எந்த நடிவடிக்கையையும் சோதித்துப்

பார்க்கக்கூடாதென யோசனை தெரிவித்திருப்பதுடன், உலகளாவிய நிதி முறைமையானது தற்போது “சரியீடுசெய்ய முடியாத வகையில் புரிந்துகொள்வதற்குக் கடினமானதாக” இருப்பதனால், அதனுடைய சிக்கல் கூறைக் கையாள்வதில், கொள்கை வகுப்பாளர்களாலும், சட்டம் இயற்றுவோராலும் நம்பிக்கை கொள்ள முடியாதுள்ளது என வாதிடும் அதே வேளை, நெடுங்காலத்திற்கு ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டிருந்தபோது, அனைத்து விடயங்களும் வெற்றிகரமானதாக அமைந்திருந்ததோடு, மிதமான அளவு கருதாப் பிழையே காணப்பட்டதெனவும் கூறுகின்றார். ஆயினும், கிறீன்ஸ்பனின் கருத்துகள் தவறானவையெனவும், அமெரிக்கப் பொருளாதாரத்தின் அடித்தளத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கிய இந்த நெருக்கடியானது வேலையின்மை விரைந்து ஏறுவதற்கும், அடைமானச் சொத்துகளை தொடர்ச்சியாகச் சுவீகரிக்கும் ஓர் நெருக்கடி நிலைக்கும் வழிவகுத்து, ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பொருளாதாரங்களை பலவீனப்படுத்தியது. குறைபாடுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் கண்டிப்பில்லாத கருதாப் பிழை ஆகிய பிரச்சினைகளை கையாள முயற்சிக்காத, ஓர் மோசமான தவறாக இது இருந்திருக்கும் (Barney Frank, 2003). இதனால், நிதி நெருக்கடிகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு சார்பாகவும் எதிராகவும் உள்ள விவாதங்கள் பல்வேறு வகைப்பட்டனவாகும்.

இந்த நெருக்கடிகளை அடிப்படையாகக் கொண்டு, எதிர்காலத்தில் நிகழக்கூடிய நெருக்கடிகளின் பாதகமான விளைவுகளைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு அல்லது குறைந்தபட்சம் அவற்றைக் குறைப்பதற்கு ஒழுங்குபடுத்தல் அமைப்புகளுக்கும் நிதி நிறுவனங்களுக்குமாக, பின்வரும் படிப்பினைகளை முன்னிலைப்படுத்திக்காட்ட முடியும்:

1. நிதி நிறுவனங்களின் நடத்தையைச் சமாளிப்பதற்காக ஒழுங்குவிதிகளைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பல நிதி நெருக்கடிகளும் போதித்துள்ளன. நட்டமடையக்கூடிய நிலையிலுள்ள மிகைப்படியான பெரிய நிறுவனங்களை சமாளிப்பதற்கு இவ்வொழுங்குவிதிகள் தேவைப்படுகின்றன என்பதை அமெரிக்க நெருக்கடி வலியுறுத்துகின்றது. ஒழுங்குபடுத்தல் வழிமுறைகளில் காணப்படும் பலவீனமானது நிதி நிறுவனங்களை நட்டமடையத் தூண்டுவதுடன், பரந்தகன்ற பின்விளைவுகளைக் கொண்டுள்ள ஓர் நிதி நெருக்கடிக்கு வழிவகுப்பதாகவும் காணப்படுகின்றது எனும் படிப்பினையை அண்மைக்கால நிதி நெருக்கடியிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு மாத்திரமன்றி, நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக சொத்துவழிப் பெறுமதியுடைய நிதிக் கருவிகள் போன்ற புதிய நிதிக் கருவிகளை ஒழுங்குபடுத்துவதற்கும்கூட ஒழுங்குவிதிகள் தேவைப்படுகின்றன. மேலும், முழுமையான முறைமையைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒழுங்குபடுத்தும் அமைப்புகளுக்கு அதிகாரத்தை வழங்கும் புதிய நிதிச் சேவைகளூடாக, இச்சட்டங்கள் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கின்றன. நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும், மூலதனத் தேவையை Basel II, Basel III போன்ற வழிமுறைகள் ஏற்கச் செய்துள்ளன. எதிர்பார்க்கப்படும் சாத்தியப்படத்தக்க பலவீனங்களை முன்கூட்டியே தடுப்பதற்கான நடவடிக்கைகளே இந்த வழிமுறைகளாகும். ஆயினும், இந்த ஒழுங்குவிதிகள் தாராளமயமாக்கல் கோட்பாட்டை தடுக்கும் வகையிலான கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடும் என சிலர் விவாதிக்கக்கூடும்.

2. மோசமான நிலையிலிருந்த பொருளாதார ‘மூலாதாரக்கூறுகள்’ காரணமாக ஆசிய நிதி நெருக்கடி திடீரென வெளிப்பட்டது. ஊக அடிப்படையிலான மூலதன நகர்வுகள் மற்றும் குறுங்கால மூலதனப் பாய்ச்சல் என்பவற்றால் இப்பிராந்திய நாடுகள் தாமாகவே இடருக்குள்ளாகியதுடன், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன இன்மையால் பெரும்பாலான நாடுகள் பாதிக்கப்பட்டன. அனைத்து வகையான நிதிப் பாய்ச்சல்களுக்குமான திறந்த தன்மை பற்றிய நடப்பிலுள்ள கோட்பாடு காரணமாகவே இவ்வாறு நிகழ்ந்தது. ஆகவே, ஒழுங்குபடுத்துநர்கள் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார மூலாதாரக் கூறுகள் ஓர் ஒழுங்குமுறையில் உள்ளனவா அல்லது இல்லையா என்பதை அன்றி, ஏனைய ஊக வியாபாரிகள் என்ன கருதுகின்றனர் என்பதையே தமது கரிசனையாகக் கொண்டுள்ள, வெளிநாட்டு முதலீட்டாளர்களில் ஆசியா பெருமளவுக்குச் சார்ந்திருந்தது என்பதே உண்மையாகும். இது பெரிதும் நிலையுறுதியற்ற ஓர் கட்டமைப்பையும், இறுதியில் நெருக்கடிகளின் சங்கிலித் தொடரான எதிர்விளைவுகளையும் உருவாக்கியது. குறுங்கால வெளிநாட்டுக் கடன்பெறலானது அதிர்வுகள் தொடர்பான பாதுகாப்பற்ற தன்மையை அதிகரிக்கின்றது. உள்ளே வருகின்ற குறுங்கால நிதிப் பாய்ச்சல்கள் விரைவாக வெளியேறிவிடுகின்றன. இதற்கான சிறந்த ஓர் எடுத்துக்காட்டாக தாய்லாந்து விளங்கியது. இங்கே நிகழ்ந்த குறுங்கால நிதிகளின் மீளப்பெறலானது தென் கிழக்காசியாவில் நிதி நெருக்கடியைத் தோற்றுவித்தது. குறுங்கால நிதிகள் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதை சர்வதேச நாணய நிதியம் தற்போது ஆதரிக்கின்றது.

3. பொருத்தமான பேரினப் பொருளாதார முகாமைத்துவத்தின் அவசியத்தை இந்த நெருக்கடிகள் எமக்குக் கற்பித்துள்ளன. அதில், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல், இடர்நேர்வுகளைத் தவிர்க்கக்கூடிய நாணயமாற்று வீத முகாமைத்துவம், பற்றாக்குறை நிதியளிப்பு முகாமைத்துவம் என்பன அதிகளவு முக்கியத்தவத்தை வெளிப்படுத்தியுள்ளன. சிங்கப்பூர், நியூசிலாந்து போன்ற சிறிய பொருளாதாரங்கள் தமது பேரினப் பொருளாதாரக் கட்டமைப்புக்களின் கீழ் மூலதனக் கணக்கு மற்றும் மிதக்கும் நாணயமாற்று வீதங்கள் ஆகிய இரண்டையுமே தாராளமயமாக்கியுள்ளன. இந்த நாடுகளில், மிகுதியான நட்ட அச்சங்களைப் பொறுப்பேற்பதற்கான ஊக்குவிப்புக்களை மட்டுப்படுத்துவதற்கான நிறுவன ரீதியான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. சிங்கப்பூரில் இது கண்காணிப்பு மற்றும் ஒழுங்குவிதி என்பவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. நியூசிலாந்தில், பங்குடைமையாளர்களுக்கும் முழு அளவில் பொதுமக்களுக்குமான வெளிப்படைத்தன்மை மற்றும் முகாமைத்துவ ரீதியான பொறுப்புக்கூறல் என்பனவற்றில் தனிக் கவனம் செலுத்தப்படுகின்றது. அவ்வண்ணமே, பேரினப் பொருளாதார முகாமைத்துவத்தின் கீழ், நெருக்கடிகளைத் தவிர்ப்பதன் பொருட்டு சரியான வெளிவாரி மற்றும் உள்வாரிப் பொருளாதார முகாமைத்துவமானது பயன்பாட்டிற்குரிய நிலையில் இருக்க வேண்டியுள்ளதுடன், பணவீக்கத்தையும் திரவத் தன்மையையும் முகாமைசெய்கின்ற கவனமாக வடிவமைக்கப்பட்ட நாணயக் கொள்கைகளின் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான நிதி நெருக்கடிகளில், நாணய மாற்று வீதத்தின் நடப்புமுறை மாற்றமே நிதி நெருக்கடிகளுக்கு வழிவகுத்துள்ளது. இவ்வகையான நெருக்கடிகளைத் தடுப்பதற்கு, நாணயமாற்று வீதங்கள், வெளிநாட்டு ஒதுக்குகள் என்பன உட்பட, வெளிநாட்டுக் கணக்குகளின் பொருத்தமான முகாமைத்துவம் தேவைப்படுகின்றது.

4. குடும்பங்களின் செலவுகளைக் குறைப்பதற்கு வழிவகுத்த நெருக்கடிகள் எதிர்பாராத விதமாக பொருளாதாரப் பின்னடைவில் முடிவடைந்தன. நெருக்கடி ஒன்று காணப்படும்போது, நாணய விடயத்திலும் கடனிலும் கட்

டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியில் ஓர் வீழ்ச்சி ஏற்படுவதற்கும் அது காரணமாக அமைகின்றது. இந்த நடவடிக்கைகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடும். ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ள அமெரிக்க நெருக்கடியானது குடும்பங்களின் நுகர்வைக் குறைப்பதற்கு வழிவகுத்ததோடு, பல்வேறு நிறுவனங்களாலும் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியின் விழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. இது, ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் உட்பட, ஏராளமான அபிவிருத்தியடைந்த நாடுகளில் பொருளாதாரப் பின்னடைவைத் தோற்றுவித்த அதேவேளை, வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் ஏற்றுமதிகளை மிக மோசமாகப் பாதித்து, இறுதியில் உலகளாவிய ஓர் நெருக்கடிக்கு வழி வகுத்தது.

5. இதிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய மற்றுமொரு படிப்பினை எதுவெனில், குறுங்கால அபிவிருத்தியில் மட்டு மீறிய ஆர்வம் கொள்வதைத் தவிர்த்தலாகும். இது உள்நாட்டுத் துறை அல்லது வெளிநாட்டுத் துறைச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமானதாக இருக்கக் கூடும். 1997 இன் இறுதியில் பெருமளவுக்கு எதிர்பார்க்கப்படாத ஒரு திடீர் நாணய மாற்றுவீதப் பெறுமதியிறக்கத்தை கொரியா அனுபவித்தது. இது முன்னொருபோதும் இல்லாத வங்கித்தொழில் நெருக்கடியைத் சடுதியாகத் தூண்டி விட்டது. ஆதலால், நாடுகள் நாணய மற்றும் இறை முகாமைத்துவத்தைப் பற்றிச் சிந்திக்கும் போது, குறுங்கால இலக்குகளை விட, நீண்டகால அணுகுமுறைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

6. நெருக்கடியின் விளைவுகள் நெடுங் காலம் நீடித்திருப்பவையாகவும் நாடுகளுக்கு அதிக செலவீனத்தை ஏற்படுத்துவனவாகவும் உள்ளன. நட்டமடைந்த நிதி நிறுவனங்களை மீட்பதற்காக, எராளமான நாடுகள் வரி செலுத்துவோரின் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட நேரிடுகின்றது. நட்டமடைந்த நிறுவனங்களை மீட்பதற்காக அரசாங்கத்தின் பில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிடுவதற்குக் காரணமாக அமைந்த அமெரிக்க நெருக்கடியிலிருந்து இதைத் தெளிவாகப் புரிந்தகொள்ள முடிகின்றது. இது, ஐக்கிய அமெரிக்காவிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகவன்றி அரசாங்க மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலும் காணப்பட்ட நிதி நிறுவனங்களை மீட்பதற்காகத் தமது அரசாங்க நிதியுதவிகளுடன் முன் வந்த உலகிலுள்ள ஏராளமான நாடுகளுக்கும் உரியதாகும். இலங்கையில் கூட, நிதிக் கம்பனிகளில் இக்கட்டான ஓர் நிலை காணப்பட்ட கால கட்டத்தில், முற்றிலும் வீழ்ச்சியடைவதிலிருந்து அந்த நிதிக் கம்பனிகளை மீட்பதற்காக அரசாங்கம் (மத்திய வங்கி) நிதியுதவிகளை வழங்கியது.

7. நிதி நிறுவனங்கள் நட்டமடைவதைத் தடுப்பதற்கு, போதுமான கண்காணிப்பையும் பொதுமக்கள் அறியும்படியான தகவல் வெளிப்பாட்டையும் கொண்டிருக்க வேண்டியுள்ளது. கண்காணிப்பைப் பலப்படுத்துவதற்காக, ஐக்கிய அமெரிக்கா மற்றும் குழு 20 இல் உள்ள நாடுகள் என்பன உறுதியான சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ள அதேவேளை, கண்காணிப்புச் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்காக பல்வேறு நாடுகளாலும் உறுதியான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. சாத்தியப்படத்தக்க முழுமையான வீழ்ச்சியைத் தடுப்பதற்காக, நிதி நிறுவனங்கள் இக்கண்காணிப்புச் செயற்பாட்டிற்குச் சாதகமான முறையில் எதிர்வினையாற்ற (துலங்க) வேண்டும். இலங்கையில் கூட, நிதி நிறுவனங்கள் மீதான இடர் நேர்வுகளைத் தவிர்க்கும் வகையில் அமைந்த கண்காணிப்பும் துல்லியமாக குறித்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையும், உலகம் பூராவும் நிகழ்ந்த பல்வேறு நெருக்கடிகளின் பாதகமான விளைவுகளிலிருந்து இந்த நாட்டைப் பாதுகாத்துள்ளன. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உறுதியான கண்காணிப்பும் காலப் பொருத்தமுடைய நடவடிக்கைகளும் காரணமாக, தென் கிழக்காசிய நெருக்கடி மற்றும் அமெரிக்க நெருக்கடி ஆகியவற்றின் பாதகமான விளைவுகளிலிருந்து இந்த நாடு தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது. மூலதனமும் கொடுகடன் விகிதங்களும், கம்பனித்துறை ஆளுகை, செயற்படுத்தப்படாத கடன்கள், வணிகத் தொடர் திட்டங்கள், இறக்குமதிகளுக்கான பணச் செலுத்தல்கள், வங்கியாளர்களுக்கான ஊதிய வரையறைகள், நட்ட அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பைத் தொடங்குதல், 'உங்களுடைய வாடிக்கையாளரை அறிந்து வைத்திருங்கள்' கொள்கையின் அமுலாக்கம், வர்த்தக வங்கிகளின் கடன்பெறற் செயற்பாடுகள் மீது வரையறைகளை அறிமுகப்படுத்துதல், நிதி நிறுவனங்களுக்கான முகாமைத்துவக் குழுக்களை நியமித்தல் என்பவை தொடர்பான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதை அமுல்படுத்தப்பட்ட இந்த நடவடிக்கைகள் உள்ளடக்கியிருந்தன. கண்டிப்பில்லாத ஏற்பாடுகள், நட்ட அச்சம் பற்றிய ஒருமித்த கவனம் தொடர்பான காணப்பட்ட தரம் தாழ்ந்த நியமமும் அது பற்றிய விபரங்கள் அதிகளவுக்கு வெளிப்படுத்தப்பட்டமையும், சிறந்த உள்வாரித் திரவத் தன்மை முகாமைத்துவக் கட்டுப்பாடுகளின் குறைபாடு, கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளிலான பலவீனங்கள் என்பன காரணமாகவே 1997 இல் கொரிய நெருக்கடி ஏற்பட்டது. ஆகவே, எதிர்கால நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக, நிதி நிறுவனங்கள் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

8. வைப்பாளர்களைப் பாதுகாப்பதன் பொருட்டு, நெருக்கடிகளின் பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு வேண்டிய சாதகமான செயற்களத்தை, வைப்புக் காப்புறுதித் திட்டங்கள் போன்ற வழிமுறைகள் வழங்குகின்றன. யப்பான் இத்தகைய ஓர் வைப்புக் காப்புறுதித் திட்டத்தை 1996 இல் அறிமுகப்படுத்தியது. இலங்கையிலும் ஓர் வைப்புக் காப்புறுதித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நட்ட அச்ச முகாமைத்துவத்தின் ஓர் அங்கமாக இருக்கக்கூடிய இந்த நடவடிக்கையானது, நட்டமடையும் நிதி நிறுவனங்களைக் கையாள்வதற்கான மேம்பட்ட நெகிழ்வுத் தன்மையை அதிகார அமைப்புக்களுக்கு வழங்கியுள்ளது. நிதி முறைமையில் பரவலான ஒரு சேதத்தை ஏற்படுத்தக்கூடிய, தமது நிறுவனங்களில் காணப்படும் திரவத்தன்மைப் பற்றாக்குறை தொடர்பான நட்ட அச்சத்தைக் கையாள்வதற்காக உலகின் மிகப் பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான வங்கிகள் மேலதிகக் கட்டணங்களைச் செலுத்த வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

9. ஒழுங்குபடுத்துநர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் தனியார் நிதி நிறுவனங்கள் தாமாக முன்வந்து செயற்பட வேண்டும். கடன் வழங்கும் நிறுவனங்களை மீட்பதற்கு உத்தியோக பூர்வமான வளங்களைப் பயன்படுத்த முடியும் எனும் நோக்கு அறநெறி சார்ந்த இடர்வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கின்றது. அது மட்டுமீறிய நட்ட அச்சத்தைக் கடன்வழங்குவோர் பொறுப்பேற்பதற்கும், பொருளாதார ரீதியாகக் குறைந்தளவு ஏற்புக்குரிய செயற் திட்டங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்கும் வழிவகுக்கக் கூடும் என்பதோடு, நெருக்கடிகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை மேலும் மோசமானதாக

ஆக்கவும் கூடும். ஐக்கிய அமெரிக்காவில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் பாதகமான அனுபவத்தின் பின்னர், அனைத்து நீண்டகால நிதியளிப்புக்கான நீண்டகாலப் படுகடன் நிதியளிப்பு விகித ஆற்றலை மட்டுப்படுத்துதல், மூலதனத் தகுதியை (நிறைவை) அதிகரித்தல் மற்றும் நிதி நிறுவனங்கள் மீது உறுதியான ஒரு நட்ட அச்சப் பகுப்பாய்வு முறையை நடாத்துதல் என்பவை தொடர்பான ஒழுங்குவிதிகளை விதித்தல் பற்றி ஒழுங்குபடுத்துநர்கள் ஆலோசித்து வருகின்றனர். நெருக்கடிகளைத் தடுப்பதற்கு, அரசாங்கத்தின் அல்லது ஒழுங்குபடுத்துநரின் நடவடிக்கைகளுக்கான தனியார் துறையின் துலங்கல்கள் தேவைப்படுகின்றன.

10. நிதி நிறுவனங்கள், குறிப்பாக வங்கிகள், தமது தொழிற்பாடுகளுக்கு மிகவும் முக்கியத்தவம் வாய்ந்ததாகவுள்ள பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கு, திரவத்தன்மை வாய்ந்த சொத்துக்கள், இலாபம் உழைக்கும் சொத்துக்கள் ஆகிய இரண்டிலும் கவனஞ் செலுத்திக்கொண்டே, பட்டியலிடப்பட்ட முதலீட்டைக் கவனமாக ஒழுங்குபடுத்த வேண்டும். திரவத்தன்மை வாய்ந்த சொத்துக்களுக்கும் இலாபம் உழைக்கும் சொத்துக்களுக்கும் இரு நோக்கங்கள் உள்ளன என்பதுடன், அவற்றின் சரியான பராமரிப்பானது, நிதி நிறுவனங்களின் இலாபத்தைப் போல பொதுமக்களின் நம்பிக்கையையும் உறுதிப்படுத்தக்கூடும். உலகளாவிய நிதி நெருக்கடிகள் பொதுமக்களின் நம்பிக்கையையும் இலாபம் உழைப்பதையும் அடிப்படையாகக் கொண்ட, ஆரோக்கியமான ஓர் நிதி முறைமையைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் படிப்பினைகளைப் போதித்துள்ளன.

11. இன்று, நிதி நிறுவனங்கள் பற்றிய நட்ட அச்சம் வெளிப்படுவதைக் கையாள்வதானது, அந்நிறுவனங்களை நீடித்திருக்கச் செய்வதில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது. தற்போதைய உலகில், நட்ட அச்சத்தின் வகைகள் பல்வேறு வகைப்பட்டனவாகும். தமது நம்பகத்தன்மையைப் பேணுவதற்காக, பல வகையான நட்ட அச்சங்களை நிதி நிறுவனங்கள் சமாளிக்க வேண்டியுள்ளன. இதனால், நட்ட அச்ச முகாமைத்துவம் இன்றியமையாத ஒன்றாகின்றது. அமெரிக்க நிதி நெருக்கடிக்கு மோசமான நட்ட அச்ச முகாமைத்துவம் பகுதியளவில் காரணமாக அமைந்துள்ளது. இங்கு, மோசமான நட்ட அச்ச முகாமைத்துவம் காரணமாக, பெரும் எண்ணிக்கையிலான நிதி நிறுவனங்கள் நட்டமடைந்தன. வெளிப்படையான தன்மையைப் பேணுவது கூட நட்ட அச்ச முகாமைத்தவத்தின் ஓர் அம்சமாகும். அமெரிக்க நெருக்கடியின் பின்னணியில் இருந்த சிக்கலான நுட்பநுணுக்கங்கள் உடைய சொத்துவழிப் பெறுமதியைக் கொண்ட நிதிக் கருவிகளைக் கையாண்டமை நிதி நிறுவனங்களுக்கு மிகப் பெரும் நட்ட அச்சத்தைக் கொண்டுவந்தது. ஆகவே, நிதி நிறுவனங்கள் நடைமுறையிலுள்ள நட்ட அச்சங்களில் மாத்திரமன்றி, எதிர்கால நட்ட அச்சங்களிலும் கவனஞ்செலுத்த வேண்டும்.

12. நிதி நெருக்கடிகளின் பின்னணியில் உள்ள மிக முக்கியமான சிறப்பியல்புகளில் ஒன்றாக நிதிக் கருவிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் என்பன பற்றிய போதுமான விழிப்புணர்வு இன்மை இருந்து வருகின்றது. நெருக்கடிகள் ஏற்பட்ட காலகட்டங்களில், பொதுமக்களுடன் சேர்த்து நிதி நிறுவனங்களின் பணியாளர்களும் நிதிக் கருவிகள் பற்றிய சரியான அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையானதாகும். பொதுமக்கள் வழமையாக சொத்துக்களின் பாதுகாப்பைப் பற்றி அதிகளவு ஆழ்ந்து ஆராயாது, கூடிய ஆதாயத்தையே நாடுகின்றனர். இதனால் வைப்பாளர்களுக்கு கணிசமானளவு இழப்புக்கள் ஏற்படக்கூடும். நிதி நிறுவனங்களின் தொழிற்பாடுகள் நிறைவேற்றப்படும்போது, சூழ்நிலையை மாற்றக்கூடிய பல்வேறு புதிய நிகழ்வுகள் பற்றிய, நிதி நிறுவனங்களின் பணியாளர்களுடைய விழிப்புணர்வு கூட இன்றியமையாததாக உள்ளது. சிறந்த தகைமை பெற்றதும் அனுபவம் வாய்ந்ததுமான பணியாளர் குழுவொன்று நிதி நிறுவனங்களுக்குத் தேவைப்படுவதோடு, அதற்கு பயிற்சியும் ஆற்றல் விருத்தியும் இன்றியமையாதனவாகும்.

13. சில நெருக்கடிகள் அரசியற் காரணங்களால் திடீரெனத் தோற்றம் பெற்றுள்ளன. இப்பின்னணியில் இடம்பெற்ற நெருக்கடிகள் வேலையின்மையையும் வருமானப் பகிர்வில் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளதுடன், அரசியற் சூழலில் மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாகவும் இருந்துள்ளன. உதாரணமாக, பதவி விலகுவதற்கு தாய்லாந்துப் பிரதமர் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், 32 வருடகால சர்வாதிகார ஆட்சியின் பின்னர் இந்தோனேசிய ஜனாதிபதி சுஹார்ட்டோ பதவியிலிருந்து இறங்கினார். தென் கொரியாவில் கூட அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இங்கே, கிம் யுங் சம்மின் சர்வாதிகார அரசாங்கமானது, கிம் டே யுங்கினுடைய, ஒப்பீட்டளவில் கறைபடியாத ஆட்சியால் மாற்றீடு செய்யப்பட்டது. ஆகவே, இதிலிருந்து கற்றுக்கொள்ளப்படும் படிப்பினை எதுவெனில், நிதி நெருக்கடியானது அரசியல் நெருக்கடிக்குக் கூட வழி வகுக்கும் என்பதாகும்.

14. நெருக்கடிகள் சர்வதேச உறவுகளின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தியுள்ளன. ஒரு நெருக்கடியை ஓர் நாட்டால் மாத்திரம் சமாளிக்க முடியாது. நெருக்கடிகளின் பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பதில் சர்வதேச நடவடிக்கை அவசியம் தேவைப்படுகின்றது என்பதை தென் கிழக்காசியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற இடங்களில் நிகழ்ந்த நெருக்கடிகள் நிரூபித்துள்ளன. உலகளாவிய ரீதியில் பின்விளைவுகளைக் கொண்டிருந்த நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஐரோப்பாவின் ஒத்துழைப்பை ஐக்கிய அமெரிக்கா வேண்டிநின்றது. சமாந்தரமான நாணய மற்றும் இறைக் கொள்கை நடவடிக்கைகளை அமுல்படுத்தியதன் மூலம், ஐரோப்பாவிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான நாடுகள் இதற்கு எதிர்வினையாற்றின (துலங்கின). அதிகளவான நாடுகள், பாதிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு நிதியுதவிகளை வழங்கின. அமெரிக்க நெருக்கடியின் பாதகமான பின்விளைவுகளைத் தீர்ப்பதற்குத் துணைபுரிந்த, ஏராளமான நாடுகளால் அமுல்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த நாணயக் கொள்கை நடவடிக்கைகளில் ஒன்றாக வட்டி வீதங்களிலான குறைப்பு அமைந்திருந்தது. ஆகவே, ஓர் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்புத் தேவைப்படுகின்றது. வடக்கு - தெற்கு உரையாடலின் குறைபாடு காரணமாகவே நிதி நெருக்கடிகளுடன் தொடர்புடைய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன எனச் சிலர் வாதிடுகின்றனர். வடக்கு - தெற்கு உரையாடலின் இக்குறைபாடானது நிதி நெருக்கடியின் விளைவுகளால் ஏற்படும் முழுமையான சுமையையும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீது சுமத்தியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட படிப்பினைகளை, நெருக்கடிச் சூழ்நிலைகளிலிருந்து கற்றுக்கொண்ட உலகளாவிய படிப்பினைகளாகக் கருத முடியும். மேம்பட்ட பேரினப் பொருளாதாரச் சூழ்நிலை, சாதகமான ஒழுங்குபடுத்தற் பின்னணி, இடர்நேர்வுகளைத் தவிர்க்கின்ற வகையில் அமைந்த கண்காணிப்பு, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட காலப்பொருத்தமுடைய நடவடிக்கை என்பன காரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடியால்

இலங்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட வில்லை. இந்த நிதி நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட பத்துப் படிப்பினைகளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பின்வருமாறு முன்னிலைப்படுத்திக் காட்டு கின்றார்:

1. முன்கூட்டியே ஆயத்தமாக இருத்தல்; இது, யாராவது ஒருவர் கப்பலின் மேற் தளத்தில் நிற்கும்போது புயல் வீசுமா யின், அவர் ஓர் உயிர்க்காப்பு அங் கியை அணிந்திருப்பதைப் போன்றதா கும். அனைத்து வங்கிகளுக்கும் ஒரு சதவீத பொது ஏற்பாட்டை அறிமுகப் படுத்தியமையானது, நெருக்கடிக்கு முன்னரேயே மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தமை.

2. விரைவாகவும் தீர்மானகரமாகவும் நகர்வதற்கான ஆற்றலை விருத்தி செய்தல்; மத்திய வங்கி துல்லியமாக எதைச் செய்துகொண்டிருந்தது என்ப தைப் பற்றிய தெளிவான சமிக்ஞை களை அது வழங்கியது. இது நெருக் கடியின் பாதிப்பைத் தடுத்தமை.

3. உலகளாவிய புதிய நிகழ்வுகளை விரைவாக அவதானித்து உணர்தல்; இதற்குச் சரியான தகவல் தேவைப் பட்டதோடு, உலகிலுள்ள பெரும் நிதி நிறுவனங்களும் பொருளாதாரங் களும் முறிவடைதல் போன்ற உலக ளாவிய ரீதியில் மாற்றத்தை ஏற்படுத் தத்தக்க புதிய நிகழ்வுகளையும் மத் திய வங்கி அவதானித்து வந்தமை.

4. காரணிகள் தொடர்பில் நெடுங்கால நோக்கைக் கவனத்திற் கொள்ளலும் அவ்வண்ணமே நடவடிக்கைகளை எடுத்தலும்.

5. தெளிவாகவும் தீர்மானகரமாகவும் நடவடிக்கை எடுத்தல்; இதில், பங்கு ஈடுபாட்டாளர்களால் மேற்கொள்ளப் பட வேண்டியவை எவை என்பதைத் தெளிவாகக் கூற வேண்டிய தேவை உண்டு.

6. ஒரு கொள்கையில் மாத்திரம் தங்கியி ராது, கொள்கைகளின் ஓர் தொகு தியை அமுல்படுத்துதல்; சர்வதேச ஒதுக்குகள் தொடர்பில் மத்திய வங்கி எதிர்கொண்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்காக அது பல்வகைத் திட்டங்களைக் கொண்டிருந்தமை.

7. அரசாங்கத்துடனும் அரசியலதிகாரக் குழுக்களுடனும் நெருக்கமாகப் பணி யாற்றுதல்; ஓர் பொதுவான இலக்கை எய்துவதோடு, அவ்வண்ணமே உபா யங்களை அமுல்படுத்துத்துவாற்கு மான தேவை காணப்பட்டது.

8. சந்தையில் காணப்படும் வாய்ப்புக்க ளின் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளல்; மத்திய வங்கியானது உள்ளூர் நாணயச் சந்தையை மாத்திர மன்றி, இலங்கையிலுள்ள வெளிநாட்டு நாணயச் சந்தையின் ஆற்றலைக் கூட விருத்தி செய்தமை.

9. திட்டமிடப்படாத பின்விளைவுகளின் விதியைப் பற்றிப் பகுத்தறிவுடன் சிந்தித்தல்; உதாரணமாக, தங்கத்தின் மீது வரி விதித்தமையானது இலங் கையின் தங்க இறக்குமதியைக் கணி சமான அளவிற்குக் குறைத்தமை.

10. உலகளாவிய பிரச்சினைகளை சர்வ தேசமயப்படுத்தப்பட்ட ஓர் வழிமுறை யில் தீர்த்தல்; அவசியம் ஏற்பட்ட போது, இப்பிரச்சினைகளை சர்வதேச நாணய நிதியத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை களை மத்திய வங்கி மேற்கொண்டமை. அவ்வாறே, நாடுகளுக்கான மேலதிக விசேட எடுப்பனவு உரிமை ஒதுக்கீடு களை வழங்குவது கூட இதன் விளை வுகளில் ஒன்றாக இருந்தமை.

நிதி நெருக்கடிகளிலிருந்து கற்றுக்கொண்ட படிப்பினைகளாக பத்து விடயங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அவற் றைக் கட்டாயம் பத்திற்குள் மட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

## முடிவுரை

இக்கட்டுரையானது, 2007 இல் நிகழ்ந்த அமெரிக்க உப - முதன்மை அடைமான நெருக்கடியும் அதனுடைய பின்விளைவு களும் மற்றும் இலங்கையில் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் வரலாறு என்பவற்றை விளக்கும் அதேவேளை, நிதி நெருக்கடி களை ஒரு ஒழுங்குமுறையில் வகைப் படுத்துவதற்கும், இந்த நிதி நெருக்கடி களுக்கான காரணங்களைக் கண்டறிவதற் கும் முயற்சித்துள்ளது. இறுதியாக, இந்த நெருக்கடிகளிலிருந்து கற்றுக்கொண்ட படிப்பினைகளை அது முன்னிலைப்படுத் திக் காட்டுகின்றது. நிதி நெருக்கடிகளுக் கான காரணங்களை இனங்காண்பதற் காக, மெக்சிக்கோ நெருக்கடி, தென்கிழக் காசிய நெருக்கடி, அயர்லாந்து நிதி நெருக்கடி மற்றும் மிகப் பிற்காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட உப - முதன்மை அடைமான நெருக்கடி போன்ற ஏராளமான நிதி நெருக்கடிகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் முன்வைக்கப்பட்டுள் ளன. மேலும், இக்கட்டுரையானது நிதி நிறுவனங்களின் தோல்விகளையும், இந்த நெருக்கடிகளின் பாதகமான விளைவு களைத் தீர்ப்பதற்காக அதிகார அமைப் புக்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகளையும் இனங்கண்டுள்ளது. இந்த நெருக்கடிகளிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பல படிப்பினைகளை இக்கட்டுரை முன்னிலைப்படுத்திக் காட்டு கின்றது. ஒழுங்குபடுத்தல் தேவைகள், பேரின மற்றும் நுண்பாகப் பொருளாதா ரக் கட்டமைப்புக்கள், கண்காணிப்பு, நட்ட அச்சங்களைக் குறைப்பதற்கான வைப்புக் காப்புறுதித் திட்டம் போன்ற வழிமுறை கள், நிதி நிறுவனங்களின் தாமாக முன் வந்து செயலாற்றும் வகிபாகம், பங்குப் பட்டியலையும் நட்ட அச்சங்களையும் முகாமைசெய்தல், நிதி நிறுவனங்களுக் கான பயிற்சிபெற்ற பணியாளர் குழு ஆகியவற்றின் முக்கியத்துவம் இதில் முன்னிலைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. சில நிதி நெருக்கடிகளுக்கு அரசியற் பிரச்சினைகள் காரணமாக இருந்துள்ளன என்பதையும், இந்த நெருக்கடிகளின் பாதக மான தாக்கங்களைத் தவிர்ப்பதற்கு சர்வ தேச உறவுகள் மிகவும் முக்கியமானவை என்பதையும் கூட இது வெளிப்படுத்தி யுள்ளது. இறுதியாக, நிதி நெருக்கடி களின் பின்விளைவுகளைத் தவிர்ப்பதற்கு இலங்கைக்குத் துணைபுரிந்த சில நட வடிக்கைகளையும் இக்கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது.

**References:**


Bernanke, Ben S. (2008). "Financial Market, the Economic Outlook, and the Monetary Policy", Washington, D.C.

Bank For International Settlements (2001). "The Financial Crisis in Japan during the 1990's: How the Bank of Japan Responded and the Lessons Learnt", Basel: 76 p.

Berney Frank (2011) "Greenspan is Wrong; We can Reform Finances", The Financial Times, 3 April 2011.

Cabraal, Ajith Niward (2010). Key Persons Forum on Lessons Learnt From the Global Financial Crisis", Business Today, May 2010.

Central Bank of Sri Lanka (Various Issues). Annual Reports of the Central Bank of Sri Lanka.

Chris Giles and Megan Marphy (2011). "IMF Calls for Banks to Pay More to Cover Risk" The Financial Times Limited, 6 April 2011.

Corea Gamini (1998). "Lessons from the Asian Financial Crisis", Christian Worker, 28-30 pp.

Ferri, Giovanni and Kang, Tea SOO (1989). "The Credit Channel at Work: Lessons from the Republic of Korea's Financial Crisis", Washington, D.C., Word Bank, 25 p.

International Monetary Fund, Web Site, http/ /www.inf:org/external/np/fin/tad/ extarrz.aspx?memberkey!=895Redate 2009=20/1000

International Monetary Fund (2010). " World


**தொடர்ச்சி 38 ஆம் பக்கம் .........**

# உலகளாவிய பணத் தூய்மையாக்கலையும் பயங்கர வாதத்திற்கான நிதியளிப்பையும் தடுத்துநிறுத்துவதில் தகவல் இடர்வாய்ப்பு முகாமைத்துவத்தின் வகிபாகம்


**விபுல் ஜயவிக்கிரம**

***இன்போஷீல்ட் கொனசல்ற்றிங்***


**அறிமுகம்**

*1980கள் தொடக்கம் அதிகரித்துச்செல்லும் ஓர் உலகளாவிய பிரச்சினையாகி வரும் நிதி தொடர்பான குற்றச் செயல்களாக பணத் தூய்மையாக்கலும், பயங்கரவாதத் திற்கான நிதியளிப்பும் அமைந்துள்ளன. அதன் விளைவாக, 33 அங்கத்துவ அமைப் புக்களை உள்ளடக்கிய நிதிசார் நட வடிக்கைகளுக்கான ஓர் சிறப்புப் பணிக் குழு (FATF) தோற்றுவிக்கப்பட்டது. இதன் பிரதான கடமைப் பொறுப்பாக, பணத் தூய்மையாக்கலுக்கு எதிரான ஓர் சர்வதேச ரீதியிலான நியமத்தை விருத்தி செய்தலும், பயங்கரவாதத்திற்கு நிதி யளிப்புச் செய்வதை தடுத்து நிறுத்துவதும் உள்ளன. அத்துடன், இதைத் தொடர்ந்து சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட முதலாவது பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான ஓர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.*

இன்று பல சமவாயங்களாலும் சர்வதேச உடன்படிக்கைகளாலும் ஊக்குவிக்கப்பட்ட ஓர் ஒழுங்குபடுத்தல் தேவையாக பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கரவாதத்திற் கான நிதியளிப்புக்கும் எதிரான உடன்பாடு காணப்படுகின்றது. இந்த உடன்பாட்டிற்கு பின்வருவன தேவைப்படுகின்றன:

1. பணத் தூய்மையாக்கலையும், பயங் கரவாதத்திற்கு நிதியளிப்பு செய்தலை யும் தடுத்து நிறுத்துவதற்கான சர்வ தேச ரீதியான கடப்பாடுகளையும் தேவைகளையும் நிறைவு செய்தல்.
2. வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் நல்லுறவைப் பேணுதல்.
3. நிதி சார்ந்த தண்டனைகளை தவிர்த் தல்.
4. நற்பெயரைப் பேணுதல்.

பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கர வாதத்திற்கு நிதியளிப்பு செய்வதற்கும் எதிரான உடன்பாட்டிற்கு அதன் எளிமை யான வடிவத்தில் பின்வருவனவற்றை மேற் கொள்வதற்காக ஓர் அமைப்பு தேவைப் படுகின்றது:

1. பணத் தூய்மையாக்கலுக்கும், பயங் கரவாதத்திற்கு நிதியளிப்புச் செய்வ தற்கும் எதிரான ஓர் ஒழுங்குபடுத் தப்பட்ட திட்டத்தை அமுல்படுத்துதல்.
2. தெளிவாகக் குறிப்பிடப்பட்ட சேவை களை வாடிக்கையாளர்களுக்கு வழங் குவதற்கு முன்னர், அவர்களுடைய அடையாளம் தொடர்பான உண்மைத் தன்மையை உறுதிசெய்தல்.
3. குறிப்பிட்ட கொடுக்கல் - வாங்கல்களு டன் சேர்த்து, சந்தேகத்திற்கு உரிய வற்றையும் தெரியப்படுத்துதல்.

பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கர வாதத்திற்கு நிதியளிப்புச் செய்வதற்கும் எதிரான உடன்பாடானது தகவல்களை அதிகளவிற்கு உள்ளடக்கிய ஓர் செயற் பாடாகும். இத்திட்டத்தின் வெற்றிக்கு இதில் பயன்படுத்தப்படும் தகவல்களின் துல்லியமான தன்மை, பூரணத்துவம் மற்றும் காலப் பொருத்தப்பாடு என்பவை இன்றியமையாதனவாகும். இரகசியத் தன்மையையும் நாணயத்தையும் பேணத் தவறுதல், தகவல்களின் கிடைப்பனவில் காணப்படும் குறைபாடு, அவற்றின் துல் லியம் தொடர்பான நிச்சயமற்ற தன்மை, மற்றும் தகவலுடன் தொடர்புடைய செயற் பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கான வல்லமை போன்ற தகவல் தொடர்பான இடர்வாய்ப்புகள் இத்திட்டத்தின் வெற் றியை பாதிக்கும். ஆகவே, தகவல் தொடர் பான இடர்வாய்ப்புக்களின் முகாமைத்து வமும் அதனுடன் தொடர்புடைய தொழில் நுட்பமும் பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பு செய்தல் என்பவற்றை தடுப்பதற்கான திட்டத்தின் இன்றியமையாத ஓர் பாகமாக ஆகியுள் ளன.

**பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கர வாதத்திற்கான நிதியளிப்பு என்றால் என்ன?**

பணத் தூய்மையாக்கல் என்பது சட்ட விரோதமான முறையில் பெற்ற பணத் தின் மூலத்தை மறைக்கின்ற ஓர் செயல் முறையாகும். போதை மருந்துகள் மற் றும் புலனுணர்வுத் திறனைப் பாதிக்கின்ற பதார்த்தங்களின் (Psychotropic substances) சட்டவிரோதக் கடத்தலுக்கு எதி ரான ஐக்கிய நாடுகள் சமவாயம் (1988), பல்வேறு நாடுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் (2001) என்பவற்றில் குறிப்பிடப்பட்டவாறு, பின் வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள் ளன:

1. குற்றச் செயல்களின் விளைவாகப் பெறப்பட்ட சொத்தைத் தெரிந்து கொண்டு இடம் மாற்றுதல் அல்லது அதன் வடிவத்தை மாற்றுதல்,
2. குற்றச் செயல்களின் விளைவாகப் பெறப்பட்ட சொத்தின் மூலத்தை, அமைவிடத்தை, நகர்வை மற்றும் உடைமையையும் உரிமையையும் மறைத்தல்,
3. குறிப்பிட்ட சொத்தானது குற்றச் செயல களின் விளைவாகப் பெறப்பட்டது என் பதைத் தெரிந்துகொண்டு, அத்தகைய சொத்தை விலைக்கு வாங்குதல், உடை மையாக்குதல் அல்லது பயன்படுத்து தல்.

பயங்கரவாதச் செயற்பாடுகள அல்லது குழுக்களுக்கு ஆதரவளிப்பதற்குத் தேவைப்படும் நிதியங்களுக்கான வேண்டு கோள்கள், அவற்றைச் சேகரித்தலும் வழங்குதலும் ஆகிய செயற்பாடுகளே பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பு எனப் படுகின்து. சட்டரீதியான மற்றும் சட்ட விரோதமான வழிகளில் பெறப்பட்ட நிதியங்கள் மூலம் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பை மேற்கொள்ள முடியும். "பயங் கரவாதச் செயற்பாடுகளை மேற்கொள் ளும் பொருட்டு, முழுமையாகவோ அல் லது பகுதியாகவோ பயன்படுத்தும் நோக் கில், ஏதாவது வழிமுறையில், நேரடியா கவோ அல்லது மறைமுகமாகவோ, சட்ட விரோதமாகவும், மனப்பூர்வமாகவும் ஒரு வர் நிதியினை வழங்குவாராயின் அல் லது சேகரிப்பாராயின்", அந்நபர் பயங்கர வாதத்திற்கு நிதியளிப்புச் செய்யும் குற் றத்தைப் புரிகின்றார் என, பயங்கரவாதத் திற்கான நிதியளிப்பைக் கட்டுப்படுத்துப தற்கான சர்வதேசச் சமவாயம் (1999) குறிப்பிடுகின்றது.

பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கர வாதத்திற்கான நிதியளிப்பு ஆகிய இரண்டிற்கும் ஒரேவிதமான முறையே பயன்படுத்தப்படும் அதேவேளை, இரு செயல்முறைகளும் ஒரே இலக்கைக்

கொண்டிருப்பதில்லை. சட்டவிரோதமாகப் பெற்ற நிதியங்களின் மூலத்தை மறைப்பதே பணத் தூய்மையாக்கலின் இலக்காகும். பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கான நிதியங்களைச் சேகரித்து, வழங்குவது பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பின் இலக்காகும்.

## இப்பிரச்சினை எந்தளவுக்குப் பாரதூரமானது?

சமூகத்தின் மீது மிக்க தாக்கவிளைவை உண்டாக்குகின்ற எதிர்மறையான பொருளாதார மற்றும் சமூக ரீதியான தாக்கங்களைக் கொண்டுள்ள குற்றமாகக் காணப்படும் பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பு ஆகிய குற்றச்செயல்கள், உடைமைத் துஷ்பிரயோகம், உயிரிழப்பு போன்ற உறுதி குலைந்த பொருளாதாரங்கள் மற்றும் பரவலான சமூக ரீதியான பாதிப்புக்கள் என்பவற்றிற்குக் காரணமாக அமைகின்றன. துரதிஷ்டவசமாக பணத் தூய்மையாக்கலும், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்புச் செய்தலும் எங்கும் வியாபித்துள்ளன.

தூய்மையாக்கப்படும் பணத்தின் உண்மையான தொகையை அல்லது பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்கு பயன்படுத்தப்படும் தொகையை அளவிடுவது கடினமானதாகும். 'தூய்மையாக்கப்படும் பணத்தின் தொகை பற்றிய நம்பகமான ஓர் மதிப்பீட்டை முன்வைப்பது முற்றிலும் சாத்தியமற்றதாகும்' என்பதை நிதிசார் நடவடிக்கைகளுக்கான சிறப்புப் பணிக்குழு (FATF) ஏற்றுக் கொண்டுள்ளது. இது பற்றி மிகக் குறைந்தளவான புள்ளிவிபரங்களே வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், சட்டவிரோதமாகப் பெறப்பட்ட பல பில்லியன் டொலர் பணம் ஆண்டுதோறும் தூய்மையாக்கப்படுகின்றது என்பதில் பொதுவான ஓர் உடன்பாடு காணப்படுகின்றது.

கிடைக்கக்கூடியதாகவுள்ள புள்ளிவிபரங்கள் எளிதில் நம்ப முடியாதவையாக உள்ளன. அண்மையில் கொலம்பியாவின் நிதி அமைச்சால் வெளியிப்பட்ட ஓர் அறிக்கையின்படி, உள்நாட்டில் தூய்மையாக்கப்பட்ட பணத்தின் தொகை 8.667 பில்லியன் டொலராகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையானது கொலம்பியாவின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 3 சதவீதமாகும். கடந்த 5 வருட காலத்தில் சந்தேகத்திற்குரிய 42,950 பணப் பரிமாற்றல்கள் நிகழ்ந்துள்ளன என்பதையும் இதே அறிக்கை தெரிவித்துள்ளது. இப்பணத்தின் பெரும் பங்கு, ஐக்கிய அமெரிக்காவிலும், கனடாவிலும் இருந்து கடத்தப்பட்ட காசாக உள்ளது என்பதையும், கொலம்பியப் போதைப்பொருள் கைத்தொழிலுக்கே அது பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் ஊகிக்கக்கூடியதாகவுள்ளது.

'அவுஸ்திரேலியாவினுள்ளும் அதனூடாகவும்' 2.8 இலிருந்து 6.3 வரையான பில்லியன் அவுஸ்த்திரேலிய டொலர் தூய்மையாக்கப்பட்டதென, குற்றவியல் தொடர்பான அவுஸ்திரேலிய நிறுவனத்தால் 2007 இல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை மதிப்பீடு செய்துள்ளது.

உண்மையான புள்ளிவிபரங்களைப் பொருட்படுத்தாத நிலையில், பணத் தூய்மையாக்கலும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பும் தீர்வு காணப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளை அரசாங்கங்களுக்கும் ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்திற்கும் தோற்றுவித்துள்ளன.

## பணத் தூய்மையாக்கலையும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பையும் தடுத்து நிறுத்துதல்

பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பு என்பன பல்வேறு நாடுகளுடனும் சம்பந்தப்பட்டுள்ள ஓர் இயல்பைக் கொண்டுள்ளமை காரணமாக, உலகளாவிய இந்த அச்சுறுத்தல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்த ஓர் அணுகுமுறையை உறுதிப்படுத்துவதற்கு, சர்வதேச ரீதியான அங்கீகரிக்கப்பட்ட கொள்கையும் நியமங்களும் கூட தேவைப்படுகின்றன. 1989 ஆம் ஆண்டு தொடக்கம், இத்தகைய சர்வதேசக் கொள்கையை விருத்திசெய்து மேம்படுத்துகின்ற ஓர் அமைப்பாக நிதிசார் நடவடிக்கைகளுக்கான சிறப்புப் பணிக்குழு (FATF) இருந்து வருகின்றது. 40+9 பரிந்துரைகள் மற்றும் 'FATF 40+9 பரிந்துரைகளுடனான உடன்பாட்டை மதிப்பீடு செய்வதற்கான முறையியல்' என பொதுவாக அழைக்கப்படும் இந்த 40 பரிந்துரைகளையும், 9 விசேட பரிந்துரைகளையும் நிதிசார் நடவடிக்கைகளுக்கான சிறப்புப் பணிக்குழு வெளியிட்டுள்ளது.

வலிமை வாய்ந்த, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஏனைய சமவாயங்களும் செயற்கட்டளைகளும் பின்வருமாறு:

1. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம்
2. பணத் தூய்மையாக்கல்; குற்றச் செயல்கள் மூலம் பெறப்பட்ட உடைமைகளைத் தேடுதல், கைப்பற்றுதல் மற்றும் பறிமுதல் செய்தல்; பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பு என்பவை தொடர்பான ஐரோப்பியச் சமவாய ஆலோசனைச்சபை
3. பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பு நோக்கங்களுக்காக நிதி முறைமையைப் பயன்படுத்துவதைத் தடுப்பது தொடர்பான ஐரோப்பியப் பாராளுமன்றச் செயற்கட்டளைகள்
4. பயங்கரவாதத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்தச் சமவாயங்கள் மற்றும் செயற்கட்டளைகள் என்பவற்றுடன் இயைந்ததாகக் காணப்படும் பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்புச் செயற்பாடு என்பவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காக, ஏராளமான நாடுகள் சட்ட ரீதியான கட்டமைப்புக்களை அமுல்படுத்தியுள்ளன. இச்சட்டவாக்க ஏற்பாடானது பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்புச் செயற்பாடு என்பவற்றிற்கு எதிரான ஒரு தடுப்பு நடவடிக்கையாக செயற்படுவதுடன், இச்செயற்பாடுகளைப் புரியும் இனங்காணப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான ஓர் கட்டமைப்பையும் வழங்குகின்றது.

## நிதி நிறுவனங்கள் மீதான தாக்கம்

சட்டவிரோத நிதியங்களின் வடிவத்தையும் இடத்தையும் மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற வாய்ப்புக்களின் பெரும் பகுதியை உள்ளடக்கியதாக நிதி நிறுவனங்களும் வங்கி முறைமையும் அமைந்துள்ளன. வங்கிக் கடன்கள், பயணிகள் காசோலைகள், வங்கிக் காசோலைகள், காசுக் கட்டளைகள், பங்குகள், பங்குரிமைச் சான்றிதழ்கள், பிணைகள், வங்கி வரைபுகள் / ஆணைகள், நாணயக் கடிதங்கள் போன்ற கருவிகள் பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியளிப்புச் செயற்பாடுகள் ஆகிய இரண்டிலுமே பயன்படுத்தப்படுகின்றன. இச்சட்டவிரோதச் செயற்பாடுகளில் நிதி நிறுவனங்களும் வங்கி முறைமையும் பயன்படுத்தப்படுவது தொடர்பாக அசட்டை செய்யமுடியாத ஓர் கரிசனை காணப்படுகின்றது. இதன் விளைவாக நிதி நிறுவனங்கள், பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான ஒழுங்குவிதிக்கு இயைந்ததாக அமைந்திருக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

உடன்படாமைக்கான தண்டனைகள் வெவ்வேறுபட்ட நியாயாதிக்கத்திலும் வித்தியாசப்படக் கூடும். உடன்படாமையானது நியாயாதிக்கத்தைப் பொறுத்து, சட்ட மற்றும் நிதி ரீதியான தண்டனைகளுக்குக் காரணமாக அமைய முடியும். உள்ளூர்ச் சட்டத்தால் கூட ஓர் அமைப்பிலுள்ள தனியாட்களைத் தண்டனைக்கு உட்படுத்த முடியும். உதாரணமாக, அவுஸ்திரேலியாவில் பணத் தூய்மையாக்கல் சட்டத்தை மீறலானது, ஓர் அமைப்புரீதியான தலைமைத்துவத்திற்கு குடியியல் மற்றும் குற்றவியல் தண்டனைகள் வழங்கப்படுவதற்குக் க்ாரணமாக அமையக்கூடும்.

நிதி ரீதியான தண்டனைகள் மிகைப்படியானதாக இருக்கும். உடன்பாட்டுத் தேவைகளை மீறியுள்ள நிதி நிறுவனங்களுக்கு மிகைப்படியாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளமைக்கான பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. கடந்த சில வருடங்களில் நிதி நிறுவனங்கள் மீது தண்டப் பணம் விதிக்கப்பட்ட மைக்கான உதாரணங்கள் வருமாறு:

1. அடையாளம் காணமுடியாத 40 வங்கி வரைபுகளை வழங்கியமைக்காக 2004 இல் அயர்லாந்து வங்கிக்கு (Bank of Ireland) விதிக்கப்பட்ட அபராதம் - 375,000 ஸ்ரேலிங் பவுண்ஸ்

2. தமது வாடிக்கையாளர்களின் அடையாளங்கள் பற்றிய உண்மையை உறுதிசெய்வதற்காகப் போதியளவு கட்டுப்பாடுகளைக் கொண்டிராதமைக்காக 2002 இல் றோயல் ஸ்கொட்லண்ட் வங்கிக்கு (Royal Bank of Scotland) விதிக்கப்பட்ட அபராதம் - 750,000 ஸ்ரேலிங் பவுண்ஸ் மற்றும் அரசாங்கத்தின் தடைசெய்யப்பட்ட பட்டியல்களில் உள்ளவர்களுக்கு கடன் வழங்கியமைக்காக விதிக்கப்பட்ட அபராதம் - 5.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ்

3. பணத் தூய்மையாக்கலுக்கு எதிரான ஒழுங்குவிதிகளை மீறியமைக்காகவும், வங்கி முறைமையும் கட்டுப்பாட்டு நடைமுறைகளும் தோல்வியடைந்தமைக்காகவும் 2003 இல் அபே தேசிய வங்கிக் குழுவுக்கு (Abbey National Banking Group) விதிக்கப்பட்ட அபராதம் - 2.3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ்

4. பணத் தூய்மையாக்கலுக்கு எதிராக பொருத்தமானதோர் திட்டத்தை வடிவமைத்து, நடைமுறைப்படுத்தத் தவறியமைக்காக 2004 இல் றிக்ஸ் வங்கிக்கு (Riggs Bank) விதிக்கப்பட்ட அபராதம் - 25 மில்லியன் அமெரிக்க டொலர், அத்துடன் இதற்கு மேலாக குற்றவியல் தண்டப் பணமாக 16 மில்லியன் அமெரிக்க டொலரும் விதிக்கப்பட்டது

5. சூடானுக்கும், கியூபாவிற்கும் எதிரான அமெரிக்கப் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளை மீறியமைக்காக 2009 இல் ஏ.என்.இசற். வங்கிக் குழுமத்திற்கு (ANZ Bank Corporation) விதிக்கப்பட்ட அபராதம் - 5.75 மில்லியன் அமெரிக்க டொலர்

6. வங்கி இரகசியங்களையும் அமெரிக்கத் தேசாபிமானச் சட்டங்களையும் மீறியமைக்காக 2011 இல் பசிபிக் நேசனலுக்கு (Pacific National) விதிக்கப்பட்ட அபராதம் - 7 மில்லியன் அமெரிக்க டொலர்

நிதி நிறுவனங்களுக்கான பாதிப்பானது நிதிசார் இழப்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவை அல்ல. நன்மதிப்பிற்கு ஏற்படும் சேதமானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதுடன், மீறலின் அளவைப் பொறுத்து குறிப்பிட்ட நிறுவனத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கும் இது காரணமாகின்றது. தவிரவும், வருவாயையும் போட்டி தொடர்பான அனுகூலத்தையும் இழப்பதற்கு இவை இரண்டுமே காரணமாக அமையும்.

எனவே, பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான திட்டங்களை வகுத்தலானது நிதிசார் தொழில்துறையைப் பொறுத்தவரை விட்டுக்கொடுப்பிற்கு இடமற்றதாகும்.

**பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான ஒருங்கமைவான திட்டம்**

பெருந்தொகைப் பணப் பரிமாற்றல்களைப் பற்றிய தகவல்களை சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளுக்குத் தெரியப்படுத்துவதை ஏராளமான நாடுகள் கட்டாயமாக்கியுள்ளன. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில், 10,000 அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட அனைத்துப் பரிமாற்றல்களையும் பற்றி, உள்நாட்டு வருவாய்ச் சேவைக்குத் தெரியப்படுத்த வேண்டிய கட்டாயத் தேவையுண்டு. அவ்வாறே, இலங்கையில் 1,000,000 ரூபாவிற்கு மேற்பட்ட பரிமாற்றல்களைப் பற்றி மத்திய வங்கியின் நிதி தொடர்பான புலனாய்வுப் பிரிவிற்கு தெரியப்படுத்த வேண்டியுள்ளது. இத்தகைய பணப் பரிமாற்றல்களை இனங்காண்பதற்கும், அவற்றைப் பற்றி தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தகவல்களைத் தெரிவிப்பதற்குமான ஆற்றலை பெரும்பாலான வங்கி மற்றும் நிதி முறைமைகள் கொண்டுள்ளன.

ஆயினும், தம் மீது கவனஞ் செலுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற, பெருந்தொகையான பணப் பரிமாற்றல்களை பணத்தைத் தூய்மையாக்குவதில் அனுபவம்மிக்கோர் ஈடுபடுவதில்லை. பின்வருவனவற்றை மேற்கொள்வதற்குப் பொருத்தமான நடைமுறைகளையும், முறைமைகளையும் அமுல்படுத்துவது நிதி நிறுவனங்களின் கடமைப்பொறுப்பாகும்:

1. தடைசெய்யப்பட்டதும் சந்தேகத்திற்குரியதுமான வாடிக்கையாளர்களையும் பணப் பரிமாற்றல்களையும் இனங்காணல்;

2. தடைசெய்யப்பட்டதும் சந்தேகத்திற்குரியதுமான பணப் பரிமாற்றல்களைப் பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்துதல்.

தடைசெய்யப்பட்டதும் சந்தேகத்திற்குரியதுமான பணப் பரிமாற்றல்களை இனங்காணக்கூடியதாகவும், அவற்றைத் தெரியப்படுத்தக்கூடியதாகவும் இருப்பதற்கு, குறிப்பிட்ட அமைப்பானது பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான கட்டுரம் வாய்ந்த ஓர் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டிய தேவையுண்டு. அத்திட்டமானது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியிருக்கும்:

1. பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான ஓர் கொள்கையைப் பேணுதல்,

2. இக்கொள்கை மற்றும் அதன் விளைவுகள் பற்றிய ஒருங்கமைவான விழிப்புணர்வைப் பேணுதல்,

3. உலகளாவிய தடை நடவடிக்கைக் கட்பாடுகள் தொடர்பான பட்டியலொன்றைப் பேணுதல்,

4. தடைசெய்யப்பட்டதும், சந்தேகத்திற்குரியதுமான பணப் பரிமாற்றல்களை இனங்காணல் மற்றும் அவற்றைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தல் என்பன தொடர்பில் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்,

5. தனிப்பட்ட எப்பரிமாற்றலும் பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான ஒழுங்கு விதிகளைத் தெரிந்துகொண்டே மீறாது இருப்பதை உறுதிப்படுத்துவதற் கான வணிக நியதிகளை வடிவமைத்தல்,

6. தடைசெய்யப்பட்டதும், சந்தேகத்திற்குரியதுமான பணப் பரிமாற்றல்களை இனங்காணல் மற்றும் அவற்றைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தல் என்பவற்றைச் சாத்தியப்படச் செய்வதற்கான தெளிவான செயல்முறைகளை வரையறுத்தல்,

7. உடன்பாட்டுத் தேவையை வேண்டுமென்றே சீர்குலைக்கும் முயற்சியைத் தடுப்பதற்கான கட்டுப்பாடுகளை அமுலாக்குதல்,

8. இவற்றுடன் தொடர்புடைய உடன்பாட்டுத் தேவைகளை குறிப்பிட்ட அமைப்பு மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய வணிகச் செயற்பாடுகளில் வணிகப் பங்குதாரர்கள் ஈடுபடாதிருப்பதை உறுதிப்படுத்துதல்,

9. புதிய மற்றும் நடைமுறையிலுள்ள வாடிக்கையாளர்களும் நிறுவனங்களின் பணியாளர்களும் தடைசெய்யப்பட்ட பட்டியலில் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, அவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்துதல்.

## உடன்பாட்டுச் செயல்முறையில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு

பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான திட்டங்களைச் சீர்குலைப்பதற்கு இடைவிடாது தொடர்ந்து முயற்சிக்கப்படுகின்றது. இம்முயற்சிகள் மேலும் மேலும் நுண்ணயம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. ஆகவே, ஓர் வெற்றிகரமான பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான திட்டத்திற்கு காலப் பொருத்தமுடைய, சரி நுட்பமான மற்றும் உபயோகமான தகவல்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. இதற்கு, வாடிக்கையாளர் பற்றிய தரவுகளை தரம் பிரிப்பதற்கும் முறைகேடுகள் தொடர்பில் இத்தரவுகளைப் பரிசோதிப்பதற்குமான தகவல்களுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் செயற்திறன் மிக்க உபயோகம் தேவைப்படுகின்றது.

வழக்கமுறையாக, பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான திட்டங்களில் உபயோகிக்கப்படுகின்ற தொழில்நுட்பமானது, பெயர்ப் பகுப்பாய்வு ஆற்றலுடன் கூடிய நியதியை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வுகள் மற்றும் பணப் பரிமாற்றல்கள் பற்றிய விபரத் தொகுப்பு என்பவற்றை உபயோகிக்கின்றது. உதாரணமாக, பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளிப்புச் செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக இருப்பதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ள பணப் பரிமாற்றல்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஓர் கண்காணிப்புப் பட்டியலில், குறிப்பிட்ட நபர் உள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, பணப் பரிமாற்றல்கள் நிகழும் கால இடைவெளி, அவற்றின் அளவு, அடையாளங்கள் என்பன உபயோகிக்கப்படுகின்றன. ஆயினும், சிறு தொகை மற்றும் பரந்த அடிப்படையிலான பணப் பரிமாற்றல்களை உபயோகித்தல், பணப் பரிமாற்றல்களை நடத்துவதற்கு நண்பர்களை உபயோகித்தல் என்பவற்றின் மூலம், அத்தகைய நியதிகளையும், பகுப்பாய்வுகளையும் அடிப்படையாகக் கொண்ட குற்றச்செயல் கண்டுபிடிப்புச் செயற்பாட்டை சீர்குலைக்க முடியும். இத்தகைய சீர்குலைப்புச் செயற்பாடு கண்டுபிடிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான ஓர் சிறந்த தொழில்நுட்ப அமுலாக்கத்தில் தொடர்புகள் பற்றிய பகுப்பாய்வு, ஒத்த படிநிலைக் குழுப் பகுப்பாய்வு, நேர ஒழுங்குப் பொருத்தம் போன்ற புலனாய்வு ஆற்றல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

## தகவல் இடர்வாய்ப்பு முகாமைத்துவத்தின் பங்கு

பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான திட்டங்கள், தகவல்களை அதிகளவிற்கு உள்ளடக்கியவையாகக் காணப்படுகின்றன. பிழையான தகவல்களின் உபயோகமானது, உதாரணமாக ஒரு பெயரில் உள்ள எழுத்துக்களை தவறாகக் கூறுதல் அல்லது மாற்று எழுத்துக்களைக் கொண்டு பெயரிடுதல் போன்ற சாதாரண விடயம் கடுமுனைப்பான ஓர் உடன்பாட்டு மீறலுக்குக் காரணமாக அமையக் கூடும். உரிய காலத்திற்கு முன்னர் தகவல்களை வெளியிடலானது சந்தேகத்திற்குரிய ஓர் பணப் பரிமாற்றலைத் தடுப்பதற்கான ஆற்றலின்மைக்குக் காரணமாக அமையக்கூடும். வேறுவகையான ஓர் வெற்றியளிக்கத்தக்க பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான திட்டத்தின் நாணயத் தன்மையை ஏனைய பல தகவல் இடர்வாய்ப்புக்களும் பாதிக்கக் கூடும். ஆகவே, பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான திட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலுமே தகவல் இடர்வாய்ப்பானது முகாமை செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும்.

தகவல் இடர்வாய்ப்பு முகாமைத்துவம் என்பது, தகவல் கூறுகள் மற்றும் தகவல் முகாமைத்துவத்தின் பொதுப்படையான செயல்முறைப் பிரயோகமாகும். தகவல் இடர்வாய்ப்பின் அனைத்து அம்சங்களும், அதாவது தகவல்களுடன் தொடர்புடைய செயற்பாட்டுடன் சேர்த்து, இரகசியத் தன்மை மீறல் இடர்வாய்ப்புக்கள், நாணயம் மற்றும் தகவல்களின் எளிதாகக் கிடைக்கக்கூடிய தன்மை என்பன, பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான தகவல் முகாமைத்துவச் சூழலுடன் தொடர்புடையவையாக உள்ளன. அந்தரங்க நிலை மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் என்பவற்றை மீறும் செயற்பாடுகளைத் தகவல்களுடன் தொடர்புடைய ஏனைய இடர்வாய்ப்புக்கள் உள்ளடக்குகின்றன.

பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான தகவல் சூழலின், இடர்ப்பாடு உண்டுபண்ணும் இயல்பு காரணமாக, தகவல் இடர்வாய்ப்பு முகாமைத்துவத்திற்கு செயல் விளைவை ஏற்படுத்துகின்ற ஓர் அணுகுமுறையை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. தகவல்கள் பல்வேறுபட்ட ஊறுபாடுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டவையாகும். இவை, வேண்டுமென்றே மேற்கொள்ளப்படுகின்ற சீர்குலைவுடன் சேர்த்து, தகவல் முறைமைகளுக்கு இயற்கூறானவையாக இருக்க முடியும். பணத் தூய்மையாக்கலுக்கு எதிரான திட்டத்தில் உபயோகப்படுத்தப்படுகின்ற தகவல்களைச் சேகரித்து வைத்தல், கையாளுதல், வேறு இடங்களுக்கு அனுப்புதல், ஆவணப்படுத்திப் பேணுதல் என்பவற்றிற்குப் பாதுகாப்பான ஓர் சூழலை உருவாக்குவதற்கு, உள்வாரி இடர்வாய்ப்பு முகாமைத்துவக் கட்டமைப்புக்கள், தகவல் ஆளுகைக் கட்டமைப்புக்கள், தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத் திட்டங்கள் என்பன பயன்படுத்தப்பட வேண்டும்.

## தொகுப்புரை

பணத் தூய்மையாக்கலுக்கும், பயங்கரவாத நிதியளிப்புச் செயற்பாடுகளுக்கும் ஆதரவளிக்கக் கூடிய சந்தேகத்திற்குரிய பணப் பரிமாற்றல்களை இனங்கண்டு, அவை பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதற்காக அரசாங்கங்கள், பல்வேறு வர்த்தக மற்றும் வர்த்தகம் சாரா அமைப்புக்கள் மீது உலகளாவிய கடப்பாடுகளும் உடன்பாட்டுத் தேவைகளும் விதிக்கப்பட்டுள்ளன. பணத் தூய்மையாக்கலுக்கும் பயங்கரவாத நிதியளிப்புக்கும் எதிரான தகவல் தெரிவிப்புத் திட்டங்கள் தகவல்களை மிக அதிகளவிற்கு உள்ளடக்கியவையாகக் காணப்படுகின்றன. தகவல்களின் இரகசியத் தன்மை, நாணயம், எளிதில் கிடைக்கக்கூடிய தன்மை, நம்பக நிலை, மறுக்கமுடியாத தன்மை போன்ற தகவலின் பண்புகளை மீறுதலானது, இத்திட்டங்களின் பயன்விளைவுகளைப் பாதிக்கக் கூடும் என்பதுடன், தண்டனை, நன்மதிப்பு இழப்பு, சர்வதேச உறவுகளில் எதிர்மறையான தாக்கங்கள் என்பவற்றிற்கும் காரணமாக அமைகின்றது. ஆகவே, இத்திட்டங்களின் குறிக்கோள்களுக்கும் நாணயத்திற்கும் துணைபுரிவதன் பொருட்டு, சிறந்த பயன்விளைவை ஏற்படுத்தவல்ல தகவல் இடர்வாய்ப்பு முகாமைத்துவத் திட்டமொன்று பூரணப்படுத்தப்பட்டு, பயன்பாட்டிற்குரிய நிலையில் இருப்பதை உறுதிப்படுத்துவது மிக முக்கியமானதாகும். ■

............13 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆக்கியுள்ளது. வங்கி வாடிக்கையாளர்களில் பெரும்பான்மையானோர் அத்தகைய வசதிகளைப் பற்றி அறிந்திராதவர்களாக உள்ளனர் என்பதை இது தொடர்பான எமது குழுநிலைக் கலந்துரையாடல் வெளிப்படுத்துகின்றது. செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை பரவலாக பிரபல்யப்படுத்தப்படாமையே இதற்கான பிரதான காரணமாக இருக்க முடியும். இலங்கையில், செல்லிடத் தொலைபேசி சேவை வழங்குநர்கள் இனிமேல்தான் செல்லிடத் தொலைபேசி பணப் பரிமாற்றல் முறைமைகளை அறிமுகப்படுத்த வேண்டியவர்களாக உள்ளனர். இந்த நாட்டிலுள்ள ஒரு பிரிவினரை நிதி ரீதியாக சேர்க்காது ஒதுக்கி வைக்கின்ற பிரச்சினையை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக, செல்லிடத் தொலைபேசி பணப் பரிமாற்றல் வாய்ப்புக்களின் துணையுடன் இங்கு உள்ள வளங்களிலிருந்து மேலும் தாமதமின்றி பயன்கொள்ள வேண்டியுள்ளது. ■

# இலங்கையில் வங்கிச் சட்டத்தின் வளர்ச்சி: விமர்சன ரீதியான ஒரு மதிப்பீடு

**கலாநிதி. விக்கிரம வீரசூரிய**

*காப்புறுதி முறையீட்டுமன்ற நடுவர் மற்றும்*
*முதுநிலை ஆலோசகர்*
*முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்*

**வங்கிகளும் வங்கித்துறை வளர்ச்சியும்**

இலங்கை சேமிப்பு வங்கி, அரச அடைமான வங்கி, இலங்கை வங்கி என்பன ஏற்கெனவே நிறுவப்பட்டிருந்தபோதும், நாடு சுதந்திரமடைந்து இலங்கை மத்திய வங்கி நிறுவப்படும் வரை, இந்த நாட்டின் வங்கித்துறை மற்றும் வங்கிச் சட்டம் என்பனவற்றில் பயனுடைய விடயங்கள் எதுவும் நிகழவில்லை. அத்துடன், சுதந்திரத்திற்கு முன்னரான இலங்கை வெளிநாட்டு வங்கிகளினதும் (பிரதானமாக பிரித்தானிய) இந்திய வங்கிகளினதும் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது.

தென்னிந்திய நாட்டுக்கோட்டை செட்டியார் 'பெருவணிக வங்கியாளர்' மற்றும் வெளிநாட்டுப் பூர்வீகத்தை உடைய வங்கிகளின் "வங்கியாளர்கள்" என்போர் இலங்கையின் கடன்பெறுவோருக்கும், கடன் வழங்கும் வங்கிகளுக்கும் இடையில் இடைத்தரகர்களாகச் செயற்பட்டனர். அக்காலத்திற்குரிய வங்கித்துறை மற்றும் நிதி தொடர்பான உன்னதமான ஓர் ஆய்வை மேற்கொள்ள வேண்டுமாயின், எந்தவொரு ஆய்வாளனும் அல்லது மாணவனும் இந்த நாட்டின் வங்கித்துறை தொடர்பான முதலாவது ஆணைக்குழுவாக அமைக்கப்பட்ட 1934 ம் ஆண்டு பொக்கணவல ஆணைக்குழுவை (Pockhanawala Commission) கூர்ந்து ஆராயவேண்டும். அதன் தலைவராக இருந்த இந்தியாவைச் சேர்ந்த சேர் சொரப்ஜி பொக்கணவல என்பவரின் பெயரே இதற்கு சூட்டப்பட்டுள்ளது.

சுதந்திர இலங்கையின் முதலாவது நிதி அமைச்சர் (ஜே.ஆர். ஜெயவர்த்தன), எமக்கான ஓர் வங்கி முறையை உருவாக்குவதற்காக எமது குடியேற்ற எஜமானராகிய இங்கிலாந்தை அன்றி, வேண்டுமென்றே ஐக்கிய அமெரிக்காவின் உதவியை எதிர்பார்த்தார். பிலிப்பைன்ஸின் வங்கித்துறை செப்பனிடலுக்கான ஆய்வு ஒன்றை அப்போதுதான் நிறைவு செய்திருந்தவரான திரு.ஜோன் எக்ஸ்ரர் என்பவரின் நிபுணத்துவ ஆலோசனையை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியது. பிலிப்பைன்ஸிற்கான தனது சட்டத் தொகுதியை ஜோன் எக்ஸ்ரர் அவர்கள் இலங்கைக்குப் பொருத்தமானதாக மாற்றியமைத்தார். அவருடைய அறிக்கை (தற்போது அது ஓர் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரமாக உள்ளது) உன்னதமான ஒன்றாகும். 1948ல் இயற்றப்பட்ட நாணய சட்டத்தின் மூலம், அவர் ஒரு நாணயச் சபையையும் (சட்ட ரீதியான அமைப்பு) மத்திய வங்கியையும் (மேற்கத்தைய நாடுகளிலும் இந்தியாவிலும் கூட Reserve Bank என்றே அழைக்கப்படுகின்றது) அமைத்தார். ஜோன் எக்ஸ்ரரில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா திருப்தியுடையவராக இருந்ததாகக் கூறப்படுவதுடன், அவரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுத்தார். இவ்வழைப்பை அவரும் ஏற்றுக்கொண்டார்.

இதனுடன் தொடர்புடைய சுவாரஸ்யமான ஓர் செய்தித் துணுக்கு எதுவெனில், 'மத்திய வங்கி - Central Bank' எனும் பெயர் ஆங்கில மொழியில் பிரச்சினைக்குரிய ஒன்றாக அமையவில்லை என்பதாகும். ஆனால், சிங்களத்திலும் தமிழிலும் 'மத்திய மாகாணம் - Central Province' என மொழிபெயர்க்கப்பட்டது போல், 'மத்திய வங்கி' (*Madyama Bankuwa*) எனும் அர்த்தத்தில் அது அமைந்துள்ளது. மிகப் பிரசித்தி பெற்ற பேராசிரியரான ஜிபி. மலலசேகர அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்த்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அவர் இதற்கு *Maha Bankuwa* என்ற சொற்பதத்தை பயன்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. இதற்கு ஒரு மாற்றுக் கருத்தை எவராலும் முன்வைக்க முடியாதுள்ளது. மேலும், சட்ட ரீதியான அமைப்பாக மத்திய வங்கியன்றி, நாணயச் சபையே உள்ளது. வேறுவிதமாக கூறின், மத்திய வங்கியால் அல்லது அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு சட்ட ரீதியான நடவடிக்கையும் 'நாணயச் சபை' எனும் பெயரிலேயே இடம்பெறல் வேண்டும்.

சுதந்திரத்திற்குப் பின்னரான மற்றுமோர் முக்கியமான கட்டமாக, 1949 இல் அமைக்கப்பட்டு நட்டமடைந்த நிலையில் இயங்கி வந்த கூட்டுறவு மத்திய வங்கியைப் பொறுப்பேற்று, அதை ஏனையவற்றை விட மேம்பட்டதாக ஆக்குவதற்காகவே, 1961 இன் மக்கள் வங்கி நியதிச் சட்டத்தின் மூலம் மக்கள் வங்கி உருவாக்கப்பட்டமை காணப்படுகின்றது. அதன் பின்னர், (எனது அபிப்பிராயத்தின்படி) 1977 இன் நடுப்பகுதி வரை, அதாவது திறந்த மற்றும் தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்திற்கு ஆதரவளித்த புதிய தோர் அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படும் வரை, இத்துறையில், பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு வங்கிகளால் மேற்கொள்ளக்கூடியவையென நாம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ள பாங்கில், முக்கியத்துவமான விடயம் எதுவுமே நிகழவில்லை. 1977 ஆடி வரை, மேலே குறிப்பிடப்பட்ட சில வளர்ச்சிகளைத் தவிர, ஒட்டுமொத்தத்தில், உறுதியான மத்திய வங்கிக் கட்டுப்பாட்டுடன் கூடிய அதிகளவு ஒழுங்கு விதிகளுக்கு உட்படுத்தப்பட்ட வங்கி மற்றும் நிதி முறைமையையே இந்த நாடு கொண்டிருந்தது.

**1977 ஆடிக்குப் பின்னர் ஏற்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிச் சட்டங்கள் என்பவற்றிலான வளர்ச்சி**

1977 ஆனியில் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் ஆலோசனை மற்றும் நிதியுதவி என்பன காரணமாக, வங்கித்துறையிலும் அதனுடன் தொடர்புடைய சட்டங்களிலும் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் நிகழ்ந்தன. இவற்றுள் மிக முக்கியமானதாக வங்கிச் சட்டங்களின் சட்டவாக்கம் அமைந்திருந்தது. இலங்கை மத்திய வங்கியை நிறுவுவதற்கு அடிப்படையாக அமைந்த, 1988 ஆம் ஆண்டின் 3ம் இலக்க வங்கிச் சட்டமானது (அப்போதிருந்து பின்னர் திருத்தப்பட்டவாறு), சுதந்திரத்திற்குப் பின்னரான நியதிச் சட்டத்தித்திலுள்ள (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயச் சட்டம்) குறைகளை நிரப்பீடு செய்தது. பல்வேறு வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் என்பவற்றுடன் சேர்த்து, வங்கிகள் எப்போதும் கூட்டிணைத்து தம்முடன் வைத்திருக்க வேண்டியவையாக இவ்விரு நியதிச் சட்டங்களும் அவற்றின் திருத்தங்களும் உள்ளன. வங்கிச் சட்டமானது இலங்கைக்கான 'வங்கித்துறை தொடர்பான அலுவல்களை' வரையறுப்பதுடன், வங்கிகளுக்கான அனுமதி வழங்கல் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகளும் அவற்றின் ஒழுங்குவிதிகளும் என்பவற்றிற்கான நடைமுறைகளை வழங்குகின்றது. இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட (அனுமதி பெற்ற) கூட்டிணைக்கப்பட்ட அமைப்புக்கள் மாத்திரமே வங்கித்துறை தொடர்பான அலுவல்களில் ஈடுபட முடியும்.

**வங்கிகளுக்கான விசேட படுகடன் மீட்புச் சட்டங்கள்**

இலங்கையிலுள்ள வங்கியாளர்கள்

அனுபவிக்கின்ற வழக்கமீறியதும் விசேட சிறப்புரிமை வாய்ந்ததுமாகக் கருதப்படுவனவற்றில் இப்போது கவனம் செலுத்துவோம். எமது வங்கிகளால் அனுபவிக்கப்படுகின்ற இவ்வகையான சிறப்புரிமைகளை அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட காணமுடியாது. பின்வரும் தலைப்புக்களில் அமைந்த நியதிச் சட்டங்களையே (சட்டத் தொகுதியையே) நாம் இங்கே குறிப்பிடுகின்றோம்:

1. 1990 ஆம் ஆண்டின் (திருத்தப்பட்டவாறு) 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
2. 1994 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க படுகடன் மீட்புத் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச்சட்டத்தால் திருத்தப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கபடுகடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியான திரு.டி. விமலவர்த்தன அவர்களால் தலைமை தாங்கப்பட்ட படுகடன் மீட்பு ஆணைக்குழுவால் 1983 இல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின் விளைபயனே, விசேட படுகடன் மீட்புச் சட்டத் தொகுதியாக வகைப்படுத்தப்படுகின்ற இவ்விரு நியதிச் சட்டங்களுமாகும். முன்மொழியப்பட்டிருந்த இந்த சட்டத் தொகுதியானது 'பாரபட்சமானதாகவும், அதன் இயல்பில் கொடுமையானதாகவும், அத்துடன் மட்டுமீறிய கண்டிப்பு வாய்ந்ததாகவும், அளவுக்கு மிஞ்சியதாகவும்' உள்ளதென விவாதித்து வந்த, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்திடமிருந்து கடும் எதிர்ப்பு வந்தமையினால், இச்சட்டத் தொகுதியானது 1990 வரை சட்டமாக நிறைவேற்றப்படவில்லை. இவ்வெதிர்ப்புக்களுக்கு மத்தியிலும், இந்த இரு நியதிச் சட்டங்களும் 1990 இலிருந்து சட்டமாகி உள்ளன.

**வங்கிகளுக்கான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

தற்போது, கடன் செலுத்தத் தவறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு வங்கிகளுக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள மிக முக்கியமான நியதிச் சட்டத் தீர்வுகளில் ஒன்றை, சாதாரண சட்டத்திற்குப் புறம்பான (உடனடி) படுகடன் மீட்புச் செயல்முறை (*'Parate Execution'*) வழங்குகின்றது. ஒரு கடனில் மீளச் செலுத்தப்பட வேண்டியுள்ள பணத்தொகைச் செலுத்தலில் எப்போதாவது தவறு ஏற்படுமாயின், குறிப்பிட்ட வங்கியில் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தை ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு, ஏதாவது வர்த்தக அல்லது ஏனைய குறிப்பட்ட வங்கி ஒன்றின் பணிப்பாளர் சபையானது தீர்மானம் ஒன்றின் மூலம், யாரேனும் ஒருவருக்கு எழுத்து வடிவில் அதிகாரமளிக்கலாம். அல்லது அந்த வங்கியில் அடைமானமாக வைக்கப்பட்ட ஏதாவது அசையாச் சொத்தினுள் நுழைவதற்கும், அத்தகைய சொத்தை உடைமையாக பெற்றுக் கொள்வதற்கும், அதன் பின்னர், வங்கிக்குச் செலுத்த வேண்டிய முழுப் பணத்தையும் செலுத்தும் வரை, அச்சொத்தை முகாமைசெய்து பராமரிப்பதற்கும் யாராயினும் ஒருவருக்கு அதிகாரமளிக்கலாம்.

1990 இலிருந்து இன்று வரை, வங்கிகள் மற்றும் வங்கித்துறை தொடர்பாக வெளியிடப்பட்ட முன்தீர்ப்புச் சட்டங்களில் பெரும்பாலானவை சாதாரண சட்டத்திற்குப் புறம்பான படுகடன் மீட்புச் செயல்முறை பற்றிய வழக்குகளாகவே உள்ளன. இதன் மூலம் இந்த நாட்டின் பத்திரிகைகள் கூட பயனடைந்துள்ளன. ஏனெனில் வங்கிகளின் உடனடித் தீர்மானம் (கட்டாயத்தின் பிரகாரம்) ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

**1994 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க (திருத்தம்) படுகடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க படுகடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

வங்கிகளுக்கு வழக்கமீறிய அதிகாரத்தை வழங்குகின்ற, 2 ஆவது நியதிச் சட்டமாக இது அமைந்துள்ளது. இச்சட்டத்தின் 30 ஆவது பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, இந்த நியதிச் சட்டமானது அனைத்துக் 'கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும்' பொருந்தும். இச்சொற்பதம் அனுமதிபெற்ற அனைத்து வர்த்தக வங்கிகள், நிதிக் கம்பனிகள், விசேட நிதி நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. கால எல்லை கடந்துவிட்ட நிலையிலுள்ள, செலுத்தப்பட வேண்டிய படுகடன்களின் மீட்புக்கான மிக இலகுவான தொகுப்பு நடைமுறையை இந்த நியதிச் சட்டம் வழங்குகின்றது. 'படுகடன்' எனும் பதத்திற்கு இச்சட்டத்தின் (திருத்தப்பட்ட) 21 ஆம் பிரிவில் பரந்த வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விசேட நடைமுறைகளின் கீழ், கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றால் மீட்கப்படக் கூடிய படுகடனை செலுத்தத் தவறியமைக்கான அல்லது மீளச் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான ஓர் தண்டனையாக, பணம் அறவிடல் பற்றி இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் விபரமாகக் குறிப்பிடப்படவில்லை. அதேவேளை, வழங்கப்பட்ட கடன் முதல் தொகையிலும் மிகையாக வட்டி அறவிடுவதை தடை செய்யும் உரோமன் - டச்சு விதியானது இச்சட்டத் தொகுதியின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட கடன் முதல் தொகையை விட, மிகையாக வட்டி அறவிடுவதை 1852 ஆம் ஆண்டின் குடியியல் கட்டளைச் சட்டம் கூட தடைசெய்துள்ளது. ஆனால், 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் 18 ஆம் பிரிவானது வழங்கப்பட்ட கடன் முதல் தொகையை விட, மிகையாக வட்டி அறவிடுவதை அனுமதிக்கின்றது.

**ஒப்புக்கொள்ளப்பட்டவாறு பணம் கொடுப்பதற்கான நிதியம் இன்றி காசோலைகளை வழங்குதல்**

இதற்கு 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க (விசேட ஏற்பாடுகள்) படுகடன் மீட்புச் சட்டமென தலைப்பிடப்பட்டுள்ள போதும், மேலே குறிப்பிடப்பட்ட நியதிச் சட்டம் (மிகவும் விசித்திரமான வகையில்) படுகடன் மீட்புடன் தொடர்பற்ற விடயங்களில் கூட சட்டத்தைப் பிரயோகிக்க வழிசெய்கின்றது. உதாரணமாக, இச்சட்டத்தின் 25 ஆவது பிரிவு பின்வருவனவற்றை குற்றச்செயல்களாக குறிப்பிடுகின்றது:

1. ஒப்புக்கொள்ளப்பட்டவாறு பணம் கொடுப்பதற்குப் போதுமான நிதியம் தனது வங்கிக் கணக்கில் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டே காசோலைகளை வரைதல்;
2. காசோலைகளை வரைதலும் அதன் பின்னர் அக்காசோலைகளுக்கு பணம் செலுத்தப்படாமல் இருப்பதற்காக தடையுத்தரவு இடுதலும்.

சட்டத்தை செயற்படுத்தும் ஏராளமான அலுவலர்கள் மற்றும் சில வழக்கறிஞர்களும் கூட மேலே குறிப்பிடப்பட்ட இப்புதிய ஏற்பாடுகளைப் பற்றி அறியாதிருப்பதுடன், (அது இந்த நிதியச் சட்டத்தில் காணப்படுவதன் காரணமாக இருக்கலாம்) அத்தகைய குற்றம் புரிந்தோருக்கு எதிராக, எமது தண்டனைச்சட்டக் கோவையின் 'ஏமாற்றுதல்' ஏற்பாடுகளின் கீழேயே தொடர்ந்தும் வழக்குத் தொடுத்து வருகின்றனர்.

**வங்கிகளால் மேற்கொள்ளப்படும் சாதாரண சட்டத்திற்குப் புறம்பான படுகடன் மீட்புச் செயல்முறையை (*"Patate Execution"*) உயர் நீதிமன்றம் சுருக்குதல்**

கடன்பெற்றோரைத் தவிர ஏனையோரால் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்துகளும், சாதாரண சட்டத்திற்குப் புறம்பான படுகடன் மீட்புச் செயல்முறைக்கு உட்பட்டதாக இருக்கும் என்பதை அங்கீகரிப்பதை, பிரதம நீதியரசர் சரத் சில்வா அவர்களின் தலைமையிலான ஐந்து நீதிபதிகளைக் கொண்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பு 2005 ஆம் ஆண்டில் (நீதிபதி சிரானி பண்டாரநாயக்க அவர்களின் கருத்து வேறுபாட்டுடன்) மறுத்துரைத்துள்ளது. வேறுவிதமாகக் கூறின், மூன்றாம் தரப்பு அடைமானங்கள், சாதாரண சட்டத்திற்குப் புறம்பான படுகடன் மீட்புச் செயல்முறைக்கான

உரிமையிலிருந்து விலக்கப்படும் என்பதாகும். இந்தத் தீர்ப்பானது, செல்லையா இராமநாதன் எதிர் ஹற்றன் நஷனல் வங்கி வழக்கிலேயே வழங்கப்பட்டிருந்தது, (Supreme Court Appeal Nos 5 and 9/2004- S.C.Spl. Leave No. 32&33, decided on 1 April 2005). அவ்வண்ணமே, உயர் நீதிமன்றத்தால் அனுப்பப்பட்டுள்ள சமிக்ஞை மிகத் தெளிவானதாக உள்ளது. நீதித்துறை சாதாரண சட்டத்திற்குப் புறம்பான படுகடன் மீட்புச் செயல்முறையை விரிவுபடுத்தாது. நீதித்துறையின் போக்கு அதன் தொழிற்பாட்டை ஓரளவுக்குச் சுருக்குவதாகவே இருக்கும். மிக அண்மையில் 2011, பாராளுமன்றம் ஓர் திருத்தச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இதன் கீழ், 5 மில்லியன் ரூபாவுக்கும் குறைந்த கடன்கள் தொடர்பான வழக்குகளில் சாதாரண சட்டத்திற்குப் புறம்பான படுகடன் மீட்புச் செயல்முறை அனுமதிக்கப்படமாட்டாது.

**வங்கிக் கணக்குகளுக்கான நியமனங்கள்**

வங்கிச் சட்டத்தில் ஏற்பட்ட, மிகக்குறைந்தளவே தெரிய வந்த மற்றுமோர் வளர்ச்சியாக, நடைமுறைக் கணக்குத் தவிர ஏனைய வங்கிக் கணக்குகளுக்கான 'நியமனங்களைச்' சாத்தியப்படச் செய்யும் ஏற்பாடுகள் அமைந்துள்ளன. எமது குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 544 ஆவது பிரிவில், 1993 ஆம் ஆண்டில் ஓர் திருத்தத்தை மேற்கொண்டதன் மூலம் இது நிறைவேற்றப்பட்டது. தற்போது, எந்த வாடிக்கையாளரும் குறிப்பிட்ட கணக்கிற்குரிய (உதாரணமாக சேமிப்புக் கணக்குகளும் நிலையான வைப்புக் கணக்குகளும்) சொத்தின் பயனாளியாக இருப்பதற்கு தனக்கு விருப்பமான ஒருவரை நியமிக்க முடியும் என்பதுடன், அத்தகைய நியமனமானது அவ் வாடிக்கையாளரின் மரண சாசனத்தையும் விட முற்பட்டு நிற்கும் உரிமையைக் கொண்டுள்ளது. இந்த 'நியமனத்தைப்' பற்றி பொதுமக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஏனெனில், வங்கிகள் இதன் விளைவுகளைப் பற்றி வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை கூறாமல் நடைமுறைப் பாங்கான ஓர் விடயமாக அத்தகைய நியமனங்களுக்கான கையொப்பத்தை பெற்றுக்கொள்கின்றன. ஓர் வாடிக்கையாளர் சௌகரியத்திற்காக தனக்குத் தெரிந்த ஒருவரை நியமிக்கக் கூடும். ஆனால், நியமிக்கப்படும் அவர் தனது இயற்கையான வாரிசுகளை விட கூடுதலான பயன்பெற வேண்டுமென அவர் ஒருபொழுதும் கருதுவதில்லை.

**வங்கிக் கணக்குகள் தொடர்பான அந்தரங்க நிலை**

ஆங்கிலப் பொதுச் சட்டத்தின் சட்டப்படி, நிறுவப்பட்ட ஓர் கோட்பாடாக வங்கிக் கணக்குகளைப் பற்றிய வங்கியாளர்களின் அந்தரங்க நிலையும் இரகசியத் தன்மையும் இங்கிலாந்திலும் ஏனைய பல நாடுகளிலும் காணப்படுகின்றன. ஆயினும், இலங்கையில் இரகசியத் தன்மை பற்றிய இந்த ஏற்பாடுகள் 1988 ஆம் ஆண்டின் வங்கிச் சட்டத்தின் 77 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்விடயத்தை கையாளுவதற்கான பொறுப்பை பொதுச் சட்டத்திடம் நாம் விட்டுவைத்திருக்க வேண்டும் என்பதே எனது அபிப்பிராயமாகும். ஏனெனில், இதற்காக புதுச்சட்டங்கள் இயற்றப்படுகின்ற போது வழக்கறிஞர்கள் வழமையாகத் தம்மிடமுள்ள வழக்குகளுக்குப் பொருத்தமான வகையில் இச்சட்டத் தொகுதிக்கு காரண விளக்கம் அளிக்க விரும்புகின்றனர்.

**செயற்படுத்தப்படாத கணக்குகள் தொடர்பில் வங்கிகளின் கடமை**

மறுபுறத்தில், ஓர் சிறந்த சட்ட ஏற்பாடாக செயற்படுத்தப்படாத வங்கிக் கணக்குகள் மற்றும் வாடிக்கையாளர்களின் கைவிடப்பட்ட சொத்து என்பவற்றுடன் தொடர்புடைய, 1988ஆம் ஆண்டின் வங்கிச் சட்டத்தில் காணப்படும் ஏற்பாடு அமைந்துள்ளது. இது 10 வருடங்களாக செயற்படுத்தப்படாத வங்கிக் கணக்குகள் பற்றியதாகும். 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியானது இந்த நியதிச்சட்ட முறையான தேவைகளை முதற் தடவையாக செயற்படுத்தி வருகின்றது. அத்துடன், தற்போது அத்தகைய சொத்துகள் (நிலுவைகள்) பற்றிய விபரங்களை அனைத்து வங்கிகளும் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியுள்ளன. வங்கிகளின் இவ்விடயம் தொடர்பான பத்திரிகை விளம்பரங்களை பொதுமக்கள் பார்த்திருக்கக்கூடும். ஏனைய நாடுகளில் இவ்விடயம் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனெனில், இந்த நியதிச் சட்டமானது 10 ஆண்டுகளாக செயற்படுத்தப்படாத வங்கிக் கணக்குகளுக்குப் பொருத்தமானதாக அமைந்துள்ளது; ஆகவே, ஒவ்வொரு வருடமும் சில வங்கிக் கணக்குகளுக்கு இந்த 10 வருட விதி பொருந்தும். அத்தகைய செயற்படாத வங்கிக் கணக்குகளில் இருந்த பணத்திற்கு 2008 ஆம் ஆண்டு வரை என்ன நடந்தது என்பது தொடர்பில் ஒருவருக்கு சந்தேகம் எழக்கூடும்.

**வங்கித்துறை தொடர்பிலான முக்கியத்துவமற்ற வழக்காடல் மற்றும் நீதி முறை முடிவுகள்**

இவ்விடயத்தில் மிக முக்கியமான பிரச்சினைகள் எதையும் நாம் கொண்டிருக்கவில்லை என்பதை இக்கட்டுரை ஆசிரியரால் வெளியிடப்பட்ட Casebook on the Law of Banking and Cheques in Sri Lanka தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. 1852ஆம் ஆண்டின் குடியியற் கட்டளைச் சட்டக் காலத்திலிருந்து இந்த நாட்டின் வங்கிகள் மற்றும் வங்கித்துறை தொடர்பான பிரச்சினைகளுக்குப் பொருத்தமான ஒன்றாக ஆங்கிலச் சட்டம் அமைந்திருந்தது. வங்கித்துறை தொடர்பான விடயங்களில் உரோமன் - டச்சுச் சட்டத்தின் பிரயோகம் பற்றிய சில சந்தேகங்கள் 1969 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற டி கொஸ்ரா எதிர் இலங்கை வங்கி வழக்கில் உயர் நீதிமன்றத்தின் 5 நீதிபதிகளைக் கொண்ட குழுவால் தெளிவுபடுத்தப்பட்டன. இந்த வழக்கில், கைமாற்றத் தகுந்த சாதனமொன்றை மாற்றிய பொறுப்புடைக்காக ஓர் சேகரிப்பு வங்கியான இலங்கை வங்கிக்கு எதிராக வெற்றிகரமான முறையில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில், இலங்கையில் வங்கித்துறைக்கு ஆங்கிலச் சட்டம் எவ்வாறு பிரயோகிக்கப்பட்டது என்பதைப் பற்றிய ஆர்வத்திற்குரிய பல்வேறு தீர்ப்புக்களை, எமது உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த 5 நீதிபதிகள் வழங்கியிருந்தனர். அனைத்துத் தீர்ப்புகளும் மொத்தமாக 70 பக்கங்களை உள்ளடக்கியிருந்தன. எனது கருத்தின்படி, அந்த வழக்கின் மிகச் சிறந்த தீர்ப்பாக, நீதிபதி கிறிஸ்டி வீர மந்திரி அவர்களால் வெளியிடப்பட்ட தீர்ப்பு அமைந்திருந்தது. அவர் தற்போது சர்வதேச ரீதியாகப் பெரும் புகழ்வாய்ந்த ஓர் சட்ட வல்லுநராக ஆகியுள்ளார். இந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை வாசித்துப் புரிந்துகொள்வதன் மூலம், இலங்கையில் வங்கித்துறை சட்டம் மற்றும் அதன் பிரயோகம் என்பன பற்றிய சிறந்த கருத்துகளை ஒருவர் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது பொதுச் சட்டமாகக் காணப்படுகின்ற உரோமன் - டச்சுச் சட்டமானது உலகிலுள்ள 190 நாடுகளில் இரு நாடுகளில் மாத்திரமே (தென்னாபிரிக்காவும் இலங்கையும்) பிரயோகிக்கப்படும் ஓர் சட்டமாக உள்ள போதும், 'வங்கித்துறை அலுவல்களுக்குப்' புறம்பான செயற்பாடுகள் (உதாரணமாக, உத்தரவாதங்கள் மற்றும் பாதுகாப்பான கட்டுக்காப்பு) யாவுமே இந்த உரோமன் - டச்சுச் சட்டத்தாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆயினும், டி கொஸ்ரா எதிர் இலங்கை வங்கி வழக்கிற்கான முடிவின் பின்னர், வங்கியாளர்களைப் பொறுத்த வரை நடைமுறையில் ஆங்கிலச் சட்டத்திற்கும், உரோமன் - டச்சுச் சட்டத்திற்கும் இடையில் முரண்பாடுகள் ஏதும் காணப்படவில்லை. இவ்விரு சட்டங்களுமே 'ஒத்திசைவாக' இருந்து வருவதுடன், எமது நாட்டின் சட்ட முறைமையில் காணப்படும் பல்லினத் தன்மை வங்கியாளர்களுக்குக் கவலையைத் தோற்றுவிக்கவில்லை.

**"வழக்கமுறையிலான வங்கித்துறை நடைமுறைகள்"**

முன்னர் குறிப்பிடப்பட்டவாறு, 'வங்கிகள்'

மற்றும் 'வங்கித்துறை அலுவல்கள்' என் பவற்றிற்கு ஆங்கிலச் சட்டம் பொருந்து வதாக அமைந்துள்ளது. 'வங்கித்துறை அலுவல்களை' வரையறை செய்வதில், வழக்கமுறையான வங்கித்துறை நடை முறைகளைப் பற்றி 1988 ஆம் ஆண்டின் வங்கிச் சட்டத்தின் 86 ஆவது பிரிவு குறிப்பிடுகின்றது. 2008 ஆனியில், இலங் கையின் வங்கித்துறை தொழில்வல்லுநர் சங்கமானது, ஆங்கிலச் சட்டத்தால் கட் டுப்படுத்தப்பட வேண்டியவையாக உள்ள, 'வழக்கமுறையான வங்கித்துறை நடை முறைகளாகக்' கருதப்படுகின்ற, வங்கி களால் மேற்கொள்ளப்படுகின்ற செயற் பாடுகளின் 34 துறைகளை உள்ளடக்கிய ஓர் சிறு புத்தகத்தை, எமது நீதித்துறைக் கான ஓர் வழிகாட்டியாக, வெளியிட்டது. இலங்கையின் வங்கித்துறை தொழில்வல் லுநர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்நூலை இக்கட்டுரை ஆசிரியர் தொகுத்தார். அது கொழும்பில் இடம் பெற்ற ஓர் பொது நிகழ்வொன்றில் வைத்து சிரேஷ்ட உயர் நீதிமன்ற நீதிப தியான திரு சலீம் மர்சூப் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. 'வழக்க முறையான வங்கித்துறை நடைமுறைகள்' எனும் இத்தொகுப்பின் வெளியீடானது 2008ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஓர் திருப்பு முனை நிகழ்வாகும். ஏனெனில், வேறெந்த நாட்டிலுமே இவ்வாறானதோர் முயற்சி இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

**நிதி மற்றும் வங்கித்துறை தொடர்பான சல்காடோ ஜனாதிபதி ஆணைக்குழு (1991)**

1991 இல் அப்போதைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சல்காடோ ஆணைக் குழுவால் (அதன் தலைவரான கலாநிதி எம்.ஆர்.பீ. சல்காடோ அவர்களின் பெயரே இதற்குச் சூட்டப்பட்டுள்ளது) மேற்கொள்ளப்பட்ட பணிகளைப் பற்றி குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அது வங்கித்துறை தொடர்பான மிக முக்கிய மான விடயங்கள் பலவற்றைப் பற்றி 9 அறிக்கைகளை வெளியிட்டதுடன், இவ் வறிக்கைகள் யாவுமே பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரங்களாக வெளியிடப் பட்டதோடு, இவ்விடயத்திலான பெறுமதி மிக்க தகவல்களையும் தரவுகளையும் கொண்டுள்ளன.

**வங்கிச் சட்டம் வங்கியாளர்களுக்கா அல்லது அவர்களுடைய வாடிக்கை யாளர்களுக்கா சாதகமாக உள்ளது?**

இதற்கு பதில் கூறுவது இலகுவானதன்று. வங்கிச் சட்டமானது வங்கிகளுக்கே சாதக மாக உள்ளதென்றும், ஒப்புமை அளவா னது எப்பொழுதும் வங்கிகளுக்கே சாதக மான வகையில் ஒரு புறச்சாய்வானதாக உள்ளதென்றும் பல வங்கியாளர்களும் சராசரி வாடிக்கையாளர்களும் கூறுவர். ஆயினும், ஒருவர் வங்கிச் சட்டத்தை மிகக் நுணுக்கமாக மதிப்பீடு செய்து, வங்கிச் சட்டம் (Paget அல்லது Chorley போன்றோரின்) பற்றிய அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநூலொன்றை கவனமாக வாசிக்கின்ற போது, வங்கிச் சட்டமானது வங்கிகளை விட வாடிக்கையாளர் களுக்கே சாதகமாக உள்ளது எனும் முடிவிற்கு அவர் வருவார். மேலே குறிப் பிடப்பட்ட கருத்துக்கு சார்பாக பின்வரும் காரணங்கள் முன்னிலைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன:

முதலாவதாக, வங்கிச் சட்டம், நாணயச் சட்டம், மற்றும் மிக அண்மைக் காலத் திற்குரிய சட்டத் தொகுதி என்பன போன்ற சட்டத்தொகுதிகளிலுள்ள நியதிச்சட்ட முறையான ஏற்பாடுகள் பலவற்றிற்கு வங்கிகள் கீழ்ப்படிய வேண்டியுள்ளன. வாடிக்கையாளர்கள் இது தொடர்பாக கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், சட்ட ரீதியான தேவைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறு திப்படுத்துவது வங்கிகளின் கடப்பாடா கும். பிரபல்யம் மிக்க ஓர் ஆங்கில நீதி பதி கூறியவாறு, 'வங்கித்துறை தொடர் பான அலுவல்கள் வாடிக்கையாளர் களுக்கு உரியவையல்ல, அது வங்கிக ளுக்கே உரியனவாகும்'.

இரண்டாவதாக, வங்கிகள் இடர்பாடு நேர் வதற்கான வாய்ப்பு நிலையில் செயற்படு வதோடு, பணக் கொடுப்பனவை பொறுப் பேற்பதிலும் தமது வாடிக்கையாளர்களுக் காக காசோலைகளைச் சேகரிப்பதிலும் வெளிப்படையான நட்ட அச்சத்தை எதிர் கொள்கின்றன. காசோலைகளைக் கையாள்வதன் மூலம் அவை இலாபம் உழைக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பணக் கொடுப்பனவு மற்றும் காசோலை சேகரிப்பு என்பவற்றுடன் தொடர்புடைய நீதிமுறை முடிவுகளை ஒருவர் உன்னிப்பாக ஆராய்கின்ற போது, தமது வாடிக்கையாளர்களுடன் ஒப்பிடு மிடத்து, வங்கிகளுக்கு கடும் உழைப்பிற் குரிய கடமைப் பொறுப்பு உண்டு என்பது வெளிப்படையானதாகும். மாற்றுதல் தொடர்பான ஓர் நடவடிக்கைக்கான பொறுப்புடைமையிலிருந்து ஓர் சேகரிக் கும் வங்கிக்கு கிடைக்கக்கூடிய ஒரே யொரு பாதுபாப்பாக அமைந்துள்ளது எது வெனில், நம்பிக்கையின் அடிப்படையி லும் அலட்சியம் இன்றியும் அது செயற்பட் டது என்பதை நிரூபிப்பதாகும். வங்கி முறைமையூடாக ஒவ்வொரு நாளும் கடந்து செல்லும் காசோலைகளின் பெருந் தொகையான எண்ணிக்கையின்* காரண மாகவும், ஏனையோரின் காசோலைகளைத் திருடும் நபர்களால் மேற்கொள்ளப்படும் பெரிதும் சிக்கலான மோசடிகள் காரண மாகவும், தாம் அலட்சியமாக இருக்க வில்லை என்பதை நிரூபிப்பதற்கு வங்கி கள் சில வேளைகளில் தவறுகின்றன. அவ்வாறே, சேகரிப்பு வங்கியாக அது அதிகளவான நட்ட அச்சத்திற்கு உள்ளா காத போதும், பணக் கொடுப்பனவு வங்கி யாக அதனுடைய கடப்பாடு கடும் உழைப் பிற்குரியதாக உள்ளது. காசோலை களுக்கு பொய்க் கையெழுத்திடுதல் கூட பொதுவான நட்ட அச்சம் நிறைந்த ஒன றாக உள்ளது. பொய்க் கையெழுத்திடப் பட்ட ஓர் காசோலைக்கு பணக்கொடுப் பனவை மேற்கொள்கின்ற வங்கியானது, அதனுடைய வாடிக்கையாளருக்கு பொறுப் புடையதாகும். பொய்க் கையெழுத்திடப் பட்ட ஓர் பணிப்பாணை உண்மையான ஓர் பணிப்பாணையாக அமையாது.

மறுபுறத்தில், வங்கிகளின் கடும் உழைப் பிற்குரிய நாளாந்த கடமைப் பொறுப்புடன் ஒப்பிடும் இடத்து, வங்கிகளின் வாடிக்கை யாளர்கள் தமது வங்கிகளுக்கு இரு கட மைகளையே ஆற்ற வேண்டியுள்ளது. ஒன்று, பொய்க் கையெழுத்திடலுக்கு துணை செய்யாதிருக்கும் பொருட்டு, காசோலைகளைக் கவனமாக வரைதல். அதை உறுதிப்படுத்திய ஓர் ஆங்கில வழக்கின் பின்னர், இது மக்மிலன் கட மையென அழைக்கப்படுகின்றது; London Joint Stock Bank Ltd v Macmillan [1918] AC 777 ஐ பார்க்கவும். இரண்டா வது கடமை எதுவெனில், தனது காசோ லைகளில் பொய்க் கையெழுத்திடல் ஏதா வது நிகழ்ந்திருக்குமாயின், அது பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிப்பதாகும். இது, Greenwood v Martins Bank [1933] AC 51 வழக்கின் ஆங்கிலச் சட்ட முடிவை அடிப்படையாகக் கொண்ட கிறீன்வூட் கடமை என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறாக, சட்டமானது வாடிக்கையா ளரை விட வங்கிகள் மீது அதிகளவான சட்ட ரீதியான சுமையையும் கடமைப் பொறுப்பையும் சுமத்தியுள்ளது என்பது வெளிப்படையானதாகும். வாடிக்கையா ளர்கள் வங்கிகளிலிருந்து கடன் பெறு கின்ற போது, மாத்திரமே வகிபாகங்கள் நேர்மாறானதாக அமைகின்றன. முதன்முத லில் வைப்பாளர்களாக - கடன்வழங்கு வோராக உள்ள வாடிக்கையாளர்கள், தற்போது கடன்பெறுவோராக - கடன்பட் டோராக - ஆவதுடன், கடன் கொடுக்கல் வாங்கல்களில், வங்கிகளுக்கு சாதாரண சட்டத்திற்குப் புறம்பான விசேட படுகடன் மீட்புச் செயல்முறை அதிகாரத்தை வழங் கு வதன் மூலம், சட்டமானது இவ்வங்கி களுக்கு சாதகமானதாக உள்ளது.

நான் மேலே கூறியுள்ளவற்றின் அர்த்தம், ஓர் வங்கிக்கு எதிராக வழக்குக் தொடுப் பது இலகுவானதென்பதல்ல. எனது ஆலோசனை, இவ்வாறு வழக்குத் தொடுப் பதற்கு எதிரானதாகும். வழக்காட்டலுக்கான செலவுகள் மற்றும் அதில் ஏற்படும் தாம தங்கள் என்பன எந்தவோர் தனிப்பட்ட வாடிக்கையாளரையும் ஊக்கம் குன்றச்

செய்வதுடன், விரக்தியடையவும் வைக்கும்.

**வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் முக்கியத்துவமிக்க அண்மைக்கால சட்டத்தொகுதி**

இன்று 2011 இல், உள்நாட்டு வங்கிகளும், பிரசித்தி பெற்ற வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளும் இணையாகச் செயற்படுகின்ற சூழலைக் கொண்ட உயிர்த்துடிப்பும் ஊக்கமும் நிறைந்த ஓர் வங்கித்துறையை இலங்கை கொண்டுள்ளது. ஆயினும், வங்கித்துறை அலுவல்களில் அண்ணளவாக 70 சதவீத பங்குகளுடன் இன்னும் அரச வங்கிகளே (இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி) ஆதிக்கம் செலுத்துகின்றன. வங்கிச் சட்டங்கள் தொடர்பில் பயன்பாட்டுக்குரிய நிலையில் உள்ள அவசியமான அனைத்து நியதிச் சட்டங்களையும் நாம் கொண்டுள்ளோம். அனைத்து வங்கியாளர்களும் நன்கு தெரிந்திருக்க வேண்டிய சட்டத் தொகுதியின் பின்வரும் மாதிரி எடுத்துக்காட்டுகளை நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்:

1. 2002 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நாணயச் (திருத்தம்) சட்டம்
2. 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம்
3. 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கிச் (திருத்தம்) சட்டம்
4. 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிப் பரிமாற்றல்கள் வெளிப்படுத்தற் சட்டம்
5. 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணத் தூய்மையாக்கற் தடுப்புச் சட்டம்
6. பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பைத் தடுத்தல் தொடர்பான 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சமவாயச் சட்டம்
7. 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கடனடைப்புச் சட்டம்
8. 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இத்திரனியற் பரிமாற்றல்கள் சட்டம்
9. 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றச் சட்டம்
10. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
11. 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்
12. 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம்
13. 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்பனவுக் கருவிகள் மோசடிச் சட்டம்

வங்கிகளைப் பொறுத்தவரையில், மேலே குறிப்பிடப்பட்ட சட்டத் தொகுதிகளில், 2006 ஆம் ஆண்டின் நிதிப் பரிமாற்றல்கள் வெளிப்படுத்தற் சட்டம் நாளாந்தம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது. இது வாடிக்கையாளர்களின் அடையாளத்தைச் சட்ட விதிமுறைப்படி உறுதி செய்ய வேண்டிய தேவையை வழங்குவதுடன், இதன் கீழ், ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட காசு வைப்பு பற்றிய தகவலை இலங்கை மத்திய வங்கியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள நிதி தொடர்பான புலனாய்வுப் பிரிவிற்கு அறிவிக்க வேண்டியுள்ளது. 2005 இன் கொடுப்பனவு மற்றும் கடனடைப்பு முறைமைச் சட்டத்தின் கீழ், காசோலைத் தீர்வுகள் முழுமையாக தன்னியக்கச் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அது வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் கம்பனியினால் (Lanka Clear Ltd.) கையாளப்படுகின்றது. இப்போது நாம் கணினியால் தயாரிக்கப்படும் காசோலையின் நகல்படிவத்தை பெறக்கூடியதாகவுள்ளது. 2006 ஆம் ஆண்டின் இலத்திரனியல் பரிமாற்றல் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் கணினிக் குற்றச் சட்டம் என்பன இலத்திரனியல் வர்த்தகத்தின் வளர்ச்சியை கவனத்தில் கொள்கின்றன.

எமது வங்கித்துறை ஒழுங்குபடுத்தல் அமைப்பு மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட நிதி முறையீட்டுமன்ற நடுவர் திட்டம் என்பவை தொடர்பான விமர்சனத்துடன் கூடிய, 1948 இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து நிகழ்ந்த மிக முக்கியமான வங்கிச் சட்டங்கள் தொடர்பான வளர்ச்சிகள் பற்றிய சுருக்கமான இத்தொகுப்பை இத்துடன் நான் நிறைவு செய்கின்றேன்.

**"ஒழுங்குபடுத்தல் அமைப்பாக" மத்திய வங்கியின் வகிபாகம்**

தானே சூழ்நிலையை உருவாக்கி ஆட்சி செய்ய வேண்டிய அவசியம் உள்ள போது, ஓர் ஒழுங்குபடுத்தல் அமைப்பாக இலங்கை மத்திய வங்கியானது அவ்வாறே செயற்பட வேண்டியிருந்ததுடன், ஓர் கண்காணிப்பு அமைப்பாகவும் தொழிற்பட்டும் வந்துள்ளது. எனது அபிப்பிராயத்தின்படி, இச்செயற்பாடுகள் அதனுடைய வழமையான வகிபாகமாக இருக்க வேண்டியுள்ளது. இன்று, 2011 இல் எமக்கு 'ஒழுங்குபடுத்தல் அமைப்புகள்' தேவையில்லை. எமக்குத் தேவையானது எதுவெனில், 'ஆதரவளிக்கும் அமைப்புகளே' ஆகும். மத்திய வங்கியின் கடமை எதுவெனில், பண முறைமையையும் கொடுப்பனவு முறைமையையும் பாதுகாத்தலாகும். இலங்கையில் இப்போது காணப்படும் திறந்த பொருளாதாரக் கொள்கையில் அளவுக்கதிகமான ஒழுங்கு விதிகள் அபிவிருத்திக்குத் தடங்கல் செய்யும். ஓர் ஒழுங்குபடுத்தல் அமைப்பாக இலங்கை மத்திய வங்கியானது நன்கு செயற்பட்டுள்ளது. இலங்கையில் பாரிய வங்கி முறிவுகள் எதுவும் ஏற்படவில்லை. 2002 இல் ஏற்பட்ட பிரமுக வங்கியின் முறிவானது அண்மைக் காலத்தில் ஏற்பட்டவற்றுள் இறுதியானதாகும். 'கோல்டன் கீ' யின் ('Golden Key") தோல்வியின் மத்தியிலும், இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதுடன், செலான் வங்கி மீதான மொய்ப்பைத் தடுத்துள்ளது. இந்த வங்கியானது தற்போது மீண்டும் நம்பத்தகுந்த பத்திரமான நிலையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. பெரும் எண்ணிக்கையிலான கண்காணிக்கப்படாத நிதி சார் தொழில்முயற்சிகள் நட்டமடைந்துள்ளன (சக்விதி, தண்டுவம், கோல்டன் கீ) என்பது உண்மையே. ஆனால், இதற்காக இலங்கை மத்திய வங்கி மீது குற்றஞ் சுமத்துவது நியாயமானதன்று. நட்ட அச்சம் நிறைந்த நிதி சார் தொழில்முயற்சிகளான இவை சாத்தியப்படத்தக்க வழக்கமான வீதத்திலும் அதிகமான தொகையை வட்டியாக வழங்கி வந்தன. மேலும் கோல்டன் கீயானது மத்திய வங்கியால் கண்காணிக்கப்பட்ட ஓர் நிறுவனமாக இருக்கவில்லை. இலங்கையின் மத்திய வங்கியானது பொது அறிவித்தல் மூலம் காலத்துக்குக் காலம் தம்மால் கண்காணிக்கப்படும் நிறுவனங்களைப் பற்றி பொதுமக்களுக்கு அறிவித்து வருகின்றது. தம்மால் கண்காணிக்கப்படும் நிதி நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு மத்திய வங்கியால் அறிவித்தல்கள் வெளியிடப்படுகின்ற போது, அதன் அர்த்தம் என்னவெனில், சந்தேகத்திற்குரிய ஏனைய நிறுவனங்கள் அனைத்துமே தங்களால் கண்காணிக்கப்படவில்லை என்பதையும், இதனால் அவை நட்ட அச்சத்திற்குட்பட்டவையாக இருக்கக்கூடும் என்பதையும் மத்திய வங்கியானது மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது.

இது தவிர கண்காணிக்கப்படாத நிறுவனங்களில் இடப்பட்ட வைப்புகளின் இழப்புக்காக இலங்கை மத்திய வங்கிக்கு எதிராக எவராலும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. இங்கிலாந்தில் கூட, அந்த நாட்டின் ஒழுங்குபடுத்தல் அமைப்பாகவுள்ள இங்கிலாந்து வங்கிக்கு எதிரான, சட்ட ரீதியான உரிமை கோரலை நீதிமன்றங்கள் மறுத்துள்ளன. அவ்வாறே, நட்டமடைந்ததும் கண்காணிக்கப்படாததுமான நிதி நிறுவனங்களில் இடப்பட்ட வைப்புகளின் இழப்புக்காக இலங்கை மத்திய வங்கிக்கு (நாணய சபைக்கு) எதிராக வழக்குத் தொடுக்க முடியாதென எமது உயர் நீதிமன்றம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

**நிதி தொடர்பான முறையீட்டுமன்ற நடுவர் திட்டம்**

எனது இறுதிக் கருத்துரையாக 2003 ஆம்

**தொடர்ச்சி 55 ஆம் பக்கம் .........**

# இலங்கையின் வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியில் வங்கிச் சேவைகள்


**கணேஷ் சுரேஷ்**
&
**ஜெயப்பிரபா சுரேஷ்**

*விரிவுரையாளர்கள்*
*பொருளியல் துறை*
*கிழக்கு பல்கலைக்கழகம்*


### அறிமுகம்

ஒரு நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு வங்கித்துறையின் வினைத்திறனான செயற்பாடும், பங்களிப்பும் இன்றியமையாததாகும். பொருளாதார மாதிரிகளில் வங்கியானது நிரம்பல் பக்கமாகவே கடந்த காலங்களில் காட்டப்பட்டு வந்த போதிலும், இன்று இந்நிலை மாறி, வங்கிகள் பண உருவாக்கம் செய்யும் நிறுவனம் என்பதிலிருந்து பல்சேவை நிறுவனமாக செயற்பட்டு வருகின்றன. முயற்சியாளர்களுக்கான நீண்டகால, மத்தியதர முதலீட்டினை வழங்குதல், வாடிக்கையாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை விருத்தி செய்தல் என்பன மட்டுமன்றி பன்னாட்டு நிதிச் சேவை, காப்புறுதி, வீடமைப்புக் கடன், புலமைப்பரிசில், வெளிநாட்டுப் பயணம் எனப் பல்வேறு பரிமாணங்களில் பணியாற்றி வருகின்றது. இதனால் இலங்கையின் தேசிய உற்பத்தியில் 7.5% (இலங்கை மத்திய வங்கி, 2010) வரை பங்களிப்புச் செய்யத்தக்க சமூகப் பொருளாதார விருத்திசார் துறையாக வங்கித்துறையும் அதனோடு இணைந்த சேவைகளும் இடம்பிடித்துள்ளன. அதிலும் சமகாலத்தில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களின் வாழ்வாதார மீட்சியில் வங்கித்துறையின் பங்கேற்பு இன்றைய காலத்தின் கட்டாய தேவையாக அமைகிறது.

கடந்த மூன்று தசாப்தகாலமாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்ற அனர்த்த நெருக்கீடுகள் வங்கித் துறையின் சேவை வழங்கலை மட்டுமன்றி, வாடிக்கையாளர்களின் முதலீட்டு நோக்கங்களையும் பல் முனைகளில் மட்டுப்படுத்தியிருந்தன. யுத்த நெருக்கீடுகள் வழமைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து, பிராந்திய சமத்துவத்தைப் பேணுதல் என்னும் நிலைப்பாட்டில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற, சர்வதேச நிதி நிறுவனங்கள் மானிய விருத்திக் கோட்பாடுகளில் இருந்து சற்று விலகி, சலுகை அடிப்படையிலான மென் கொடுகடன்கள் ஊடாக, குறுங்கால மற்றும் நீண்ட கால முதலீடுகளை விருத்தி செய்வதற்காக தமது வலையமைப்பை ஸ்திரப்படுத்தி வருகின்றன.

1906 ஆம் ஆண்டில், கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் தோற்றத்தோடு இலங்கையில் வங்கிச்சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து 1950இல் இலங்கை மத்திய வங்கி ஸ்தாபிக்கப்பட்டதோடு இன்று அரச மற்றும் தனியார் வங்கிகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் தளமாகவும் அது செயற்பட்டு வருகின்றது. இலங்கை வாடிக்கையாளரிடையே சேமிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கும், பணவீக்க நிலைமைகளைச் சீர்செய்வதற்குமாக இலங்கை சேமிப்பு வங்கி என்னும் பெயரில் சேமிப்பு வங்கி ஒன்று 1946இல் தாபிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1948ஆம் ஆண்டில் இலங்கை வங்கியும், 1961 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியும் அரச வர்த்தக வங்கிகள் என்னும் அடிப்படையில் தாபிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சேமிப்பு, அபிவிருத்தி, முதலீடு என்னும் பெயர்களுடன் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்டு பல வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### வடக்குக் கிழக்குப் பொருளாதாரம்

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 29 வீதத்தையும், சனத்தொகையில் 13 வீதத்தையும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இங்குள்ள இயற்கையாக அமையப்பெற்ற நீர்வளமும், நிலவளமும், தேர்ச்சிபெற்ற மனித வளமும் தேசிய வெளியீட்டிற்கு முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. இயற்கை மற்றும் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட அனர்த்தங்களால் முதலீட்டுத் துறைக்கு ஏற்பட்ட நெருக்கீடுகளைத் தொடர்ந்து, 2007 இல் அதி குறைந்தளவான 5.5 சதவீதப் பங்களிப்பினை கிழக்கு மாகாணத்தில் இருந்தும், 2.9 சதவீத பங்களிப்பினை வட மாகாணத்திலிருந்தும் பெறக்கூடியதாக இருந்தது (இலங்கை மத்திய வங்கி, 2010). போராட்ட நோக்கங்களுக்காக போராட்ட இயக்கங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மிக மோசமான உற்பத்தித் துறைசார் வரிகளும், பாதுகாப்புக் காரணங்களுக்காக உள்ளீடுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளும் வெளியீட்டு மட்ட ஒடுக்கங்களுக்குப் பிரதான காரணமாக அமைந்திருந்தன (சர்வானந்தன், 2008).

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அடிக்கடி இடப்பெற்ற பாரியளவிலான இடம்பெயர்வுகள், சமூக உட்கட்டமைப்பிற்கு ஏற்பட்ட பாரிய சேதங்கள், உற்பத்தி மற்றும் வெளியீட்டுத் துறைக்கு ஏற்பட்ட அழிவுகளும் நெருக்கீடுகளும், கல்வி, சுகாதாரம், வங்கித்துறை போன்ற சேவைத் துறைக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவுகள் என்பவற்றோடு இரு பகுதியினராலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக விதிக்கப்பட்டிருந்த மட்டுப்படுத்தல்கள் இம் மாகாணங்களின் அபிவிருத்திசார் இயலளவை மிகவும் குறுகச் செய்தன. நாட்டின் விவசாயத் துறைக்கு 39 வீத பங்களிப்பைச் செய்த கிழக்கு மாகாணத்தின் விவசாய நடவடிக்கையானது பல தசாப்தமாகக் கைவிடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. 1980 களில் இலங்கையின் மொத்த நெற்செய்கை நிலப்பரப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு 27.8 வீதமாகக் காணப்பட, இது 2007 இல் 24.9 வீதமாகக் குறைவடைந்து காணப்பட்டது (அமரதுங்க,2010).

பாதுகாப்புக் காரணங்களுக்காக விதிக்கப்பட்ட தடைஉத்தரவுகள், வெளியீடுகளுக்கு விதிக்கப்பட்ட வரிகள், சந்தைப்படுத்தலுக்கு விதிக்கப்பட்டிருந்த போக்குவரத்துத் தடைகள் முதலானவை மீன்பிடித் துறையின் வெளியீட்டு மட்டங்களைப் பன்மடங்காக குறையச் செய்தன (சர்வானந்தன், 2007). இலங்கையின் மொத்தக் கடல் வளத்தில் மூன்றில் ஒருபகுதியை முற்றாகப் பயன்படுத்த முடியாத நிலை மீனவர் சமூகத்திற்கு ஏற்பட்டிருந்தது. யுத்தத்திற்கு முன்னர் மொத்தத் தேசியத்தின் கடற்துறை மீன் உற்பத்தியில் 52 வீத பங்களிப்பினை செய்த இவ்விரு மாகாணங்களும் 2007 இல் 19 வீத பங்களிப்பினை மாத்திரமே செய்யமுடிந்தது (அமரதுங்க, 2010). ஏ9 வீதி மூடப்பட்டதைத் தொடர்ந்து, பலாலி விமான நிலையத்தின் ஊடாகவே நீரியல் வள உற்பத்திகள் சந்தைப்படுத்தப்பட்டன. ஒரு முனையில் இவ்வுற்பத்திகளுக்கு விதிக்கப்பட்ட மிக மோசமான வரி முறைமையும், மறுமுனையில் வான் வழிச் சந்தைப் போக்குவரத்தும் வெளியீடுகளுக்கான எல்லைச் செலவுகளை பன்மடங்கு அதிரிக்கச் செய்தன. இதனால் உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி நுகர்வாளர்களும் பாதிக்கப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். கைத்தொழிற் துறையைப் பொறுத்தவரையில் வடக்கில் காங்கேசன்துறை சீமெந்

துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பனவும் கிழக்கில், புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலை உட்பட முக்கிய தொழில் நிலையங்கள் முற்றாகச் செயலிழந்து மூடப்பட்டன. ஆயிரக்கணக்கான தேர்ச்சி பெற்ற பணித் தொகுதியினர் வேலைவாய்ப்பினை இழந் தனர். தேவை அடைவுகளை நிறைவு செய்யும் பொருட்டு காலடியில் உள்ள உள்ளூர் வளங்களைப் பயன்படுத்த முடி யாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

இதேபோன்று வட மாகாணமானது 2001 ஆம் ஆண்டுத் தரவுகளின்படி, சேவைத் துறையில் 72 வீதத்திற்கு அதிகமான பங்களிப்பினை வழங்கி வந்தது (சர்வா னந்தன், 2007). கல்வித் துறையில் பெற்ற உயர் மட்ட அடைவுகள் இதில் முக்கிய பங்களிப்பைச் செய்திருந்தன. பாதுகாப் புக் காரணங்களால் ஏற்பட்ட நிர்ப்பந்த குடியகல்வுகள் உள்ளூர் மனித வள நகர் விற்கு காரணமாக அமைந்திருந்தன. இவை தொழில்துறை சார்ந்த நிலையில் மட்டுமன்றி கல்வி நிலையிலும் தாக்கத் தினை ஏற்படுத்தியுள்ளன.

யுத்த நிலை முடிவுக்குக் கொண்டு வரப் பட்டதைத் தொடர்ந்து, பொது உட்கட்டு மான அபிவிருத்தியில் அரச தாபனங்கள், அரச சார்பற்ற தாபனங்கள் என்பன முக் கிய கவனம் செலுத்தி வருகின்றன. அறு கம்பை, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் முதலான போக்குவரத்து வலையமைப்புகள் நகரங்களுடன் இணைக் கப்படுதல் போன்ற பல்முனை பாரிய பொது உட்கட்டுமான வசதிகள் அபி விருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதேவேளை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதார மீட்சி நட வடிக்கைகளில் அரச தாபனங்களும், அரச சார்பற்ற தாபனங்களும் குறிப்பிட்டளவு பங்கேற்பினை செய்து வருகின்றன.

இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து, யுத்தத்தால மிக மோசமாக அழிவடைந்த பிராந்தியங்களை மீள் கட்டமைக்கும் செயற்பாட்டில் அமெரிக் காவின் இராஜாங்கச் செயலாளர் ஜோர்ச் மார்சல் என்பவரின் "மார்சல் திட்டம்" முக் கிய பங்கேற்றிருந்தது. தனித்து யுத்தத் தால் அழிவுக்குட்பட்ட ஐரோப்பிய நாடு களின் பொருளாதாரத்தை மீள்கட்டமைக் கும் பொருட்டே இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1948 ஆம் ஆண்டிற்கும் 1951 ஆம் ஆண்டிற்கும் இடையிலான முதல் 04 ஆண்டிற்கான மார்சல் திட்டம் - 01 இன் கீழ், 1300 கோடி அமெரிக்க டொலர்கள் முதலிடப்பட்டன (கெலேகம, 2010). இங்கு சமூக உட்கட்டுமான அபி விருத்தி தவிர்ந்த வாழ்வாதார அழிவு களை மீட்பதற்கான செயற்திட்டங்கள் வங்கிகள் ஊடாகவே மேற்கொள்ளப்பட்ட மையை ஒரு முற்பாடமாகவும் கொள்ள முடியும். மேலும் வங்கிகள் நீண்டகால மத்திய கால முதலீட்டாளராக செயற்பட் டன. குறிப்பாக மீட்சிக்கான இலகு கடன் திட்டங்கள் குறுங்கால பொருளாதார மீட் சிக்கு அடிப்படையாக அமைந்திருந்தன. பங்களாதேஷின் கிறமின், இஸ்ரேலின் இலவச கடன் வழங்கும் தாபனம் போன் றவை ஏழைகளின் வாழ்வாதார மேம்பாட் டில் முக்கிய பங்கேற்கின்றன. இவ்வா றாக மக்கள் மயப்படுத்தப்பட்ட சமூக வலையமைப்புக்கள் வடக்கு கிழக்குப் பிர தேசங்களில் உருவாக்கப்படுவது குறுங் காலத்தில் சாத்தியமற்றதாகவே அமை கின்றன. அதேவேளை மத்தியதர மற்றும் பாரிய முதலீட்டாளர்களின் வாழ்வாதார இழப்புகளை மீளக் கட்டியெழுப்புவதி லிருந்து அரசசார்பற்ற தாபனங்களின் கோட்பாடுகள் முற்றாகவே விலகிச் செல் கின்றன. இவ்வேளையில் வங்கித் துறை யின் பங்கேற்புடன் பாதிக்கப்பட்ட பிர தேசங்களின் தொழிற்துறை முயற்சியின் மீள்உருவாக்கம் சாத்தியப்பாடுடைய தொன்றாக அமைகின்றது.

### வட - கிழக்கு அபிவிருத்தியில் வங்கித்துறையின் பங்களிப்பு

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் வங்கி கள் மிகவும் தந்திரமாக திரவச் சொத்துக் களைப் பாதுகாத்தன என்றே கூற வேண் டும். பிரதேச அபிவிருத்தியானது வங்கி களின் சிறப்பு நோக்கங்களில் ஒன்றாகக் காணப்பட்ட போதும், யுத்த சூழ்நிலையில் அவற்றால் தமது பணியைச் சிறப்பாக முன்னெடுக்க முடியவில்லை. பயங்கர வாத கெடுபிடிகள் காரணமாக, வங்கி களுக்கு போதிய பாதுகாப்பு காணப்பட வில்லை. வங்கிகள் கொள்ளையடிக்கப் பட்டன. பொலிஸ் நிலையங்களில் பாது காப்பாக வைக்கப்பட்ட இரும்பு வைப்ப கங்கள் பொலிஸ் நிலையத்தோடு சேர்த்து கொள்ளையிடப்பட்ட வரலாறும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு உண்டு வங்கிகள், அரசாங்க - தனியார் பங்கு டமை ஊடாக பாரியளவில் முதலீடுகளை மேற்கொள்ள முடியாமைக்கு அச்சம், நிலையற்றதன்மை போன்றன பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. இத னால் பாரிய தொழில்களில் முதலிட்டு, நிலையான சொத்துக்களை உருவாக்கி அவற்றை நீண்ட நாட்கள் நிலைத்துப் பேணிப் பாதுகாக்கும் வகையில், வடக் குக் கிழக்குச் சூழ்நிலை அமையவில்லை. எனவே அக்காலத்தில் வங்கிகள் வெறு மனே வைப்புகளை ஏற்றல், சிறிய கடன் களை வழங்குதல், அடகுச் சேவையினை மேற்கொள்ளுதல் போன்ற முதன்மைப் பணிகளை மாத்திரமே மிகவும் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் ஆற்றி வந்திருந் தன. வங்கிச் சேமிப்புகள் போராட்டக் குழுக்களால் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, சேமிப்பு நடவடிக்கைகளை வாடிக்கையாளர்கள் மட்டுப்படுத்திக் கொண்டனர். முதலிடவோ அல்லது வட்டியுடன் சேமிக்க முடியாத இக்கட்டான நிலையில் வடக்கு, கிழக்கு மக்கள் ஒடுக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாணம் 2007இலும், வடக்கு மாகாணம் 2009இலும் பயங்கரவாத யுத்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, போராட்ட வெற்றி இலக்கி லிருந்து பொருளாதார விருத்தி நோக்கி அரசாங்கத்தின் கவனம் திசை திரும்பி யுள்ளது. அரசும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களும் வங்கித்துறையின் சேவையூடாக பாதிப்பிற்குள்ளான சமூ கத்தை மீள்கட்டமைப்பதற்கான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின் றன. அந்த வகையில், மகிந்த சிந்தனை யின் கீழ் வடக்கு பிரதேச அபிவிருத்திக் காக "வடக்கின் வசந்தம்" மற்றும் கிழக்கு அபிவிருத்திக்காக "கிழக்கின் உதயம்" போன்ற திட்டங்களினூடாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. மறுபுறத்தில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீட்சியில் வங்கிச் சேவை யின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக் கோடு அரச வங்கிகளின் வலையமைப் பினை விருத்தி செய்வதற்கு பல வழி களிலும் உதவி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### வங்கித் துறையின் புத்துயிர்ப்பு

கடந்த மூன்று தசாப்த காலமாக தொடர்ச் சியாக நடைபெற்ற யுத்த நெருக்கீடுகள் தனியார் துறையினரின் பெறத்தகு நிதிச் சேவை அடைவுகளை பல்வேறு மட்டங் களில் வடக்கு கிழக்கில் மட்டுப்படுத்தி யிருந்தன. வங்கிகளது பாதுகாப்புக் கருதி வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுப் படுத்தப்பட்டிருந்த சேவைகளை தற் போது மீண்டும் விஸ்தரிப்பதற்கான அனு மதியினை நிதி அமைச்சு மத்திய வங் கியூடாக வழங்கி வருகின்றது. கிழக்கில் கொக்கட்டிச் சோலை, வாகரை, கரடிய னாறு, மண்டூர் போன்ற மிகவும் ஒதுக்க மாயுள்ள பிரதேசங்களிலிருந்து 40 கிலோ மீற்றருக்கு மேல் பயணித்து மேற் கொள்ள வேண்டியிருந்த கொடுக்கல் - வாங்கல் நடவடிக்கைகளை, இன்று மக் களின் காலடியில் பெறக்கூடிய வாய்ப் புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2006 இல், வடக்கு, கிழக்கில் செயற்பட்டு வந்த 410 வங்கிக் கிளைகள் உள்ளிட்ட வங்கிப் பிரிவுகள் 2009 மூன்றாவது காலாண்டுப் பகுதியில் 640 ஆக அதிகரித்து, 56 வீத வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது. மேலும் 2010 முதல் அரையாண்டுப் பகுதி யில் வடக்கில் 20 புதிய வங்கிச் சேவைக் கூறுகளும், கிழக்கில் 40 புதிய வங்கிச் சேவைக் கூறுகளும் ஆரம்பிக்கப்பட்டிருந் தன. மாவட்ட ரீதியாக வங்கி வலைய மைப் பில் ஏற்பட்ட விஸ்தரிப்பினை அட்ட வணை 1 காட்டி நிற்கின்றது.

அட்டவணை 1: 2006 - 2009 வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனுமதிபெற்ற மற்றும் விசேட வங்கிகளின் விரிவாக்கம்

| | மாவட்டம் | மொத்தக் கிளைகள் & வங்கிச்சேவை நிலையங்கள்* | | | |
|---|---|---|---|---|---|
| | | 2006 | 2007 | 2008 | 2009 |
| 1 | அம்பாறை | 121 | 172 | 184 | 192 |
| 2 | மட்டக்களப்பு | 58 | 61 | 72 | 82 |
| 3 | யாழ்ப்பாணம் | 123 | 163 | 176 | 190 |
| 4 | கிளிநொச்சி | 5 | 12 | 13 | 13 |
| 5 | மன்னார் | 14 | 19 | 22 | 25 |
| 6 | முல்லைத்தீவு | 4 | 10 | 11 | 11 |
| 7 | திருகோணமலை | 63 | 76 | 80 | 85 |
| 8 | வவுனியா | 22 | 31 | 33 | 42 |
| | மொத்தம் | **410** | **544** | **591** | **640** |

***குறிப்பு: * விரிவாக்க அலுவலகங்கள், அடகு நிலையங்கள், மாணவர் சேமிப்பு அலகுகள், கொடுப்பனவு அலுவலகங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.***

***மூலம்:*** Central Bank Statistics
(http://www.cbsl.gov.lk/htm/english/08_stat/s_6.html)

வங்கிகளின் கிளை விரிவாக்கத்தை நோக்குகையில், இலங்கை வங்கி, 2008 இல் 55 ஆக இருந்த தமது கிளைகளை 2009 இல் 77 ஆகவும், மக்கள் வங்கி 72 ஆக இருந்த கிளைகளை 85 ஆகவும், சம்பத் வங்கி 06 ஆக இருந்த கிளைகளை 20 ஆகவும் அதிகரித்ததோடு, DFCC வர்தனா, தேசிய அபிவிருத்தி வங்கி, பான் ஆசியா வங்கி, யூனியன் வங்கி, லங்கா புத்ர போன்ற வங்கிகள் புதிதாக தமது வங்கிக் கிளையினை 2009 இல் முறையே இரண்டு, நான்கு, இரண்டு ஒன்று, இரண்டு, ஒன்று என்னும் அடிப்படையில் நிறுவியுள்ளன. 2008 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியில் மாகாண ரீதியாக விரிவாக்கம் செய்யப்பட்ட வங்கிக் கிளைகளினதும், புதிய வங்கிகளினதும் எண்ணிக்கைகள் அட்டவணை 2 இல் உள்ளவாறு விஸ்தரிக்கப்பட்டிருந்தன.

மேலும் 2009 வரை எந்தவொரு வெளிநாட்டு வங்கிகளது கிளைகளும் வடக்கு, கிழக்கில் திறக்கப்படாத நிலையில் 2010 ஆம் ஆண்டில் HSBC யாழ்ப்பாணத்திலும், HABIB வங்கி கிழக்கிலும் அதனது சேவையை விஸ்தரித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மத்திய வங்கியானது தனது நிதியீட்டத்தைச் செய்யும் நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பை பேணுவதற்காகவும், அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் மற்றும் கிடைக்கப்பெறும் வளங்களை பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ப வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு, நிதி நிறுவனங்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் தனது நான்காம், ஐந்தாம் மாகாண அலுவலகங்களை முறையே வடக்கிலும், கிழக்கிலும் 2010 ஆம் ஆண்டில் நிறுவியுள்ளது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் வங்கித் துறையின் சேவை விஸ்தரிப்பில் இது மற்றுமொரு பரிணாமமாகும்.

அரசாங்கம், அரச மற்றும் தனியார் வங்கிகளை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை நிதியமைச்சு துரிதப்படுத்திய போதிலும், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது, சனத்தொகைக்கு ஏற்ப சேவை வழங்கும் வங்கிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்தில் 3831 மக்களுக்கு ஒரு வங்கி என்னும் அடிப்படையில் 658 வங்கிக் கிளைகளைக் கொண்ட வங்கிச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதோடு, வங்கி அடர்த்திச் சுட்டி 26 வீதமாகவும் காணப்படுகிறது. பொலநறுவை அம்பாந்தோட்டை போன்ற பின் தள்ளப்பட்ட பிரதேசங்களில் வங்கி அடர்த்திச் சுட்டி முறையே 13, 14 வீதங்களாக காணப்படும் அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாடிக்கையாளரின் செறிவிற்கேற்ப வங்கிச் சேவைகள் போதியளவு விஸ்தரிக்கப்படாமையை அட்டவணை 3 இல் காட்டப்பட்ட தரவுகள் உறுதி செய்கின்றன.

## பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடு

கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது, அரசானது தனது விஸ்தரிக்கப்பட்ட வங்கி வலையமைப்பினூடாக பாரிய அளவிலான நிதியினை குறைந்த வட்டி வீதத்தில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கி வருகின்றது. அதன் ஒரு அங்கமாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2008 முற்பகுதியில் கிழக்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு வடக்கில் 2009 நடுப்பகுதியில் அதன் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இத்திணைக்களத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி, வர்த்தகம், சுற்றுலாத்துறை, சுய தொழில் வாய்ப்பு போன்ற துறைகளின் அபிவிருத்திக்காக முதலீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மறுவகையில் யுத்தத்தால் அழிக்கப்பட்ட வீடுகளை மீள் கட்டமைத்தல், வாகனங்களைக் கொள்வனவு செய்தல் முதலான நடவடிக்கைகளுக்காக நீண்டகாலக் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திணைக்களத்தினால் வடக்கு கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்காக 2009 இல் பாரியளவு நிதிச் சொத்து முதலிடப்பட்டதை அட்டவணை 4 இல் காட்டப்பட்ட முதலீட்டுத் தொகைகள் உறுதி செய்கின்றன.

கிழக்கு மாகாணம் 2008 இல் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலவிய, முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமை, இம்மாகாணத்திற்கு நிதிப் பாய்ச்சலை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

அட்டவணை 2: 2008 - 2009 வரை வடக்கு, கிழக்கில் வங்கிக் கிளை விரிவாக்கம்

| வங்கியின் பெயர் | 2008 | 2009 |
|---|---|---|
| இலங்கை வங்கி | 55 | 77 |
| கொமர்சல் வங்கி | 09 | 9 |
| ஹற்றன் நசனல் வங்கி | 16 | 19 |
| மக்கள் வங்கி | 72 | 85 |
| சம்பத் வங்கி | 6 | 20 |
| செலன் வங்கி | 7 | 7 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதி | 2 | 2 |
| இலங்கைக் கூட்டுத்தாபன வங்கி | | |
| தேசிய சேமிப்பு வங்கி | 24 | 26 |
| சனச அபிவிருத்தி வங்கி | 6 | 7 |
| அனைத்துப் பிராந்திய வங்கிகளும் | 11 | 11 |
| மொத்தம் | **208** | **263** |

***மூலம்:*** Central Bank Statistics
(http://www.cbsl.gov.lk/htm/english/08_stat/s_6.html)

2008இற்கான வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் ஓர் அங்கமாக 2008 ஆம் ஆண்டு 4732 சிறு முயற்சியாளர்கள் நன்மையடையும் வகையில் ரூபா 52.1 மில்லியன் வறுமைத் தணிப்பிற்கான சுழற்சி முறை சிறு கடன்களாக வழங்கப்பட்டிருந்தன. இவை தவிர, கிராமியக் கொடுகடன் திட்டம், வறுமை ஒழிப்புச் சிறுகடன் செயற்திட்டம், சுழற்சி முறை நிதியம், ஐரோப்பிய முதலீட்டு வங்கித் திட்டம், சுசகன-11 மற்றும் கிருசி நவோதய திட்டம் போன்றவற்றின் ஊடாக மேட்டு நிலப்பயிர் செய்கை, விலங்கு வேளாண்மை, மீன்பிடி, வியாபாரம், சுற்றுலா மற்றும் சுயதொழில் வாய்ப்பு முதலான நீண்டகாலச் செயற்திட்டங்களுக்கு ரூபா. 432.7 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. சுழற்சி முறைத் திட்டத்தின் கீழ், இம் முதலீடுகள் தொடர் முதலீடாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் 6 மாத சலுகைக் காலத்துடன் 9 சதவீத சலுகை வட்டி வீதத்தில் பாதிப்பிற்குள்ளான ஒருவருக்கும் ரூபா 250,000 வரை, மொத்தமாக 423.7 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர சுழற்சி முறை நிதியத்தில் 2008 இல் 250,000 பெறுமதியான 2262 கடன்களும், 2009 டிசம்பர் இல் ரூபா 147 மில்லியன் தொகை கொண்ட 1123 கடன்களும் வாழ்வாதார மேம்பாட்டிற்காகப் பெறப்பட்டிருந்தன (இலங்கை மத்திய வங்கி, 2009). வறுமைத் தணிப்பு விசேட சிறுகடன் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்திலுள்ள சிறு முயற்சியாளர்கள் நன்மையடையும் வகையில், 2009 இறுதிவரை 27086 சிறு தொழில் முயற்சிகளுக்காக ரூபா 175 மில்லியன் பெறுமதியான கடன்கள் வங்கிகள் ஊடாக வழங்கப்பட்டிருந்தன.

2009 மே மாதம் வட மாகாணம் விடுவிக்கப்பட்டதைத்தொடர்ந்து, வங்கித் துறையின் நடவடிக்கைகளால் தொழில் துறை விருத்திகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயம், விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, வர்த்தகம் மற்றும் சிறுதொழில் முயற்சிகளின் மீட்சிக்காக "வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களில் ரூபா 3 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 6 மாத சலுகைக் காலத்துடன் 9 சதவீத சலுகை வட்டி வீதத்தில் ரூபா 200000 பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக இத்திட்டம் மத்திய வகுப்பினரின் முதலீட்டினை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு யூலை தொடங்கிய வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் டிசம்பர் இறுதி வரை துறை சார்ந்த வகையில் வழங்கப்பட்ட கடன் களும் அவற்றின் தொகையும் அட்ட வணை 5 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3: சனத்தொகைக்கு ஏற்ப வங்கிகளின் அடர்த்தி

| மாவட்டம் | வங்கி ஒன்றிற்கான சனத்தொகை | வங்கி அடர்த்திச் சுட்டெண் |
|---|---|---|
| மட்டக்களப்பு | 10,327 | 10 |
| திருகோணமலை | 11,152 | 09 |
| முல்லைத்தீவு | 35,800 | 03 |
| கிளிநொச்சி | 35,800 | 03 |

மூலம்: Central Bank Statistics (http://www.cbsl.gov.lk/htm/english/08_stat/s_6.html)

இவை தவிர இத்திட்டத்தின் கீழ், 2010 முதல் அரையாண்டுப் பகுதிவரை மேலும் 676 மில்லியன் ரூபா பெறுமதியான கடன்கள் 4928 மத்தியதர முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக இக்கடன்கள் குறுங்கால மீட்சியை இலக்காகக் கொண்டு விடுவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## விவசாயத் துறை அபிவிருத்தி

கடந்த கால யுத்தத்தின் காரணமாக சுமார் 323,000 ஹெக்டயர் விவசாய நிலப்பரப்புகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக சாகுபடியில் இருந்து கைவிடப்பட்டிருந்தன. வடக்கு, கிழக்கு விடுவிக்கப்பட்ட பின் கைவிடப்பட்ட நிலையிலிருந்த நிலங்களை மீள்சாகுபடிக்கு உட்படுத்தும் திட்டத்தினை விவசாயத் திணைக்களம் "வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அபிவிருத்திக் கடன் திட்டத்தின்" மூலம் மீட்டெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. வடக்கு, கிழக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாகவும் இம் மாவட்டங்களில் நிலவும் சமாதான சூழலின் காரணமாகவும் 2010இல் தேசிய நெல்லுற்பத்தி 17.5 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும், கால்நடை உற்பத்தி 2.9 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் புள்ளி விபரத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அனைத்தையும் உள்ளடக்கிய புதிய கிராமிய அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ், 2008/2009 ஆம் ஆண்டு பயிர்ச் செய்கைக்காக 1943 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டிருந்தது. இதில் 60 வீதமானவை நெற்சாகுபடிக்காக வழங்கப்பட்டுள்ளன. மேலும் இக்கடன் திட்டத்தின் கீழ் பெரும்போகம் மற்றும் சிறுபோக நெற்செய்கைக்கும் உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற பணப் பயிர்ச் செய்கைக்கும் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதேபோன்று "கிறுஷி வசந்தம்" *(Krushi Navodaya)* திட்டத்தின் கீழ் 8 வீத குறைந்த வட்டியில் விவசாயிகள் கடனைப் பெறுவதற்கான வசதிகளும், வாய்ப்புகளும் ஏற்படுத்திக்

அட்டவணை 4: 2009 இல் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான செலுத்தப்பட வேண்டிய கடன் திட்டங்கள்

| கடன்வழங்கல் திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு |
|---|---|
| வடக்கின் எழுச்சி விசேட மீள் நிதியளிப்புக் கடன் திட்டம் | ரூபா. 3 பில்லியன் |
| கிழக்கின் உதயத்தின் ஊடான கிழக்கு மாகண அபிவிருத்திக்கான சுழற்சி நிதியம் | ரூபா. 1 பில்லியன் |
| கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டம் | ரூபா. 5 பில்லியன் |
| கிருஷி நவோதயத் திட்டம் | ரூபா. 3 பில்லியன் |
| வறுமை ஒழிப்பு நுண்நிதிச் செயற்திட்டம் (சுழற்சி நிதியம்) 2009-2013 | ரூபா. 3 பில்லியன் |
| வறுமை ஒழிப்பு நுண்நிதிச் செயற்திட்டம் II | JPY 2.1 பில்லியன் |

மூலம்: Central Bank of Sri Lanka, 2009.

அட்டவணை 5: 2009 ஜ"லை - டிசம்பர் லரை வடக்கின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியங்கள்

| துறை | நிதி ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வியாபாரமும் ஏனைய சுய தொழில் செயற்பாடுகளும் | 215 | 1,285 |
| விவசாயமும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளும் | 141 | 1,081 |
| கால்நடை அபிவிருத்தி | 136 | 1,126 |
| நுண் மற்றும் சிறு தொழில்முயற்சிகள் | 56 | 496 |
| மீன்பிடியும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளும் | 36 | 365 |
| மொத்தம் | **584** | **4,353** |

மூலம்: Central Bank of Sri Lanka, 2009.

கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் கிழக்கில் விவசாயத் துறையின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, விவசாயத் துறையில் தொழில்நுட்ப விரிவாக்கத்திற்கான பெறுமதி வாய்ந்த இயந்திரங்களது கொள்வனவிற்காக இலங்கை வங்கியானது பாரிய முதலீட்டை வழங்கி வருகின்றது. 4.7 மில்லியன் பெறுமதியில் 85 நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான நிதிகள் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு, விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பண்ணையாளர்களுக்கு உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல், பால் பதப்படுத்துதல், சேகரிப்பு மையங்களை நிறுவுதல் முதலான செயற்பாடுகளுக்காக ரூபா 10 பில்லியன் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதுவரை கிழக்கில் பால் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றின் விருத்திக்காக 70 மில்லியன் ரூபா மாத்திரம் கடனாகப் பெறப்பட்டுள்ளமையும், மீதி இன்னும் பயன்படுத்தப்படாதுள்ளமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும். மக்கள் வியாபார அறிக்கையை தயாரிப்பதில் பின்னடைவினை காட்டுவதே இந் நிலைக்கான பிரதான காரணமாக வங்கி முகாமையாளர்களால் குற்றஞ்சாட்டப்படுவதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

வடக்கு, கிழக்கின் இரண்டாவது முதன்மை வாய்ந்த துறையாக மீன்பிடி விளங்குகின்றது. மீன்பிடித்துறையின் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு கடன் திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன. இக்கடன் திட்டத்தின் கீழ் மீன்பிடி உபகரணம், வெளியிணைப் படகுகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 250,000 மிகக் குறைந்த வட்டியான 4 வீதத்தில் 10 வருட தவணை கட்டண அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது. யுத்த மீட்சிக்காக வங்கிகளால் விடுவிக்கப்பட்ட கடன் தொகைகள் அதி குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்படும் கடனாக இது அமைவது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் விருத்திக்காக தனிநபர் ஒருவருக்கு 60 மில்லியன் வரையான கடன் தொகை 8.5 வீத வட்டியிலும் வழங்கப்பட்டு வருவது உயர்தர முதலீட்டிற்கு வழிவகுப்பதாக அமையும். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை யடுத்து மன்னார், வவுனியா போன்ற நன்னீர் மீன் உற்பத்திக்கு உகந்த பிரதேசங்களது பங்களிப்பின் காரணமாக தேசிய மீன் உற்பத்தி 2010இல் 12.2 வீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது (தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2010).

வடக்கு, கிழக்கில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக குறுங்கால, மத்திய மற்றும் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கிழக்கில் பாசிக்குடா, நிலாவெளி முதலான இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்காக 650 படுக்கை அறைகளை விருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாச் சவாரிக்கான வாகனத்தைக் கொள்வனவு செய்தல் போன்ற முதலீடுகளுக்காக இலங்கை வங்கி கடன்களை வழங்கி வருகின்றது. இவை தவிர சுற்றுலா விடுதிகளுக்கு இறைச்சி, முட்டை, மரக்கறி முதலான பொருட்களை வழங்கல் செய்தல், யோகாசனம், ஆயுர்வேதம் முதலான துணைச் சேவைகள் முதலானவற்றின் விருத்திக்காகவும் கடன்கள் வழங்கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் பல் முனைகளில் சுற்றலாத்துறையின் அபிவிருத்திக்கு வங்கிகள் உதவிவரும் அதே வேளை யாழ் குடாநாட்டின் கரையோரங்களில் கண்ணிவெடி அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, இத்திட்டம் வடக்குப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## விசேட வறுமைத் தணிப்புத் திட்டம்

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன், குடும்பமொன்றை உற்பத்தி அலகாகவும், நுகர்வலகாகவும் கருதி வறுமைத் தணிப்பு நுண்கடன் திட்டம் (PAMP) வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மாத்திரமன்றி, தெரிவு செய்யப்பட்ட 14 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 5 - 10 வறிய குடும்பங்கள் தமக்கிடையே ஒரு குழுவாக இணைந்து ரூபா 50,000 ரூபா வரை எந்தவித பிணையுமின்றி 8 வீத வட்டிக்கு இக்கடன் உதவியை பெற முடியும். இத்தகைய கடன் வசதியானது வறுமைத் தணிப்பினூடாக வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதில் கணிசமான பங்களிப்பினை நல்கியதோடு குழுரீதியான ஒருங்கிணைந்த வெளிப்பாட்டிற்கும் அடிப்படையாக அமைகிறது. மேலும் ஏனைய கடன் திட்டங்களோடு ஒப்பிடுகையில் இக்கடன் திட்டமானது வடக்கு, கிழக்கில் அனேகமாக 100 வீதம் வெற்றியளித்துள்ளதாகக் கிழக்குப் பிராந்திய இலங்கை வங்கி முகாமையாளர் குறிப்பிடுகின்றார். பொதுவாக வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்வதில் படிப்பறிவில்லாத பாமர மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். கடன் பெறுவதற்கான நிபந்தனைகளை பாமர மக்கள் பூர்த்தி செய்ய முடியவில்லை. இவ்வாறான நிலையில் குறைந்த நிபந்தனையின் பேரில் இக்கடன் வழங்கப்படுவதற்கு ஒருங்கிணைந்த குழுவின் கூட்டுப் பொறுப்பே அடிப்படையாக அமைகிறது.

## ஏனைய சமூக சேமநலச் செயற்பாடுகள்

வங்கிகள் வடக்கு, கிழக்கில் வாழ்வாதார தொழில் முயற்சிக்கான கடனுடன் இணைந்த வகையில் பல்வேறு துணைச் சேவைகளையும் வழங்கி வருகின்றன. சனச, இலங்கை வங்கி போன்றவை சுனாமி போன்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மானிய வீடுகளை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. மத்தியதர வர்க்கத்தினரின் அடிப்படைக் கட்டமைப்பிற்கு ஏற்பட்ட இழப்புகளை புனரமைக்கும் நோக்கோடு மிகக்குறைந்த 4 வீத வட்டி அடிப்படையில் 1 மில்லியன் ரூபா வரையிலான கடன்களை வங்கிகள் வழங்கி வருகின்றன. தொழில் முயற்சிக்கான வாகனம், காணி, உபகரணம் முதலானவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 8-12 வீத வட்டியில் குத்தகைக்கான நிதியினைக் கடனாக வழங்குகின்றன. இவை தவிர 8-13 வட்டி வீதத்தில் தொழில்வல்லுநர்களுக்கான கடன்களையும் வங்கிகள் வழங்குகின்றன. இங்கு 2010இல் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் தொகையானது 39.6 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்படக்கூடிய விடயமாகும். மேலும் வீட்டுத்துறை, வியாபார நிலையங்கள், கட்டடங்கள் போன்ற சொத்து விருத்தி நடவடிக்கைகளுக்கு அதிகளவு கடன் வழங்கப்பட்டுள்ளமையையும் காணலாம்.

வங்கித்துறையின் சேவையில் இன்னுமொரு சமகால பரிணாமமாகக் காணப்படுவது அடகுச் சேவையாகும். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட அடகுச் சேவைகள் மிகவும் இலகுபடுத்தப்பட்டதோடு இன்றைய தங்கப் பவுணின் பெறுமதிக்கு மிக அண்மிய தொகையான (ரூபா 40,000) வரை போட்டி அடிப்படையில் கடனாக வழங்கப்படுகின்றது. இவை தவிர வங்கிகள் தமது நம்பிக்கையான வாடிக்கையாளருக்கு ஆயுட் காப்புறுதிகளையும், ஒப்பந்தக்காரர்களுக்கு பிணைப் பத்திரங்களையும் வங்கிகள் வழங்குகின்றன. வாடிக்கையாளர்களின் குழந்தைகளுக்கான புலமைப் பரிசில், வெளிநாட்டுக்கான இலவச புலமைப்பரிசில், பொது நிகழ்வுகளுக்கான நன்கொடை எனப் பல்வழி நலனோம்பு மானியங்கள் வங்கிகளால் வழங்கப்பட்டு வருகின்றன.

## சவால்களும் வாய்ப்புக்களும்

மக்களும் வங்கிகளும் நெருக்கீடுகள் இன்றி சுயமாகச் செயற்படக்கூடிய ஆரோக்கியமான சூழ்நிலை இன்று உருவாக்கப்

பட்டுள்ளது. அதேவேளையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் வாழ்வாதார மற்றும் அடிப்படைக் கட்டமைப்புக்களின் புனரமைப்பு தேசிய மட்ட பங்கேற்பில் காலதாமதம் அற்றதும், துரிதப்படுத்தப் பட வேண்டிய அத்தியாவசிய சேவை யாக விமர்சிக்கப்படுகின்றது. மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக தொடர்ச் சியாகவும், ஒரே நேரத்திலும் மானிட அனர்த்தங்களால் மட்டுமன்றி இயற்கை அனர்த்தங்களாலும் ஏற்பட்ட பாரிய அழி வுகளையும், சிதைந்த வலையமைப்பினை யும் குறுங்காலத்தில் மீள்கட்டியமைத்தல் என்பது சாதாரண விடயமல்ல. அந்த வகையில் வங்கித் துறையானது பிரதேச அபிவிருத்தி எனும் சமகால நோக்கை அடைந்து கொள்வதில் பின்வரும் சவால் களில் இருந்து மீள்வதற்கான தந்திரோ பாயத்தைக் கைக்கொள்ளுதல் இன்றிய மையாததாகும்.

- யுத்த அழிவுகளால் கடந்த 30 ஆண்டு களில் பெற்ற கடனை வட்டியுடன் மீள் செலுத்த முடியாத வாடிக்கையா ளர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியோர் பட்டியலினுள் உள்ளடக் கப்பட்டுள்ளதால் மீண்டும் கடனைப் பெறும் தகுதியை இழந்துள்ளமை புதிதாக கடனைப் பெறுவதற்கு வங் கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக் கும் இடையே இடைவெளிகளைத் தோற்றுவித்துள்ளன. இவ்வாடிக்கை யாளர்களை மீண்டும் இணைத்துக் கொள்வதற்காக நிபந்தனையுடன் கூடிய புதிய தந்திரோபாயம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். முகமட் யுனிஸ் போன்றவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட High Way Theory போன்றவற்றைப் பின்பற்றல் தீர்வாக அமையும்.

- யுத்த அனர்த்த மீட்சித் திட்டத்தின் கீழ் வங்கிகள் ஊடாக கடன்களைப் பெற்று தொழில் முயற்சியினை மீள ஆரம்பித்த முயற்சியாளர்களில் சிலர் 2010/2011ஆம் ஆண்டின் பெரு வெள் ளம் போன்ற இயற்கை அனர்த்த அழிவுகளுக்கு உட்பட்டுள்ளமையா லும், அவ்வாறான வேளைகளில் முறையான காப்புறுதித் திட்ட நடை முறையின்மையாலும் கடனாகப் பெற்ற நிதிச்சொத்தை வங்கிகளுக்கு மீள் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் வங் கிகளின் திரவச் சொத்துக்கு ஏற்பட் டுள்ள முடக்கம் வங்கிகளின் நிதிச் சுழற்சியில் எதிர்மறைச் செல்வாக் கைச் செலுத்துகின்றது. இவ்வாறான தொடர் அனர்த்த வாய்ப்புள்ள சூழ லில் முதலிடுவதற்கு, பங்களாதேஷில் உள்ள கிறமின், விறாக், ஆசா போன்ற தாபனங்களைப் போன்று, இலங்கை யில் கட்டாயக் காப்புறுதித் திட்டத் தினை அமுல்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளருக்கும், வங்கிகளுக் கும் காப்பரண் அமைக்க முடியும்.

- வடக்கு, கிழக்கில் பல புதிய வங்கி கள் தோற்றம் பெற்று வங்கிச் சேவையை விஸ்தரிக்க முன்வந்த போதிலும், புதிய வாடிக்கையாளரை குறுங்காலத்தில் இணைத்துக் கொள் ளுதல், நம்பகத் தன்மையை மதிப் பிடுதல் என்பன குறுங்கால மீள் கட்டுமான செயற்பாட்டிற்கு மற்று மொரு சவாலாக அமைகின்றது. பிர தேச மட்ட மீள்பெறுகையில் பிரதேச செயலகங்கள் முக்கிய பங்காளர் நிறு வனமாகச் செயற்படுவதாலும், தனி நபர் விபரங்களை உறுதிப்படுத்தும் அதிகாரம் அளிக்கப்பட்டவராக அமை வதாலும் பிரதேச செயலாளரின் சிபார்சின் பேரில் புதிய வாடிக்கையா ளரை அறிமுகம் செய்யும் திட்டத் தினை அறிமுகப்படுத்தல் மற்றும் குழுமுறை பிணைத்திட்டத்தினை ஏற் றுக் கொள்ளுதல் முதலானவை வாடிக்கையாளரின் தராதர நம்பிக் கையை குறுங்காலத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இலகுவாக அமை யும்.

- வாழ்வாதாரச் சொத்துக்கள் அனைத் தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட மக்களிடம் மீள்பெறுகைக் கடன் களுக்காக எதிர்பார்க்கப்படும் நிலை யான சொத்துக்கள் மற்றும் ஆவணங் களின் மூலப்பிரதிகள் முதலானவற் றைச் சமர்ப்பிப்பதில் பல்வேறு சிர மங்கள் வாடிக்கையாளர்களால் எதிர் கொள்ளப்படுகின்றன. இதனால் வங் கிச் சேவையை பெறுவதில் இருந்து வாடிக்கையாளர்கள் புறந்தள்ளப்படு கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆள் உத்தரவாத முறையினை வங்கி கள் ஏற்றுக்கொள்ளுதல் பொருத்த முடையதாகும்.

- கடந்த காலங்களோடு ஒப்பிடும்போது, வங்கித்துறையானது தனது சேவை யினை பல இடங்களுக்கும் விஸ் தரித்திருந்த போதிலும் குறிப்பிட்ட சில கிராமப்புறங்கள் வங்கிச் சேவையை பெறுவதற்கு பல மணித்தியாலங்கள் செலவிட வேண்டியுள்ளது. பொது மக்களினது மட்டுமல்லாது வங்கித் துறை சார்ந்தவர்களதும் முக்கிய வேண்டுகோளாகச் சேவை விஸ் தரிப்பு முன்மொழியப்பட்டது. மக் களின் காலடியில் இச்சேவையை கிடைக்கச் செய்யும் போது, மேலும் வங்கிச்சேவை வலுப்பெறும் என்ப தில் ஐயமில்லை. எனவே புதிய வங் கிகளது உருவாக்கத்திற்கும், உரு வாக்கப்பட்ட வங்கிக் கிளைகளது விஸ்தரிப்பிற்கும் மத்திய வங்கியும் குறிப்பிட்ட வங்கிகளது தலைமைத் துவமும் கவனம் செலுத்துதல் பொருத்தமுடையதாக இருக்கும்.

- உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை குறுங்காலத்தில் அதிகரிக்கும் நோக் கோடும், முதலீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வாகும் வகையிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெளிமாவட் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ், 50 நபர்களுக்கு மேல் வேலைவாய்ப்பினை வழங்கும் முத லீட்டாளருக்கு சலுகை அடிப்படையி லான இலகு கடன்கள் விடுவிக்கப் படுகின்றன. வெளிமாவட்ட முதலீட்டா ளரை உள்ளீர்ப்பதால் உள்ளூர் வளச் சுரண்டல் மற்றும் உள்ளூர்வாசிக ளுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படு தல் போன்ற எதிர்மறை விளைவுக ளால் உள்ளூர் வாசிகள் புறந்தள்ளப் படுவதாக விமர்சிக்கப்படுகிறது. பாதிப் பிற்குள்ளான பிராந்தியத்திலுள்ள வாடிக்கையாளருக்கு முன்னுரிமை வழங்குதல், வள இயலளவுக்கு ஏற்ப புதிய தொழில் விருத்திக்கு அனுமதி வழங்குதல், உள்ளூர் தொழிலாளருக்கு வேண்டிய இயலளவு விருத்திக்கான பயிற்சியினை வழங்குதல் போன்ற வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

- அழிவிற்குப் பின்னரான அபிவிருத் தியை கருத்தில் கொண்டு வங்கித் துறையானது செயற்பட்டு வரும் வேளையில் குறைந்த வட்டிவீதக் கடன் வழங்கல்களே இலகுவான வாழ் வாதார மீள் பெறுகைக்கு வழிவகுக் கும். சில கைத்தொழில் துறைசார்ந்த மற்றும் உட்கட்டமைப்பு நோக்கங் களுக்காக விடுவிக்கப்படும் கடன் களுக்கு உயர்ந்த வட்டி வீதங்களி லான கடன்களே நடைமுறையிலுள் ளதாக விமர்சிக்கப்படுகின்றது. அவை மட்டுமன்றி வங்கிகளுக்கிடையே வட்டி வீதத்திலும், அறவீட்டு முறையிலும் இறுக்கமான நடைமுறைகள் பின் பற்றப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படு கின்றது. இஸ்ரேலின் அழிவுகளை மீள்கட்டமைப்பதில் இஸ்ரேலின் இல வசக் கடன்வழங்கும் தாபனம் போன்றவற்றால் பின்பற்றப்பட்ட ஒருங் கிணைந்த இலகு கடன்திட்ட விசேட மாதிரிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இழப்பீடுகளை மீள்பெறுவ தும், முதலீட்டினை அதிகரிப்பதும் இலகுவானதாக அமையும்.

- வடக்கு, கிழக்கில் வங்கிச் சேவை ஊடாக பல்வேறு நலனுதவித் திட் டங்கள் அரசாங்கத்தால் அறிமுகப்ப டுத்தப்படுகின்றன. அவை அனைத் தும் கிராமிய மக்களை சென்றடைய வில்லை என்ற விமர்சனமும் பலதரப்

பினராலும் முன்வைக்கப்பட்டுள்ளன. வங்கிச் சேவை பற்றிய கருத்தரங்கு கள், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்றவற்றின் மூலமான விளம்பரப்படுத்தல்கள் வங்கிகளின் முதலீட்டு வலையமைப்பினை இலகு வாக விருத்தி செய்வதற்குத் துணை புரியும்.

- வங்கிகள், வணிகத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே மத்திய தர மற்றும் பாரிய கடன்களை வழங்கு கின்றன. திட்ட அறிக்கையை சரியான முறையில் தயாரித்து அனுமதியைப் பெற முடியாத முதலீட்டாளர்கள் இக் கடன் திட்டத்தால் நன்மையடைய முடியாதவர்களாகக் காணப்படுகின்ற னர். எனவே மத்தியதர மற்றும் பாரிய முயற்சியாளர்களுக்கு வியாபார திட்ட அறிக்கையை வடிவமைப்பதற் கும் நிதி, தொழில்நுட்பம், சந்தைப் படுத்தல் மற்றும் முகாமைத்துவம் போன்றவை பற்றிய உணர்வூட்டம் பெறுவதற்கும் வேண்டிய வாய்ப்புக் களை ஏற்படுத்திக் கொடுத்தல் பயனுறுதிமிக்கதாக அமையும்.

- சிறு தொழில் முயற்சிகளின் வாழ் வாதார மீள்பெறுகை திட்டத்தின் கீழ் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதி யம், வடக்கு, கிழக்கு கரையோர சமூக அபிவிருத்தித் திட்டப் பணி மனை, சரீரம் சிறிலங்கா, பிறாக் சிறிலங்கா, YMCA போன்ற நுண் கடன் தாபனங்கள் இலகுபடுத்தப்பட்ட நுண் கடன் சேவைகளை மக்களின் காலடியில் வழங்கி வருகின்றனர். நிபந்தனைகள் குறைந்ததும், குழு வலயமைப்புப் பொறிமுறையூடாக கடன் வழங்கல் மற்றும் அறவீட்டு பொறிமுறைகள் வாடிக்கையாளர் மயப்படுத்தப்பட்டதால் நிருவாகச் செலவுகளுக்கு ஏற்பட்ட மட்டுப்படுத் தல்கள் முதலானவை குறைந்த வட்டி வீதத்தில் இலகுவாக கடன்களை பெறும் வாய்ப்பினை உருவாக்கியுள் ளது. இதனால் அரச மற்றும் தனியார் முதலீட்டு வங்கிகளின் வாடிக்கையா ளர்கள் நுண் கடன் தாபனங்களை நோக்கி நகர்வடையச் செய்து வரு கின்றன. குறிப்பாக மரபு சார்ந்த பாரம் பரிய வங்கி முறையியல்களைப் பின்பற்றும் வங்கிகள் எதிர்கால நிலைத்திருப்பை பேணிப்பாதுகாக்கத் தக்கவகையில் பொருத்தமற்ற மரபு சார் கோட்பாடுகளில் இருந்து நீங்கி மக்களின் காலடியில் இலகு சேவை வழங்கல் என்னும் இலக்கோடு செயற்படுதல் இன்றைய காலத்தின் கட்டாய தேவையாக கொள்ளத்தக் கது.

## முடிவுரை

வணிக வங்கிகளானது கடன்தீர்வாற்றல் நிலையைப் பேணல் மற்றும் இலாபத் தன்மை ஆகிய இரண்டு முரண்பட்ட நோக்கங்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. யுத்தத்திற்கு பின்னரான அபி விருத்தியில் வங்கித்துறையின் பாரிய பங்களிப்பு உணரப்பட்ட நிலையில் அதி களவில் வங்கிகள் திரவத்தன்மையை பேணுதல் எனும் நோக்கத்திலேயே கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அரச மற்றும் தனியார் வங்கிகள் அதிகள வில் இலாபத்தன்மையையே நோக்காகக் கொண்டு செயற்படுகின்றனர். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு கடன் வழங்க தயக்கம் காட்டுகின்றனர். உயர் வகுப்பினருக்கு பாரிய முதலீட்டுக்கு உத வுவதன் மூலம் இலகுவில் தங்களது முதலை மீளப்பெறுவதுடன் இலாபத்தை யும் அடையமுடியும் என்பதிலேயே ஆர் வமாக காணப்படுகின்றனர். எனவே இந் நிலை மாறுபடும் போதே யுத்தத்திற்கு பின்னரான பிராந்திய அபிவிருத்தியில் வங்கித்துறையின் பங்களிப்பு முழுமை பெறும்.


## நன்றிகள்

இக்கட்டுரையினை சிறப்பாக வடிவமைப்ப தற்கு பல ஆலோசனைகளையும் அநுப வங்களையும் பகிர்ந்து கொண்டமைக் காக அபிவிருத்திக்கான பருத்தித்துறை நிறுவனத்தின் முதன்மை ஆய்வாளர் கலா நிதி. முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன் அவர் களுக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் இக்கட்டு ரையை வடிவமைப்பதற் காக பல வழிகளில் ஆலோசனைகளை யும் அறிவுரைகளையும் வழங்கிய கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர், கலாநிதி. சிதம்பரப்பிள்ளை அமலநாதன் அவர்களுக்கும், தரவுகளை தந்துதவிய வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வங்கி முகாமையாளர்களுக்கும் கட்டுரை ஆசிரியர்களாகிய நாம் நன்றிகூறக் கட மைப்பட்டுள்ளோம்.


**References:**


Central Bank of Sri Lanka (Various years). Annual Reports

Central Bank of Sri Lanka (2009) Statistics (http://www.cbsl.gov.lk/htm/english/08_stat/s_6.html)

Department of Census and Statistics (2010). www.statistics.gov.lk.

Department of Censes and Statistics (2010). Press Note on Annual Estimates of Gross Domestic Product (GDP) 2010, www.statistics.gov.lk.

Economic Review (2010), "Development of North & East of Sri Lanka", 35 (11&12) February-March, Colombo.

Sarvananthan Muttukrishna (2008). The Economy of the Conflict Region: from economic embargo to economic repression, Point Pedro (Sri Lanka): Point Pedro Institute of Development.

Sarvananthan Muttukrishna (2007). Impact of Security Measures on Livelihoods in the Eastern Province: A Pilot Study, PPID Working Paper Series, No.8, December, Point Pedro Institute of Development, Point Pedro.

The Israel Free Loan Association – IFLA http://www.freeloan.org.il (access on 18.02.2011).



**.............22 ஆம் பக்கத் தொடர்ச்சி**



Economic Outlook", April 2010.

International Lobour Organization (1998). "The Social Impact of Asian Financial Crisis", Bangkok, ILO Regional Office, 66 p.

Karunatilake, H. N. S. (1986). The Banking and Financial System of Sri Lanka, Centre for Demographic and Socio Economic Studies, Colombo, p.8.

Montes F Manuel (1998). "Global Lessons of the Economic Crisis in Asia Pacific".

Moreno, Ramon, Pasadilla, Gloria, and Remolona, Eli (1998). "Asia's Financial Crisis-Lessons and Policy Responses, San Francisco: Center for Pacific Basin Monetary and Economic Studies.

Pasadilla, Gloria O. (2001). "Soundness of Financial Institutions and Economic Growth: Lessons from the Asian Financial Crisis, Kuala Lumpur, The SEACEN Research and Training Centre, 65 p.

Prelis, Moksevi (1998) "The Asian Financial Crisis: Sri Lanka", Journal of Development Finance, Association of Development Financing Institutions in Asia and the Pacific, pp 60-67.

Rivin (1998). Remarks on Lessons Drawn from the Asian Financial Crisis", BIS Review 38, 5-11 pp.

The Economist (2011). "Postmortems on Financial Crisis, the Official Verdict", 8 February 2011, p 83.

Tomas J.T. Balino and Angel Ubide (1999). "The Korean Financial Crisis of 1997- A Strategy of Financial Sector Reforms", International Monetary Fund.

Wikipedia, the free Encyclopedia (2011). Sub Prime Mortgage Financial Crisis, 1997 Asian Financial Crisis, Global Financial Crises.

Yue, Chia Siow (1998). "The Asian Financial Crisis- Singapore's Experience and Response", Asian Economic Bulletin, 15(3): 297-308.

Zhuang, Juzhong (2003). "Lessons of the Asian Financial Crisis : What Can an Early Warning System Model Tell Us?", Asian Development Review, 20(1): 100-113.

# இலங்கைப் பொருளாதாரத்தில் அரச வங்கிகளின், விசேடமாக மக்கள் வங்கியின், வகிபாகம்


**கலாநிதி. உபாலினி அஜிதா தென்னக்கோன்**

*பொருளியல் துறை*

*களனிப் பல்கலைக்கழகம்*



**சாராம்சம்**

1961 ஜூலை 1 ஆம் திகதியன்று நிறுவப்பட்ட மக்கள் வங்கியானது இத்தேசத்திற்கான தனது பெறுமதிவாய்ந்த சேவை வழங்கலின் 50 ஆவது வருட பூர்த்தியை 2011 ஆம் ஆண்டில் நிறைவு செய்கின்றது. மக்கள் வங்கி அமைக்கப்பட்டமையானது இலங்கையில் வங்கிச் செயற்பாடுகளுக்கு முற்றிலும் புதியதோர் பரிமாணத்தை வழங்கியது. அப்போதிருந்து இதுவோர் நெடும் பயணமாக இருந்து வருவதுடன், இன்றைய வங்கிச் செயற்பாடுகளின் ஒவ்வொரு துறையையும் சூழ்ந்திருப்பதற்காக அதனுடைய அளவிலும், மேன்மை நிலையிலும் வளர்ச்சியடைந்து, இலங்கையின் முதன்மையான அரச துறை வங்கியாக ஓர் தெளிவான அடையாளத்தை அது பதித்துள்ளது. இலங்கைப் பொருளாதாரத்தில் அரச வங்கிகளின், விசேடமாக மக்கள் வங்கியின் வகிபாகத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலங்கை மக்களின் சமூகக் கட்டமைப்புடனும், பெருமளவுக்கு பொருளாதாரத்துடனும், இந்த வங்கியானது இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை கடந்த காலத்தில் அது தொடர்ந்தும் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளது. பல்வேறு வகைப்பட்ட வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதுடன், எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுப்பதன் பொருட்டு, புத்தாக்க உபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும், புதிய சந்தை வாய்ப்புகளை தன் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துவதற்காகவும் இந்த வங்கி புதிய வணிக வாய்ப்புகளை இனங்காண வேண்டியுள்ளது. சமூகத்தின் ஏழ்மை நிலையிலுள்ள பிரிவினரின் மத்தியில் தெளிவாகத் தெரியத்தக்க ஓர் தாக்கத்தைக் கொண்டிருக்கும் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு, சமூக நீதியுடன் கூடிய பொருளாதார வினைத்திறனுடன் இவ்வங்கி ஒத்திசைந்து போக வேண்டியிருக்கும்.


**அறிமுகம்**

இலங்கை மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்டவாறு, 2010 இல் இலங்கையின் பொருளாதாரம் போற்றத்தக்களவு 8 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தது. இது, 2009 ஆம் ஆண்டில் அனுபவித்த பின்னடைவிலிருந்து விரைவாக மீட்சி பெறுவதையும், உயர்வானதும் நீடித்திருக்கத்தக்கதுமான ஓர் வளர்ச்சிப் பாதைக்கு நகர்ந்துள்ளது என்பதையும் வெளிப்படுத்துகின்றது. 2010 இல் பாராட்டத்தக்க ஓர் செயற்பாட்டை நிதிச் சேவைகள் துறை உட்பட, பொருளாதாரத்தின் முக்கியமான அனைத்துத் துறைகளும் தெளிவாகக் காட்டுகின்றன. இது அமைதியான உள்நாட்டுச் சூழல், முதலீட்டாளர்களின் மேம்பட்ட நம்பிக்கை, சாதகமான பேரினப் பொருளாதார நிலைமைகள், வரலாற்றில் காணப்பட்ட கடினமான பொருளாதாரப் பின்னடைவு ஒன்றிலிருந்து உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சி பெற்றுள்ளமை என்பன இதற்குத் துணையாக அமைந்துள்ளன (இலங்கை மத்திய வங்கி 2010a).

2010 இல், இலங்கையில் சேவைகள் துறை மற்றும் நிதித் துறை ஆகியவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பு முறையே 59 சதவீதமாகவும் 9 சதவீதமாகவும் உள்ளது. பொருளாதாரத்தில் காணப்படும் இவ்விரு துறைகளினதும் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துகின்றது. இன்று இலங்கைப் பொருளாதாரத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் பிரிவுகளில் ஒன்றாக நிதித் துறை அமைந்துள்ளது. பரிமாற்றல்களின் எண்ணிக்கை கணிசமானளவு விரிவடைந்துள்ளதுடன், கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் நுட்பத்திறனின் அளவு வளர்ச்சியடைந்தும் உள்ள பண மற்றும் மூலதனச் சந்தைகளில் காணப்படும் முன்னேற்றங்கள் மூலம் இது வெளிப்படுகின்றது. இலங்கையின் நிதி முறைமையானது பிரதானமாக வங்கிகள், நிதிக் கம்பனிகள், ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்கள் (நுண்நிதி நிறுவனங்கள் உட்பட), குத்தகைக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், முதனிலை வணிகர்கள், பங்குத் தரகர்கள் / வியாபாரிகள், முதலீட்டு முகாமையாளர்கள், எல்லை வியாபாரிகள், விற்கப்படாதபங்குகளை வாங்குவோர், அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள், சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. வங்கித்துறையின் பங்கு, நிதி முறைமையின் மொத்தச் சொத்தில் 52 சதவீதமாக இருப்பதுடன், அது இலங்கையின் நிதித் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது (இலங்கை மத்திய வங்கி 2010b).

இன்று, வங்கிகளின் வகிபாகமானது முன்னொருபோதும் இல்லாத அளவு விரிவடைந்துள்ளதுடன், பெரும்பாலும் அனைத்துச் சமூகங்களினதும் நிறைவுக் கூறாக ஆகியுள்ளது. வங்கிகள் பல்வேறு நிதிக் கருவிகள் மற்றும் சேவைகள் என்பவற்றின் பரந்த ஓர் தொகுதியை வழங்கி வருவதுடன், பல்வேறு வகைப்பட்ட வாடிக்கையாளர்களின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில் அவை மாற்றியமைக்கப்பட்டும் உள்ளன. இவை நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கருவிகள், தவணை வைப்புகள், வெளிநாட்டு நாணய வைப்புகள், வியாபாரம், நிதி, குத்தகை, வர்த்தகப் படுகடன்களைக் கொள்வனவு செய்தல், தனிப்பட்ட கடன் வழங்கல், அடகுச்சேவை, வீடமைப்பு, கடன் / பெறுகடன் அட்டைகள், உள் நோக்கிய வெளிநாட்டு பணஅனுப்பீடுகள், அரசாங்க பங்குச் சான்றிதழ்களிலான முதலீடுகள், நிதிய முகாமைத்துவம், செயற்திட்ட நிதியளிப்பு மற்றும் மீன்பிடி, விவசாய - வணிகம், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் போன்ற துறைகளுக்கான விசேட கடன் வழங்கல் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. ஒரு நாட்டில் காணப்படும் வங்கி முறைமையானது நல்விளைவை ஏற்படுத்துகின்ற, வினைத்திறன் வாய்ந்ததாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் இருக்குமாயின், அது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் துரிதமான ஓர் வளர்ச்சியை ஏற்படுத்தும். இதனால், பொருளாதாரத்தில் வங்கித் தொழிலின் வகிபாகத்தை மிக முக்கியமானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் கருத முடியும்.

இலங்கைப் பொருளாதாரத்தில் அரச வங்கிகளின், விசேடமாக மக்கள் வங்கியின் வகிபாகத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இது நான்கு பிரிவுகளாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் உள்நாட்டு வங்கித் தொழில் பற்றிய, விசேடமாக அரச வங்கிகள் பற்றிய, சுருக்கமான வரலாற்று ரீதியான ஒரு பொது மதிப்பீட்டை அடுத்து வரும் பிரிவு முன்வைக்கின்றது. இரண்டாவது பகுதியானது வினைத்திறனும் போட்டித்தன்மையும் வாய்ந்த ஓர் சந்தையை உருவாக்குவதன் பொருட்டு, 1977 இன் பிற்பகுதி தொடக்கம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு வந்துள்ள நிதித் துறை மறுசீரமைப்புகளின் விளைவுகளைப் பற்றி சுருக்கமாக ஆராய்கின்றது. மக்கள் வங்கியின் செயற்பாடு, நட்ட அச்ச முகாமைத்

துவம், சாதனைகள், புத்தாக்க முயற்சிகள் என்பவற்றை கவனத்தில் எடுத்து, இவ் வங்கியினுடைய வகிபாகத்தை 3 ஆவது பகுதி பகுப்பாய்வு செய்கின்றது. இறுதிப் பகுதியானது இப்பகுப்பாய்வின் முடிவுரையாக அமைந்துள்ளது.

### வரலாற்று ரீதியான பொது மதிப்பீடு

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், வெளிநாட்டு வங்கிகளைப் (பிரதானமாக பிரித்தானிய மற்றும் இந்திய வங்கிகள்) பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை இலங்கையர் கொண்டிருக்கவில்லை என்பதுடன், இலங்கையர்களுக்கான அனைத்து வங்கி வசதிகளையும் வழங்கியவராக நாட்டுக்கோட்டைச் செட்டியார் இருந்ததோடு இத்தேசத்திற்கான உத்தியோகபூர்வ பணம் வழங்குபவராக அவர் கருதப்பட்டார் (வீரசூரிய, 1973). அப்போது, வங்கி அலுவலர்களுக்கும் இலங்கை வணிக சமூகத்துக்கும் இடையில் நேரடித் தொடர்பாடல் காணப்படவில்லை. நெல், மரக்கறிகள் மற்றும் ஏனைய உப உணவுப் பயிர்கள் என்பவற்றை விளைவித்த கிராமிய விவசாயிகள் கிராமங்களில் காணப்பட்ட கடன்வழங்குவோர், சுதேச வங்கியாளர்கள், அடகுத் தரகர்கள், வியாபாரிகளும் பெருவணிகர்களும், நிலப்பிரபுக்கள் மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத கடன் சந்தையில் இடைத்தரகர்களாகச் செயற்பட்ட நண்பர்களும் உறவினர்களும் போன்றோரில் முழுமையாகச் சார்ந்திருந்தனர். ஒழுங்குபடுத்தப்படாத கடன் சந்தையில் நடப்பிலிருந்த வட்டி வீதங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையில் காணப்பட்டதை விட உயர்வானவையாக இருந்தன. ஆகவே, உள்ளூர் முயற்சியாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், பொருளாதாரத்தை பல்லினத்தன்மை உடையதாக ஆக்குவதற்கு ஒரே சீராக வளர்ச்சியுறுகின்ற ஓர் அளவில் நிதியளிப்பை வழங்குவதற்குமாக ஓர் தேசிய வங்கியை நிறுவுவதற்கான அவசியம் ஏற்பட்டது.

இத்தேசத்திற்கு கடன் வழங்குவோராகவும், நிதியளிப்புச் செய்வோராகவும் இருந்த தமது வகிபாகத்தை நாட்டுக்கோட்டைச் செட்டியாரால் தொடர்ந்தும் பேண முடியாதிருந்தது எனும் உண்மையை உணர்ந்த நிலையில், இலங்கையின் விவசாய மற்றும் வணிக நலன்களின் தேவைகளை நிறைவேற்றுவதன் பொருட்டு, அரசாங்க ஆதரவுடனான ஓர் சுதேச வர்த்தக வங்கியை நிறுவுவதற்கான பரிந்துரைகளை வங்கி ஆணைக்குழு முன்வைத்தது. 1934 இல் ஆளுநரால் நியமிக்கப்பட்ட இவ்வாணைக்குழுவுக்கு சேர் சொரப்ஜீ பொக்கணவெல என்பவர் தலைமை தாங்கினார். இப்பரிந்துரையை இலங்கையின் அரசுக் கழகம் ஏற்றுக்கொண்டதுடன், இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டம்) கீழ், அரசுக்குச் சொந்தமான இலங்கையின் முதலாவது வர்த்தக வங்கியாக, 1931 ஓகஸ்ட் 1 ஆம் திகதியன்று இலங்கை வங்கி நிறுவப்பட்டது.

நாட்டினுடைய தேசிய அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் ஓர் பொதுத்துறை வங்கியாக 1961 இல் மக்கள் வங்கி உருவாக்கப்பட்டமையும் அதே ஆண்டில் இலங்கை வங்கி தேசியமயமாக்கப்பட்டமையும் இலங்கையினுடைய வங்கித்துறை வரலாற்றில் ஓர் திருப்பு முனையைச் சுட்டிக்காட்டுகின்றன. பாரிய சமூகப் பொறுப்பால் தூண்டுதல் அளிக்கப்பட்டு வந்துள்ளமையால், இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரு அரச வங்கிகளும் தேசிய முன்னுரிமை வாய்ந்த விடயங்களுக்கும் மற்றும் விவசாயம், சிறு கைத்தொழில்களும் ஏற்றுமதிகளும், வேலைவாய்ப்பு மட்டங்களின் அதிகரிப்பு, புதிய முயற்சியாளர்களுக்கான ஊக்குவிப்பு, பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தி என்பவற்றிலான துரித வளர்ச்சி போன்ற குறிக்கோள்கள் ஈடேற துணை புரிந்தன. இலங்கை வரலாற்றின் பெரும் பகுதியில், இந்த நாட்டின் பொருளாதாரத்தில் இவ்விரு வங்கிகளும் பிரதான பங்கு வகுத்துள்ளன. சிலவேளைகளில் அவை வங்கி முறைமையின் வைப்புகள் மற்றும் சொத்துகள் என்பவற்றின் நான்கில் ஒரு பங்கை கட்டுப்படுத்துவனவாக இருந்து வந்துள்ளதுடன், இன்று அவ்வைப்புகள் மற்றும் சொத்துகளின் அண்ணளவாக அரைப் பங்கை கட்டுப்படுத்தியுள்ளன. வர்க்கம், இனம் அல்லது மதம் முதலானவற்றை பொருட்படுத்தாது, பாரபட்சமின்றி நியாயமான நிபந்தனைகளின் கீழ் இலங்கை மக்கள் அனைவரும் கடன்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை மக்கள் கொண்டிருப்பதற்கான உரிமையை அவை உறுதிப்படுத்தியுள்ளன.

### நிதிச் சீராக்கங்கள்

உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நிதி ஒடுக்கம் ஆகியன அண்ணளவாக 30 ஆண்டுகளாகக் காணப்பட்டதன் பின்னர், 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைச் சீராக்கப் பொதியானது இலங்கையின் ஏனைய பொருளாதார சீராக்கங்களுடன் சேர்த்து, நிதிச் சேவைகள் துறையின் கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பிலான சில கட்டமைப்பு மாற்றங்களை உள்ளடக்கியிருந்தது. அக்கொள்கை மாற்றத்திற்கு முன்னர், பொருளாதார தேக்கநிலை, நிதி ஒடுக்கம், கொள்கைத் திரிபுபடுத்தல்கள், மிதமிஞ்சிய அரசாங்க தலையீடுகள் என்பன இந்த நாட்டின் வினைத்திறன் வாய்ந்ததும் வெற்றிக்கு இட்டுச் செல்லக்கூடியதுமான ஓர் நிதி முறைமையின் வளர்ச்சிக்கு தடங்கல் செய்தன. கடந்த இரு தசாப்த காலத்தில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிதிச் சீராக்கங்கள், நிதி உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் அதேவேளை, வினைத்திறனுடைய, போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் விருத்தியடைந்த ஓர் நிதி முறைமையை தோற்றுவிப்பதை நோக்காகக் கொண்டிருந்தன (இலங்கை மத்திய வங்கி, 2000).

1977 தொடக்கம் நிதித் துறைக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகள் வட்டிவீத கட்டுப்பாட்டுத் தளர்வு, சந்தை நலன் கருதிய கடன் ஒதுக்கீட்டின் அறிமுகம், வெளிநாடு மற்றும் உள்நாட்டு வங்கிகளுக்கான சந்தை நுழைவுக் கட்டுப்பாட்டுத் தளர்வு, நிறுவன ரீதியான சீராக்கங்களின் அமுலாக்கம், நிதி முறைமையைப் பாதுகாப்பதற்கான பொருத்தமான சட்டவாக்க நடவடிக்கைகள் என்பன உட்பட கண்காணிப்பு முறைமையின் முன்னேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன (எதிரிசூரிய, 2007). அப்போதிருந்து ஏராளமான கொள்கை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மாற்றமடைந்து செல்லும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழ்நிலைகளுக்கேற்ப அச் செயல்முறை தொடர்ந்து கொண்டிருந்தது.

இறுக்கமான முறையில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த வங்கித்துறை தாராளமயப்படுத்தப்பட்டது. இலங்கை நிதிச் சந்தையில் நுழைவதற்கு வெளிநாட்டு வங்கிகளுக்கு தூண்டுதல் அளிக்கப்பட்டதுடன், இங்கு கிளைகளைத் திறப்பதற்கு அவை அனுமதிக்கவும்பட்டன. மேலும், வர்த்தக வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்கு உள்நாட்டு தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பணத் தரகர்கள், வியாபார மூலதனக் கம்பனிகள், வணிக வங்கிகள், அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் போன்ற புதிய வகை நிதி நிறுவனங்களுக்கு தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டது. நுழைவதற்கான தடைகளை அகற்றியமையானது நிதிச் சந்தையை விரிவுபடுத்தியதுடன் போட்டியினூடாக வினைத்திறனை அதிகரிக்கச்செய்தது.

தமது நிதிச் செயற்பாடுகளின் வெற்றிக்கு இட்டுச் செல்லக்கூடிய தன்மை மற்றும் இலாபம் ஈட்டும் ஆற்றல் என்பவற்றை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காக, இரு அரச வங்கிகளுக்கும் மீள் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவற்றின் வர்த்தகச் செயற்பாடுகளில் அதிகளவான தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது (இலங்கை மத்திய வங்கி, 2000). இத்திடீர் கொள்கை மாற்றங்கள், இத்தொழில் துறையிலான நிறுவனங்களின் எண்ணிக்கையின் அதிகரிப்

புடன் சேர்த்து, வங்கித் தொழிலின் வாய்ப் பெல்லையில் அதிகரிப்பு ஏற்படச் செய்தன. இவ்வாறாக, நிதிச் சேவைகள் தொழிலானது நாட்டின் பொருளாதார செயற்பாடுகளிலான தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தது. நிதிச் சேவைகளின் விரிவாக்கத்தை அட்டவணை 1 காட்டுகின்றது.

அட்டவணை 1: 2010 செப்ரம்பர் 30 இல் காணப்பட்டவாறு, வங்கித்துறையின் ஒருங்கமைவு

| வங்கிகளின் வகை | நிறுவனங்களின் எண்ணிக்கை | பிரதான கிளைகளின் எண்ணிக்கை | மொத்தச்சொத்துக்களின் பெறுமதி ரூபா.பில் | தொழிலின் சந்தைப் பங்கு (%) |
|---|---|---|---|---|
| **அனுமதிபெற்ற வர்த்தக வங்கிகள்** | **22** | **1,408** | **2,809** | **83.5** |
| அரச வங்கிகள் | 2 | 640 | 1,156 | 34.4 |
| உள்நாட்டுத் தனியார் வங்கிகள் | 9 | 722 | 1,248 | 37.1 |
| வெளிநாட்டு வங்கிகள் | 11 | 46 | 405 | 12.0 |
| **அனுமதிபெற்ற விசேட வங்கிகள்** | **9** | **468** | **553** | **16.5** |
| அரச வங்கிகள் | 6 | 405 | 470 | 14.0 |
| தனியார் வங்கிகள் | 3 | 63 | 83 | 2.5 |
| வங்கித் தொழில் | **31** | **1,876** | **3,362** | **100.0** |

*மூலம்:* Central Bank of Sri Lanka, (2011).

*1979 இன் இறுதியில், 4 உள்நாட்டு வங்கிகள் மற்றும் 10 வெளிநாட்டு வங்கிகள் என்பன உட்பட 14 வங்கிகள் காணப்பட்டன. உள்நாட்டு வங்கிகள், இரு அரச வங்கிகளையும் இரு தனியார் வங்கிகளையும், அதாவது, கொமர்ஷல் வங்கி (1969 இல் முதலாவது தனியார் வங்கியாக நிறுவப்பட்டது), மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி (1970 இல் இரண்டாவது தனியார் வங்கியாக நிறுவப்பட்டது) உள்ளடக்கியிருந்தன. 1982 இன் இறுதியில் வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்திருந்தது. அதேவேளை, வெளி இடங்களில் கிளைகளைத் திறப்பதற்காக 4 சுதேச வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறாக, இந்த நேரம் வரை அரச வங்கிகள் வைத்திருந்த நிதிச் சந்தை பங்குகளின் பெரும் பகுதியை வங்கித் தொழிலில் புதிதாக நுழைந்த நிறுவனங்கள் பெற்றுக் கொண்டமையால், போட்டித்தன்மை தீவிரமாகியது.*

*2000 ஆம் ஆண்டில் இந்த நாடடில் இயங்கிய வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 26 ஆகக் காணப்பட்டது. அது 2 அரச வங்கிகள், 8 உள்நாட்டு தனியார் வங்கிகள், 16 வெளிநாட்டு வங்கிகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. 2000 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1084 ஆக இருந்தது. பிரதானமாக உள்நாட்டு வங்கிகளால் திறக்கப்பட்ட கிளைகள் ஊடாகவே, கிளை வலையமைப்பிலான இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. அவ்வண்ணமே, வெளிநாட்டு வங்கிக் கிளைகள் 38 ஆக அதிகரித்த அதேவேளை உள்நாட்டு வங்கிகளின் மொத்தக் கிளை வலையமைப்பானது 1046 ஆக அதிகரித்தது. 2009 ஆம் ஆண்டில், வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கையானது 2214 ஆக அதிகரித்தது. இது, 2000 உள்நாட்டு வங்கிக் கிளைகளையும் 214 வெளிநாட்டு வங்கிக் கிளைகளையும் உள்ளடக்கியதாக மிக அதிகளவான வங்கிக் கிளைகளைக் (1175) கொண்டதாக அரச வங்கிகள் உள்ளன. இதில் மக்கள் வங்கி 679 கிளைகளையும் இலங்கை வங்கி 496 கிளைகளையும் கொண்டுள்ளன. 2000 - 2009 காலகட்டத்திற்கான வர்த்தக வங்கிக் கிளை வலையமைப்பின் பரம்பல் அட்டவணை 2 இல் வழங்கப்பட்டுள்ளது.*

*நிதி முறைமையில் மிகவும் ஆதிக்கம் உடையதாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் முக்கியத்துவமுடையதாகவும் காணப்படும் வங்கித் துறையானது, கடந்த இரு தசாப்த காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு விரிவடைந்துள்ளது. இது வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கான நிதிப்பரிமாற்றல்களில் காணப்படும் அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது. 2010 இன் இறுதியில் காணப்பட்ட 31 வங்கிகளில், 22 அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளாகவும், 9 அனுமதி பெற்ற விசேட வங்கிகளாகவும் காணப்பட்டன. இதே காலப்பகுதியில் 1932 வங்கிக் கிளைகள், 965 விரிவாக்க அலுவலகங்கள், 2,977 வங்கிச் சேவை நிலையங்கள் என்பன காணப்பட்டன. இவ்வலையமைப்பானது 2006 தன்னியக்க பணப் பரிமாற்*

அட்டவணை 2: 2000 - 2009 இல் வர்த்தக வங்கிகளின் கிளை வலையமைப்பு

| விபரம் | 2000 | 2005 | 2008 | 2009 |
|---|---|---|---|---|
| அனுமதிபெற்ற வர்த்தக வங்கிகள் (a) | 1,084 | 1,627 | 2,071 | 2,214 |
| உள்நாட்டு வங்கிகள் | 1,046 | 1,585 | 1,857 | 2,000 |
| இலங்கை வங்கி | 341 | 390 | 455 | 496 |
| மக்கள் வங்கி | **343** | **602** | **653** | **679** |
| கொமர்சல் வங்கி | 81 | 140 | 177 | 179 |
| ஹற்றன் நசனல் வங்கி | 120 | 150 | 177 | 182 |
| சம்பத் வங்கி | 39 | 84 | 115 | 137 |
| செலான் வங்கி | 90 | 114 | 114 | 114 |
| ஏனையவை (b) | 32 | 105 | 166 | 213 |
| வெளிநாட்டு வங்கிகள் | 38 | 42 | 214 | 214 |
| வங்கிக் கிளையொன்றிற்கான சனத்தொகை | 6,642 | 5,293 | 4,369 | 4,201 |
| 100,000 நபர்களுக்கான வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | 5.7 | 8.3 | 10.2 | 10.8 |
| வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை | 26 | 22 | 22 | 22 |
| உள்நாட்டு வங்கிகள் | 10 | 11 | 11 | 11 |
| வெளிநாட்டு வங்கிகள் | 16 | 11 | 11 | 11 |

(a) Includes main branches and other extension banking offices except Pawning Centres, Student Savings Units and mobile banks

(b) Includes Union Bank of Colombo Ltd., Pan Asia Banking Corporation Ltd., Nations Trust Bank PLC, National Development Bank PLC and DFCC Vardhana Bank Ltd.

*மூலம்:* Central Bank of Sri Lanka, (2010c).

அட்டவணை 3: 2009 இறுதியில் காணப்பட்ட அரச வங்கிக் கிளைகளின் மாகாணரீதியான எண்ணிக்கை

| விபரம் | மேற்கு | மத்தி | தெற்கு | வடக்கு | கிழக்கு | வட மேற்கு | வட மத்தி | ஊவா | சப்பிர கமுவ | நாடு முழுவதும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 134 | 58 | 55 | 36 | 41 | 47 | 40 | 37 | 45 | 493 |
| மக்கள் வங்கி | 203 | 90 | 83 | 32 | 53 | 72 | 44 | 45 | 57 | 679 |
| மொத்தம் | 337 | 148 | 138 | 68 | 94 | 119 | 84 | 82 | 102 | 1,172 |

***மூலம்:*** Central Bank of Sri Lanka, (2010c).

றல் இயந்திரங்களால் (ATM) மேலும் உறுதியாக்கப்பட்டது. இது அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுப் பாங்குகளில் வங்கிச் சமூகம் நம்பிக்கை கொள்ளத்தக்க நிலையில் இருப்பதிலான ஓர் அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது (இலங்கை மத்திய வங்கி 2010a). இலங்கை தற்போது ஒவ்வொரு 100,000 தனியாட்களுக்கும் 9.1 வங்கிக் கிளைகளைக் கொண்டுள்ளது. இது ஒவ்வொரு 100,000 தனியாட்களுக்குமான உலக இடையமான 8.4 வங்கிகளுடன் ஒப்பிடுமிடத்து மிக உயர்வானதாகக் காணப்படுகின்றது (இலங்கை மத்திய வங்கி 2011). ஒட்டுமொத்தமாக, வங்கித் துறையானது சொத்து அடிப்படையிலான அதிகரிப்பு, கடன்களும் முற்பண பட்டியலும், வெளிவாரி அதிர்ச்சிச் சூழல் மற்றும் சவால்நிறைந்த உள்நாட்டு பேரினப் பொருளாதார நிலைமைகள் என்பவற்றின் மத்தியில் காணப்படும் முதலீடுகளும் வைப்பு நகர்வுகளும் என்பவற்றுடன் கூடிய அதனுடைய கட்டுறுதியான தன்மையையும் இலாப ஆற்றலையும் பேணிக்கொண்டு உறுதியான வளர்ச்சியை அனுபவித்துள்ளது (இலங்கை மத்திய வங்கி, 2010a).

**மக்கள் வங்கியின் வகிபாகம்**

1961 ஜூலை 1 ஆம் திகதியில் நிறுவப்பட்ட மக்கள் வங்கியானது (மக்களின் நாடித்துடிப்பு என அறியப்படுகின்ற) இவ்வருடம் இத்தேசத்திற்கான தனது பெறுமதிமிக்க சேவை வழங்கலின் 50 ஆவது வருட நிறைவைக் கொண்டாடுகின்றது. இது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அனுமதிபெற்ற ஓர் வர்த்தக வங்கியாகவும் உள்ளது. மக்கள் வங்கி அமைக்கப்பட்டமையானது இலங்கையின் வங்கிச் செயற்பாடுகளுக்கு முழுமையான புதியதோர் பரிமாணத்தை வழங்கியுள்ளது. நியதிச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட இவ்வங்கியின் நோக்கங்களாவன; "கூட்டுறவுச் சங்கங்கள், அங்கீகரிக்கப்பட்ட ஏனைய சங்கங்கள், பயிர்ச்செய்கைக் குழுக்கள் ஆகியவற்றிற்கும் ஏனைய நபர்களுக்கும் நிதியுதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கை கூட்டுறவு இயக்கம், கிராமிய வங்கி, விவசாயத் துறை என்பவற்றை அபிவிருத்தி செய்தலாகும்" (1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம், பிரிவு-4).

மேலே குறிப்பிடப்பட்டவாறு, இவ்வங்கியின் தொலைநோக்காக, இலங்கை மக்களின் முனைப்பான விருப்பத்திற்குரிய வங்கியாக இருப்பதும், பெறுமதியை தோற்றுவிக்கக்கூடிய, போட்டித்தன்மையுடைய, தற்சார்புடையவர்களாக ஆகுவதற்கு மக்களுக்கு வலுவூட்டுதலும் அமைந்துள்ளது. மிகுந்த அக்கறை, ஆக்கபூர்வமான முறையில் எதிர்வினையாற்றுகின்ற மற்றும் தொழில்வாண்மைப் பாங்கில் வாடிக்கையாளர்களுக்கு உன்னதமான சேவையை வழங்குதல்; சுதந்திரமானதாகவும் வர்த்தக ரீதியில் வெற்றிக்கு இட்டுச் செல்லத்தக்க நிலையிலும் இருக்கும் அதேவேளை, தேசிய பொருளாதாரத்திற்கான அனுகூலங்களை தோற்றுவித்தல்; அத்துடன், குழுச் செயற்பாட்டாளர்களாக இருப்பதோடு, பெறுமதியை தோற்றுவிக்கக்கூடிய, திறமைவாய்ந்த, தன்நம்பிக்கையுடைய மற்றும் தொழில்வாண்மைத் தகைமையுடையவர்களாக ஆகுவதன் மூலம், தமது உயர் செயற்பாடுகளிலிருந்து ஊழியர்கள் பயன்பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல் என்பவற்றினூடாக பெருமிதமடைவதே இவ்வங்கியின் குறிக்கோளாகும் (மக்கள் வங்கி, 2009).

ஆரம்ப காலத்திலிருந்தே செயல்வெறியுடன் கூடிய கிளை விரிவாக்க திட்டமொன்றை மக்கள் வங்கி தொடர்ந்து மேற்கொண்டிருந்தது. இதனால் 1971 இல் 100 ஆகக் காணப்பட்ட கிளைகளின் மொத்த எண்ணிக்கை ஒரு தசாப்த காலத்தினுள் அதாவது, 1982 இல் 300 ஆக விரிவடைந்தன. 1993 இல், இது 330 ஆக அதிகரித்தது. இன்று, 680 கிளைகளை உள்ளடக்கிய மிகப்பெரிய கிளை வலையமைப்பை மக்கள் வங்கி கொண்டுள்ளது. இது இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் (அட்டவணை 3) 12 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்ட ஓர் தளத்துடன் காணப்படுகின்றது. 2009 இறுதியில் காணப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 8863 ஆகும் (மக்கள் வங்கி, 2009). 2010 இல், இத்தேசத்திற்கு விரைவானதும் இலகுவானதுமான சேவைகளை வழங்குவதற்காக, 266 கிளைகள், 283 சேவை நிலையங்கள் என்பவற்றை உள்ளடக்கிய வகையில் 549 நிலையங்கள் இணையத்துடனும், ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டதுமாகக் காணப்பட்டன.

2010 இல், 330 தன்னியக்க பணப் பரிமாற்றல் இயந்திரங்களைக் கொண்ட இவ்வங்கியினுடைய வலையமைப்பானது நாட்டினுடைய 24 மாவட்டங்களில் வருடத்தின் 365 நாளும் சேவையாற்றுகின்றது. இவ்வங்கியானது 105ற்கும் மேற்பட்ட நாடுகளில் காணப்படும் வங்கிகளுடன் ஓர் பரந்த வங்கி வலையமைப்பைக் கூடக் கொண்டுள்ளது.

வரலாற்று ரீதியாக, இந்த நாட்டின் மிகவும் ஒதுக்குப் புறமாய் உள்ள இடங்களில் வசிக்கின்ற மக்களுக்கு தமது சேவைகளை தொடர்ச்சியாக வழங்கிவந்த உள்ளூர் வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கி காணப்படுகின்றது. குறிப்பாக கிராமிய குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதில் பிரதானமாக கவனம் செலுத்திய கூட்டுறவுக் கிராமிய வங்கித் திட்டமானது மக்கள் வங்கியின் ஆதரவுடன் 1964 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பக் கட்டங்களில், இதன் கணக்கீட்டு மற்றும் நிதி முறைமைகள் மக்கள் வங்கியால் கண்காணிக்கப்பட்டதுடன், அதன் விளைவாக, இவ்வங்கியானது கிராமிய சமூகங்களுக்கு நுண்கடன்களை அறிமுகப்படுத்தியது.

இவ்வங்கி புதியதோர் விவசாயக் கடன் திட்டத்தை 1967 இல் ஆரம்பித்ததன் மூலம், சிறு பண்ணைத்துறைக்கான கடன் வழங்கும் முன்னோடி நிறுவனம் எனும் நிலையை இது அடைந்தது. நுகர்வு மற்றும் உற்பத்தி ஆகிய இரண்டுக்குமான கடன் உதவிகளை வழங்குவதுடன், கிராமியத் துறைக்கான நிறுவன ரீதியான பிரதான கடன் மூலமாக தொடர்ந்தும் தொழிற்படுவதற்குமாக அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கடன் திட்டமொன்று 1973 இல் ஆரம்பிக்கப்பட்டது. கிராமப்புற விவசாயத்திற்கு கடன் வழங்குவதற்கான பல்வேறு புதிய சிறப்பம்சங்களுடனும் உபாயங்களுடனும் கூடிய, அனைத்தையும் உள்ளடக்கிய புதிய கிராமிய கடன் திட்டமொன்று 1986 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறுதொகைக் கடன் பெறுவோரின் பரிமாற்றல் செலவுகளைக் குறைப்பதே இதன் அப்போதைய குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது. மக்கள் வங்கியானது சிறிய மற்றும் நடுத்தர பொது முயற்சிகளுக்கும், விவசாயம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், சுய தொழில்வாய்ப்பு வகையில் அடங்கும் தொழில்கள்,

அட்டவணை 4: 2008 - 2010 இல் மக்கள் வங்கியின் அரசாங்கத்தால் நெறிப்படுத்தப்பட்ட கடன்களும் முற்பணங்களும்

| | 2008 (Rs.'000) | 2009 (Rs.'000) | 2010 (Rs.'000) |
|---|---|---|---|
| நுண்நிதி | 285,583 | 237,694 | 307,725 |
| விவசாயமும் ஏனைய அபிவிருத்திக் கடன்களும் | 1,647,661 | 1,142,836 | 2,356,863 |
| அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விடமைப்புக் கடன்கள் | 9,364,049 | 9,521,640 | 14,646,427 |

***மூலம்:*** People's Bank, (2009, 2010).

வியாபாரம், சேவைகள் போன்ற தொழில்களுக்கும் தனது கடன் வசதிகளை விரிவுபடுத்தியது. அத்துடன், இது வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியால் மீள் நிதியளிப்புச் செய்யப்பட்ட நுண்நிதிச் செயற்திட்டம் (சுழற்சி நிதியம்) மற்றும் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தால் மீள் நிதியளிப்புச் செய்யப்பட்ட சிறு தொழில் விருத்திக் கடன் திட்டம் என்பவற்றிற்கும் கூட தனது கடன் வசதிகளை விரிவுபடுத்தியது.

கிராமிய மக்களின் பொருளாதார மட்டத்தையும் திறன்களையும் உயர்த்துவதற்காக ***விடதா*** கடன் திட்டத்தின் (கிராமத்துக்கான தொழில்நுட்பம்) கீழ், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சால் ***விடதா*** வள நிலையங்களில் பயிற்றுவிக்கப்பட்ட முயற்சியாளர்களுக்கு மக்கள் வங்கிக் கடன் வசதிகளை வழங்கி வருகின்றது. இது தவிர, இயற்கை அனர்த்தங்கள் (வெள்ளப்பெருக்கு, மண்சரிவு,

அட்டவணை 5: 2009 மற்றும் 2010 இல் மக்கள் வங்கியினுடைய சொத்துக்களின் ஒருங்கமைவு

| விபரம் | 2009 (ரூபா.மில்லிய) | 2010 (ரூபா.மில்லிய) | மாற்ற % |
|---|---|---|---|
| கையிலுள்ள பணம் | 8,975 | 8,997 | 0.2 |
| மத்திய வங்கியிலுள்ள நிலுவை | 22, 717 | 26,739 | 17.7 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங்களிலிருந்து வரவேண்டிய தொகை | 41,356 | 37,359 | 9.7 |
| முதலீடுகள் | 95,729 | 96,653 | 27.4 |
| கடன்களும் முற்பணங்களும் (தேறிய) | 283,760 | 357,336 | 25.9 |
| ஏனைய சொத்துக்கள் | 23,708 | 20,532 | 23.0 |
| மொத்தச் சொத்துக்கள் | 476,245 | 547,616 | 15.0 |

***மூலம்:*** Peoples Bank, (2010).

அட்டவணை 6: 2009 மற்றும் 2010 இல் மக்கள் வங்கியினுடைய பொறுப்புக்களின் ஒருங்கமைவு

| விபரம் | 2009 | 2010 | மாற்ற % |
|---|---|---|---|
| மொத்த வைப்புக்கள் | **396,157** | **462,140** | **16.7** |
| கேள்வி | 37,352 | 40,617 | 8.7 |
| சேமிப்பு | 174,735 | 203,003 | 16.2 |
| கால அடிப்படையிலான | 181,259 | 215,107 | 18.7 |
| CD மற்றும் ஏனையவை | 2,811 | 3,411 | 18.7 |
| மொத்தக் கடன்பெறல்கள் | **41,884** | **44,132** | **5.4** |
| ஏனைய பொறுப்புக்கள் | 20,403 | 20,505 | 1.0 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **458,445** | **526,777** | **14.9** |

***மூலம்:*** People's Bank, (2010).

சூறாவளி முதலிய), இலங்கையின் குறிப்பிட்ட சில இடங்களில் நிலவிய யுத்தச் சூழ்நிலை என்பன காரணமாக, பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட பெண்களுக்காக, சிறுவர் விருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் அனுசரணை மற்றும் பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் நிதிப்பங்களிப்பு என்பவற்றுடன் மேற்கொள்ளப்படும் ***"வனிதா நவோத"*** கடன் திட்டத்தை மக்கள் வங்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது. நுண்நிதி, அரசாங்கத்தால் நெறிப்படுத்தப்படும் கடன்கள் மற்றும் மக்கள் வங்கியின் முற்பணக் கொடுப்பனவு ஆகியவற்றை அட்டவணை 3 காட்டுகின்றது.

பிரத்தியேகமாக, உயர்வான தேறிய தகுதியுடைய வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, சேமிப்பு கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், நிலையான வைப்புகள், வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என்பவற்றுடன் வியாபார, தனிப்பட்ட மற்றும் வீட்டுக் கடன் வசதிகள், குத்தகை வசதிகள், கடன அட்டை சேவைகள் போன்ற பல்வேறு விசேட சேவைகளை மக்கள்வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. மக்கள் வங்கியானது, கணக்கு வைத்திருப்போரின் தனிப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான வகையில் மாற்றியமைக்கத்தக்க வசதிகளின் ஒரு தொகுதியுடன் கூடிய புத்தாக்க சேமிப்புத் திட்டங்களை குழந்தைகள் (***நிட ஹாஸ் உபதா*** மற்றும் ***இசுறு உதான***). சிறுவர்கள் (***சிசு உதான***), பாடசாலையை விட்டு வெளியேறியோர் (எதிர்கால நட்சத்திரங்கள்), இளம் நிறைவேற்று அதிகாரிகள் (YES), பெண்கள் (***வனிதா வாசனா***), சிரேஷ்ட குடிமக்கள் (***பரினத***), ஓய்வூதியம் பெறுவோர் (***விஸ்றம சுவய***), அரசாங்கத் துறை சுகாதார ஊழியர்கள் (***சுவ செவன***), இணைய வங்கிச் சேவையைப் பயன்படுத்துவோர் (AMEX), வீடுகளுக்காகக் கனவுகாண்போர் (***ஜெய நிவஸ***), சுய தொழில் புரிவோர் (***சுறத்துற***), விவசாயிகள் (***அஸ்வென்ன***), புலம்பெயர் தொழிலாளர்கள் (***விதேஷிக***), ஆசிரியர்கள் (***குரு செத***), போன்றோருக்கு வழங்குகின்றது. இவ்வங்கியானது, நாட்டின் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களின் நிலைகுலைந்த வாழ்வாதாரங்களை புனர்நிர்மாணம் செய்வதற்காக, "வடக்கின் வசந்தம்", "கிழக்கின் உதயம்", "வடக்கின் மீளெழுச்சி" போன்ற பல்வேறு செயற்திட்டங்களின் கீழும் பிரத்தியேகமான நிதியுதவிகளை வழங்கி வருகின்றது.

**சொத்துகள் மற்றும் வைப்புக் கட்டமைப்பு**

இத்தொழிற் துறையில் இரண்டாவது பெருந்தொகையான சொத்தை மக்கள் வங்கி உடைமையாகக் கொண்டுள்ளது. அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2010 ஆம் ஆண்டில், வங்கித் தொழிலில் காணப்பட்ட அண்ணளவான 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து, இவ்வங்கியின் மொத்தச் சொத்து, கணிசமானளவு வளர்ச்சியான 15 சதவீதத்தைப் பதிவு செய்து, அதன் மொத்தப் பெறுமதி 547 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. முதலீட்டில் இது 27.4 சதவீத வளர்ச்சியாக இருப்பதுடன், 2010 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மொத்தச் சொத்துகளில் இது 20 சதவீதமாக உள்ளதெனவும் நம்பப்படுகின்றது. அதேநேரத்தில், வங்கியினுடைய சொத்தின் அண்ணளவாக 65 சதவீதமாகக் காணப்படும், பெரும்பங்காக அமைந்துள்ள கடன்களும் முற்பணக் கொடுப்பனவுகளும் கூட 2010 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவான 26 சதவீத வளர்ச்சியை காட்டின. 2010 ஆம் ஆண்டின் இறுதியில், இவ்வங்கியின் (தேறிய) கடன்களும் முற்பணக் கொடுப்பனவுகளும் 357 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருந்ததுடன், 2009 இன் இறுதியில் காணப்பட்ட 283 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுமிடத்து, இது 24 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

**வங்கியின் நிதியளிப்புக்கான பிரதான மூலமாகவுள்ள வைப்புகள் (மொத்தப் பொறுப்புகளில் 88%)**

2010 இல் இவ்வங்கியின் மொத்த வைப்புகளின் பெறுமதி 17 சதவீதமாக அதிகரித்து, 462 பில்லியன் ரூபாவையும் விஞ்சியது. 2009 ஆம் ஆண்டு 22 சதவீத அதிகரிப்புடன், 396 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட தொகையுடன் ஒப்பிடுமிடத்து, இது முக்கியத்துவமுடையதாக அமைந்துள்ளது (மக்கள் வங்கி, 2010). ஏனைய வர்த்தக வங்கிகளிடமிருந்து வந்த மிகத் தீவிரமான போட்டித் தன்மை மற்றும் உயர் ஆதாயங்களால் உந்தப்பட்ட தவணை அடிப்படையிலான வைப்புக்களுக்கான கேள்வி என்பவற்றின் மத்தியிலும், 203 பில்லியன் ரூபாவாக இருந்த, ரூபாவிலான சேமிப்பு வைப்பு அடிப்படையில் காணப்பட்ட 16 சதவீத வளர்ச்சியானது, வைப்புகளில் காணப்பட்ட மொத்த அதிகரிப்பின் நேரடியான செல்வாக்குக்கு உட்பட்டதாக இருந்தது. வைப்புப் பட்டியலின் குறிப்பிடத்தக்களவு பங்காக அமைந்திருந்த ரூபாயிலான நிலையான வைப்புகள் 2009 இல் 19 சதவீதம் வளர்ச்சியடைந்து, 2010 இல், அது 215 பில்லியனாக காணப்பட்டது. 40.6 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட கேள்விக் கணக்கு நிலுவைகளுக்கு இவ் வங்கியினுடைய கிளையமைப்பு விரிவாக்கம் பிரதானமாகப் பங்களிப்புச் செய்தது. 2009 இல், மொத்த வைப்புகளில் சராசரியாக 54 சதவீதமாகக் காணப்பட்ட நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளுடன் ஒப்பிடும்போது, 2010ஆம் ஆண்டில் அது சராசரியாக 53 சதவீதமாகக் காணப்பட்டது.

அட்டவணை 7: 2009 மற்றும் 2010 இல் மக்கள் வங்கியின் துறைவாரியான கடன்கள்

| துறை | 2009 (ரூபா.மில்லியன்) | ஒருங்கமைவு % | 2010 (ரூபா.மில்லியன்) | ஒருங்கமைவு % |
|---|---|---|---|---|
| விவசாயமும் மீன்பிடியும் | 34,442 | 11.5 | 29,204 | 7.9 |
| தயாரிப்புக்கைத்தொழில் | 21,912 | 7.3 | 20,014 | 6.2 |
| சுற்றுலாத்துறை | 4,287 | 1.4 | 3,200 | 0.9 |
| போக்குவரத்து | 257 | 0.1 | 356 | 0.1 |
| நிர்மாணம் | 55,687 | 18.6 | 71,725 | 19.3 |
| வியாபாரம் | 50,551 | 16.9 | 65,443 | 17.6 |
| நிதி மற்றும் வணிகச் சேவைகள் | 5,344 | 1.8 | 4,375 | 1.2 |
| உட்கட்டுமான வசதி | 605 | 0.2 | 254 | 0.1 |
| ஏனைய சேவைகள் | 25,572 | 8.6 | 38,307 | 10.3 |
| கடன் அட்டைகள் | 875 | 0.3 | 834 | 0.2 |
| அடகு | 97,534 | 32.6 | 133,299 | 35.9 |
| ஏனையவை | 2,011 | 0.7 | 1,792 | 0.4 |
| மொத்தம் | 299,077 | 100 | 371,804 | 100 |

*மூலம்:* People's Bank Annual Report, (2010).

2010 இன் இறுதியில், கடன்களில் காணப்பட்ட வளர்ச்சியானது பிரதானமாக அடகுச் சேவை, நிர்மாணம், வியாபாரம், ஏனைய சேவைத் துறைகள், விவசாயம், மீன்பிடி என்பவை தொடர்பானவையாகும். இவற்றின் வருடாந்த வளர்ச்சியானது முறையே 34, 19, 18, 10, 8 சதவீதங்களாக காணப்பட்டது (அட்டவணை 7). அடகு வணிகமானது வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணக் கொடுப்பனவு என்பவற்றின் முக்கிய கூறாக உள்ளது. தற்போது, மக்கள் வங்கியானது அடகுச் சேவைச் சந்தையில் முதன்மையானதாக இருப்பதுடன், அதிகளவு விரும்பப்படுவதும் கேள்வியுடையதுமான அடகுச் சேவை வழங்கும் நிறுவனமாக உள்ளது. இவ்வங்கியின் கூற்றுப்படி, "மிகுந்த மூலதன வினைத்திறனுடையதாக இருப்பதற்கு மேலதிகமாக, இவ் வணிகம் சிறந்த வருவாயைக் கொடுப்பதுடன் வங்கியின் இறுதி இலாபத்திற்கு பிரதான பங்களிப்புச் செய்யும் ஒன்றாக அது அமைந்துள்ளது" (மக்கள் வங்கி, 2009). வியாபாரம் உட்பட சேவைகள் துறைக்கும் தயாரிப்புத் துறைக்குமான கடனின் வளர்ச்சியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காணப்படும் இத்துறைகளின் மேம்பட்ட செயற்பாட்டுடன் ஒத்திசைவுடையதாக இருந்தது. 2010 இல் சேவைகள் துறை 59 சதவீதமும், தயாரிப்புத் துறை 16 சதவீதமும் வளர்ச்சியடைந்தன.

அட்டவணை 8: மக்கள் வங்கியின் செயற்பாட்டுக் குறிகாட்டிகள், 2009-2010

| குறிகாட்டிகள் | 2009 | 2010 |
|---|---|---|
| மொத்த மூலதன நிறைவு விகிதம் (குறைந்தபட்சத் தேவை 10% ) | 13.4 | 12.8 |
| Tier 1 மொத்த மூலதன நிறைவு விகிதம் (குறைந்தபட்சத் தேவை 5% ) | 7.7 | 7.9 |
| மொத்த NPL விகித (%) | 6.6 | 5.0 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) - (வரிக்கு முன்னர்) | 1.4 | 1.7 |
| உரிமைப்பங்கு மீதான வருவாய் (%)-(வரிக்கு பின்னர்) | 19.7 | 26.9 |
| மூலதன நிறைவு விகித (%) | 13.4 | 12.8 |
| நியதிச்சட்டமுறையான திரவத்தன்மை விகிதம் (DBU) | 29.9 | 23.4 |

*மூலம்:* Peoples Bank, (2010).

விவசாயத்துறைக்கான மொத்தக் கடன்களின் பங்கு 8 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டமையானது, விவசாயத் துறைக்கான கடன் வழங்கலில் இவ் வங்கிக்குள்ள உற்சாகமின்மையை காட்டுவதாக உள்ளது என்பது கவனம் செலுத்த வேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்றது. கிராமிய வறியவர்கள் கடன்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக் குறைவாகக் காணப்படுகின்றமையே வறுமைக்கான பிரதான காரணிகளில் ஒன்றாக உள்ளதென நம்பப்படுகின்றது. விவசாயத் துறையை நட்ட அச்சம் நிறைந்ததாகவும் செலவு மிகுந்ததாகவும் ஆக்கியுள்ள, இயற்கூறான வினைத்திறன் இன்மையும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய தன்மையும் காணப்படுகின்றபோதும், கடன்கள் மற்றும் ஏனைய வசதிகள் குறித்த வகையில்

அட்டவணை 9: மக்கள் வங்கியின் நிதி தொடர்பான சிறப்புக் கூறுகள், 2009 - 2010

| விபரம் | 2009 ரூ. மில்லி. | 2010 ரூ. மில்லி. | மாற்ற % |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 69,049 | 62,532 | 9.4 |
| மொத்த வட்டி வருமானம் | 62,341 | 56,534 | 9.3 |
| மொத்த வட்டிச் செலவுகள் | 38,414 | 30,635 | 20.2 |
| தேறிய வட்டி வருமானம் | 23,926 | 25,898 | 8.2 |
| ஏனைய மொத்த வருமானம் | 5,331 | 4,939 | 9.4 |
| வட்டியல்லாத வருமானம் | 5,332 | 4,939 | 8.2 |
| வட்டியல்லாத செலவுகள | 16,879 | 17,670 | 4.7 |
| வரிவிதிப்புக்கு முந்திய இலாபம் | 6,076 | 8,771 | 44.4 |
| வரிவிதிப்புக்கு பிந்திய இலாபம் | 3,320 | 5,206 | 56.8 |
| இக்காலத்திற்கான தொழிற்பாட்டு இலாபம் | 3,320 | 5,206 | 56.8 |

*மூலம்:* Peoples Bank, (2009, 2010).

அவற்றை அதிகளவு பயன்படுத்துவதற் கான வாய்ப்பை கிராமிய விவசாயி களுக்கு வழங்குவதன் மூலம், அவர் களுக்கு உதவுவதும், அவர்களின் மன தில் நம்பிக்கையை மீளக் கொண்டுவரு வதும் அரச வங்கியான மக்கள் வங்கி யின் கடமைப் பொறுப்பாகும்.

### மூலதனத்தின் நிறைவான தன்மை

மீள முதலீடுசெய்யப்பட்ட அதிகபட்சமான சம்பாத்தியங்கள், அரசாங்க மூலதனம், 5 பில்லியன் ரூபா பெறுமதியுடைய இரு தொகுதிக்கடன்கள் என்பவற்றுடன் மக் கள் வங்கியானது தனது மூலதனத் தளத்தை (Tier I & Tier II மற்றும் Basel I&II என்பவற்றின் கீழ் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் என்பவற்றின் கூட்டுச் சேர்க்கையுடன்) தொடர்ந்து அதி கரித்து வந்துள்ளது. இலங்கை அரசாங் கம், ஆசிய அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத் திடப்பட்ட ஒப்பந்தத்துடன் உடன்பட்ட வகையில், நிதி அமைச்சானது உரிமைப் பங்கு மூலதன முதலீட்டின் நான்கு கட்டங் களாக 2005, 2006, 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் முறையே 2 பில்லியன், 1 பில்லியன், 1.5 பில்லியன், 1.5 பில்லியன் ரூபாய் முதலீட்டை உட்செலுத்தியது. முத லீட்டளிப்புத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டும், குறிப்பிட்ட சில செயற்பாட்டு இலக்குகள் மற்றும் முக்கியமான செயற் பாட்டுக் குறிகாட்டிகள் என்பவற்றை மக் கள் வங்கி எய்திய சூழ்நிலையிலும் இவை வழங்கப்பட்டன. 2009 இல் காணப் பட்ட 13.4 சதவீத மூலதன நிறைவு விகி தத்துடன் ஒப்பிடுமிடத்து, 2010 இன் இறு தியில் காணப்பட்ட 12.8 வீதத்தை வங்கி எய்துவதை 2009 ஆம் ஆண்டின் 1.9 பில்லியன் ரூபா பெறுமதியுடைய தன்னு டன் வைத்துள்ள சம்பாத்தியம் மற்றும் இவ்வருடத்தில் காணப்பட்ட நட்ட அச்சம் நிறைந்த சொத்துகளிலான எல்லை வளர்ச்சி என்பவற்றுடன் இணைந்ததாகக் காணப்படும் இந்த உபாயங்கள் சாத்தியப் படச் செய்துள்ளன (அட்டவணை 8). இவ்விகிதமானது மத்திய வங்கியின் நியதிச் சட்டப்படியான தேவைப்பாட்டிலும் அதிகமானதாகும். சில வருடங்களுக்கு முன்னர் இவ்விகிதமானது எதிர்மறையாக அல்லது 10 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது என்பதைக் கவனத்தில் கொள் ளும்போது, இதுவோர் குறிப்பிடத்தக்க சாதனையாக அமைந்துள்ளது.

2009 இல் 9 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்ட, வங்கித்துறையின் செயற் படுத்தப்படாத கடன் விகிதத்துடன் ஒப்பிடு கையில், மக்கள் வங்கியின் செயற்படுத் தப்படாத கடன் விகிதமானது 2009 இல் 6.7 சதவீதமாகவும், 2010 இல் 5.5 சத வீதத்துக்குக் குறைவாகவும் காணப்பட் டது. இத்தொழில் துறையில் காணப்படும் 50 சதவீதத்துக்கும் குறைவான செயற் படுத்தப்படாத கடன் உள்ளடக்க விகிதத் துடன் ஒப்பிடுமிடத்து, இவ்வங்கியின் செயற்படுத்தப்படாத கடன் உள்ளடக்கல் விகிதமானது 70 சதவீதத்திற்கும் அதிக மாகக் காணப்படுகின்றது (மக்கள் வங்கி, 2010). ஒட்டுமொத்தமாக, 2009 இல் 6.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட, வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடு மிடத்து, இவ்வங்கியானது 2010 ஆம் ஆண்டு 8.8 பில்லியன் ரூபாவாகிய அதி யுயர்வான இலாபத்தை பெற்றுள்ளது; மிக மோசமான சந்தை நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளும்போது, 44.4 சத வீத அதிகரிப்பான இது நிச்சயமாக ஓர் பெரும் சாதனையாகும். 2009 ஆம் ஆண் டில் 3.3 பில்லியன் ரூபாவாகக் காணப் பட்ட வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுமிடத்து, 2010 இல் 5.2 பில்லியன் ரூபாவாகவுள்ள வரிக்குப் பின்னரான இலாபம் 57 சதவீத வளர்ச்சியைக் காட்டு கின்றது. கடந்த வருட காலத்தில் காணப் பட்ட கடன் வழங்கல் வீதத்தின் குறைப்பு மற்றும் சவால் நிறைந்த பேரினப் பொரு ளாதாரச் சூழல் என்பவற்றின் மத்தியி லும், தேறிய வட்டி வருமானமானது 8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து, மொத்தம் 25.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது (அட்டவணை 9).

### சாதனைகள்

தென்னாசியப் பிராந்தியத்தில் காணப் படும் மிக அதிகளவான வெளிப்படை யான தன்மையும் பொறுப்புக்கூறும் தன் மையும் கொண்ட நிதி நிறுவனங்களில் ஒன்றாக அமைந்துள்ள மக்கள் வங்கியா னது பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், இலங்கை ஆகியன உட் பட பல்வேறு நாடுகளிலுள்ள நன்கு அறி யப்பட்ட பல பொதுத்துறை அமைப்புகளு டன் போட்டியிட்டு, 2008 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்காக வங்கியின் வரலாற்றின் முதல் தடவையாக SAFA (தென்னாசிய கணக்காளர் சம்மேளனம்) விருதை பெற்றது. உயர் நியமங்களை நிலைநிறுத்துவதில் அதற்குள்ள உள் ளார்ந்த ஈடுபாட்டை இது தெளிவாகக் காட்டுகின்றது. 2009ஆம் ஆண்டு வரு டாந்த அறிக்கைக்கான பொதுத்துறை வகைப்படுத்தலில் கூட இவ்வங்கியானது முதல் தடவையாக SAFA விருதைப் பெற்றது.

மக்கள் வங்கியானது பிரசித்தி பெற்ற SLIM (இலங்கை சந்தைப்படுத்தல் நிறு வனம்) உயர் சிறப்பு வாய்ந்த வர்த்தகக் குறி விருதை - '2009 ஆம் ஆண்டிற்கான சேவைகள் வர்த்தகக் குறியை (தங்க விருது)' முதன்முதலாகப் பெற்றது. அத் துடன், சமூகப் பொறுப்பை நிறைவேற்று வதற்கான அதனுடைய சேவைகள் மற் றும் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயரத்தியமை என்பவற்றை அங் கீகரித்து, 2009 ஆம் ஆண்டின் மக்கள் விருதை தொடர்ச்சியாக நான்காவது வருடமாகப் பெற்றுள்ளது. மேலும், SLIM நெல்சன் மக்கள் விருது வழங்கலில், தொடர்ச்சியாக ஐந்தாவது வருடமாக இவ்வங்கிக்கு 2010 ஆம் ஆண்டின் மக்கள் சேவை வர்த்தகக் குறி விருது வழங்கப்பட்டது.

இதுதவிர, 2009ஆம் ஆண்டில் அவுஸ் திரேலியாவின் பேத் நகரில் நடைபெற்ற வங்கித் தொழில்நுட்ப மகாநாட்டின்போது, Silverlake மற்றும் IBM ஆகியவற்றால், தென்னாசியா மற்றும் மத்திய கிழக்கிற் கான மிகச் சிறந்த மைய வங்கித்துறை அமுலாக்கம் மற்றும் அபிவிருத்தி விருது மக்கள் வங்கியின் மைய வங்கி முயற்சிக் காக வழங்கப்பட்டது.

இச்சாதனைகள், 2010 காலத்தில் மக்கள் வங்கியானது தனது தரவரிசைப்படுத் தலை அதிகரிப்பதைச் சாத்தியப்படச் செய் தன. இது, Fitch Rating Lanka Ltd இனால் வழங்கப்பட்டிருந்த A இலிருந்து AA ஆக தனது நிலை அதிகரிக்கச் செய்தது டன், RAM Ratings Lanka Ltd ஆல் AAA தரவரிசைப்படுத்தலாக மேலும் பெருக்கியது. மூலதன அடித்தளம், இலாப ஆற்றல், சொத்துக்களின் தரம் என்பன குறித்த வகையில், வங்கியின் உறுதி யான நிதி விபரங்களை இது வெளிப் படுத்துகின்றது.

### புத்தாக்க முயற்சிகள்

இணைய வங்கிச்சேவை, செல்லிடத் தொலைபேசி வங்கிச்சேவை (டயலொக் அக்ஸியாவுடன் இணைந்து) கையடக்க கணினி வங்கிச்சேவை, குறுந்தகவல் வங்கிச்சேவை போன்ற புதிய திட்டங்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கருவிகளும் சேவைகளும் என்பவற்றின் அறிமுகம் காரணமாக, வங்கியின் ஒரு தொகுதி நிதிக் கருவிகளும் சேவைகளும் மற்றும் சேவைவழங்கல் வழிமுறைகள் என்பன விரிவுபடுத்தப்பட்டன. மைய வங்கி முறைமையானது கிளை வலையமைப்பு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டமையால், 2010 இல் ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பட்ட கிளைகளின் எண்ணிக்கை 461 ஆக அதிகரித்தது. மரபு ரீதியான கிளையொன் றால் சேவைகளை வழங்குவதற்கு எடுக் கும் நேரத்தை விட, மிகக் குறைந்த நேரத் தில் அவசரமாகத் தேவைப்படும் வங்கி வசதிகளை பயன்படுத்துவதற்கான வாய்ப் புகளை துரிதமாக வழங்கும் புத்தாக்க இயல்புடைய ஓர் வழிமுறையாக இது அமைந்துள்ளது. அட்டைகளை அடிப் படையாகக் கொண்ட கொடுப்பனவுப் பாணிகள் மற்றும் தன்னியக்கப் பணப் பரிமாற்றல் இயந்திர வசதிகள் என்ப வற்றை நோக்கிய குறிப்பிடத்தக்க ஓர் நகர்வு காணப்பட்டது. இப்புத்தாக்கச் செயற்பாடுகள் காரணமாக வங்கிகள், சேவை வழங்கல் காலத்திலான மேம்பாடு களுடன் கூடிய வாடிக்கையாளர் உறவுக

ளையும் சேவைத் தரங்களையும் விருத்தி செய்யக் கூடியதாக இருந்தன.

## முன்னாலுள்ள சவால்கள்

நிதி தொடர்பான தாராளமயமாக்கமும் தொடர்ச்சியான கட்டுப்பாட்டுத் தளர்வுகளும் இலங்கையில் நிதிச் சந்தைகளை அதிகளவான தன்னாட்சியதிகாரம் மற்றும் தொழிற்பாட்டு நெகிழ்ச்சித்தன்மை என்பவற்றுடன் கூடிய மிக்க போட்டித்தன்மை வாய்ந்தவையாக ஆக்கியுள்ளன. அதே வேளை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் காணப்படும் மிகப் பெரும் முன்னேற்றமானது உள்நாட்டு வங்கிகளின் உலகமயமாக்கத்திற்கு கூட துணைபுரிந்துள்ளது. எதிர்காலத்தில், வங்கித்துறையானது தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பாடல் முறைமைகளால் அதிகளவுக்கு வழிநடத்தப்படும். வங்கித் துறை நிறுவனங்கள் சாத்தியப்படத்தக்க சந்தைகளில் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான அதிகளவு வாய்ப்புகளை இந்த ஒருமைப்பாடுகள் வழங்குகின்றன. ஆகவே, சந்தைகள் இயங்கும் விதத்தை புரிந்துகொள்கின்ற, அச்சுறுத்தல்களை உணர்கின்ற, நிலையுறுதியற்ற தன்மைகளை எதிர்பார்க்கின்றவையாக உள்ள வங்கிகள் தமது தொழிற்பாடுகளில் அதிகளவான தொழில்வாண்மையையும் இயக்காற்றலையும் வெளிப்படுத்துவதுடன், நீடித்திருப்பதும் வளர்ச்சி காண்பதுமாகவுள்ள சந்தைத் தேவைகளுக்கு உடனடியாக எதிர்வினையாற்று கின்றன.

புதிய சூழலைக் கவனத்தில் கொள்ளும் போது, இலங்கையிலுள்ள அரச வங்கிகள் பரவலாகக் காணப்படுகின்ற மாற்றங்களாலும் அவற்றுக்கு முன்னாலுள்ள சவால்களாலும் தொடர்ந்தும் பாதிக்கப்படாமல் இருக்க முடியாது. ஆகவே, போட்டித்தன்மையையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்காக சேவைத் தரங்களை நியமத்தரமாக்குவதன் மூலம், தம்மைத்தாமே மீளமைத்துக்கொள்ள வேண்டிய தேவையுண்டு. இதுதவிர, அரச வங்கிகள் உத்தியோகஸ்தர்கள் மற்றும் நிபுணர்களின் ஆற்றலையும் தகைமைகளையும் அதிகரிக்க வேண்டும் என்பதுடன், தொழிற்படும் முறைகளையும் வணிக சிந்தனைகளையும் புதுப்பித்து, சேவைத் தரத்தையும் வணிக வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக தமது மூலதன அளவை விரிவுபடுத்தவும் வேண்டும்.

கடந்த பல வருடங்களாக மக்கள் வங்கியானது போற்றத்தக்க நிதிச் செயற்பாடுகளை வெளிப்படுத்தியுள்ள போதும், எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கும் சந்தைத் தலைமைத்துவத்தைத் தொடர்ந்து பேணுவதற்கும் வங்கியினுடைய போட்டித்தன்மையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும். இவ்வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துதல்; புத்தாக்க மற்றும் பல்வகைப்பட்ட கருவிகள், உயர் தரமான தொழில்நுட்பத்தின் பிரயோகம் என்பவற்றின் அறிமுகம்; Basel II இன் அமுலாக்கம்; நட்ட அச்ச முகாமைத்துவ முறைமைகளின் முன்னேற்றம்; புதிய கணக்கீட்டு நியமங்களின் அமுலாக்கம்; வெளிப்படையான தன்மை மற்றும் வெளிப்படுத்தப்படும் தகவல்களின் மேம்பாடு; உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் எனும் கருத்துடனான உடன்பாட்டு அம்சங்கள் என்பனவே வங்கிகளால் இன்று எதிர்கொள்ளப்படும் பரந்த சில சவால்களாகக் காணப்படுகின்றன. இவ்வங்கியானது தனது பொன் விழாவை பூர்த்தி செய்யும் தருணத்தில் இருப்பதால், பொருளாதாரத்தின் மாற்றமடைந்து செல்லும் தேவைகளுக்கு சாதகமான முறையில் எதிர்வினையாற்றுவதற்கான தனது சொந்த இயக்காற்றலையும் விரைவூக்கத்தையும் கொண்டிருக்க வேண்டிய தேவையை இச்சவால்கள் தோற்றுவித்துள்ளன. இவ்வாறாக, மக்கள் வங்கியின் தொலைநோக்கு, குறிக்கோள், புத்தாக்கங்கள் மற்றும் சமூக உள்ளார்ந்த ஈடுபாடு என்பவற்றை பயன்படுத்தி இச்சவால்களை வாய்ப்புகளாக மாற்ற முடியும்.

இதுதவிர, தமது தேவைகளுக்குப் பொருத்தமானதாக மாற்றியமைக்கக் கூடிய, பல்வேறுபட்ட தேவைகளை கவனத்தில் கொள்கின்ற கருவிகள் சனத்தொகையின் புறக்கணிக்கப்பட்ட பிரிவினருக்குத் தேவைப்படுகின்றன. அவர்களுடைய வங்கித் தேவைகள் சிறியனவாகவும் செலவுச் சிக்கனமான வழிமுறையில் சேவைகளை வழங்குவதாகவும் உள்ளன என கருதப்படுகின்றது.

அதேவேளை, சர்வதேச நிதிச் சந்தைகளின் தரத்திற்கு தம்மை உயர்த்துவதற்கு, இலங்கையிலுள்ள அரச வங்கிகள் தமது வினைத்திறன்களை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவையுண்டு. ஆகவே, 2013 இலிருந்து 5 வருடங்களில் கட்டங்கட்டமாக அமுல்படுத்தப்படவுள்ள, Basel III ஆக குறிப்பிடப்படுகின்ற உலகளாவிய புதிய தரங்களை எதிர்கொள்வதற்கு அரசாங்க மற்றும் தனியார்துறை வங்கிகள் முழுமையாக தயார் நிலையில் இருக்க வேண்டும்.

## முடிவுரை

நிதிச் சேவைத் துறையின் கட்டுப்பாடுகளைத் தளர்த்துகின்ற ஓர் பின்விளைவாக, கடந்த 4 தசாப்தங்களாக இலங்கையின் வங்கித்துறையானது கட்டமைப்பு மாற்றங்களை எதிர்கொண்டு வந்துள்ளது. இச்சீராக்கங்கள் நிதிச்சந்தையின் உற்பத்தித்திறனும் வினைத்திறனும் மற்றும் போட்டித்தன்மையின் அளவு என்பவற்றை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டிருந்தன. இலங்கையின் வங்கி முறைமையின் இன்றியமையாத பகுதியாக அரச வங்கிகள் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளன. அவற்றின் தோற்ற காலத்திலிருந்து, நாட்டிலுள்ள பிரதான நகரங்கள் தொடக்கம் கிராமங்கள் வரை சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகளின் வளர்ச்சிக்கு பின்னால் இருந்து வழிப்படுத்தும் ஓர் சக்தியாக அவை சேவையாற்றி வந்துள்ளன. கடந்த 50 வருட காலத்தில், மக்கள் வங்கியானது பரிணாமவளர்ச்சியடைந்து வந்துள்ளதுடன், மக்களின் பொருளாதார - சமூக தேவைகள் மற்றும் நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தியின் சக்திகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட, பல்வேறு மாற்றங்களை அனுபவித்துள்ளது. இன்று, மக்கள் வங்கியானது பலமான நிதி உறுதிப்பாடு மற்றும் முன்னணிச் சந்தைப் பங்கு என்பவற்றுடன் கூடிய இயக்காற்றல் மிக்கதும் விரைவாக வளர்ந்து வருவதுமான ஓர் வங்கியாகத் தோற்றம் பெற்றுள்ளது. இந்த நவீன கால தொழில்நுட்பத்தின் ஆதரவு காரணமாக, இவ்வங்கியானது உற்பத்திப் புத்தாக்கம் மற்றும் சேவை வழங்கல் என்பவற்றில் துரிதமான முன்னேற்றம் கண்டுள்ளது. இதனால், வாடிக்கையாளர் சேவையின் தரத்தை மேம்படுத்தியுள்ளது. உலக பொருளாதார வளர்ச்சியின் வேகக்குறைவின் பாதிப்பைக் குறைப்பதில், செம்மையான ஒழுங்குவிதி மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்பு என்பவற்றின் ஆதரவுடன் கூடிய, பலமான மூலதன இருப்புநிலை, சம்பாத்தியங்களை இடர்வாய்ப்புகள் ஏற்படாதவாறு வைத்திருத்தல், மேம்பட்ட நட்ட அச்ச முகாமைத்துவ முறைமை என்பன இந்த வங்கியை உறுதியான நிலையில் இருக்கச் செய்துள்ளது.

இருந்தபோதிலும், வங்கியின் சந்தைத் தலைமைத்துவத்தைப் பேணுவதற்கு, வாடிக்கையாளர் சேவை மேம்பாடு, தொழில்நுட்பத்திலான புத்தாக்கங்கள், நட்ட அச்ச முகாமைத்துவ முறைமைகளின் முன்னேற்றம், பல்வகைப்பட்ட கருவிகள் என்பன அவசியமானவையாகும். மக்கள் தமது உற்பத்தி, வேலைவாய்ப்பு செயற்பாடுகளை மாற்றியமைத்தல் மற்றும் வறுமையிலிருந்து விடுபடுதல் என்பவற்றை சாத்தியப்படச் செய்வதில், நிதியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் மிக முக்கியமான ஒரு காரணியாகக் காணப்படுகின்றமையால், வங்கியானது சனத்தொகையின் நலிவுற்ற மற்றும் ஏனைய புறக்கணிக்கப்பட்ட பிரிவினரை வங்கியில் கணக்கு வைத்திருப்போராக ஆக்குதல், சமூக நீதியுடன் கூடிய ஒத்திசைவான பொருளாதார வினைத்திறன் என்பவற்றை நோக்கியதாக இவ்வங்கி கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது. அதுவே மிக முக்கியமான சவாலாகும். ■

# இறை தொடர்பான அதிகாரப்பரவலாக்கம்: இலங்கையில் முரண்பாட்டுத் தீர்வை நோக்கிய ஒரு முன்னேற்றப் படிக்கல்

கலாநிதி. முத்துகிருஷ்னா சர்வானந்தன்
*முதன்மை ஆய்வாளர், அபிவிருத்தக்கான பருத்தித்துறை நிறுவனம்*

## அறிமுகம்

சிறுபான்மையினரின் மனத்தாங்கல்களைத் தீர்ப்பதற்கு இலங்கையில் நீண்ட கால மாக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான அரசியல் செயல்முறைகள், அரசின் வடிவம் (ஒற்றையாட்சி எதிர் சமஷ்டி), அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரத்தை பகிர்வதற்கான அலகு (கிராமம், மாவட்டம் அல்லது மாகாணம்), மொழி, நிலம், பொலிஸ் மற்றும் வேறு நிர்வாக பிரச்சினைகள் என்பவற்றிலேயே முழுக் கவனத்தையும் செலுத்திவந்துள்ளன. மத்திய அரசாங்கத்திற்கும் பிராந்தியரீதியான அரசியல் / நிருவாக அலகுகளுக்கும் இடையில் நிதி/ இறை அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் மிக சொற்பமாகவே இடம்பெற்றுள்ளன. முன்பு இடம்பெற்ற சகல தொடர் அரசியல் செயற்பாடுகளும் அரசியல் அல்லது நிர்வாக விடயங்களில் அல்லது இரண்டிலுமே தோல்வியடைந்துள்ளன.

சட்டம், நிலம், ஒழுங்கு மற்றும் இறை அதிகாரங்கள் தொடர்பில் அதிகாரப் பகிர்வு போதியளவு கிடையாத காரணத்தால், வெளியிலிருந்து திணிக்கப்பட்ட யாப்புக்கான 13 ஆவது திருத்தம் கூட சிறுபான்மை சமுதாயங்களின் அபிலாஷைகளை பூர்த்தியாக்கவில்லை. நிலம் மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பில் அதிகாரப்பகிர்வு பற்றிய விவாதங்கள் இடம்பெறினும் இறை அதிகாரம் பகிரப்படுதல் என்னும் விடயம் முக்கியஸ்தர்களின் அல்லது 13ஆவது திருத்தத்துக்கு எதிரானவர்களின் கவனத்தை இதுவரை கவரவில்லை. சிறுபான்மையினரின் குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்களின் குறைபாடுகளை தீர்க்கக்கூடிய, நிலைத்திருக்கக் கூடிய அரசியல் தீர்வை நோக்கிய ஒரு முன்னேற்றப் படிக்கல்லாக இறை அதிகாரத்தை பகிர்வதை ஊக்குவிக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே, இக்கட்டுரை இலங்கையில் தற்போது காணப்படும் இறை அமைப்பை ஆராய்ந்து, இலங்கையின் இன முரண்பாட்டுக்கு நிலைத்திருக்கக் கூடிய அரசியல், பொருளாதார தீர்வை நோக்கிய ஒரு முன்னேற்றப் படிக்கல்லாக அமையக் கூடிய அதிகாரப்பகிர்வுடன் கூடிய ஒரு இறை அமைப்பை முன்வைக்கவுள்ளது.

## பொது நிதி

அரசாங்க வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% மட்டுமேயாயினும், 2009 இல் அரசாங்க செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25% ஆக காணப்பட்டது. எனவே தேசிய வரவு-செலவு திட்ட பற்றாக்குறை 2009 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10% இலும் சற்று அதிகமாகக் காணப்பட்டது. மேலும், 2009 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுப்படுகடன் 86 சதவீதமாக காணப்பட்டது (இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2009). இதுதவிர, மொத்த அரசாங்க வருவாய் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவை ஈடுசெய்யப் போதாததாக உள்ளது, (இப்படியான நிலைமை 1989 இலிருந்து காணப்படுகிறது) அல்லது வருடாந்த பொதுப்படுகடன் சேவைக்கும் போதாது உள்ளது. வேறு வார்த்தையில் கூறுவதாயின், மீண்டெழும் செலவில் ஒரு பகுதியும் அரசாங்கத்தின் மூலதன செலவு முழுவதும் பொதுப்படுகடன் சேவையில் ஒரு பகுதியும் கடன் வாங்கிய பணத்திலேயே கொடுக்கப்படுகிறது.

பொது நிதி இப்படி ஆபத்தான நிலைவரத்தில் காணப்படும் வேளையில், அரசாங்க செலவை மறுசீரமைப்பது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். தேசிய, மாகாண, உள்ளூர் மட்டங்களில் அரசாங்க வருவாயை அதிகரிப்பதும் அத்தியாவசியமானதாகும். தற்போது, இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக அரசாங்க வருவாயை (15%) நோக்கும் போது, இது கீழ்நடுத்தர வருமான நாடுகளிடையே ஆகக் குறைந்ததாக காணப்படுகிறது. இதை குறைந்தபட்சம் 20 சதவீதமாகவேனும் அதிகரிக்க வேண்டும். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினால் பெறக்கூடிய வருவாயை, தேசிய மட்ட அரசாங்கத்தினால் பெறக்கூடிய வருவாயுடன் ஒப்பிடுமிடத்து, அற்பமாக உள்ளது (பின்வரும் பகுதியைப் பார்க்கவும்); இங்குதான் இறை அதிகாரத்தை பகிர்வதன் மூலம் பொது வருவாயை அதிகரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

அரசாங்கத்தின் வருவாயில் மூன்றிலிரண்டு பங்கு நுகர்வு (மறைமுக) வரிகள் மூலமும், 20 சதவீதம் வருமான (நேர் வரி) வரிகள் மூலமும் கிடைக்கின்றது (அட்டவணை - 1 பார்க்கவும்). பொருளியல் கோட்பாட்டின்படி, நுகர்வு வரிகள் தேய்வு வகையினதாகவும், வருமான வரிகள் விருத்தி முறை வகையானதாகவும் உள்ளன. நுகர்வு வரிகளுக்கான வீதங்கள் நுகர்வோரின் வருமான மட்டத்துடன் தொடர்பில்லாமல் பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யும் சகலருக்கும் சமமாக உள்ளன. அதேசமயம், வருமான வரிக்கான வீதங்கள் தனியாட்களின் அல்லது வணிக நிறுவனங்களின் வருமானம் உயர்வதற்கேற்ப அதிகரிக்கின்றன (அதாவது வருமான வரியின் அளவு வருமானத்தின் அளவுக்கு விகித சமனாகும், வருமானம் கூட ஒருவர் செலுத்தும் வருமான வரி அதிகரிக்கும் - இது 'செலுத்தும் ஆற்றல்' கோட்பாடு எனப்படும்). எனவே, அரசாங்கம் வித்தியாசமான முறையில் யோசித்து, மாகாண, உள்ளூராட்சி மட்ட அரசாங்கங்களின் வரியமைப்புடன் ஒப்பிட்டு, மத்திய அரசாங்கத்தின் இறை அமைப்பின் இயல்பு, உள்ளடக்கம், விசாலம் என்பவற்றை மாற்றியமைப்பதனால், இறை பற்றாக்குறைப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டிய காலம் வந்துவிட்டது. ஜனாதிபதி வரி ஆணைக்குழு அதன் 2009-2010 கால ஆலோசனைகளில், அரசாங்க வருவாய்க்கும் செலவீட்டுக்குமிடையில் காணப்படும் இடைவெளியை குறைப்பதற்கும், இதன் மூலம் தேவையற்ற இடர்நேர்வுகளைத் தவிர்க்கின்ற இறைக் கொள்கையை (1977 இன் பிற்பட்ட காலத்து ஊதாரித்தனத்தை கைவிட்டு) கடைப்பிடிக்கவும் புதிய ஆலோசனைகளை முன்வைக்க முடியும். தேவை ஏற்படின், தற்போதைய யாப்புக்கு திருத்தங்களை செய்ய வேண்டும். இதற்கு தேவையான பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதில் தற்போதைய அரசாங்கத்துக்கு பிரச்சினை இல்லை.

## மாகாண நிதி

1999 - 2004 காலப்பகுதியில், எட்டு மாகாணங்களிலும் இருந்தும் மொத்தமாக பெற்ற வருவாய் மத்திய அரசாங்கத்தின் மொத்த வருவாயில் 3.5 சத வீதத்துக்கும் 4.3 சதவீதத்துக்கும் இடையில் காணப்பட்டது (அது 1999 இல் 3.5% ஆகவும் 2004 இல் 4.3 ஆகவும் காணப்பட்டது). 1999 - 2004 காலப்பகுதியில், மொத்த மாகாண வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.6% ஆக தொடர்ந்து காணப்பட்டது. அதேசமயம் மத்திய அரசாங்கத்தின் மொத்த வருவாய் 1999 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 17.7% ஆகவிருந்து, 2004 இல் 15.3% ஆக

ஒரேசீராக வீழ்ச்சி கண்டது (வைத்திய சேகர 2005). மறுபக்கத்தில், 1999 - 2003 காலப்பகுதியில் எட்டு மாகாணங்களினதும் மொத்த செலவு மத்திய அரசாங்கத்தின் இதே காலப்பகுதிக்கான மொத்த செலவீட்டின் 10.2% இற்கும் 11.7% இற்கும் இடையில் காணப்பட்டது. பண அளவில் கூறினால், உதாரணமாக மொத்த மாகாண செலவு 2004 இல் 57 பில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தபோது, மொத்த மாகாண வருவாய் அதே ஆண்டில் 14 பில்லியன் இலங்கை ரூபாயாக காணப்பட்டது (வைத்திய சேகர 2005).

அட்டவணை 1: அரசாங்க வருவாயின் ஒருங்கமைவு — 2009

| | | இல. ரூபா மில்லியனில் | சதவீதம் |
|---|---|---|---|
| **வருமானம் மீதான (நேரடி) வரிகள்** | | **1,39,558** | **20** |
| தனிப்பட்ட | 28,229 | | |
| கம்பனி | 66,751 | | |
| வட்டி மீதான வரி | 44,578 | | |
| **செலவுகள் & உற்பத்தி மீதான(மறைமுக)வரிகள்** | **4,77,704** | | **67** |
| பெறுதமதி சேர் வரி (VAT) | 1,71,510 | | |
| விற்பனை வரிகள் | 97,604 | | |
| இறக்குமதி வரிகள் | 79,810 | | |
| அனுமதிப்பத்திர வரிகள் | 3,269 | | |
| முத்திரை வரி/Cess levy/SRL/RIDL/ SCL/NBT & ஏனையவை | 81,190 | | |
| பெறுகடன் வரி | 8,036 | | |
| துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி வரி(PAL) | 36,286 | | |
| வருமானம், பங்குலாபம், வட்டி | | **41,025** | **6** |
| **வியாபார நிறுவனங்களின் மொத்தப் பெறுகைகள்** | **8,566** | **1** | |
| ரயில் | 4,020 | | |
| தபால் | 4,546 | | |
| **ஏனைய நடைமுறைப் பெறுகைகள்** | | **44,526** | **6** |
| தேசியச் சீட்டிழுப்பு (லொத்தர்) | 1,542 | | |
| ஏனையவை | 42,986 | | |
| **மொத்தம்** | | **7,11,379** | **100** |

*மூலம்:* Central Bank of Sri Lanka, *Annual Report 2009*, Statistical Table 9, Colombo

சர்வதேச ரீதியாக, மத்திய அரசாங்கத்தின் வருவாயின் சதவீதமாக மத்திய அரசாங்கத்துக்கு கீழ்ப்பட்ட ஆட்சி அலகுகள் பெற்றுக்கொண்ட வருவாய், பிரேஸிலிலும் (1998) இந்தியாவிலும் (1999) கிட்டத்தட்ட 50% என்னும் உயரளவில் காணப்பட்டது. அத்துடன், நடுத்தர அளவில் மலேஷியாவிலும் (1997 இல் 11.5% ஆக) தாய்லாந்திலும் (2002இல் 17.0% ஆக), குறைந்த அளவில் பிலிப்பைன்ஸிலும் (1993 இல் 2.7% ஆக) இலங்கையிலும் (2004 இல் 4.3% ஆக) காணப்பட்டது (வைத்தியசேகர 2005). மத்திய அரசாங்கத்தின் செலவின் சதவீதமாக கீழ்மட்ட ஆட்சி அலகுகளின் செலவு உயர் அளவில் 88.7 ஆக 1999 இல் இந்தியாவிலும், நடுத்தர அளவில் 13.7% ஆக 1993 இல் இந்தோனேஷியாவிலும், 12.4% ஆக 1997இல் மலேஷியாவிலும், 11.7% ஆக 2003 இல் இலங்கையிலும் காணப்பட்டதோடு, குறைந்த அளவில் 5.5% ஆக 1993 இல் பிலிப்பைன்ஸிலும் 6.0% ஆக 2002 இல் தாய்லாந்திலும் காணப்பட்டது (வைத்தியசேகர, 2005). மேலே, சர்வதேச ரீதியாக ஒப்பிட்டு காட்டப்பட்ட தரவுகள் வெவ்வேறு வருடங்களுக்கானவையாகும். எனவே, இதை எச்சரிக்கையோடு கையாள வேண்டும். 2000 - 2004 காலப்பகுதியில் வடக்கு-கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாகாண மொத்த உள்ளூர் உற்பத்தியின் வளர்ச்சியை விட மாகாண வருவாய் அதிகரிப்பு கூடுதலாக காணப்பட்டது (வைத்திய சேகர, 2005). உதாரணமாக, 2004 இல் வடக்கு கிழக்கு மாகாணசபையின் மொத்த வருவாய் (141 மில்லியன் ரூபா) அதே வருடத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.08% வீதமாக மட்டும் காணப்பட்டது (வைத்தியசேகர, 2005).

இதிலிருந்து இலங்கையில் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் மாற்றல்களிலேயே மாகாணசபைகள் பெரிதும் தங்கியிருப்பது புலனாகின்றது. உதாரணமாக, எட்டு மாகாணங்களிலிருந்தும் மொத்தமாகக் கிடைத்த மாகாண வருவாய் 13.6 பில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தபோது, 2004 இல் மத்திய அரசாங்கத்திடமிருந்து சகல எட்டு மாகாணங்களுக்கும் 38.5 பில்லியன் ரூபாய் மாற்றல்களாக வழங்கப்பட்டுள்ளது. மாகாணங்களின் தேவைகளை மதிப்பிடவும், மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி ரீதியான மாற்றல்களை பெற்று மாகாண அரசாங்கங்களுக்கு பகிர்வதற்கென உருவாக்கப்பட்ட நிதி ஆணைக்குழு கடந்த 22 வருடங்களில் ஒரேயொரு வருடாந்த அறிக்கையை (2004) மட்டும் வெளியிட்டிருந்தது. இது யாப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதில் காணப்படும் அசமந்தப் போக்கை எடுத்துக்காட்டுகிறது.

இரண்டாம் நிலை அரசாங்கம் (மாகாண சபை முறைமை) மத்திய அரசாங்கத்தின் கடமைகளையே மேற்கொள்ளும் தொழிற்பாடுகளைக் கொண்ட செலவுமிக்க முறை என்றும் மாகாணங்களுக்கு இதனால் நன்மை இல்லையென்றும் வாதிடுவோர் உள்ளனர் (Hewavitharana 1977).[3] 2009 இல் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு 102 பில்லியன் ரூபாவைச் (USD 0.90 பில்லியன்) செலவு செய்து, நிதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அமைச்சு ஆகியவற்றை அடுத்த நாலாவது ஆகக் கூடிய செலவு செய்த அமைச்சு ஆகியது. நிதி அமைச்சு 831பில்லியன் ரூபாவைச் (USD 7.23 பில்லியன்) செலவு செய்தது. இந்த செலவில் பெரும்பங்கு பொதுப்படுகடன் மீளச் செலுத்துகைக்கு சென்றது. பாதுகாப்பு அமைச்சு (பொது பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அடங்கலாக) 212 பில்லியன் ரூபாவைச் (USD 1.85 பில்லியன்) செலவு செய்தது பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு 106 பில்லியன் ரூபாவைச் (USD 0.93 பில்லியன்) செலவளித்தது.

இருப்பினும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செலவில் பெரும் பங்கு மாகாணசபை ஊழியர்களின் சம்பளம் மற்றும் நுகர்வுத் தேவைகளின் மீதே சென்றது (இது 2009 இல் 76% ஆக காணப்பட்டது). 1988 இல் மாகாண சபைகள் அமைந்தபோது தேவையான ஊழியர்கள் மத்திய அரசாங்க சேவையிலிருந்து பெறப்பட்டனர். தற்போதுள்ள (சபைகள், கூட்டுத்தாபனங்களிலுள்ள - அரைகுறை அரசாங்க ஊழியர்கள் அடங்கலாக) 1.3 மில்லியன் அரச சேவையாளர்களில் 300,000 பேர் வரை மாகாணசபை சேவைகளில் உள்ளனர். 1988 இலிருந்து சிறு தொகையான புது நியமனங்களே மாகாண சபை நிர்வாக சேவைகளுக்கு நேரடியாக செய்யப்பட்டன. மேலும், எந்தவொரு மாகாணத்திலும் மாகாண மட்ட நிர்வாகங்களுக்கென புதிய கட்டிடம் எதுவும் கட்டப்படவில்லை. அநேகமாக ஏற்கெனவே இருந்த கட்டிடங்களே மாகாணசபைகளால் பயன்படுத்தப்பட்டன அல்லது தனியாரிடமிருந்து வாடகைக்கு பெற்று பயன்படுத்தப்பட்டன.

நிர்வாக அலகினூடாக நேர்வரிகளையும் மறைமுக வரிகளையும் வினைத்திறன் மிக்க வகையில் சேகரிப்பதற்கு, மாகாண மட்ட மற்றும் உள்ளூர் மட்ட இறைவரித் திணைக்களமும் கலால் திணைக்களமும் நிறுவப்பட வேண்டும். உள்ளூர் வணிக நிறுவனங்கள், வாண்மைத்துவ சேவைகள் என்பன பற்றிய தகவல்களை கொழும்பிலமைந்த மையப்படுத்தப்பட்ட திணைக்களங்களை விட உள்ளூரிலுள்ள உள்நாட்டு வருவாய் மற்றும் கலால் திணைக்களங்களால் வினைத்திறன் மிக்க வகையில் பெற் றுக்கொள்ள முடியும்.

அட்டவணை 2: மாகாண நிதிகள் - 2004

| மாகாணம் | சனத்தொகையின் பங்கு, 2004 | மாகாணப் பொதுத்துறை ஊழியர்களின் பங்கு, 2002 | மாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மானியம்-2004 (ரூபா மில்லியன்) | மாகாண வருவாயின் பங்கு, 2004 (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| மத்திய | 12.9 (2,506,000) | 12.9 (39,762) | 14.4 (5,764) | 7.9 (1,073) |
| வட மத்திய | 5.9 (1,145,000) | 7.8 (24,143) | 9.1 (3,514) | 2.6 (356) |
| வட கிழக்கு | **13.7 (2,662,000)** | **15.8 (48,643)** | **16.6 (6,403)** | **1.0 (141)** |
| வட மேற்கு | 11.4 (2,214,000) | 12.0 (36,949) | 14.3 (5,533) | 7.2 (977) |
| சப்பிரகமுவ | 9.4 (1,840,000) | 8.8 (27,044) | 10.7 (4,140) | 4.6 (623) |
| தென் | 12.1 (2,346,000) | 13.5 (41,628) | 13.7 (5,286) | 7.6 (1,028) |
| ஊவா | 6.3 (1,223,000) | 7.3 (22,523) | 9.3 (3,596) | 2.3 (317) |
| மேற்கு | 28.4 (5,526,000) | 21.9 (67,548) | 11.0 (4,236) | 66.8 (9,079) |
| முழு இலங்கை | **100.0 (19,462,000)** | **100.0 (308,240)** | **100.0 (38,472)** | **100.0 (13,594)** |

*மூலம்:* Waidyasekera (2005), *Decentralization and Provincial Finance in Sri Lanka: 2004 An Update*, pp7&30-31; Department of Census and Statistics, *Census of Public Sector and Semi-Government Sector Employment 2002*, Colombo.

எனவே, மாகாணசபைகள் அமைந்தமையால் மேலதிக செலவு ஒன்றும் பெரிதாக ஏற்படவில்லை. தேசிய மட்ட செலவு மாகாண மட்ட செலவாக மாற்றப்பட்டது மட்டுமே நடந்தது. வேறு விதமாக கூறினால், மாகாணசபைகள் இப்போது ஒழிக்கப்படுமாயின் அரசாங்கத்தின் செலவில் பெருமளவில் மீதப்படப்போவதில்லை. மாகாணசபை ஊழியர்களை மத்திய அரசாங்க சேவையில் திரும்பவும் உள்வாங்க வேண்டியிருக்கும் என்பதே இதற்கான காரணம் ஆகும்.

## இறை தொடர்பான அதிகாரப் பரவலாக்கத்திற்கு பின்னாலுள்ள நியாயங்கள்

இறை அதிகாரப்பரவலாக்கல் என்னும் கருத்து, கடந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதி காற்பகுதியிலிருந்து முதலாளித்துவ நாடுகளிலும், பொதுவுடமை / சமவுடமை நாடுகளிலும் (சீனா, மியன்மார் போன்றன), ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி நாடுகளிலும் ஒரே விதமாக வலுப்பெற்று வருகின்றது. பல நாடுகளின் அநுபவத்திலிருந்து இறை அதிகாரப்பரவலாக்கலானது பொருட்கள் சேவைகளின் விநியோகம், வறுமை ஒழிப்பு என்பவற்றின் மீது சாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளது (Ehtisham and Brosio, 2009). இருப்பினும், இறை அதிகாரப்பரவலாக்கல் முறை அந்தந்த நாட்டு நிலைமைக்கு ஏற்றதாக அமையவேண்டும் (Fedelino and Ter-Minassian, 2009). இந்தக் கட்டுரை ஆசிரியர் இறை அதிகாரப்பரவலாக்கத்தை வலியுறுத்துவதன் நோக்கம் ஒற்றையாட்சி அல்லது சமஷ்டி முறை ஆகியவற்றில் ஒன்றை அல்லது வேறு ஏதும் அரசியல் முறையை உயர்த்திக் காட்டுவதற்கு அல்ல. ஆனால், இதற்கான காரணம் எதுவெனில், உற்பத்தி வரிசை முறை, விநியோகச் சங்கிலி என்பவற்றை புறவளப்பெறுகை ஒப்பந்தங்களின் கீழ் அல்லது வெளிநாட்டு வளங்களை அந்தந்த நாடுகளில் வைத்தே பயன்படுத்தும் முறையின் கீழ் கொண்டுவரும் உலக வாணிப போக்கு உருவாகி வருவதன் அடிப்படையிலேயாகும். இருப்பினும், நிர்வாக, அரசியல் மற்றும் இறை அதிகாரங்களைப் பரவலாக்குவது பொருளாதார வினைத்திறனை கொண்டுவருவதற்கான சர்வரோக நிவாரணி எனக் கூற(முடியாது.

பொது நிர்வாகமாயினும் வரி நிர்வாகமாயினும் அவை மக்களுக்கு அண்மையில் காணப்படும்போது அதிகூடிய பயன் தருவதாக அமைகின்றன. வருவாய்த்துறை அதிகாரிகள் எவ்வளவு தூரம் மக்களுக்கு அண்மித்து இருக்கிறார்களோ அவ்வளவுக்கு வருவாய் சேகரிப்பை அதிகரிக்கக் கூடியதாகவிருக்கும். எனவே இப்போது காணப்படும் உள்நாட்டு இறைவரி திணைக்களமும் கலால் திணைக்களமும் பிராந்திய ரீதியான அரசியல் / நிருவாக அலகுகளுக்கு பரவலாக்கப்பட வேண்டும். சாத்தியமான, ஆகக் குறைந்த மட்ட பொது

அதிகாரம் பரவலாக்கப்பெற்ற, அரசாங்க வருவாய் தோற்றுவிக்கும் திணைக்களங்களுக்கு அவற்றின் செயற்றிறன் அல்லது செயற்றிறனின்மைக்கு தக்கவாறு வெகுமதிகள், தண்டனைகளை வழங்கும் ஏற்பாடு அமையவேண்டும். ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள வருவாயை தோற்றுவிக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்ட அலகுகளுக்கான வருடாந்த வருவாய் இலக்கை மத்திய அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு மேல் செல்பவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். மறுதலையாக இலக்கை எட்டாமல் போனவர்களுக்கு தண்டம் விதிக்கப்பட வேண்டும். இந்த வழியில், மத்திய அரசாங்கம் வெகுமதிகள்/ தண்டனைகள் மூலம், மாகாண, உள்ளூர் மட்டங்களில் வரிசேகரிப்பதை ஒரு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவர முடியும்.

## யுத்தத்துக்கு பின்னரான புனர்நிர்மாணத்திற்கு நிதியளிப்புச் செய்தல்

அரசாங்கம் சண்டை நடந்த இடங்களில் பொருளாதார மறுமலர்ச்சிக்கான உபாயமாக பிரகடனப்படுத்தியுள்ள பௌதிக (வீடுகள், தெருக்கள், பாலங்கள் முதலியன) பொருளாதார (மின்சாரம், நீர், தொலைத் தொடர்பு, புகையிரதப்பாதை

போன்ற) சமூக (பாடசாலைகள், வைத்தியசாலைகள்) உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் அவசியமானவையே. இருப்பினும், இக்கட்டுரையாசிரியர், இவ்வாறான உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதியளிப்பு ஏற்பாடுகள் பற்றி முக்கியமான சந்தேகங்களைக் கொண்டுள்ளார். முன்னர் நான் கூறியது போன்று, இறை மூலங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலைமையில் இவ்வாறான உட்கட்டுமான அபிவிருத்தி திட்டத்திற்கு நிதியளிப்புச் செய்ய, அரசாங்கத்திடம் போதிய நிதி இருப்பதாக நான் நினைக்கவில்லை. இவை பாரிய நிதி தேவைப்படும் திட்டங்கள் என்பதே இதற்கான காரணமாகும். மேலும், தற்போதைய அரசாங்கத்தின் ஸ்திரமற்ற வெளிநாட்டு அரசியல் உறவுகள் மற்றும் உலகளாவிய நிதி நெருக்கடி என்பவற்றின் பின்னணியில், அரசாங்கத்தால் (இருபக்க மற்றும் பல்பக்க) வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து சலுகை ரீதியான நிதியை போதியளவில் பெற்றுக் கொள்வது சாத்தியமானதாக தெரியவில்லை. உட்கட்டுமான அபிவிருத்தி என்பது முதலும் இறுதியுமான முதலீடு அல்ல. இவ்வாறான உட்கட்டுமானங்களின் பராமரிப்புக்கான மீண்டெழும் செலவு தொடர்ந்துகொண்டே போகும்.

இந்த நிலைமையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் அவற்றுக்கு வெளியிலும் உட்கட்டுமானங்களுக்கு தேவைப்படும் (உள்நாட்டு, வெளிநாட்டு) முதலீட்டை பெறுவதற்கு அரசாங்கத்துக்குள்ள அதி சிறந்த தெரிவு BOO (கட்டி இயக்கி சொந்தமாக்கு) அல்லது BOT (கட்டி இயக்கி கைமாற்றிக் கொடு) வழிமுறைகளின் கீழ், தனியார் துறையின் முதலீட்டை கவர்தலாகும். வவுனியாவுக்கு அப்பால், யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள காங்கேசன்துறைவரை புகையிரதப்பாதையை மீண்டும் அமைப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சி பாராட்டுக்கு உரியது. உள்நாட்டு யுத்தம் காரணமாக, 1980 களின் நடுப்பகுதியில் இச்சேவை நிறுத்தப்படும் வரையில் மதிப்பு வாய்ந்த இலங்கை அரசாங்க ரயில்வேக்கு அதிக வருமானத்தை ஈட்டிக்கொடுப்பதாக வடக்கு ரயில்பாதை (புகழ்பெற்ற யாழ்தேவி) ஒரு காலத்தில் காணப்பட்டது. மேலும், குறைந்த தலாவீத் எரிபொருட் செலவு, வாகன நெருக்கடி பிரச்சினை மற்றும் பாதுகாப்பு சோதனைச்சாவடி இன்மை போன்ற காரணங்களால் ரயில் போக்குவரத்து வீதிவழி, கடல்வழி, வான்வழிப் போக்குவரத்தை விட மலிவானதாக உள்ளது.

ஆயினும் அரசாங்கத்திடம், இந்த பேராவாவின்பாற்பட்ட, ஆனால் பெறுமதியான திட்டத்திற்கு செலவழிப்பதற்கான போதிய நிதி வளம் இல்லை என நான் நினைக்கின்றேன். அரசாங்கம் மக்களிடமிருந்து வெளிப்படையாகவே நன்கொடைகளைக் கோரியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்கள் புலம்பெயர்ந்தோரிடமிருந்து நிதி சேகரிப்பதற்காக பொதுநலன் படக்காட்சிகளை ஒழுங்குபடுத்துகின்றனர். இவை எதிர்பார்க்கும் அளவுக்கும் பலன் தருமென கூறமுடியாதுள்ளது. மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின்படி (2008), 2008 ஆம் ஆண்டில், புகையிரத திணைக்களம் நாளொன்றுக்கு 12.5 மில்லியன் ரூபா நட்டமடைந்தது. இதன்படி வருடத்துக்கான நட்டம் 4553 பில்லியன் ரூபா அல்லது 43 மில்லியன் அமெரிக்க டொலராகும். அரசாங்கம் உட்கட்டுமானங்களான ரயில் பாதை, புகையிரத நிலையங்கள் என்பவற்றை அமைப்பதற்கு தனது சொந்தப் பணத்தையோ வெளிநாட்டிலிருந்து கடன் பெற்ற பணத்தையோ செலவளிக்கும் அதேவேளை, பயணிகள் போக்குவரத்தை உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனத்துக்கு திறந்துவிட வேண்டும். அதாவது ரயில் என்ஜின்கள் மற்றும் ரயில் பெட்டிகள் என்பவற்றில் தனியார் முதலீடு செய்து முகாமைத்துவம் செய்து தொழிலை நடத்தக் கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறான அரசாங்க - தனியார் கூட்டு முயற்சி அரசாங்கம் முகங்கொடுக்கும் இறை நெருக்கடியை வெல்வதற்கான மிகச் சிறந்த வழியாக இருக்க முடியும். மத்திய அரசாங்கம் ரயில் பாதைகளையும் புகையிர நிலையங்களையும் முதலில் கட்டினாலும் இவற்றின் பராமரிப்பை அந்தந்த மாகாண அரசாங்கங்களிடம் கையளிக்க வேண்டும்.

தேசிய மட்டத்தில் இறைத் தொழிற்பாட்டுக்கான வாய்ப்புகள் குறைந்துவரும் நிலையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் உட்கட்டுமான அபிவிருத்திக்காக மேலே கூறப்பட்டது போன்ற அரசாங்க தனியார் கூட்டு முயற்சிகள் பற்றி சிந்திப்பது பொருத்தமானதாகும்.

**வரி மறுசீரமைப்பிற்கான ஆலோசனைகள்**

இப்போது, வருமானவரி சேகரிப்பு வரி செலுத்துவோரினால் (தனியார் அல்லது கம்பனி) செய்யப்பட்ட சுய மதிப்பீட்டின் அடிப்படையில் அமைகின்றது. இது திருப்தியான முறையல்ல. இந்த முறைக்கு பதிலாக சட்டத்துக்கமைந்து வரி செலுத்துவதை அதிகரிக்கும் வகையில், நடைமுறைச் சாத்தியமாகும் போதெல்லாம் அந்தந்த இடத்தில் வைத்தே (உழைக்கும் போதே செலுத்தும் வரி) வருமான வரி அறவிடப்பட வேண்டும்.

வரி முறையை இலகுபடுத்தி அதன் வினைத்திறனை அதிகரித்தல், தனியாட்களாலும் கம்பனிகளாலும் செலுத்தப்படும் மறைமுக மற்றும் நேர் வரிகளின் எண்ணிக்கையையும் வரி வீதத்தையும் குறைத்தல்; வரி செலுத்தும் தனியாட்கள் மற்றும் கம்பனிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகிய உபாயங்கள் இலங்கையின் வரி மறுசீரமைப்பின் அடிப்படையாக அமைய வேண்டும். அதாவது, வரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், வரி வீதங்களை அதிகரித்தல் என்பவற்றை விட, வரித் தளத்தை விசாலிப்பதே இப்போதைய தேவையாகும். வரித் தளத்தை விசாலிப்பதற்கு அரசாங்க ஊழியர்கள் அரச சேவையிலுள்ள வாண்மைத்துவ் தொழில் புரிவோர் மீது வருமான வரி விதிப்பது தவிர்க்க முடியாததாகும். உழைக்கும் போதே செலுத்தும் (PAYE) வரி முறைக்குள் இலங்கை அரசாங்க ஊழியர்களின் வருமானம் கொண்டுவரப்படாத காரணத்தினால், ஏனைய அநேகமான நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கை அரசாங்க ஊழியர்கள் ஏனையோர் பொறாமைப்படும் நிலையில் காணப்படுகின்றனர். உதாரணமாக, - இந்தியாவில் பொதுத்துறை ஊழியர்களின் (இராணுவம் அடங்கலாக) வருமானத்துக்கு உழைக்கும் போதே செலுத்தும் வரி விதிக்கப்படுகின்றது. இவ்வாறு அரசாங்க உத்தியோகத்துக்கு மேலாக தனிப்பட்ட முறையிலும் தொழில் செய்யும் வைத்தியர் மற்றும் வழக்குரைஞர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் PAYE வரிமுறைக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

மக்களுக்கு நெருக்கமாக இருப்பதனால் வரி ஏய்ப்பு, வரி தவிர்ப்பு ஆகியவற்றை இழிவளவில் வைத்திருக்கக்கூடிய, அதிகாரப்பரவலாக்கம் செய்யப்பட்ட வரி முறைமையின் கீழ், மேலே கூறப்பட்ட ஆலோசனைகளை மிக சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியும். கண்காணிப்புக்கான அலகு சிறிதாகவும் உள்ளூரானதாகவும் காணப்படும் போது, வரி தவிர்ப்புடன் தொடர்புடைய இலஞ்சம் மற்றும் ஊழல் இழிவளவினதாக ஆக்கப்படும்.

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலைமையில் நாணயம், பாதுகாப்பு, வெளிவிவகாரம் தவிர்ந்த ஏனைய விடயங்களில் அரசாங்கம் அதன் தொழிற்பாடுகள், பொறுப்புக்களில் அதிகமான வற்றை ஒன்பது மாகாணங்களுக்கும் உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கும் பாரப்படுத்த வேண்டும். மாகாண சபைகளின் வரவு-செலவுத் திட்டத்தின் பற்றாக்குறைக்கு உச்சவரம்பை விதிப்பது போன்று. மத்திய அரசாங்கத்தின் பிரதான தொழிற்பாடு, ஐக்கியப்பட்ட நாட்டில் மாகாண மட்ட உள்ளூர் மட்ட அரசாங்கங்களை ஓர் ஒழுங்கு முறைக்குள் வைத்திருப்பதாக

அமைய வேண்டும். மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் தமது தொழிற்பாடுகள், பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் . அவற்றுக்கு தனியான இறை அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதாவது, மாகாணங்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வருமானத்தை பெற்றுக் கொள்ளவும் வருமானத்தை உழைக்கவும், அவற்றை தத்தம் மாகாணத்திலும் உள்ளூராட்சி புலங்களிலும் (மாநகர, நகர, கிராம மன்றங்கள்) பொதுப்பொருட்கள் மற்றும் சேவைகளில் செலவளிக்கவும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இறக்குமதித் தீர்வை, கலால் வரி மற்றும் இறக்குமதிகள் மீதான பெறுமதி கூட்டிய வரி தவிர, ஏனைய வரிகளை விதித்து அறவிட மாகாணங்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். இதனால் மத்திய அரசாங்கத்தின் வருவாய் பிரதானமாக, சர்வதேச வர்த்தகம் மீதான தீர்வைகள், வரிகளிலிருந்து பெறப்படுவதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள வணிக நிறுவனங்கள் தத்தம் மாகாணங்களில் தம்மை பதிவு செய்து, மாகாண அரசாங்கங்களுக்கு நேர் வரிகள், மறைமுக வரிகளைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஊழியர்கள் தத்தம் மாகாண சபைகளுக்கு வருமானவரி செலுத்த வேண்டும். அதேநேரம், (மத்திய வங்கி ஊழியர்கள், மூன்று ஆயுதப்படை ஊழியர்கள் மற்றும் அரைகுறை அரசாங்க ஊழியர்கள் போன்ற) மத்திய அரசாங்க ஊழியர்கள் மத்திய அரசாங்கத்துக்கு வரி செலுத்த வேண்டும். மாகாண அரசாங்கத்தாலும் உள்ளூராட்சி நிறுவனங்களாலும் உழைக்கப்பட்ட நுகர்வு (மறைமுக, வரிகள்) மற்றும் வருமான (நேர்) வரிகளை மத்திய அரசாங்கத்துடன் பகிர்வதற்கான பொருத்தமான வழிமுறை வகுக்கப்பட முடியும். இதிலிருந்து, மின்சாரம், நீர், வீதி, ரயில் போக்குவரத்து போன்றன பிராந்திய மட்ட அதிகாரத்துக்குள் கொண்டுவரப்பட வேண்டுமென்பதை விளங்கிக் கொள்ளலாம். தனியான இறை அதிகாரத்தை மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கத்துக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வழங்குவதனால், உள்நாட்டு, வெளிநாட்டு வணிக நிறுவனங்களையும் முதலீடுகளையும் கவர்வதற்கு மாகாணசபைகளுக்கு இடையிலும் உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கு இடையிலும் போட்டிகளைத் தூண்டிவிட முடியும். மேலே கூறப்பட்டவாறு, மாகாணங்கள் மற்றும். உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கு திறந்துவிடப்பட்ட (அல்லது திறந்துவிடப்படவுள்ள) இறைத் தொழிற்பாட்டுக்கான வாய்ப்புக்கள் மாகாணங்களுக்கு இடையிலும் ஆக்கபூர்வமான போட்டிக்கான சூழலை உருவாக்கும். பல்வேறு நியமங்களின் அடிப்படையில் மாகாணங்களுக்கும் உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கும் ஆண்டுதோறும் மானியங்களை வழங்குவதன் மூலம், அவற்றுக்கு செவிலித்தாயாக தற்போது மத்திய அரசாங்கம் தொழிற்படுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். தற்போது மத்திய அரசாங்கம் மாகாணங்களுக்கு வழங்கும் நிதி மாற்றல்கள் மாகாணங்களின் சம்பளங்கள், ஓய்வூதியங்கள், மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கே மட்டுமட்டாக போதுமானதாக உள்ளது. மாறாக மாகாணங்கள், தமது முன்னுரிமைகள் தீர்மானங்களுக்கு ஏற்ப தாமே உழைத்து தமது சொந்த பணத்தை செலவளிக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்

மேலே கூறப்பட்ட ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த தற்போதைய யாப்புக்கு திருத்தம் கொண்டு வர வேண்டியிருக்கும். இதை தற்போதைய அரசாங்கம் கொண்டுவரவுள்ள யாப்பு மாற்றங்களுடன் சேர்த்துக்கொள்ளலாம். மாறாக இறை அதிகாரங்களை மாகாணங்களுக்கோ உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கோ மாற்றுவதற்கான அரசியல் அல்லது பணிக்குழுவாட்சி விருப்பம் காணப்படாதுவிடின், இரண்டாம் நிலை அரசாங்கம் (மாகாண சபைகள்) மற்றும் மூன்றாம் நிலை அரசாங்கம் (மாநகர, நகர, கிராம சபைகள்) என்பவற்றை ஒழித்துவிடுவது பொருளியல் ரீதியாக நியாயப்படுத்த கூடியதாகும். இவ்வாறு இவை கலைக்கப்பட்டாலும், மீதமாகக் கூடிய அரசாங்க செலவு சிறிய அளவினதாகவே இருக்கும்.

## முடிவுரை

இலங்கையில் ஒருதலைப்பட்சமான பொருளாதார வளர்ச்சியும், செல்வக் குவிப்பும் கவலையளிக்கும் விடயமாகவுள்ளது. மேல் மாகாணம் (கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்கள்) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட அரைவாசிக்கு பங்களிப்பு செய்வது இதன் வெளிப்பாடாகும். நாட்டில் ஒன்பது மாகாணங்கள் காணப்படும் போது, ஒரு மாவட்டத்தில் பொருளாதார வெளியீடுகளும் செல்வமும் குவிந்து காணப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கக் கூடும். வரியின் பரம்பல் வீதம் அல்லது வரி வருவாயின் மூலங்கள் என்பன மக்களிடையே காணப்படும் வருமான சமமின்மை, பொருளாதார வளர்ச்சி, செல்வம் என்பவற்றின் பிராந்திய ரீதியான பரம்பல் என்பவற்றை பாதிக்கும் பிரதான காரணிகளாக உள்ளன. வரி முறைமை பெருமளவில் நுகர்வு வரிகளில் தங்கியிருக்கும்போது, செல்வந்த தனியாட்களிடமும் நிறுவனங்களிடமும் பிராந்தியங்களிலும் வருமானம் குவியும். 1977 இன் பின் மொத்த வரி வருவாயில் மறைமுக அல்லது நுகர்வு வரிகளின் விகிதாசாரம் அதிகரித்துள்ளது. அதேசமயம், நேர் அல்லது வருமான வரியின் விகிதாசாரம் குறைந்துள்ளது. இதுவே இலங்கை மக்களிடையேயும் பிரதேசங்களிடையேயும் திரிபுபட்ட உற்பத்தி, செல்வம் என்பவற்றுக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகவுள்ளது. இதைவிட, மாகாணங்களிலுள்ள மக்களின் சேமிப்பும் இங்கு பெறப்பட்ட நுகர்வு வரிகளும் (மேல் மாகாணத்தின் பகுதியாகவுள்ள) மத்திய அரசாங்கத்துக்கு மாற்றப்படுகிறது. இது பிராந்திய சமத்துவமின்மையை அதிகரிக்கச் செய்கிறது. எனவே மாகாணங்களுக்கு தத்தம் மக்களின் சேமிப்புகளை வைத்துக்கொள்ளும் சுதந்திரத்தை வழங்குதலும், மொத்த வரி வருவாயில் நேர் அல்லது வருமான வரியின் விகிதாசாரத்தை அதிகரிப்பதும் உற்பத்தி, வருமானம், செல்வம் என்பவற்றை மேல் மாகாணத்துக்கு அப்பால் நன்கு பரவலடையச் செய்யும். சகல மாகாணங்களையும் அணைத்துப்போகின்ற சமத்துவமான வளர்ச்சிக்கும் இலங்கையின் இன முரண்பாடுத் தீர்வுக்கும் வழிவகையாக இறை அதிகாரத்தை பரவலாக்க வேண்டுமென ஆலோசனை கூறப்படுகிறது.

யாப்புக்கான 13வது திருத்தம், மாகாணங்களுக்கு வருவாய் பெறுவதற்கான சில அதிகாரங்களை வழங்கினாலும், மாகாணங்களை நிதி ரீதியாக சுய சார்பானவையாக்கி மத்திய அரசாங்கத்தில் தங்கியிருத்தலை இழிவளவினதாக்கும் அளவுக்கு வெற்றிகரமான நல்விளைவை ஏற்படுத்தக் கூடிய, வினைத்திறன் மிக்க வழிமுறை அமையவில்லை. மாகாண சபைகளின் கடந்த 22 வருட (1988-2010) தொழிற்பாட்டில் மத்திய அரசாங்கம் வரி அறவிடுவதில் தனியுரிமையை நிலைநாட்டும் போக்கு காணப்படுகிறது.

இலங்கையின் அரசியல் தலைமையும், மக்களின் மனப்பாங்கும், அரசியல் மற்றும் நிர்வாக அமைப்பில் அடிப்படையான மாற்றங்களை பொறுப்பெடுக்கும் வல்லமை அற்றவைகளாக தெரிகின்றன. எனவே, வெளித் தெரியாத அளவுக்கு சிறிது சிறிதாக மேற்கொள்ளப்படும் அதிகாரப்பகிர்வே இலங்கையில் நின்றுபிடிக்கக் கூடிய முரண்பாடு தீர்வுக்கான நடைமுறைச் சாத்தியமான வழியாகத் தெரிகிறது. வெளித்தெரியாத அளவுக்கு சிறிது சிறிதாக மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான அதிகாரப்பகிர்வுச் செயல்முறையில் ஒன்றான இறை அதிகாரப்பகிர்வுக்கு (அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்களின் பகிர்வை விட) அரசாங்கத்தினதும் பொது மக்களினதும் ஆதரவு கூடுதலாக கிடைக்கும் சாத்தியம் உண்டு. ■

# நூல் மதிப்பாய்வு – இலங்கையில் விவசாயமும் கிராமிய அபிவிருத்தியும்

மதிப்பாய்வு:
**பேராசிரியர். சிறிமேவன் கொலம்பகே**
***இலங்கை திறந்த பல்கலைக்கழகம்***

இலங்கையில் விவசாயமும் கிராமிய அபிவிருத்தியும் எனும் நூல் வெளியீடானது, எமது புகழ்மிக்க கூட்டாளியும் நண்பருமான பேராசிரியர் எஸ்.எம்.பி. சேனநாயக்கா அவர்களின் பாரிய அறிவுப் பங்களிப்பை பாராட்டி புகழாரம் சூட்டுவதில், ஊக்கமாக தொழிற்பட்ட கொழும்பு பல்கலைக்கழகத்தை சேர்ந்த கல்வித் துறையினர் மற்றும் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயிருந்த அவரது நண்பர்களின் விடாமுயற்சியின் ஓர் விளைவாகும். ஓர் அர்ப்பணிப்பு மிக்க பல்கலைக் கழக ஆசிரியராகவும் ஆழ்ந்த ஆராய்ச்சியாளராகவும் மதிப்பான தொழில் வாண்மைத்துவத்தை பெற்றிருந்த பேராசிரியர் சேனநாயக்க அவர்கள் எழுதிய யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்ட பல நூல்கள், ஒரு துறையைக் கருவாகக் கொண்ட தனி நூல்கள் என்பவற்றில் காணக்கூடியதாக உள்ளவாறே விவசாயமும் கிராமிய அபிவிருத்தியும் தொடர்பான விடயங்களிலும் அதிகமான கவனத்தை செலுத்தியுள்ளார்.

பொருளாதாரத் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாதல் என்ற பின்னணியில் இலங்கையின் விவசாயத்துறை பாரிய சவால்களை எதிர்கொள்கின்றது. ஒரு காலத்தில் இறுக்கமான சுங்கத் தீர்வை மற்றும் சுங்கத்தீர்வை சாராத தடைகளினால் பாதுகாக்கப்பட்டிருந்த இந்தத் துறை, சுதந்திர வியாபார முறைமைக்கான அடிப்படைச் சட்டங்களை விதிக்கும் உல்க வர்த்தக நிறுவனத்துடனான (WTO) வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ், வெளிநாட்டுப் போட்டிக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. விவசாய ஒப்பந்தங்கள் தொடர்பான சட்டங்களுக் கமைய, சந்தை வாய்ப்பு, உள்நாட்டு ஆதரவு, ஏற்றுமதி மானியங்கள் பற்றிய சந்தை முகப்பட்ட கொள்கைகளை உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் உருவாக்கிக் கொள்ள வேண்டிய கடப்பாட்டில் உள்ளன. இந்தக் கொள்கைகள் அரசாங்கத்தினால் பல தசாப்தங்களாக விவசாயத்துறைக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு கொள்கை ஏற்பாடுகளை அகற்றி விடும் நோக்கிலானவை. இவ்வாறான சந்தை முகப்பட்ட கொள்கை முன்னெடுப்புகளின் பின்னணியில், இலங்கையின் விவசாயத்துறை உலகமட்ட போட்டிக்கு நின்றுபிடிக்கக் கூடியதாக இருந்ததா என்ற கேள்வி எழுகின்றது. இந்த நூலில் காணப்படும் பல கட்டுரைகள், இம்முக்கியமான பிரச்சினைப்பற்றி ஆராய்கின்றன. இந்த நூலில், பொருளாதார அபிவிருத்தி, விவசாயம், கிராமியக் கமத்தொழில், சிறு முயற்சியாண்மைகள், உணவுப்பாதுகாப்பு, காலநிலை மாற்றம், பெருந்தோட்டத்துறைக்குப் புறம்பான விவசாயம் அடங்கலாக பல கருப்பொருள்களில் கட்டுரைகள் காணப்படுகின்றன.

**உலகளவிலான சவால்கள்**

ஜி.எம். ஹேனகெதர தனது கட்டுரையில், உணவுப் பாதுகாப்பு, கிராமிய வேலை வாய்ப்பு என்பவற்றுக்கு கணிசமான ஆதரவு வழங்கும் நெல் பிரதானமானதாக அமைந்துள்ள உணவுப் பயிர்த்துறை மீது முக்கிய கவனம் செலுத்தும் அதேவேளை, உலகளவில் காணப்படும் சவால்களின் தார்ப்பரியங்களை எடுத்தாள்கின்றார். பகுதியளவிலான மற்றும் பொது சமநிலை மாதிரியுருக்களை பயன்படுத்தி இந்தக் கட்டுரை ஆசிரியர் உள்நாட்டு உணவு உற்பத்தி அதிகரித்த போதிலும், இந்த துறையினால் பட்டினி, உணவுப் பாதுகாப்பின்மை, வருமான சமமின்மை, நகர கிராம ஏற்றத்தாழ்வு ஆகிய பிரச்சினைகளை வினைத்திறன் மிக்க முறையில் கையாள முடியாது போய்விட்டதென விவாதிக்கின்றார். உற்பத்தியில் வினைத்திறன் இன்மை, எதிரான ஒப்பீட்டு நயம், ஊழியத்தின் குறைந்த உற்பத்தித் திறன், காணி துண்டாடப்படல் என்பன உணவுப் பயிர்த் துறையின் வளர்ச்சிக்கு பாதகமான பிரதான காரணிகளில் சிலவாகும். உருவாகிவரும் உலக வர்த்தக நிறுவனப் பேச்சுவார்த்தைகளின் பின்னணியில் சிறு விவசாயத்தை பேணி வளர்ப்பதற்கு பொருத்தமான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் இந்தக் கட்டுரையில் வலியுறுத்தப்படுகின்றது.

சமன் கலேகம தேயிலை ஏற்றுமதியை தாராளமயமாக்கல் பற்றிய தனது கட்டுரையில் தேயிலையை அதன் மூலவடிவத்தில் பொதியிடாமல் ஏற்றுமதி செய்வதைத் தொடர்வதன் பாதகமான விளைவுகளை குறிப்பாக சுட்டிக் காட்டுகின்றார். அவர், உயர்ந்து செல்லும் உற்பத்திச் செலவு மற்றும் சர்வதேச அதிர்ச்சிகள் காரணமாக இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் பாதிக்கப்படும் நிலை ஆகியன காணப்படும் நிலைமையில், இந்த முக்கியமான கைத்தொழில் தொடர்பில் நீண்ட கால உபாயமொன்றை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார். பெறுமதி சேர்த்தலை அதிகாரித்தல் இந்த நீண்ட கால உபாயத்தின் முக்கியமான ஒரு கூறாக வேண்டும். இந்த வகையில் கலவைத் தேயிலையின் உற்பத்தியை ஊக்குவித்தல் முக்கிய பங்கை வகிக்க முடியும். தயாரிப்பாளர்களை பல வகையான தேயிலையை இறக்குமதி செய்ய அனுமதித்து தேயிலை வர்த்தகத்தை தாராளமயமாக்குதல் தேயிலை கலப்புக் கைத்தொழிலை ஊக்குவிக்கும். இதனால் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி அதிகரிக்கும். இது, இலங்கை இழந்து போன சந்தைகளில் சிலவற்றை மீண்டும் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதுடன் நின்று விடாது, உற்பத்தி செலவைக் குறைக்கவும் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் தளம்பலின் பாதகமான விளைவுகளைக் குறைக்கவும் வழி செய்யும் குறித்த துறைக்கான நன்மைகளையும் பேரண்ட பொருளாதார நன்மைகளையும் கவனத்தில் கொண்டுள்ள கட்டுரையாசிரியர் தேயிலை வர்த்தகத்தை தாராளமயமாக்க வேண்டுமெனப் பலமாகச் சிபார்சு செய்கின்றார்.

யூ.பி.பி. சேரசிங்க இலங்கை பெருந்தோட்ட விவசாயம் தொடர்பில், நவ-தாராளவாத கொள்கைகளின் தாக்க விளைவு பற்றி கேள்வி எழுப்புகின்றார். அரச தனியுடமை ஒழிக்கப்பட்டதும், தாராளமயதாலுடன் வந்த நுட்பமான விதிகளும் பெருந்தோட்ட விவசாயம் மீது பாதகமான விளைவுகளை கொண்டுள்ளது என இவர் சுட்டிக் காட்டுகின்றார். பெருந்தோட்டத் துறைக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டு வந்த விரிவாக்கல் சேவைகள் மற்றும் மானிய அடிப்படையிலான கடன் திட்டங்கள் போன்ற பல்வேறு வசதிகள் தராளமயமாக்கலைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டன. அதே சமயம் கமநல சேவை நிலையங்களும், பண்டங்கள் கொள்வனவு திணைக்களத்தின் விற்பனை நிலையங்களும் படிப்படியாக மூடப்பட்டன. தாராளமயமாக்கல் தொடர் செயற்பாடு குறைந்த வினைத்திறன் மற்றும் குறைந்த உற்பத்தித் திறன் என்பவற்றை காரணமாகக் காட்டியே செய்யப்பட்டது. இவ்வாறான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் இலங்கை விசாயத்துறை ஊழியத்தின் உற்பத்தித் திறனும், சராசரி விளைச்சலும் பிரதான வெளிநாட்டு போட்டியாளர்களினதைவிட மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே இன்னும் காணப்படுகின்றது. தாராள மயமாதல் உலகமயமாதல் ஆகியவற்றை கொண்டுவந்துள்ள புதிய

வியாபார ஒழுங்கு இலங்கை போன்ற நாடுகளுக்கு நன்மையளிக்கவில்லை எனவும் கட்டுரையாசிரியர் விவாதிக்கின்றார்.

தீப்தி விக்ரமசிங்க, விவசாயத்தின் மீது காலநிலை மாற்றத்தின் தார்ப்பரியங்களை ஆராய்கின்றார். இலக்கியத்திலிருந்தும் சான்றுகளை பெற்றுள்ள கட்டுரையாசிரியர், அடிக்கடி ஏற்படும் வெப்ப அழுத்தம், வரட்சி, வெள்ளம் போன்ற காலநிலை மாற்றத்தின் விளைவுகள் பயிர் விளைச்சல், விலங்கு வேளாண்மை என்பவற்றினை பாதிப்பதாக சுட்டிக் காட்டுகின்றார். காலநிலை மாற்றம், தீ அபாயம், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் பெருக்கம், நோய் திடீரெனப் பரவுதல் என்பன அதிகரித்து உணவு உற்பத்தியை குறைக்கின்றது. அதிகரித்து செல்லும் காபனீரொட்சைட்டின் அளவு, உயர் வெப்பநிலை, நீர் வளங்கள் குறைந்து போதல், சீரற்ற வானிலை ஆகியன விவசாய அபிவிருத்திக்கு தடையாகும். காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு பயிர்களை மாற்றியமைத்தல், நீர், உரம், பூச்சிநாசினிகள் என்பவற்றை வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்தல், அறிவு பூர்வமான நீர்ப்பாசன முறைமைகள், விவசாயியின் முன்னேற்றமான இசைந்துபோகும் உபாயம் போன்ற மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென கட்டுரையாசிரியர் வலியுறுத்துகின்றார்.

## பொருளாதார அபிவிருத்தியும் விவசாயமும்

விவசாயத்தின் வருங்கால பங்களிப்பை ஆராயும் நிமல் சந்திரத்ன பொருளாதாரத்தில் ஏற்பட்ட அமைப்பு மாற்றம் காரணமாக, தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்கு குறைந்து சென்றாலும், இத்துறையால் உள்நாட்டு உணவுத் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு இனிமேலும் பெரிய பங்களிப்பை செய்ய முடியுமென வலியுறுத்துகின்றார். உள்நாட்டு உணவு உற்பத்தியைத் துரிதப்படுத்துவது, சென்மதி நிலுவை பிரச்சினையைக் குறைக்கும் என்பது மட்டுமன்றி, கிராமிய வறுமை, வேலைவாய்ப்பின்மை மற்றும் மந்த போஷாக்கு ஆகியவற்றையும் குறைக்க உதவும். பெருந்தோட்ட விவசாயத்திலிருந்து கிடைக்கக்கூடிய நன்மைகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவை. விவசாயத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு, வர்த்தக நோக்கிலான விவசாயம், சுயமாக நிலைத்திருக்கக்கூடிய பகுதி நேர, கலப்புப்பயிர் முறைமை மற்றும் உற்பத்தி திறன் வாய்ந்த தொழில்நுட்ப பிரயோகம் என்பவற்றை நோக்கிய நகர்வு தேவையாக உள்ளது. பயிர்களின் தெரிவு, விவசாய நடைமுறைகள், காணியின் அளவு, பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல், பயிர்களை பதனிடல் என்பன வித்தியாசமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். கட்டுரையாசிரியர், உற்பத்தித் திறன் விருத்தி, ஆராய்ச்சி, முன்னேறிய விவசாய விரிவாக்க சேவைகள், மற்றும் சந்தை வசதிகள் என்பவற்றின் மீது கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தைக் கோருகின்றார்.

சிறி கமகே, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தேவையின் பின்னணியில் புதிதாக உருவாகிவரும் அபிவிருத்தி மாதிரிகளை மதிப்பாய்வு செய்கின்றார். இந்த மாதிரிகளில் ஒவ்வொன்றும், அடிப்படைத் தேவைகள், திறந்த சந்தைப் பொறிமுறை மற்றும் நவீனமயமாதல் போன்ற அபிவிருத்தியின் வெவ்வேறு பரிமாணங்களின் மீது பிரதானமான கவனத்தை செலுத்தின. இந்த கட்டுரையாசிரியர், சர்வதேச முகவர்களும் அரசாங்கங்களும் அபிவிருத்தி சிந்தனையாளர்களும், குறைவிருத்தி நாடுகள் தமது அபிவிருத்தியின், திசை, பண்பு என்பவற்றை விளங்கிக்கொள்ளல், பொறுப்பேற்றல் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என விளக்குகின்றார். இவ்வாறான அமைப்புகள் தான் அபிவிருத்தி பற்றிய சிந்தனை, அறிவு, மற்றும் அபிவிருத்திக்கான நிதி என்பவற்றை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு நகர்த்தும் செயல்முறையில் பிரதான பாத்திரம் வகிக்கின்றன. எனவே சர்வதேச முகவர்களால் முன்வைக்கப்படும் சூழல் மாசடையாது நிலைத்திருக்கும் வகையிலான அபிவிருத்தி மாதிரிகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கோணத்திலிருந்து ஆழமாக ஆராயப்பட வேண்டுமென என கமகே அழுத்திக் கூறுகின்றார். இதன் மூலமே உள்நாட்டின் தன்னாதிக்கம், பங்குபற்றல், உள்ளீடுகள் என்பன கிராமிய விவசாயத்துறையின் அபிவிருத்தி செயற்றிட்டங்களில் தொடக்கத்திலிருந்து முடிவு வரை எவ்வளவுக்கு சேர்க்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பீடு செய்யமுடியும்.

பிலஷா வீரரத்ன, தக்குயா ஹஸ்பே ஆகியோர், ஒருவர் கமக்காரராக இருப்பது பற்றிய தெரிவு தொடர்பில் தலைமுறைகளுக்கு இடையிலான இயக்க விசைகள் மீது கவனம் செலுத்துகின்றனர். நுண்பாக மட்ட தரவுகளைப்பயன்படுத்தி, இந்த கட்டுரை ஆசிரியர்கள், விவசாயிகளாக இருப்பதற்கான முதல் தறைமுறையினரின் தொழில் தெரிவு, இரண்டாம் தலைமுறையினர் விவசாயிகளாக இருப்பதற்கான தொழில் தெரிவின் மீது கணிசமான தாக்கத்தை செலுத்துவதாக கண்டறிந்தனர். இருப்பினும், இவ்வாறான தெளிவான தொடர்பை மூன்றாவது தலைமுறையை சேர்ந்த ஒருவர் விவசாயியாக இருப்பதன் மீது இரண்டாம் தலைமுறையின் தாக்கத்தில் காணமுடியவில்லை. மூன்றாம் தலைமுறையை சேர்ந்த ஒருவரின் விவசாயியாக இருப்பதற்கான தெரிவு, அவரின் பாட்டன்மார் விவசாயிகளாக இருந்தமையால் பெரிதும் தீர்மானிக்கப்பட்டிருந்தது என அறியப்பட்டுள்ளது. கட்டுரையாசிரியர்கள் இந்த அநுபவ ரீதியான முரண்பாட்டுக்கு, இரண்டாம் தலைமுறை இப்போதும் வயலில் தொழிற்பட்டுக் கொண்டிருப்பதையும் அதேசமயம் மூன்றாம் தலைமுறை தொழில் தெரிவினை பொறுத்த வரை இப்போதும் அதுபற்றி சிந்திப்பவர்களாக இருந்ததையே காரணமாகக் காட்டுகின்றனர். இந்த முடிவுகளின் அடிப்படையில் அவர்கள், பெற்றோர்கள் விவசாயிகளாக இருக்கும்போது, பிள்ளை பெற்றோரின் வழிச் செல்வதற்கு உயரளவிலான சாத்தியம் உண்டு என்றும், இதன் காரணமாக, விவசாயம், ஊழியப்படையில் தன்பங்கை இழந்துவிடுவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் முடிவாக கூறுகின்றனர்.

## கிராமிய கமத்தொழிலும் சிறு தொழில் முயற்சிகளும்

எஸ்.பி. பிரேமரத்ன சிறு முயற்சியாண்மைகளின் அபிவிருத்திக்கான ஒரு சாதனமாக கொத்தணிகள் மற்றும் வலையமைப்புகளின் பாத்திரத்தை ஆராய்கின்றார். சிறு முயற்சியாண்மைகள், அவற்றின் சிறிய அளவு மற்றும் அவை தனித்திருத்தல் காரணமாக சந்தை வாய்ப்புகளை கைப்பற்றிக் கொள்ள ஆற்றல் போதாதவையாக உள்ளன. கொத்தணியாதலும் வலையமைப்புகளை அமைத்தலும் இவ்வாறான இயலாமையை வெற்றி கொள்ளவும் அவர்களின் போட்டியிடும் ஆற்றலை விருத்தி செய்யவும் உதவும். ஒரு கொத்தணி அதாவது ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் அமைந்து ஒரே கைத்தொழிலில் ஈடுபடும் நிறுவனங்களின் ஒரு தொகுதி, முன் நோக்கிய, பின் நோக்கிய பிணைப்புகளில் ஈடுபட முடியும். வலையமைப்பு என்பது கூட்டாக தொழிற்படும் ஆனால் ஒரே இடத்திலோ அல்லது ஒரே தொழிலிலோ இருக்க வேண்டும் என்ற அவசியமில்லாத நிறுவனங்களின் தொகுதியாகும். கொத்தணிகளுக்குள் அல்லது கொத்தணிகளுக்கு வெளியில் வலையமைப்புகளை உருவாக்கலாம். இவை காலப்போக்கில் கொத்தணியாக மாற்றப்பட முடியும். இரண்டு வகையான தொகுதியாக்கலுமே சிறு நிறுவனங்களுக்கு ஒப்பீட்டு நயங்களையும் கூட்டு வினைத்திறன் நன்மைகளையும் கொடுக்கும். சிறு முயற்சியாண்மைகளிடையே காணப்படும் வளங்களின் கடும் பற்றாக்குறையை கருத்தில் கொண்ட கட்டுரை ஆசிரியர் கொத்தணிகள், வலையமைப்புகளின் வடிவத்தில் காணப்படும் கூட்டு முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென விளக்குகின்றார்.

ஜே.ஏ. கருணாரத்ன, கிராமிய பகுதிகள், நியம வரைவிலக்கணங்கள் கூறுவது போல நகரப் பிராந்தியங்களிலிருந்து பிரிந்திருப்பவை அல்ல என்றும் அவை சந்தைப் பொருளாதார முறைமையின் ஒன்றிணைந்த கூறு எனவும் வாதிடுகின்றார். நிலப்பிரபுத்துவ பட்டினம் ஒன்றுக்கும் முதலாளித்துவ நகரம் ஒன்றுக்கும் இடையே உள்ள வித்தியாசம் போன்றே நிலப் பிரபுத்துவ நாட்டுப்புறத்துக்கும் முதலாளித்துவ கிராமிய பொருளாதாரத்துக்கும் இடையில் வித்தியாசமிருப்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. முதலாளித்துவ அபிவிருத்தி என்பது நகரத்து அடர்த்தியை நாடி மனித வளங்கள் பேரளவில் நகர்தல் மட்டுமாகாது நாட்டுப்புறங்கள் கிராமமயமாதலை நோக்கி உருமாறுவதுடனும் தொடர்புறுகிறது. உண்மையில் நாட்டுப்புறம், உணவுப்பொருட்களையும், கைத்தொழில் மூலப்பொருட்களையும் வழங்குகின்ற விவசாயப் பொருட்களினதும் விவசாயம் சாராதா பொருட்களினதும் உற்பத்தியின் மையமாக மாற்றம் அடைகின்றது. நிலப்பிரபுத்துவ முறைமையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறுகின்ற தொடர்ச்சியான செயல்முறை, கிராமியத்துறைபற்றி இதுவரை காலமும் இருந்துவந்த கருத்தில் பெரிய மாற்றம் உருவாகியிருப்பதை புலப்படுத்துகின்றது என கருணாரத்ன கருதுகின்றார்.

கே.அமிர்தலிங்கம், ஆர்.டபிள்யூ. டி.லக்ஷ்மன் ஆகியோர், விவசாய வாழ்வாதாரங்கள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பற்றிய தமது கட்டுரையில், உள்நாட்டு மோதல் எவ்வாறு விவசாயத்தை அழித்தது என்பது பற்றி ஆய்வு செய்கின்றனர். நாட்டில் தெரிவு செய்யப்பட்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து பெறப்பட்ட குடும்பங்களின் கணக்கெடுப்பு தரவுகளை பயன்படுத்தி இடப்பெயர்வால் மேலும் வறுமைப்பட்டுப்போகும் ஆபத்து உருவாகியுள்ளதை காட்டுகின்ற பொருளாதார எண் தரவுகளை தந்துள்ளனர். இந்த ஆய்வு, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தமது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் பல வகையான உபாயங்களை எடுத்துரைக்கின்றது. மனித மூலதனம், வாழ்வாதாரத்துக்கான ஒரு மூலவளம் என்ற வகையில் தனித்து நின்று பயன்தர முடியாதது. மனித மூலதனத்தை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்த பௌதிக மூலதன சொத்துகளும் நிறுவன அமைப்புகளும் அத்தியாவசியமானவை. வெவ்வேறு விதமான விவசாய வாழ்வாதார முறைகளை கொண்டிருந்தோர் இடப்பெயர்வுக்கு வெவ்வேறு விதமாக துலங்கியதை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது.

ரஞ்சித் பண்டார, இரண்டு மாவட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன முறையினால் நன்மையடைந்த சிற்றளவு விவசாயிகளின் வாழ்வாதாரங்கள் மீது சொட்டு நீர்ப்பாசன முறைமையின் தாக்கத்தை குடும்பங்களின் மாதிரிகளிலிருந்து பெற்றுக்கொண்ட தரவுகளை பயன்படுத்தி ஆய்வு செய்கின்றார். சோடியாக்கப்பட்ட 't' சோதனைகளின் முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு இந்தக் கட்டுரை ஆசிரியர், குடும்பத்தின் வருமானத்திற்கும் சொட்டு நீர்ப்பாசனப் பயன்பாட்டுக்கும் இடையில் நேர்த் தொடர்பை காண்கின்றார். இருப்பினும் அவர் சொட்டு நீர்ப்பாசன முறைமையின் தற்போதைய கட்டத்தில் சில குறைபாடுகளை காண்கின்றார். இவை பிரதானமாக தொழில்நுட்ப அறிவு, கிராமிய சமுதாயங்களில் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் தொடர்பானவையாக உள்ளன. எனவே இங்கு காணப்படும் தகவல் இடைவெளியை நிரப்பும் வகையில் சகல அக்கறையுடையோர்களுக்கும் அறிவூட்ட வேண்டிய அவசர தேவை உள்ளது. சொட்டு நீர்ப்பாசன செயற்றிட்டத்தின் அடுத்த கட்டத்தில் இந்த குறைபாடுகள் தொடர்பில் கொள்கை வகுப்போர் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென பண்டார கூறுகின்றார்.

பிரட்றிக் அபேரத்ன, பெருந்தோட்டத் துறை சாராத விவசாயம் மீது முக்கிய கவனம் செலுத்தும் தனது கட்டுரையில், வறுமைக்கும் ஆளுகைக்குமிடையிலான தொடர்பையும் விவசாயத்துறை மீதான அதன் தாக்கத்தையும் விரிவாக ஆராய்கின்றார். விவசாயம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலைவாய்ப்பு, அந்நிய செலாவணி சம்பாத்தியம் என்பவற்றுக்கு கணிசமான பங்களிப்பை வழங்குகின்றபோதும் விவசாயத்தில் ஈடுபடுவோரில் கணிசமான விகிதத்தினர் ஏழைகளாக உள்ளனர். நிலைத்திருக்கும் நீண்டகால இலக்குகள், பணிகள், மக்களின் பங்குபற்றல், விளைவு நிச்சயமான உபாயங்கள், ஆராய்ச்சியும் விவசாய விரிவாக்கமும் இரண்டாகப் பிரிதல் என்பன காணப்படாதிருத்தல் போன்ற குறைபாடுகள் விவசாயத்துறையின் வளர்ச்சியை தாமதப்படுத்துகின்றன. இந்த ஆளுகைக்காரணிகள் சரியாக அமையாதவிடத்து விவசாயத்தில் முதலீடு செய்தல், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் பெரும்பான்மையினரின் வறுமையை ஒழிப்பதற்கு பங்களிப்பு செய்யமாட்டாது. ஆளுகை பிரச்சினைகள் மீது உலகளவில் கவனம் செலுத்தப்படும் பின்னணியில், ஆளுகை தொடர்பான பிரச்சினைகளை தீர்த்தல், முன்னெப்போதையும் விட இப்போது முக்கியமானதாக உள்ளது.

**உணவுப் பாதுகாப்பும் தோட்டத்துறை சாராத விவசாயமும்**

உலக உணவு நெருக்கடி தொடர்பான காரணிகள் பற்றியும் விவசாயத்தின் மீது அதன் தாக்கத்தை பற்றியும் இலங்கையின் உணவுப் பாதுகாப்பில் விசேட கவனத்துடன் கூடிய விரிவான ஆய்வு ஒன்றை டபிள்யூ. ஜி. செனிவரத்ன வழங்குகின்றார். உலக உணவு நெருக்கடி தொடரும் என்றும் இதனால் இந்த நூற்றாண்டில் எப்போதும் கண்டிராத அளவுக்கு உணவு விலை உயரும் என்றும் இந்த கட்டுரையாசிரியர் எச்சரிக்கின்றார். பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக சீனாவிலும் இந்தியாவிலும் உண்டான விரைவான பொருளாதார அபிவிருத்தி உலகளவில் உணவுக்கான கேள்வியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு முரணான வகையில் பாதகமான காலநிலை மாற்றங்கள் மற்றும் சுவட்டு எரிபொருளுக்கான பிரதியீட்டுப் பொருளாக உயிர் - எரிபொருளின் உற்பத்திக்காக விவசாய உற்பத்திப்பொருட்கள் திசை திருப்பப்படுதல் என்பவற்றின் விளைவாக உணவின் நிரம்பலில் வீழ்ச்சி காணப்படும். இப்படியான பாதகமான போக்குகள் காணப்படும் பின்னணியில் இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அரசாங்கத் தலையீட்டின் முக்கிய பாத்திரத்தை கட்டுரையாசிரியர் வலியுறுத்துகின்றார். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்தல், விநியோக சங்கிலியை விருத்தி செய்து முகாமைத்துவம் செய்தல், சந்தைப்படுத்தல், பொது உணவு விநியோக முறைமை மற்றும் பெறுமதி சேர்த்தல் என்பவை அடங்கலான முன்னெடுப்புகளை அரசாங்கம் எடுப்பது அவசியமாகும். விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கிராமிய உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்வதற்கு முன்னுரிமை கொடுபட வேண்டும். விவசாய ஊக்குவிப்பு இயக்கத்தில் தனியார் துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் அடங்கலாக பல்வேறு அக்கறை உடையோரை அரசாங்கம் அங்கீகரித்து அவர்களின் பங்குபற்றலுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்பதை சோமரத்ன வலியுறுத்துகின்றார்.

அநுரா ஏக்கநாயக்க, தனது கட்டுரையில் உள்நாட்டு விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றை எடுத்தாள்கின்றார். அவரது கட்டுரை உலக உணவு சந்தையின் உறுதியின்மைபற்றியும் காலநிலை மாற்றம் அடங்கலாக அவற்றுக்கான காரணங்கள் பற்றியும் ஒரு மேலோட்டமான பார்வையுடன் தொடங்குகின்றது. இனமோதலை தொடர்ந்து உணவு உற்பத்தியில் உண்டான சடுதியான மாற்றம், இலங்கையின் அதிகரித்து வரும் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உணவு உற்பத்தியின் நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சியை உத்தரவாதம் செய்யும் என்று கூறமுடியாது என இந்தக் கட்டுரை எச்சரிக்கின்றது. குறைந்து செல்லும் பெறுமதி சேர்ப்பு, உற்பத்தித்திறனின் மெதுவான வளர்ச்சி, கிராமியத் துறை

யில் குறைந்த வருமானங்கள் மற்றும் கூடிய வறுமை, ஊழியத்தை உள்வாங்குவதில் காணப்படும் வீழ்ச்சி போன்ற பாதகமான போக்குகளை கருத்தில்கொண்டு இந்த கட்டுரையாசிரியர், உணவு பயிரிடும் உபாயங்களை மாற்ற வேண்டிய தேவைபற்றி வலியுறுத்துகின்றார். உயர் மட்டத்திலான இயந்திரமயமாக்கல், மேலும் சிறப்பான அறுவடைக்கு பிந்திய தொழில்நுடபம், செலவுச் சிக்கனம், களஞ்சிய வசதிகள் போன்ற அதிகரித்த உற்பத்தித் திறன் வாய்ந்த விவசாய நடைமுறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இருப்பினும் ஏக்கநாயக்க, இலங்கையின் தேவைக்கு பொருந்தும் வகையில் ஒரேயொரு விவசாய வடிவத்தில் மட்டும் தங்கியிருக்க காரணம் இல்லையென கூறுகிறார். வேறு பல துறைகளில் உள்ளது போன்று, சந்தை நிலைவரம் மற்றும் வேறு யதார்த்தங்களின் அடிப்படையில், சிறிய, நடுத்தர, பெரிய நிறுவனங்களின் பொருத்தமான சேர்க்கை அமைய வேண்டும். சந்தையை தொழிற்பட அனுமதிப்பதும் சந்தையின் இயக்க விசைக்கமைய சாத்தியமான மாதிரிகளை இயல்பாக உருவாக விடுவதும் அதிசிறந்த அணுகுமுறையாக அமையும் என்ற முடிவுக்கு கட்டுரையாசிரியர் வருகின்றார்.

வண. விஜிதபுர விமலரத்ன இலங்கையின் உணவுத்துறையை ஊக்குவிப்பதில் விவசாய தகவல் முறைமையின் பாத்திரத்தை பகுப்பாய்வு செய்கின்றார். போட்டிச் சந்தையின் வினைத்திறன் மிக்க தொழிற்படுகைக்கான அடிப்படை தேவையாகவுள்ள சுதந்திரமான தகவல் பரிமாற்றம் விவசாயத்துறையில் சரியாக அமையவில்லை என ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். இதனால் உண்மையில் கிடைக்கும் சந்தை சமிக்ஞைக்கும் கிடைக்கக் கூடிய சந்தை சமிக்ஞைக்குமிடையில் கணிசமான வேறுபாடு இருப்பதற்கு வழி வகுத்துள்ளது. விவசாயம் தொடர்பான புள்ளிவிபரங்களை தொகுக்கும் பொறுப்பு வெவ்வேறு அரசாங்க நிறுவனங்களிடம் உள்ளது. இதனால் விவசாய தகவல் முறைமை சிதறுண்டுள்ளதுடன் இசைவுப்பாடு இன்றியும் காணப்படுகிறது. பல அமைச்சுகள், திணைக்களங்கள், நிறுவனங்களுக்கிடையில் விவசாயம் என்னும் விடயம் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளமை நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது. சந்தை தொழிற்பாட்டை இலகுபடுத்துவதற்கான மத்தியமயப்பட்ட உரிய காலத்திலான தகவல் முறைமையொன்றை நிறுவுவதன் தேவை இக் கட்டுரையில் வலியுறுத்தப்படுகிறது.

## காலப்பொருத்தமுடைய வெளியீடு

பூகோள மட்டத்திலான போட்டி, கால நிலை மாற்றம், உணவுப்பாதுகாப்பின்மை, குறைவான உற்பத்தித்திறன், கிராமிய வறுமை எனப் பல வகையான சவால்களுக்கு விவசாய துறை முகங்கொடுக்கும் இன்றைய காலத்தில் இந்த நூல் பொருத்தமான நேரத்தில் வெளிவந்ததாக அமைகின்றது. முன்னர் கூறியது போல, இந்த நாட்டின் விவசாயத்துறை ஒரு திருப்பு முனையில் காணப்படும் இந்த முக்கிய காலகட்டத்தில் இந்த நூல் முக்கியமான சகல விடயங்களையும் பற்றிப் பேசுகின்றது. இந்த நூல், கொள்கைச் சீர்திருத்தங்கள் இடம்பெற்றுள்ள நிலையிலும் விவசாயத் துறையின் பலவீனமான தொழிற்படுகையின்பால் வாசகனின் கவனத்தை ஈர்க்கின்றது. இந்த நிலைமை தற்போதைய கொள்கை உபாயங்களில் பாரிய மாற்றங்களை வேண்டி நிற்கின்றது. கிராமிய அபிவிருத்தி மற்றும் விவசாயம் ஆகிய புலங்களில் அறிவுசார்ந்த பாரிய பங்களிப்பு செய்துள்ள பேராசிரியர் எஸ்.எம்.பி. சேனநாயக்கவுக்கு இந்த நூல் பொருத்தமானதொரு புகழாரமாக அமைகின்றது. பெறுமதி வாய்ந்த இந்த நூலை தொகுக்கும் பிரமாண்டமான பொறுப்பை ஏற்றுக் கொண்டமைக்காக வண. விஜிதபுர விமலரத்ன அவர்களின் தலைமையிலான ஏற்பாட்டாளர்கள் குழுவுக்கு எனது மனமுவந்த பாராட்டை இங்கு தெரிவிக்கின்றேன். இது, கொள்கை வகுப்பாளர்கள், அறிவுத் துறையினர், மாணவர்கள், மற்றும் இந்த துறையில் ஆர்வமுள்ள சகலருக்கும் இனிவரும் காலங்களில் முக்கியமான உசாத்துணைக்கான ஓர் ஆவணமாக அமையும் என நான் நம்புகின்றேன். ■

.......... 31 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிதி தொடர்பான முறையீட்டுமன்ற நடுவர் திட்டம் அமைந்துள்ளது. எனது கருத்தின்படி, இது மிகச் சிறந்த வெற்றியளிக்கத்தக்க ஓர் திட்டமாக இருந்து வருகின்றது. வாடிக்கையாளர்களுக்கு இதுவோர் இலவச சேவையாக உள்ளது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் போது அதன் வெற்றிவாய்ப்பு மேலும் அர்த்தமுடையதாக அமைகின்றது. இத்திட்டத்தை அமைப்பதற்கு நானும் (இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் நாயகமாக இருந்த திரு கஷ்ரன் குணவர்தன அவர்களுடன் இணைந்து) பொறுப்பாக இருந்தேன் என்பதையிட்டு நான் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். 2002 இல் நான் இலங்கை மத்திய வங்கியில் ஓர் ஆலோசகராக பணியாற்றிய போது, இதை பரிந்துரை செய்திருந்தேன். தயக்கம் காட்டிய பின்னர் வங்கித் தொழில்துறை இதற்கு இணங்கியது. அப்போது அது 'வங்கித்துறை முறையீட்டு மன்ற நடுவர்' என அழைக்கப்பட்டது. மத்திய வங்கியால் கண்காணிக்கப்படும் நிதிக் கம்பனிகள், குத்தகைக் கம்பனிகள் மற்றும் முதல்நிலை வியாபாரிகள் போன்ற ஏனைய நிதி நிறுவனங்களும் இதில் இணைவதற்கு விரும்பியமையால் இறுதியில் இது நிதி தொடர்பான முறையீட்டு மன்ற நடுவர் திட்டம் என அழைக்கப்பட்டது.

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் பொருட்டு, ஆண்டுதோறும் 300 தொடக்கம் 400 வரையான வாடிக்கையாளர்கள் நிதி தொடர்பான முறையீட்டுமன்ற நடுவரை நாடி வருகின்றனர். மிகுந்த நட்பார்ந்த அடிப்படையில் அமைந்துள்ள இச்சேவை இலக்கம் 143A, வஜீர றோட் கொழும்பு - 05 எனும் இடத்தில் வழங்கப்படுகின்றது. நடைமுறைகள் சிக்கலற்றவையாக இருப்பதுடன், விசாரணைகள் வழக்கறிஞர்கள் இன்றி நடாத்தப்படுவதோடு, நியாயமான முடிவுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் இணைந்துள்ள வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் இதற்கு ஆதரவளிப்பதுடன், இது வெற்றிகரமான ஒன்றாக தொடர்ந்திருப்பதை உறுதிப்படுத்துவது தொடர்பில் அவை பற்றார்வம் மிக்கவையாக உள்ளன.

நிதி தொடர்பான முறையீட்டுமன்ற நடுவர் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து காப்புறுதி தொடர்பான முறையீட்டுமன்ற நடுவர் திட்டமும் 2005 இல் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை நானே காப்புறுதி தொடர்பான முறையீட்டு மன்ற நடுவராக இருந்து வருகின்றேன். இவ்விரு அமைப்புகளும் இலக்கம் 143A, வஜீர றோட் கொழும்பு- 05 எனும் முகவரியில் அமைந்துள்ள ஒரே கட்டடத்தில் செயற்படுகின்றன.

தற்போது, நிதி அமைச்சால் தோற்றுவிக்கப்பட்ட வரி தொடர்பான ஓர் முறையீட்டு மன்ற நடுவரும் உள்ளார். தனியார் வைத்தியசாலைகள் (நாடு முழுவதிலும் அண்ணளவாக 200 தனியார் வைத்தியசாலைகள் உள்ளன), மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் சேவை முதலியன போன்றவற்றிற்கும் மேலும் பல முறையீட்டுமன்ற நடுவர் திட்டங்களை அமைப்பதை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டுமென நான் பிரசாரப்படுத்தி வருகின்றேன். பத்திரிகையாளர் சங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள பத்திரிகை முறைப்பாடு ஆணைக்குழு கூட ஓர் முறையீட்டுமன்ற நடுவர் வகையை சார்ந்ததாகும். செலவு மிகுந்ததும் கால தாமதம் உடையதுமான வழக்காடலுக்கு மாற்றீடாகவுள்ள ஏதாவது பிணக்குத் தீர்வு முறையையே நாம் ஊக்குவிக்க வேண்டியுள்ளது. ■

# நிகழ்வுக் குறிப்பேடு

## ஏப்ரில்

**2** தென் தாய்லாந்தில் கடும் மழை காரணமாக உண்டான வெள்ளம் மற்றும் மண்சரிவினால் குறைந்தபட்சம் 35 பேர் இறந்துள்ளனர்.

**4** சர்வதேச நாணய நிதியம் அதன் இலங்கைக்கான விசேட ஏற்பாட்டு நிதியிலிருந்து ஏழாவது தவணை கொடுப்பனவாக எஸ்.டி.ஆர். 137.8 மில்லியனை (அண்ணளவாக 218.3 மில்லியன் அமெரிக்க டொலர்) விடுவித்துள்ளது.

**5** லிபியாவில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமென துருக்கியும், இந்தோனேசியாவும் கேட்டுக்கொண்டுள்ளன. அந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அவை அறிவித்தன. அதே சமயம் ஐநா. வினால் விமானப்பறப்பு தடை செய்யப்பட்ட பிரதான கிழக்கு நகரங்களை கைப்பற்றுவதற்கான சண்டையில் கிளர்ச்சியாளர்களும் அரசாங்கப்படைகளும் ஈடுபட்டிருந்தன.

**13** இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவ தலைமைகளுக்கு எதிரான யுத்த குற்றச்சாட்டுகள் பற்றிய ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்றை அரசாங்கம் பெற்றுக்கொண்டதாக இலங்கை வெளிநாட்டு அமைச்சு கூறியுள்ளது.

**16** ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாயும் வருகை தந்துள்ள பாகிஸ்தான் பிரதம மந்திரி யூசுப் றஸா கிளானியும் தலிபான் கிளர்ச்சிவாதிகளுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான கூட்டுமுயற்சியை தீவிரமாக மேற்கொள்ள ஆப்கானிஸ்தானின் தலைநகரமான காபூலில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மத்திய கிழக்கு அரசியல் குழப்பங்கள், உலக பொருளாதார மீட்சியை அடையாமல் செய்துவிடக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதற்கு அங்குள்ள நிலைமையை உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் வாஷிங்டனில் நடந்த தமது வசந்த கால கூட்டங்களில் கூறியுள்ளன.

**18** பங்களாதேஷ் ஜனாதிபதி சியாவுல் ரஹ்மானின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷ் சென்றார்.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டம் தொடர்பில் பொறுப்புக்கூறும் பிரச்சினை பற்றி மூன்று அங்கத்தவர் கொண்ட ஐ. நா. குழுவினால் அளிக்கப்பட்ட அறிக்கை இலங்கைக்கு எதிரான சதியின் ஒரு பகுதியாகும் என கொழும்பு மேற்றிராணியார் கர்தினால் மல்கம் றஞ்சித் கூறினார்.

போர்த்துக்கல், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் ஐ. நா. வின் பாதுகாப்பு சபை கூட்டத்தில் இலங்கையில் நடந்த இறுதி சண்டையில் யுத்தக் குற்றம் மீதான ஐ. நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழு அறிக்கையை வன்மையாக எதிர்த்ததாக 'தி ஏசியன் ட்ரிபியூன்' செய்தி வெளியிட்டுள்ளது.

**19** இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பங்களாதேஷ் பிரதம அமைச்சர் ஷேக் கசினா வாசட்டிற்குமிடையில் டாக்காவில் நடந்த உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையை தொடர்ந்து இலங்கையும் பங்களாதேஷும் பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையிலான ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டன. இரண்டு நாடுகளினதும் வியாபாரம், மீன்பிடித் தொழில், விவசாயம், தொழிற்கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியதாகவே இந்த ஒப்பந்தங்கள் காணப்பட்டன.

**20** ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலாவை பதவியைவிட்டு விலகுமாறு கோரி ஏமனில் பல்லாயிரக் கணக்கான கிளர்ச்சியாளர்கள் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்களின் கோரிக்கைக்கு தான் இணங்கப்போவதில்லை என ஜனாதிபதி கூறினார்.

**21** இலங்கையில் நடந்த இறுதி சண்டை பற்றி ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதையும் இந்த குழுவினால் செய்யப்பட்ட சிபார்சுகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுப்பதையும் அரசாங்கம் கடுமையாக எதிர்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறினார். மேலும், ஐ. நா. முறைமைக்கு அமைய இந்த குழு நியமிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டமையால கதிர்வீச்சு கசிகின்ற புக்குசீமா அணு உலையின் 20 கிலோ மீற்றர் எல்லைக்குள் மக்கள் செல்வதற்கு ஜப்பான் தடை விதித்துள்ளது.

மேற்கத்தைய நாடுகளின் தரைவழி இராணுவ நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை எனவும் அதன் விளைவுகள் எப்படியாக இருக்குமென கூற முடியாதெனவும் ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் சேகி லவ் றோவ் எச்சரித்துள்ளார்.

**26** ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தலைவரான நவநீதம்பிள்ளை, இலங்கையின் இறுதி யுத்தத்தின், யுத்தக் குற்றம் பற்றிய அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களை மேலும் விசாரிக்க வேண்டுமென வலியுறுத்தினார்

'டருஸ்மன் அறிக்கை' ஐ. நாவினால் வெளியிடப்பட்ட பின் இலங்கை அரசாங்கம் மீண்டும் அதை நிராகரித்துள்ளது.

லிபிய தலைவர் மும்மர் கடாபியை கொல்ல முயன்றதன் மூலம் மேற்கு நாடுகள் ஐ. நா. வின் பணியாணையை மீறிவிட்டதாக கூறி ரஷ்ய பிரதமர் விளாடிமர் புட்டின் லிபியாவில் நேட்டோவின் (வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள்) இராணுவ தலையீடுபற்றி விமர்சித்தார்.

**27** எந்தவித சரிபார்த்தலும் இன்றி முன் வைக்கப்பட்டுள்ளதும் பக்கச்சார்பான சாதனங்களை அடிப்படையாகக் கொண்டதுமான டருஸ்மன் அறிக்கை பல விதத்திலும் குறைபாடு உடையது என்னும் தன் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

**28** ஐக்கிய அமெரிக்காவின் ஆறு மாகாணங்களில் மிகவும் மோசமான சூறாவளி காரணமாக பரவலாக 300இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளதாக அஸோஸியேற்றட் பிரஸ் (AP) அறிவித்துள்ளது.

**30** சீன வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் ஹொங் லேய் இலங்கை அரசாங்கமும், மக்களும் யுத்தம் தொடர்பான பிரச்சினைகளை சரியாக கையாள்வர் என சீனா நம்புவதாகவும். அந்தப் பிரச்சினையை சிக்கலாக்க வேண்டாமென சர்வதேச சமூகத்தை கேட்டுக்கொள்வதாகவும் கூறியுள்ளனர்.

## மே

**1** மும்மர் கடாபியின் மிகவும் இளைய மகனான ஷய்ப் அல் அறாப்பும் அவரின் மூன்று பேரப்பிள்ளைகளும் 'நேட்டோவின்' வான்வழி தாக்குதலில் கொல்லப்பட்டதாக லிபிய அரசாங்கம் அறிவித்தது.

**2** தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் றொபேட் ஓ பிளேக் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற செப்டம்பர் 11, 2001 பயங்கரவாதத் தாக்குதலை திட்டமிட்டு செயற்படுத்தியவரும் உலகின் மிக வேண்டப்பட்ட பயங்கரவாதியுமான ஒசாமா பின்லேடன் ஐக்கிய அமெரிக்கப் படைகளினால் பாகிஸ்தானில் கொல்லப்பட்டார் என ஐக்கிய அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

**3** ரஷ்ய தூதுவர் விளாடிமிர் மிக்கெலோவ், ஐ. நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடையாலும் இலங்கை

நாட்டின் ஒரு பகுதியில் நடந்ததாக கூறப்படும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளாலும் தான் ஆச்சரியமடைந்ததாக கூறினார்.

பிரச்சினைக்குரிய டருஸ்மன் அறிக்கை பற்றிய விரிவான பதிலை இலங்கை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு அனுப்புமென வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் கூறினார்.

4 வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஒஸாமா பின்லேடனும் உலகின் மிகவும் இரக்கமற்ற இரண்டு பயங்கரவாத இயக்கத் தலைவர்கள் என ஐக்கிய அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் றொபேட் ஓ பிளேக் கொழும்பில் அறிவித்தார்.

பாகிஸ்தானின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டவறிஞர்களும் அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனைக் கொல்வதற்காக பாகிஸ்தானுக்கு தெரியாமல் இராணுவ நடவடிக்கையை நடத்தியதன் மூலம் பாகிஸ்தானின் இறைமையை மீறியமைக்காக அமெரிக்காவை கண்டித்தனர்.

5 அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனை கொல்வதற்காக இராணுவ நடவடிக்கையை நடத்தியதன் மூலம் பாகிஸ்தானின் இறைமையை மீறியமைக்காக சீனா, ஐக்கிய அமெரிக்காவை விமர்சித்தது.

6 ஐ. நாவின் அநுமதியின்றி ஐநாவின் செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்ட குழுவினால் வெளியிடப்பட்ட பிரச்சினைக்குரிய டருஸ்மன் அறிக்கையை மாலை தீவு அரசாங்கம் எதிர்த்தது.

11 மும்மர் கடாபியின் 41 வருட கால ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக கிளர்ச்சிக்காரர்கள் போராடி வரும் லிபியாவில், கண் காணிக்கக்கூடிய உடனடியான யுத்த நிறுத்தமொன்றை கொண்டுவரும்படி ஐநா செயலாளர் நாயகம் பான் கீ மூன் அழைப்பு விடுத்துள்ளார்.

ரஷ்யத் தலைவர்கள், ரஷ்யாவுக்கு வருகை தரும் பாகிஸ்தான் ஜனாதிபதி அசிப் அலி சர்தாரியுடன் பேச்சுக்களை நடத்த தயாராகிவரும் வேளையில் அல்குவைதா தலைவர் ஒசாமா பின் லேடனை தேடிப் பிடித்துக் கொல்வ தற்கு அமெரிக்காவுக்கு உள்ள உரிமைக்கு ரஷ்யா ஆதரவளிக்கின்றது.

12 நடந்ததாக கூறப்படும் குற்றங்கள் பற்றிய ஐநா நிபுணர் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துமாறு ஐரோப்பிய நாடாளுமன்றம் இலங்கைக்கு கூறியது.

13 குறைபாடுடைய தடுத்துவைப்பு முறை மற்றும் மரணதண்டனை நிறைவேற்றும் முறைமை காரணமாக ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமை சாதனையின் மதிப்பு குறைந்து செல்வதாக சர்வதேச மன்னிப்பு சபை கூறியுள்ளது.

14 ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2011 வெசாக் பௌர்ணமி தினத்திலிருந்து ஆரம்பமாகும் வருடத்தை 2600வது ஸ்ரீ சம்புத்தத்வ ஜெயந்தி நினைவு ஆண்டாக அநுராதபுரம் புனித நகரில் பிரகடனம் செய்தார்.

சிங்கப்பூரின் ஸ்தாபகர், லீ குவான யூ தனது கட்சியின் மிகவும் மோசமான தேர்தல் முடிவினைத் தொடர்ந்து இளைய தலைமுறையினருக்கு தலைமைத்துவ பொறுப்பை வழங்குமுகமாக அமைச்சரவையிலிருந்து இராஜினாமா செய்தார்.

15 ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ '2600வது சம்புத்தத்வ ஜெயந்தியை நினைவு கூருமுகமாக கொழும்பு ஹவ்லொக் வீதியில் புதிதாக அமைக்கப் பட்ட 'சம்புத்தத்வ ஜயந்தி மண்டபத்தை' திறந்து வைத்தார். அத்துடன் இந்த வீதி 'சம்புத்தத்வ ஜயந்தி மாவத்த' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

லிபியாவின் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி நாலாவது மாதத்தை எட்டிவிட்டதால் அதன் குண்டு வீச்சு இயக்கத்தை விரிவாக்கும்படி பிரித்தானிய ஆயுதப்படைகளின் தலைவர்கள் நேட்டோவை கேட்டுள்ளனர்.

16 இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் புதுடில்லிக்கான மூன்று நாள் விஜயத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்தியா, இலங்கையிடம், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தமது வீடுகளுக்கு விரைந்து திரும்புவது, அவசரகால சட்டத்தை விரைவில் அகற்றுவது, மனித உரிமை மீறல் முறைப்பாடுகளை விசாரித்தல், பாதிக்கப்பட்ட இடங்களில் வழமை நிலையை கொண்டுவருதல் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்கல், என்பவை உட்பட மீள் குடியேற்றம் மற்றும் உண்மையான நல்லிணக்கம் என்பவற்றை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு வலியுறுத்தி யுள்ளது.

17 இலங்கையிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் வாழும் பௌத்தர்கள் வெசாக் பௌர்ணமி தினத்தில் 2600வது சம்புத்தத்வ ஜயந்தியை கொண்டாடினர்.

20 2600வது சம்புத்தத்வ ஜயந்தியை நினைவு கூருமுகமாக கண்டியில் புதிதாக அமைக்கப்பட்ட சர்வதேச பௌத்த நூதனசாலை ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்பட்டது.

21 திரிப்பொலியில் உள்ள மும்மர் கடாபியின் வளவுக்கு அண்மையில் நேட்டோ படைகள் குண்டுவீச்சு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

வட சூடானிய இராணுவம், தென்பகுதி படைகளுடன் சண்டையிட்டு பிரச்சினைக்குரிய அப்ஜே பிராந்தியத்தின் பிரதான நகரத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

22 ஐக்கிய அமெரிக்காவின் கொப்லின் மற்றும் மிசூரி ஆகிய இடங்களை தாக்கிய பயங்கர சூறாவளியின் காரணமாக இறந்தோரின் தொகை 123 ஆக அதிகரித்தது. 750பேர் காயப்பட்டதாகவும் இன்னும் பலரை காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

23 புதிதாக பல்கலைக்கழகம் செல்வோரிடம் தலைமைத்துவ பண்புகளையும் நேர் சிந்தனைகளையும் வளர்ப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று வார வதிவிட பயிற்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடக்கிவைத்தார்.

24 இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை தான் ஆதரிக்கவுள்ளதாகவும், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் அரசாங்கத்தை குற்றம் சாட்டும் ஐநாவின் அண்மைக்கால அறிக்கையை தொடர்ந்து வரும் எந்த சர்வதேச அழுத்தத்துக்கும் எதிராக இலங்கையை தான் ஆதரிக்கப் போவதாகவும் சீனா கூறியது.

26 பிரச்சினைக்குரிய வட ஆப்கானிஸ்தானில் பல மக்களைக் கொன்ற, அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையை ஆப்கான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் கண்டித்தார்.

27 இரண்டாவது வெற்றி தின ஆண்டு நிறைவு மற்றும் யுத்த நாயகர்களுக்கு புகழாஞ்சலி செலுத்துதல் தொடர்பிலான நிகழ்வுகள் காலிமுகத்திடலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

30 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றம் (UNHRC) அதன் 17வது அமர்வை ஜெனீவாவில் தொடக்கியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றத்தில் 47 நாடுகளின் ஆபிரிக்க மற்றும் இஸ்லாமிய உறுப்பு நாடுகள், ஏற்கெனவே இலங்கை அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட சனல் 4 வீடியோ துண்டங்களை பயன்படுத்தி யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கை நடந்து கொண்ட முறை மீதான விவாதத்தை மீண்டும் தொடக்க எடுக்கப்படும் முயற்சிகளை நிறுத்தக் கோரும் பிரேரணையை கொண்டு வந்தன.

QD/24/News/2011 எனும் இலக்கத்தின்கீழ்
இலங்கை அஞ்சல் திணைக்களத்தில்
பதிவுசெய்யப்பட்டுள்ளது

# பொருளியல் நோக்கு

1975 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தால் தடங்கலின்றி வெளியிடப்பட்டு வரும் ***பொருளியல் நோக்கு,*** சமகால சமூக-பொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களின் அழமான ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான பொது மன்றத்தை வழங்குகிறது. இவ்வேட்டின் அண்மைக்கால இதழ்கள் பின்வரும் முக்கிய தலைப்புகளை உள்ளடக்கியுள்ளன:

- *சுற்றுலாத்துறை*
- *வரவு-செலவுத் திட்டம் - 2011*
- *பொருளாதார அபிவிருத்தியில் வரி அறவீடு*
- *அறிவுப் பொருளாதாரம்: பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்திக்கான கல்வி*
- *துறைமுகங்களும் கப்பற் போக்குவரத்தும்: ஓர் மத்திய நிலையமாக இலங்கை*
- *இலங்கையில் விவசாயம் தொடர்பான சுதேச அறிவாற்றல்*
- *இலங்கையின் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி*

ஆர்வமுள்ள வாசகர்கள், இவ்வேட்டின் பிரதிகளை தலைமைக் காரியாலயத்திலுள்ள எமது வெளியீட்டு விற்பனை நிலையம், முன்னணிப் புத்தகசாலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் என்பவற்றில் கொள்வனவு செய்ய முடியும். ஏற்கனவே வெளிவந்த சில இதழ்கள் கூட விற்பனைக்குண்டு.

| | |
|---|---|
| வருடாந்தச் சந்தா | **உள்ளூர் -12 இதழ்கள் ரூபா 360/-** |
| | **வெளிநாடு -12 இதழ்கள் அமெரிக்க டொலர் 50** |

சந்தாவை, வேண்டுகோள் கடிதமொன்றுடன் காசோலை/காசுக் கட்டளை மூலமாக அனுப்ப முடியும். பணச் செலுத்தல் எமது விற்பனை நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

காசோலைகள்/காசுக் கட்டளைகளில்
**மக்கள் வங்கி - பொருளியல் நோக்கு** எனக் குறிப்பிட்டு,
கீழுள்ள முகவரிக்கு அவை அனுப்பிவைக்கப்பட வேண்டும்

***ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சித் திணைக்களம்,***
***மக்கள் வங்கி, தலைமைக் காரியாலயம், கொழும்பு 02***
***இலங்கை.***

*தொலை பேசி:* 2481428, 2436940
*தொலை நகல்:* 2434526 *மின்னஞ்சல்:* ecorev@peoplesbank.lk

***பொருளியல் நோக்கு***
***மக்கள் வங்கியின் ஒரு சமூக சேவைச் செயற்திட்டமாகும்***

மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்கள வெளியீடு
பொருளியல் நோக்கில் இருந்து பெறப்பட்டதாகக் குறிப்பிட்டு, இவ்வேட்டின் உள்ளடக்கத்தை மேற்கோள்காட்டவோ அல்லது மீள்பிரசுரிக்கவோ முடியும்.
இதழ் இல: 0260/9779

பிரதி ஒன்றின் விலை : ரூபா **45/-**